தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 6, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021
1990 ஆகஸ்டு 22, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் .''

ஒருவர் செய்யத் தகாத செயல்களைச் செய்தால் அதனால் கேடு உண்டாகும். செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாமல் விட்டாலும் கேடு உண்டாகும்.

1. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 807 மற்றும் 2264 ஆகியவை சற்று நேரம் தள்ளி வைக்கப்படுகின்றன.

கரும்பலகைத் திட்டம்.

*7061 திரு. கோ. வீரையன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரும்பலகைத் திட்டத்தின் கீழ் (ஆப்பரேஷன் பிளாக் போர்டு) மத்திய அரசு ஆரம்பப் பள்ளிகளுக்கு கூடுதல் ஆசிரியர் இடங்கள் ஒதுக்கியதா ?

(ஆ) அதற்காக எவ்வளவு நிதி ஆதாரம் வழங்கப்பட்டது ?

(இ) அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 244.08 இலட்சம் ஆகும்.

(இ) கூடுதல் இடைநிலையாசிரியர் பணியிடங்கள் 1,643 புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

ஏழாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு.

*10588—திரு. சா. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அண்மையில் மோரிசு நாட்டில் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழக அரசு அதிகாரப் பூர்வமாக பங்கு கொண்டதா ?

(ஆ) ஆம் எனில், தமிழக அரசின் பங்கு எந்த வகையில் அமைந்தது ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மோரிசுத் தீவில் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாள் முதல் 8 ஆம் நாள்வரை நடைபெற்ற ஏழாம் உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் சார்பில் கலந்து கொள்ள பெருமக்கள் பன்னிருவரையும், கலைக் குழுவையும், அன்பளிப் புப் பொருள்களையும் தமிழக அரசு அனுப்பியது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோரிசு நாட்டில் நடைபெற்ற 7-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில், முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொள்ளவில்லையே என்ற ஒரு ஆதங்கம் அங்கே வாழுகின்ற ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு ஏற்பட்டது என்பது தமிழக அரசிற்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, கலைஞர் அவர்கள் ஒரு முதலமைச்சராக பல பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிற காரணத்தால் பல நேரங்களில் பலர் அவர்களுடைய வருகையை விரும்புகிறபோது அந்த நேரத்தில் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படுவதில்லை. இவை தவிர்க்க முடியாதவை.

திரு. குமரி அ நந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு என்று சொல்கின்ற வகையிலும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்று சொல்கின்ற வகையிலும் தமிழ கத்திலே இருந்து ஆளும்கட்சியின் சார்பிலும், எதிர்க்கட்சியின் சார்பிலும் இருக்கின்ற தமிழ் ஆர்வலர்களும் கூட அழைக்கப்படுவ துண்டு. சென்ற முறை அந்த 12 பேர்களிலே அப்படி யாராவது அழைக்கப்பட்டார்களா ?

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இது தமிழ் மாநாடு என்ற அடிப்படையில் தமிழ் அறிஞர்களாக உள்ளவர்கள்தான் பெரும்பாலும் அனுப்பப்பட்டார்கள். அரசியல் கட்சி அடிப்படையில் ஆளும் கட்சி சார்பிலேயோ, எதிர்க் கட்சி சார்பிலேயோ யாரையும் அனுப்பவில்லை. இரண்டாவது, அவர்கள் அந்த மாநாட்டிற்கான முன்னேற்பாடுகளும், தகுந்த முயற்சிகளும் முதலில் மேற்கொள்ளவில்லை. மேற்கொண்டு இருப்பார்களேயானால், ஒரு வேளை அப்படி எல்லாம் எண்ணிப் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

சேலம் இரும்பாலை.

***807—திரு. வ. முல்லைவேந்தன் திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உருட்டாலையாக உள்ள சேலம் இரும்பாலையை உருக் காலையாக மாற்ற மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

தற்போது, முதல் கட்டமாக, ஒரு உருட்டு ஆலையாக மட்டும் செயல்பட்டு வரும் சேலம் இரும்பு ஆலையை, ஒருங் கிணைந்த முழு அளவிலான உருக்காலையாக மாற்ற வேண்டு மென, மைய அரசை வலியுறுத்தி இவ்வரசு பலமுறை கடிதங்கள் மூலமும், நேரிலும் தெரிவித்து வந்துள்ளது. அதன் விளை வாக, இவ்வாலையின் உற்பத்தித் திறனை ரூ. 69.37 கோடி செலவில் இரு மடங்காக ஆக்குவதற்கு மைய அரசு தீர்மானித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், சேலம் உருக்காலை விரிவாக்கத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக வெப்பமுறை உருட்டு வசதிகள் அளிக்கும் திட்டத்தை எட்டா வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மைய அரசு பரிசீலித்து வருகிறது.

9-05 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உருட்டாலையில் எவ்வளவு பேர் பணி யாற்றுகிறார்கள்? இது உருக்காலையாக மாற்றப்படுமானால் எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கூடுதலாகக் கிடைக்கும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 1,397 பேர் இங்கே பணியாற்றி வருகிறார்கள். இது நாம் எதிர்பார்க்கிறபடி உருக்காலையாக மாற்றப்படுமேயானால், பன்மடங்கு அதிகமாகும்.

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இது தமிழ் மாநாடு என்ற அடிப்படையில் தமிழ் அறிஞர்களாக உள்ளவர்கள்தான் பெரும்பாலும் அனுப்பப்பட்டார்கள். அரசியல் கட்சி அடிப்படையில் ஆளும் கட்சி சார்பிலேயோ, எதிர்க் கட்சி சார்பிலேயோ யாரையும் அனுப்பவில்லை. இரண்டாவது, அவர்கள் அந்த மாநாட்டிற்கான முன்னேற்பாடுகளும், தகுந்த முயற்சிகளும் முதலில் மேற்கொள்ளவில்லை. மேற்கொண்டு இருப்பார்களேயானால், ஒரு வேளை அப்படி எல்லாம் எண்ணிப் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

சேலம் இரும்பாலை.

***807—திரு. வ. முல்லைவேந்தன் திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உருட்டாலையாக உள்ள சேலம் இரும்பாலையை உருக் காலையாக மாற்ற மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

தற்போது, முதல் கட்டமாக, ஒரு உருட்டு ஆலையாக மட்டும் செயல்பட்டு வரும் சேலம் இரும்பு ஆலையை, ஒருங் கிணைந்த முழு அளவிலான உருக்காலையாக மாற்ற வேண்டு மென, மைய அரசை வலியுறுத்தி இவ்வரசு பலமுறை கடிதங்கள் மூலமும், நேரிலும் தெரிவித்து வந்துள்ளது. அதன் விளை வாக, இவ்வாலையின் உற்பத்தித் திறனை ரூ. 69.37 கோடி செலவில் இரு மடங்காக ஆக்குவதற்கு மைய அரசு தீர்மானித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், சேலம் உருக்காலை விரிவாக்கத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக வெப்பமுறை உருட்டு வசதிகள் அளிக்கும் திட்டத்தை எட்டா வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மைய அரசு பரிசீலித்து வருகிறது.

9-05 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உருட்டாலையில் எவ்வளவு பேர் பணி யாற்றுகிறார்கள்? இது உருக்காலையாக மாற்றப்படுமானால் எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கூடுதலாகக் கிடைக்கும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 1,397 பேர் இங்கே பணியாற்றி வருகிறார்கள். இது நாம் எதிர்பார்க்கிறபடி உருக்காலையாக மாற்றப்படுமேயானால், பன்மடங்கு அதிகமாகும்.

[1990 ஆகஸ்டு 22

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழக மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கை. உருட்டாலையாக இருக்கக்கூடிய இந்த சேலம் ஆலையை உருக்காலையாக மாற்ற வேண்டுமென்று கடந்த காலத்திலே இதற்கான முயற்சிகள் என்ன எடுக்கப்பட்டன? தற்போது, தேசிய முன்னணி அரசு வந்ததற்குப் பிறகு இந்தப் பிரச்சினையிலே என்ன முன்னேற்றமான முடிவை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் மூன்றையும் பற்றி விரிவாகவே—தலைவரவர்கள் அனு மதித்தால், எடுத்துக்கூற விரும்புகிறேன். சேலம் உருக்காலை அமைக்க வேண்டுமென்று 1,969 ஆம் ஆண்டுக்கு முன் அப்போது இருந்த கழக அரசால் மைய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது. 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற 'என்.டி.சி.-தேசிய-வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில்—முதலமைச்சர் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சேலம் இரும்பு உருக் காலைத் திட்டம் சேர்க்கப்படா விட்டால் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழக அரசே அந்த வரைவுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லையென்று அங்கே மறுத்துரைக்கப் பட்டது. அதற்குப் பிறகு, அப்போது பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் அந்த வேண்டுகோளை ஏற்று, சில தினங்களிலேயே அவர்கள் 17—4—1970 அன்று பாராளு மன்றத்தில் சேலம் உருக்காலை அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டு, 16—9—1970 அன்று சேலத்திற்கு வந்து அதற்கான அடிக்கல்லை அன்று நாட்டினார்கள். 1972 ஆம் ஆண்டில் சேலத்தில் துருப்பிடிக்காத உருக்கு மற்றும் சிறப்பு வகை உருக்குகளை உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்த ஆலை ஒன்றை நிறுவ மைய அரசு உத்தரவு பிறப்பித்தது. அன்றைய உருக்கு அமைச்சராக இருந்த மறைந்த மோகன் குமாரமங்கலம் அவர்கள் 13—6—1972 அன்று அந்த திட்ட ஆரம்பப் பணியைத் தொடங்கி வைத்தார்கள். முதற்கட்டமாக 127 கோடி ரூபாய் செலவில் 32 ஆயிரம் டன் சில்வர் தகடுகள் உற்பத்தி செய்யும் குளிர்முறை உருட்டாலை ஒன்று, 1981 ஆம் ஆண்டு சேலத்தில் பரிட்சார்த்த உற்பத்தியைத் தொடங்கியது. 1972-க்கும், 1981-க்கும் இடைப்பட்ட காலத்திலே உருக்காலை என்ற நிலை மாற்றப்பட்டு, அது உருட்டாலையாக ஆகக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி விட்டது. பிறகு, இந்த ஆட்சி மீண்டும் வந்ததற்குப் பிறகு 19—4—1989 தேதியிட்ட மைய அரசின் இரும்பு மற்றும் உருக்குத் துறையிலே இருந்து பெறப்பட்ட கடிதத்தில் சேலம் இரும்பாலை விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக 69.37 கோடி ரூபாய் செலவில் ஆண்டொன்றுக்கு தற்போதுள்ள 32 ஆயிரம் டன் எவர்சில்வர் தகடுகள் உற்பத்திக்

1990 ஆகஸ்டு 22]

திறனை 70 ஆயிரம் டன்னாக உயர்த்த, இரண்டாவது உருட்டாலை—உருக்காலையல்ல—உருட்டாலை அமைக்கும் திட்டம் ஒன்றை செயற்படுத்த மைய அரசு முடிவெடுத்துள்ளது என்றும், இத் திட்ட வேலைகள் குறித்தபடி நடைபெற்று வருகின்றன என்றும், இப்பணி 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் முடிவுறும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. சேலம் உருக்காலை விரிவாக்கத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக வெப்ப முறை உருட்டு வசதிகள் அளிக்கும் திட்டத்தை செயற்படுத்துமாறும், இதற்குத் தேவைப்படும் மின்சாரத்தை தக்க தருணத்தில் அளிப்பதற்கு இந்த அரசு தயாராக உள்ளது என்றும் முதலமைச்சர் சார்பாக என்னிடமிருந்து 22—1—1990 தேதியிட்ட நேர்முகக் கடிதம் ஒன்று, மைய அரசின் உருக்கு மற்றும் சுரங்கத் துறை அமைச்சருக்கு அனுப்பப்பட்டு, மேற்படித் திட்டத்தை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பிறகு, 9—2—1990ஆம் நாளிட்ட மைய அரசின் உருக்கு மற்றும் சுரங்கத் துறை அமைச்சரிடமிருந்து முதலமைச்சருக்கு வரப்பெற்ற நேர்முகக் கடிதத்தில் சேலம் உருக்காலை, உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்கும் பணிகள் நடந்து வருவதாகவும், வெப்பமுறை உருட்டு வசதிகள் அளிக்கும் திட்டத்தை, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு மைய அரசின் முனைப்பான பரிசீலனையில் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை, மைய அரசின் உருக்கு மற்றும் சுரங்க அமைச்சகத்தின் சார்புச் செயலாளர் அவர்களும் தமது 19—2—1990 நாளிட்ட கடிதத்திலே இந்த அரசுக்குத் தெரிவித்துள்ளார். அதற்கு கடிதம் மூலமாகவும், நேரடியாகவும் மத்திய அரசோடு தொடர்புகொண்டு ஆவன செய்து வருகிறது இந்த அரசு.

9-10 மணி

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலையை ஒரு முழுமையான உருக்காலையாக மாற்றுவதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகும் என்று மாநில அரசு மதிப்பீடு செய்து, மத்திய அரசிற்கு அறிவுறுத்தியிருக்கிறதா ? மேலும், முழுமையான உருக்காலையாக மாற்றுவதற்கு தேவையான கச்சாப் பொருள் அங்கே கிடைக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அங்கே கிடைக்கின்ற கச்சாப் பொருளைப் பற்றித்தான் சில நுண்ணாய்வுகள் நடத்தப்பட்டு, அதனுடைய தரம் பற்றி பல்வகையான கூற்றுக்கள் வெளியிடப்பட்டதன் காரணமாகத்தான் இடையிலே உருக்காலை என்பது உருட்டாலையாக மாற நேரிட்டது. இருந்தாலும், தமிழக அரசு இப்போது கிடைக்கின்ற கச்சாப் பொருளே தகுதி வாய்ந்தது, தரமுள்ளது என்ற வாதத்திலிருந்து பின்வாங்கவில்லை.

திரு. பொன். விஜயராகவன் : தலைவரவர்களே, சமீபத்தில் நாடாளுமன்றத்தில் உருக்குத் துறை அமைச்சர் பதிலளிக்கின்ற போது, நாட்டில் இப்போது உருக்கு பற்றாக்குறையாக இருக்கிறது என்றும், வெளிநாட்டிலிருந்து உருக்கை நாம் இங்கே வரவழைத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் சொன்னதோடு மட்டுமல்லாமல், பொக்காரோ போன்ற உருக்காலைகளில் தேவையான மின்சாரம் இல்லாத காரணத்தினால் அவர்களுடைய இலக்கை அடையமுடியவில்லை என்பதை நாடாளுமன்றத்திலே அறிவித்தார்கள். ஆகவே, தேவையான அளவிற்கு மின்சாரத்தை சேலம் உருக்காலை அமைப்பதற்கு வழங்கும் நிலை ஏற்படுமேயானால் அதை நாங்கள் தருவதற்கு தயாராக இருக்கிறோம் நாட்டில் இருக்கக்கூடிய உருக்குத் தட்டுப்பாட்டை அடிப்படையாக வைத்துக்கொண்டு, விரைவாக இந்த உருட்டாலையை உருக்காலையாக மாற்றவேண்டும் என்று தற்போது இருக்கக்கூடிய இணக்கமான அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி, இந்த அரசு அதை வற்புறுத்துவதற்கு முன் வரவேண்டும், அது முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர்வர்களே, நான் முதலில் அளித்த விரிவான பதிலிலேயே அதைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறேன். 22—1—1990 ஆம் தேதியிட்டு நான் மத்திய அரசிற்கு எழுதிய கடிதத்தில், தேவையான அளவிற்கு மின்சாரம் வழங்கத் தயாராக இருக்கிறோம். எனவே, இந்த உருக்காலை விரிவாக்கத் திட்டத்தை நிறைவேற்றித் தாருங்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறேன். தொடர்ந்து நேரிலும் அதைப்பற்றி மத்திய அரசிடத்திலே கூறியிருக்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் உருக்காலை விரிவாக்கப்படுவதற்கான மதிப்பீடு எவ்வளவு? மத்திய அரசு இதுவரையில் எவ்வளவு முதலீடு செய்திருக்கிறது ? மீண்டும் உருக்காலையாக மாற்றப்படும் நிலை உருவாகும்போது எவ்வளவு மதிப்பீடு ஏற்படும் என்று அறிய விரும்புவதோடு தற்போது அங்கே உற்பத்தியாகக்கூடிய எவர்சில்வர் தகடு அதிகமாக உற்பத்தியாகின்ற இந்த நிலையில் பித்தளை—இந்தப் பாத்திரத் தொழில் அதிகமாக இருக்கக்கூடிய கும்பகோணம், திருப்பூர் போன்ற பகுதிகளில் இதனுடைய கிளை விற்பனை நிலையம் தொடங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடுகள், செலவழிக்கப்பட்ட தொகை, தேவைப்படுகின்ற விவரங்கள் இப்போது என்னிடத்திலே இல்லை. இப்போது அங்கு உற்பத்தியாகின்ற இந்த எவர்சில்வர் தகடுகள், மொத்தம் 32,250-டன் இரும்பு என்கின்ற வகையிலே அங்கே உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றது. மற்ற பாத்திரத் தொழில்களைப் போல இதையும் இங்கே நடத்துவதற்கு இப்போது வசதிகள் இல்லை.

1990 ஆகஸ்டு 22]

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, சேலம் உருக்காலை குறித்த மதிப்பீட்டினுடைய விவரங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தற்போது இல்லை என்று கூறிவிட்டார்கள். ஆனால் அந்த உருக்காலை அமைந்திருக்கிற இடமும், சேலம் மாக்னசைட் அமைந்திருக்கிற இடமும் ஏறக்குறைய 9,000 ஏக்கர் வக்ஃபுக்குச் சொந்தமான நிலம் என்பதை அரசு அறியும். எனவே, அந்த நஷ்ட ஈட்டையும் சேர்த்து மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படி என்றால் இதுவரையிலே எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு, மத்திய அரசோடு கலந்து முடிவு செய்திருக்கிறது ? அப்படி இல்லை என்றால் அந்த 9,000 ஏக்கருக்கும் நஷ்ட ஈடு பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எனக்கு இதிலே உள்ள மன வருத்தம் என்னவென்றால், நம்முடைய நண்பர் லத்தீப் அவர்கள் வக்ஃபு போர்டு தலைவராகிப் பல மாதங்கள் ஆகின்றன. இந்த விவரத்தை இதுவரையிலே என்னிடத்திலே சொல்லவில்லை. அரசுக்கும் எழுதவில்லை. எழுதியிருப்பாரேயானால், இதைப்பற்றிக் கேட்டு இன்றைக்கு விளக்கமாகப் பதில் அளித்திருக்க எனக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

காவல் நிலையம் அமைத்தல்.

*2264—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் தாலுகா செக்காரக்குடி கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள திருவைகுண்டம் தாலுகா செக்காரக்குடி கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்காரக்குடி கிராமத்தைப் பொறுத்தமட்டிலே கிட்டத்தட்ட 10,000 மக்கள் தொகையைக் கொண்ட மிகப் பெரிய கிராமம். அதோடு அந்தக் கிராமத்தைச் சுற்றிலும் இருக்கின்ற கிராம மக்களும், செக்காரக்குடி மக்களும் கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டருக்கு மேல் நடந்து சென்று, மேலத்

1990 ஆகஸ்டு 22]

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, சேலம் உருக்காலை குறித்த மதிப்பீட்டினுடைய விவரங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே தற்போது இல்லை என்று கூறிவிட்டார்கள். ஆனால் அந்த உருக்காலை அமைந்திருக்கிற இடமும், சேலம் மாக்னசைட் அமைந்திருக்கிற இடமும் ஏறக்குறைய 9,000 ஏக்கர் வக்ஃபுக்குச் சொந்தமான நிலம் என்பதை அரசு அறியும். எனவே, அந்த நஷ்ட ஈட்டையும் சேர்த்து மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படி என்றால் இதுவரையிலே எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு, மத்திய அரசோடு கலந்து முடிவு செய்திருக்கிறது ? அப்படி இல்லை என்றால் அந்த 9,000 ஏக்கருக்கும் நஷ்ட ஈடு பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எனக்கு இதிலே உள்ள மன வருத்தம் என்னவென்றால், நம்முடைய நண்பர் லத்தீப் அவர்கள் வக்ஃபு போர்டு தலைவராகிப் பல மாதங்கள் ஆகின்றன. இந்த விவரத்தை இதுவரையிலே என்னிடத்திலே சொல்லவில்லை. அரசுக்கும் எழுதவில்லை. எழுதியிருப்பாரேயானால், இதைப்பற்றிக் கேட்டு இன்றைக்கு விளக்கமாகப் பதில் அளித்திருக்க எனக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

காவல் நிலையம் அமைத்தல்.

*2264—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் தாலுகா செக்காரக்குடி கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள திருவைகுண்டம் தாலுகா செக்காரக்குடி கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்காரக்குடி கிராமத்தைப் பொறுத்தமட்டிலே கிட்டத்தட்ட 10,000 மக்கள் தொகையைக் கொண்ட மிகப் பெரிய கிராமம். அதோடு அந்தக் கிராமத்தைச் சுற்றிலும் இருக்கின்ற கிராம மக்களும், செக்காரக்குடி மக்களும் கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டருக்கு மேல் நடந்து சென்று, மேலத்

தட்டாப்பாறையிலே இருக்கின்ற காவல் நிலையத்திற்கும், மணியாச்சியிலே இருக்கின்ற காவல் நிலையத்திற்கும் சென்று புகார் கொடுக்கவேண்டிய நிலையிலே உள்ளனர். அதோடு மாத்திரமல்லாமல், இந்தக் கிராமங்களுக்கிடையே பஸ் வசதியும் கிடையாது. ஆகவே செக்காரக்குடி கிராமத்தை யும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும் இணைத்து, செக்காரக்குடியிலே ஒரு காவல் நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் பல காவல் நிலையங்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, அவை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. காவல் நிலையங்களைத் தொடங்குவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளில் ஒன்றாக, சட்டமன்ற உறுப்பினருடைய வேண்டு கோளும் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே, வேண்டுகோள் புறக்கணிக்கப்படமாட்டாது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்காரக்குடி கிராமத்தில் ஒரு புறநகர் காவல் நிலையமாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கா காவல் நிலையமே வேண்டுமென்று கேட்டுவிட்டு, வேண்டுகோள் புறக்கணிக்கப்படமாட்டாது என்று நான் சொன்னவுடனும், 'புறநகர்' என்று கேட்கத் தேவையில்லை. அகநானூறிலே இருக்கலாம் புறநானூறு இப் போது தேவையில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன, ஸ்ரீவைகுண்டத் திற்காகவா கேட்கப் போகிறீர்கள் ?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இல்லை, இல்லை, பொதுவான கேள்விதான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகாலமாக பல இடங்களிலே காவல் நிலையங்களை அரசு ஆரம்பித்திருக்கிறது. அவை, தனியார் கட்டிடங்களில்—வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந் திருக்கிறதா? அப்படியென்றால், அவ்வாறு வாடகைக் கட்டிடங்

1990 ஆகஸ்டு 22]

களில் இயங்கி வருகின்ற காவல் நிலையங்களுக்கெல்லாம் விரைவில் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் அதனுடைய எண்ணிக்கை பற்றிய குறிப்புகளையும் போலீஸ் மானியக் கோரிக்கையில் விவாதிக்கப் பட்டபோது நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைத்தல்

*3575—திரு. ஆர். சிங்காரம்:
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் சப்-மாஜிஸ் டிரேட் கோர்ட் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவக்க வேண்டுமென்று பன்னெடுங்காலமாகக் கோரிக்கை விடுத்து, அது பரிசீலிக்கப்பட்டு, முடிகின்ற தருவாயில் இருக்கின்றபோது, தற்போது அமைச்சரவர்கள் உண்டு என்று சொல்வாரெனக் கருதி னேன். ஆனால், இல்லை என்று சொல்லி விட்டார்கள். தயவு செய்து, பேராவூரணியில், நம்முடைய தமிழக முதல்வரவர்கள் அறிவித்த 'இன்ஸ்பெக்டர் ஆபீஸ்' கூட சமீபத்தில் துவக்கப்பட் டது—பேராவூரணி மிகப்பெரிய லட்சக்கணக்கான மக்கள்தொகை கொண்ட ஊராகும். அப்படிப்பட்ட அந்த ஊரில் சப்-மாஜிஸ்டி டிரேட் கோர்ட் இல்லாதது பொது மக்களுக்கும், காவலர்களுக்கும் அலுவலர்களுக்கும் மிகப்பெரிய தொல்லையாக இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, மீண்டும் மறு பரிசீலனை செய்து, சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று துவக்க, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் தற்போது இயங்கி வருகிற மாவட்ட முன்சீப் கோர்ட் மற்றும் குற்றவியல்

1990 ஆகஸ்டு 22]

களில் இயங்கி வருகின்ற காவல் நிலையங்களுக்கெல்லாம் விரைவில் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முயற்சி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் அதனுடைய எண்ணிக்கை பற்றிய குறிப்புகளையும் போலீஸ் மானியக் கோரிக்கையில் விவாதிக்கப் பட்டபோது நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைத்தல்

*3575—திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவக்க வேண்டுமென்று பன்னெடுங்காலமாகக் கோரிக்கை விடுத்து, அது பரிசீலிக்கப்பட்டு, முடிகின்ற தருவாயில் இருக்கின்றபோது, தற்போது அமைச்சரவர்கள் உண்டு என்று சொல்வாரெனக் கருதினேன். ஆனால், இல்லை என்று சொல்லி விட்டார்கள். தயவு செய்து, பேராவூரணியில், நம்முடைய தமிழக முதல்வரவர்கள் அறிவித்த 'இன்ஸ்பெக்டர் ஆபீஸ்' கூட சமீபத்தில் துவக்கப்பட்டது—பேராவூரணி மிகப்பெரிய லட்சக்கணக்கான மக்கள்தொகை கொண்ட ஊராகும். அப்படிப்பட்ட அந்த ஊரில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் இல்லாதது பொது மக்களுக்கும், காவலர்களுக்கும் அலுவலர்களுக்கும் மிகப்பெரிய தொல்லையாக இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, மீண்டும் மறு பரிசீலனை செய்து, சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்று துவக்க, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் தற்போது இயங்கி வருகிற மாவட்ட முன்சீப் கோர்ட் மற்றும் குற்றவியல்

நீதிமன்றம் எண் 2 ஆகியவற்றின் அதிகார எல்லைக்குள் உட்பட்டு பேராவூரணி இருக்கிறது. பேராவூரணிக்கும், இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கும் இடையிலுள்ள தூரம் 27 கிலோ மீட்டர். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை வேண்டுமானால், உயர் நீதிமன்ற நீதிபதிக்குத தெரிவித்து, அவருடைய கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணிக்கும், பட்டுககோட்டைக்கும் 27 கிலோ மீட்டர் தூரம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 10,15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஊர்களுக்கெல்லாம் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவக்கப்பட்டுள்ளது. இந்த பட்டுக்கோட்டையில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவங்கி இருப்பதனால், பேராவூரணியிலிருந்து வருவது மிகப்பெரிய தொல்லையாக இருக்கிறது. ஆகவே தயவுசெய்து, அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வதாகச் சொல்கிறார்கள்—அதற்கு ஏதாவது காலக்கெடு உண்டா? தயவுசெய்து மீண்டும் மறுபரிசீலனை செய்து பேராவூரணியில் ஒரு சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் துவக்க ஆவனசெய்யும்படி அன்புடன் வேண்டுகிறேன். அதை அறிவிப்பாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய அறிக்கையைப் பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பட்டுக்கோட்டையில் ஏறத்தாழ ரூ. 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட செலவிலே, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன...

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சப்-மாஜிஸ்டிரேட்டும், டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பும் இரண்டும் 'இன்டெக்ரேஷன்' ஆகி, அதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இல்லாத இடங்களில், 'டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-கம்-சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்' என்று செங்கோட்டையில் இருப்பதைப் போல, செயற்படுத்த அரசு அனுமதி அளிக்குமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல 'டிஸ்ட்ரிக்ட்-கம்-சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட்' ஆக நடைபெற வேண்டுமென்ற கருத்து அரசுக்கு உண்டு. இதுபற்றி உயர்நீதிமன்றத்தின் கருத்தைப் பெற்றபின் அந்தக் கருத்தின் மீது நடவடிக்கை எடுககலாம்.

1990 ஆகஸ்டு 22]

கால்நடைகள் தாக்கி மரணம்.

*5279 திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட, வினாவுக்கு விடையளிப்பாரா :

விபத்தில் மரணமடைந்தால் மற்றவர்கள் சலுகை அடைவதுபோல், கால்நடைகள் தாக்கி விவசாயி மரணமடைந்தால், ரூ. 10,000 சலுகை பெற வழி உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் தொழிலாளர்கள் சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகள் (2.5 ஏக்கருக்கு குறைவாக நிலமுள்ளோர்) தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறந்து போனால் ரூ. 10,000 வழங்கப்படுவதுபோல், தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது கால்நடை தாக்கி இறக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் இச்சலுகை பொருந்தும்.

9-20 மணி.

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தொழிலில் இருக்கும்போது கால்நடைகளால் விவசாயிகளுக்கு விபத்து ஏற்பட்டால் நஷ்டஈடு வழங்கப்படுவது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கால்நடைகள் எப்போதுமே விவசாயிகளோடு இரண்டற கலந்து நிலைத்து நிற்கக் கூடியவை. ஆகவே, தொழிலில் இல்லாத போதும் கூட விபத்துக்கள் கால்நடைகளால் விவசாயிகளுக்கு ஏற்படுகின்றன. ஆகவே தொழிலில் இருக்கும்போதும், இல்லாத சமயத்திலும் இத்தகைய விபத்துக்கள் ஏற்பட்டால் அவர்களுக்கு இச்சலுகைகளை வழங்கி விவசாயிகள் பயன் அடைய ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது கால்நடைகள் தாக்கி இறக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு இச்சலுகை பொருந்தும் என்று முதலிலேயே வினாவிற்கு விடை அளித்திருக்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, விபத்தில் மரணம் அடைகிற விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். விபத்துக்கள் என்றால், கால்நடைகள் தாக்குவது பாம்பு கடியினால் இறப்பது என்று பலவகைகள் இருக்கின்றன. ஆகவே, எத்தகைய விபத்துக்கள் நேர்ந்தால் இப்படிப்பட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : எனது மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஒரு நீண்ட பட்டியலே என்னிடத்தில் இருக்கிறது. சலவைத் தொழிலாளர்களில் தொடங்கி கிராமிய நடனம் ஆடும் கலைஞர் வரை 35 கேட்டகரீஸ் இருக்கின்றன. அவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சபையின் நேரத்தை வீண் அடிக்க வேண்டும் என்று விரும்பினால், நான் அந்த கேட்டகரி வொய்ஸ் லிஸ்டை படித்துக் காட்டுகிறேன்; (குறுக்கீடு) ஏற்கெனவே நான் இந்தச் சபையில் அதைப் படித்ததும் உண்டு. அதை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் நூர்முகமது அவர்கள் கேட்டு மறந்ததும் உண்டு.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 35 கேட்டகரீஸ் இருப்பதாகச் சொன்னார்கள். நான் தெரிந்துக் கொள்ள விரும்புவது, வெளியிலே வயல்வெளிகளுக்குச் செல்லும் போதும், சாலையிலே செல்லும் போதும் கூட கழுதைகள் தாக்கி பல பேர் வாழ்க்கையே போய் விடுகிறது. எந்தவிதமான செயலும் இல்லாமல் போய் விடுகிறார்கள். ஆகவே, இந்தமாதிரி பாதிக்கப்பட்டவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : கழுதைகள் கவனிக்கப்படும். (சிரிப்பு)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் விபத்துக்களில் சிக்கி மரணம் அடைய நேரிட்டால் அரசாங்கம் உதவி செய்கிறது. ஆனால் விபத்தில் இறந்ததற்குப் பிறகு, தாலுக்கா மருத்துவ மனைக்கு எடுத்து வந்து போஸ்ட்மார்ட்டம் செய்து வாங்கி வந்தால்தான் அவர்களுக்கு அந்த உதவி கிடைப்பதாக ஒரு விதி இருப்பதாக அறிகிறேன். இது மிகுந்த சிரமத்தை பொது மக்களுக்கு ஏற்படுத்துகிறது. அதை மாற்றி கிராமங்களில் இருக்கக்கூடிய பெரியவர்கள் அல்லது கிராமப் பிரமுகர்களிடம் இது போன்ற சர்ட்டிபிகேட் பெற்று இது போன்ற நட்ட ஈடு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : நல்ல யோசனை, அரசு பரிசீலிக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பாம்பு கடித்து இறந்தால் அவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படும் என்று அரசாங்கத்தின் சார்பாக அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் மயிலாதுறையில் பாம்பு கடித்து இறந்தவரை, போஸ்ட் மார்ட்ட

செய்த பிறகு, பாம்பு பிடிப்பவர்கள் பாம்பு கடித்து இறந்தால் தான் அந்தச் சலுகை வழங்கப்படும் என்று அச்சலுகையை அளிக்க மறுத்திருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு விவசாய வேலைகளை அவர்கள் செய்துக் கொண்டிருக்கும்போது பாம்பு கடித்து இறந்தாலும் இந்தச் சலுகை வழங்கப்படும் என்று அரசு அறிவிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை; பாம்பை பிடிக்கும்போது அந்த பாம்பு கொத்தினால் பிடித்தவர் செத்தால் உதவி உண்டு. பாம்பு தானாகவே வந்து கடித்தால் அவர்களுக்கும் உதவி உண்டா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். எந்த இடத்தில் பாம்பு தானாக வந்து கடித்தது என்பதை, அந்தத் தகவலை எனக்குத் தருவாரானால் அந்தப் பாம்பைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலக்கணத்தில் தன் வினையா, பிற வினையா என்று முடிவு பண்ணினால்தான்.

சாணார்பட்டி ஒன்றியத்தை நத்தம் தாலுக்காவுடன் இணைத்தல்.

* 8794 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியத்தை திண்டுக்கல் தாலுக்காவிலிருந்து நத்தம் தாலுக்காவுடன் இணைக்க அரசு உத்தேசித்துள்ளதா !

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சாணார்பட்டி ஒன்றியப் பகுதியை திண்டுக்கல் தாலுக்காவில் இருந்து பிரித்து நத்தம் தாலுக்காவில் சேர்க்க ஒரு பரிந்துரை வந்துள்ளது. இது பற்றி மேலும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன, முடிவு 1991 ஆண்டுதான் எடுக்க இயலும்.

செய்த பிறகு, பாம்பு பிடிப்பவர்கள் பாம்பு கடித்து இறந்தால் தான் அந்தச் சலுகை வழங்கப்படும் என்று அச்சலுகையை அளிக்க மறுத்திருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு விவசாய வேலைகளை அவர்கள் செய்துக் கொண்டிருக்கும்போது பாம்பு கடித்து இறந்தாலும் இந்தச் சலுகை வழங்கப்படும் என்று அரசு அறிவிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை; பாம்பை பிடிக்கும்போது அந்த பாம்பு கொத்தினால் பிடித்தவர் செத்தால் உதவி உண்டு. பாம்பு தானாகவே வந்து கடித்தால் அவர்களுக்கும் உதவி உண்டா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். எந்த இடத்தில் பாம்பு தானாக வந்து கடித்தது என்பதை, அந்தத் தகவலை எனக்குத் தருவாரானால் அந்தப் பாம்பைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலக்கணத்தில் தன் வினையா, பிற வினையா என்று முடிவு பண்ணினால்தான்.

சாணார்பட்டி ஒன்றியத்தை நத்தம் தாலுக்காவுடன் இணைத்தல்.

* 8794 திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியத்தை திண்டுக்கல் தாலுக்காவிலிருந்து நத்தம் தாலுக்காவுடன் இணைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சாணார்பட்டி ஒன்றியப் பகுதியை திண்டுக்கல் தாலுக்காவில் இருந்து பிரித்து நத்தம் தாலுக்காவில் சேர்க்க ஒரு பரிந்துரை வந்துள்ளது. இது பற்றி மேலும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. முடிவு 1991 ஆண்டுதான் எடுக்க இயலும்.

[1990 ஆகஸ்டு 22

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பதாகச் சொன்னதற்கு நன்றி. அதிலே குறிப்பாக நத்தம் தாலூகா. தொழில் துறையிலே பின் தங்கிய தாலுக்கா என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு யூனியன் மட்டும். அந்த சானார்பட்டி யூனியனை நத்தத்தோடு இணைத்தால் தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக அதை ஏற்று நடத்தித்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நத்தம் வட்டத்தில் 3 உள் வட்டங்களே உள்ளதால் நத்தம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மிகையான பணிச்சுமை இல்லை. இந்த நேரத்தில் திண்டுக்கல் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிச்சுமை அதிகமாக உள்ளது. இதனால் திண்டுக்கல் வட்டத்தில் உள்ள சானார்பட்டி சிலுவத்தூர் மற்றும் கம்பலேயம்பட்டி ஆகிய 3 உள் வட்டங்களைக் கொண்ட சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை திண்டுக்கல் வட்டத்திலிருந்து பிரித்து நத்தம் வட்டத்துடன் சேர்ப்பதற்கு திண்டுக்கல் காய்தே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் முன் மொழிவினை சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்பியிருக்கிறார். இதனை பரிசீலனை செய்ய கூடுதல் விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கேட்கப்பட்டுள்ளது. முடிவான அறிக்கை அரசுக்கு கிடைக்கப்பெற்றதும் சானார்பட்டி ஒன்றியப் பகுதிகளை திண்டுக்கல் வட்டத்திலிருந்து பிரித்து நத்தம் வட்டத்துடன் இணைப்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். அத்தோடு 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக வருவாய் வட்டங்களின் ஆட்சி வரம்பில் மாற்றம் செய்ய 30—6—1991 வரை தடையாணை அமலில் உள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சானார்பட்டி யூனியனை இரண்டாகப் பிரித்து நத்தத்தோடு இணைக்க வேண்டும் என்று சொல்கிறார். ஒரே தொகுதி என்ற அடிப்படையிலே அந்த யூனியனில் உள்ள 22 பஞ்சாயத்துகளுமே சேர்த்து நத்தத்தோடு இணைக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்து. கனம் அமைச்சர் அவர்கள் 1991 ஆம் ஆண்டிலே அது நிறைவேற்றப்படும் என்று சொல்கிறார். குறிப்பாக பாதி மட்டும் சொல்கிறார்கள். நத்தம் தொகுதி என்று சொன்னால் சானார்பட்டி நத்தம் யூனியன் இரண்டையுமே நத்தம் தாலூகா என்று அறிவித்தால் நலமாக இருக்கும் என்பது எல்லோருடைய கோரிக்கை.

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பரிசீலனை செய்ய கூடுதல் விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கேட்கப்பட்டுள்ளது. முடிவான அறிக்கை அரசுக்கு கிடைக்கப் பெற்றதும் சானார்பட்டி ஒன்றியப் பகுதிகளை திண்டுக்கல் வட்டத்திலிருந்து பிரித்து நத்தம் வட்டத்துடன் இணைப்பதா அல்லவா என்பது பற்றி அரசால் பரிசீலிக்கப்படும்.

புறநகர் பேருந்துகள் நிலையம் அமைத்தல்

*5610 திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னைப் பெருநகர் குழுமம் பெருநகர் வளர்ச்சிக்காக கத்திப்பாரா சந்திப்பிலிருந்து மீனம்பாக்கம் வரை புறநகர் பேருந்துகள் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

9.30. மணி

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து சென்னை வரையில் வருகின்ற பேருந்துகளும் மற்றும் எல்லா வண்டிகளும் அந்தச் சாலையில் வருவதாலும் ஏற்படுகின்ற நெருக்கடியை தவிர்ப்பதற்காகவும் இடையிலே தாம்பரத்திலிருந்து சென்னைக்கு வரவேண்டிய பயணிகள் வசதிக்காகவும் பெருகி வருகின்ற சென்னைப் பெருநகர் குழுமம் வளர்ச்சிக்காக கத்திப்பாரா சந்திப்பிலிருந்து மீனம்பாக்கத்திற்கு இடையிலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்கள் இன்றைக்கு பினாமிகளால் களவாடப்படுவதை தடுப்பதற்காக வாவது இந்தத் திட்டத்தை அங்கே கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் பக்கத்திலே ஆலந்தூர் அருகில் ஏற்கனவே ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அந்த இடம் பேருந்து நிலையம் அமைப்பதற்கு உகந்ததாக இல்லை என்ற காரணத்தால் அந்த எண்ணம் கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான சைதாப்பேட்டையில் உள்ள

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பரிசீலனை செய்ய கூடுதல் விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கேட்கப்பட்டுள்ளது. முடிவான அறிக்கை அர சுக்கு கிடைக்கப் பெற்றதும் சானார்பட்டி ஒன்றியப் பகுதி களை திண்டுக்கல் வட்டத்திலிருந்து பிரித்து நத்தம் வட்டத் துடன் இணைப்பதா அல்லவா என்பது பற்றி அரசால் பரிசீலிக் கப்படும்.

புறநகர் பேருந்துகள் நிலையம் அமைத்தல்

*5610 திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னைப் பெருநகர் குழுமம் பெருநகர் வளர்ச்சிக்காக கத்திப்பாரா சந்திப்பிலிருந்து மீனம்பாக்கம் வரை புறநகர் பேருந்துகள் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

9.30. மணி

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து சென்னை வரையில் வருகின்ற பேருந்துகளும் மற்றும் எல்லா வண்டிகளும் அந்தச் சாலையில் வருவதாலும் ஏற்படுகின்ற நெருக்கடியை தவிர்ப் பதற்காகவும் இடையிலே தாம்பரத்திலிருந்து சென்னைக்கு வரவேண்டிய பயணிகள் வசதிக்காகவும் பெருகி வருகின்ற சென்னைப் பெருநகர் குழுமம் வளர்ச்சிக்காக கத்திப் பாரா சந்திப்பிலிருந்து மீனம்பாக்கத்திற்கு இடையிலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்கள் இன்றைக்கு பினாமிகளால் களவாடப்படுவதை தடுப்பதற்காக வாவது இந்தத் திட்டத்தை அங்கே கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட் டது போல் பக்கத்திலே ஆலந்தூர் அருகில் ஏற்கனவே ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் அந்த இடம் பேருந்து நிலையம் அமைப்பதற்கு உகந்ததாக இல்லை என்ற காரணத்தால் அந்த எண்ணம் கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான சைதாப்பேட்டையில் உள்ள

பேருந்து நிலையத்தை மாற்றி செயின்ட் தாமஸ் மவுண்ட் கிராமத்திலுள்ள நகர பேருந்து நிலையமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையோடு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நகரத்திற்குள்ளே இருக்கின்ற நெருக்கடியைக் குறைப்பதற்கு சென்னைப் பெருநகர் குழுமம் பெருநகர் வளர்ச்சிக்காக ஜி. எஸ். டி. சாலை வழியில் பேருந்து நிலையம் மற்றும் வாகனங்கள் நிறுத்தம் அமைப்பதற்கு வேறு ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். பொருத்தமான இடம் கிடைத்த உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பணிமனை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டு இருக்கிற அந்த இடத்திற்குப் பக்கத்திலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் உகந்ததாக இருக்கிறது என்பதை ஆதாரமாகத் தந்தால் இந்த அரசு அந்த இடத்தில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யுமா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிமனைக்கு அடிக்கல் நாட்டு விழாவிற்கு சென்ற நேரத்தில்தான் பக்கத்திலே கிட்டத்தட்ட 50 ஏக்கர் புறம்போக்கு நிலம் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்தில் சொல்லப்பட்டு அவைகள் எல்லாம் சர்வே செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த சர்வே முடிந்த உடன் அந்த நிலங்களை மீட்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக டெப்போ அமைத்தல்

*8388 திரு. குமரி அனந்தன் :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக டெப்போ (Depot) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

)ஆ) கேள்விக்கு இடமில்லை.

பேருந்து நிலையத்தை மாற்றி செயின்ட் தாமஸ் மவுண்ட் கிராமத்திலுள்ள நகர பேருந்து நிலையமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையோடு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நகரத்திற்குள்ளே இருக்கின்ற நெருக்கடியைக் குறைப்பதற்கு சென்னைப் பெருநகர் குழுமம் பெருநகர் வளர்ச்சிக்காக ஜி. எஸ். டி. சாலை வழியில் பேருந்து நிலையம் மற்றும் வாகனங்கள் நிறுத்தம் அமைப்பதற்கு வேறு ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். பொருத்தமான இடம் கிடைத்த உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பணிமனை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டு இருக்கிற அந்த இடத்திற்குப் பக்கத்திலே பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் உகந்ததாக இருக்கிறது என்பதை ஆதாரமாகத் தந்தால் இந்த அரசு அந்த இடத்தில் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யுமா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிமனைக்கு அடிக்கல் நாட்டு விழாவிற்கு சென்ற நேரத்தில்தான் பக்கத்திலே கிட்டத்தட்ட 50 ஏக்கர் புறம்போக்கு நிலம் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்தில் சொல்லப்பட்டு அவைகள் எல்லாம் சர்வே செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த சர்வே முடிந்த உடன் அந்த நிலங்களை மீட்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக டெப்போ அமைத்தல்

*8388 திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக்கழக டெப்போ (Depot) அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1990 ஆகஸ்டு 22]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சாத்தான்குளம் ஒரு தாலுக்காவினுடைய தலைநகரமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே பஸ் டெப்போ ஒன்று அமையவேண்டுமென்று நீண்ட நாளைய கோரிக்கை மக்களிடமிருந்து வந்திருக்கிறது. அநேகமாக அமைகிறது என்று சொல்லுகிற தகவல் கூட எங்களுக்கு வந்திருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதை பரிசீலித்து அந்த பஸ் டெப்போ அமைவதற்கும், பஸ்களை பழுதுபார்க்கின்ற நிலையம் கூட அமைவதற்கும் ஏற்பாடு செய்வதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளத்திலிருந்து 27 கிலோ, மீட்டர் தூரத்திலுள்ள திருச்செந்தூரில் ஒரு பணிமனையும் இன்னொரு பணிமனை 29 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஸ்ரீவைகுண்டத்திலும் ஏற்கெனவே அமைந்திருக்கிறது. இருந்தாலும் ஒரு பணிமனையை அமைக்கவேண்டும் என்று சொன்னால் குறைந்தபட்சம் 15 பேருந்துகளாவது அந்த நகரத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவேண்டிய நிலைமை இருந்தால்தான் பணிமனைகளை அமைப்பதற்கான தகுதிகள் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை மீண்டும் பரிசீலனை செய்து பணிமனை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தப் பணிமனை அமைப்பதற்கு மீண்டும் பரிசீலிக்கிறேன் என்று சொன்னதற்கு மனதில் எழுகின்ற உவகையோடு சேர்த்து சாத்தான்குளம் தொகுதியில் இந்தப் பணிமனை அமைகின்ற போது நமது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினாலும் சரி, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினாலும் சரி—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டுவதாக ஒரு செய்தி வந்ததால் சொல்கிறேன்— சாத்தான்குளத்திலே வந்து அடிக்கல் நாட்டுகின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டால் அவர்களை நாங்கள் வரவேற்கின்ற ஒரு பெருமை தரப்படும். ஏன் என்றால் வறண்டப் பகுதியை அவர்கள் பார்த்து சாத்தான் குளத்தில் விழமாட்டான் என்று ஏற்கெனவே எனக்குக் கொடுத்த உறுதிமொழியை அங்கே நிறைவேற்றி அதை ஒரு வறண்ட பகுதியாக, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கின்ற வாய்ப்பும் கிடைக்கும். ஆகவே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே விரைவிலே வந்து அடிக்கல் நாட்ட வேண்டுமென்ற எங்களுடைய வேண்டுகோளை அவர்கள் ஏற்பார்களா என அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

தாய்சேய் நல விடுதி.

*8332 **திரு. ஆ. அறிவழகன் :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி கிராமத்தில் உள்ள புனவாசிப்பட்டியில் தாய்சேய் நல விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிந்தலவாடி கிராமம் வீடு கட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. புனவாசிப்பட்டி கிராமம் மத்திப்பட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. எனவே சிந்தலவாடி மற்றும் புனவாசிப்பட்டி கிராமங்களில் தனியாக துணை சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்புகள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சித்த மருத்துவப் பண்ணைகள் அமைத்தல்

* 8889 **திரு. எம். அண்ணாமலை :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் சித்த மருத்துவப் பண்ணைகள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9–35 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

தாய்சேய் நல விடுதி.

*8332 **திரு. ஆ. அறிவழகன் :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி கிராமத்தில் உள்ள புனவாசிப்பட்டியில் தாய்சேய் நல விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிந்தலவாடி கிராமம் வீடு கட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. புனவாசிப்பட்டி கிராமம் மத்திப்பட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. எனவே சிந்தலவாடி மற்றும் புனவாசிப்பட்டி கிராமங்களில் தனியாக துணை சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்புகள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சித்த மருத்துவப் பண்ணைகள் அமைத்தல்

* 8889 **திரு. எம். அண்ணாமலை :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் சித்த மருத்துவப் பண்ணைகள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9–35 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

தாய்சேய் நல விடுதி.

*8332 **திரு. ஆ. அறிவழகன் :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி கிராமத்தில் உள்ள புனவாசிப்பட்டியில் தாய்சேய் நல விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிந்தலவாடி கிராமம் வீடு கட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. புனவாசிப்பட்டி கிராமம் மத்திப்பட்டி துணை சுகாதார நிலையத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. எனவே சிந்தலவாடி மற்றும் புனவாசிப்பட்டி கிராமங்களில் தனியாக துணை சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்புகள் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சித்த மருத்துவப் பண்ணைகள் அமைத்தல்

* 8889 **திரு. எம். அண்ணாமலை :**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் சித்த மருத்துவப் பண்ணைகள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1990 ஆகஸ்டு 22]

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் தீர்த்தமலையில் சித்த மருத்துவச் செடிகள் இருப்பதை அறிந்து பாண்டிச்சேரியை சேர்ந்த சித்த மருத்துவர்கள் வந்து கடந்த 10 ஆண்டுகளாகவே சேகரித்து செல்கிறார்கள். இதைப் பயன்படுத்தி அங்கு ஒரு சித்த மருத்துவ மூலிகைப் பண்ணை அமைக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலையில் தற்போது ஆங்காங்கு இருக்கின்ற சுகாதார நிலையங்களின் பக்கத்தில் இருக்கின்ற வளாகங்களில் அவைகள் பயிரிடப்பட்டு அவைகளைச் சேகரித்து மற்ற இடங்களுக்குத் தந்து அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. தேவைப்படுமானால் இந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், இந்த சித்த மூலிகைக்கு நிலஆவரைச் செடி என்று ஒரு செடி தமிழ்நாட்டிலேயே அந்தப் பகுதியிலே தான், அதாவது அந்தத் தீர்த்தமலைப் பகுதியிலேயும், தர்மபுரி மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவற்றையும், மேலும் பல்வேறு சித்த மூலிகைச் செடிகளையும் ஊராட்சி ஒன்றிய அளவிலே உற்பத்தி செய்வதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபுணர்கள் மூலம் கேட்டறிந்து அதற்காகப் பரிசீலனை செய்யலாம்.

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலி அணைக்கட்டு கட்டுதல்.

*5607 திரு. ராம. நாராயணன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலி அணைக்கட்டு கட்டுவது சம்பந்தமாக சாக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவரிடமிருந்து கடிதம் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

1990 ஆகஸ்டு 22]

திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் தீர்த்தமலையில் சித்த மருத்துவச் செடிகள் இருப்பதை அறிந்து பாண்டிச்சேரியை சேர்ந்த சித்த மருத்துவர்கள் வந்து கடந்த 10 ஆண்டுகளாகவே சேகரித்து செல்கிறார்கள். இதைப் பயன்படுத்தி அங்கு ஒரு சித்த மருத்துவ மூலிகைப் பண்ணை அமைக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலையில் தற்போது ஆங்காங்கு இருக்கின்ற சுகாதார நிலையங்களின் பக்கத்தில் இருக்கின்ற வளாகங்களில் அவைகள் பயிரிடப்பட்டு அவைகளைச் சேகரித்து மற்ற இடங்களுக்குத் தந்து அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. தேவைப்படுமானால் இந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், இந்த சித்த மூலிகைக்கு நிலஆவரைச் செடி என்று ஒரு செடி தமிழ்நாட்டிலேயே அந்தப் பகுதியிலே தான், அதாவது அந்தத் தீர்த்தமலைப் பகுதியிலேயும், தர்மபுரி மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவற்றையும், மேலும் பல்வேறு சித்த மூலிகைச் செடிகளையும் ஊராட்சி ஒன்றிய அளவிலே உற்பத்தி செய்வதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபுணர்கள் மூலம் கேட்டறிந்து அதற்காகப் பரிசீலனை செய்யலாம்.

TRUTH ALONE TRIUMPHS

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலி அணைக்கட்டு கட்டுதல்.

*5607 திரு. ராம. நாராயணன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலி அணைக்கட்டு கட்டுவது சம்பந்தமாக சாக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவரிடமிருந்து கடிதம் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 'சாலி அணைக்கட்டு' கட்டுகிற கருத்துருவோ, மதிப்பீடோ அரசின் பரிசீலனையில் இல்லை.

தாராபுரத்தில் காற்றின் மூலம் மின்சார உற்பத்தி.

*7106 டாக்டர் த. சாந்தகுமாரி :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாராபுரத்தில் காற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டத்தில் தாராபுரத்தில் நல்ல காற்று விசையுடன் இருக்கும் என்று கருதப்படுகிறது. காற்றின் தன்மையை அறிய ஒரு உபகரணம் தாராபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு இந்த காற்றின் தன்மையை அறிந்து அதன் பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் த. சாந்தகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒரு தொழிற்சாலை தமிழகத்தில் உருவாக்கும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்வத்தோடு ஆக்கபூர்வமான முறையில் செயலாற்றி வருகின்ற இந்தத் தருணத்தில், மிகவும் பின்தங்கிய என்னுடைய தாராபுரம் தொகுதியில் தொழிற்சாலைகள் இயங்க மின்சாரம் அடிப்படையான தேவை என்பதால் அதனைக் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டிலேயே என்னுடைய தொகுதியில் கிடைக்கின்ற "ஃப்ரி ஏர்"-ஐப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்து மக்களுக்கு உதவ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலம் மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு முக்கியமாகத் தேவை காற்று. அந்தக் காற்றினுடைய வேகம், Velocity, duration, distribution இவைகளெல்லாம் எந்த அளவுக்கு இருக்கிறதென்று தெரிந்த பிறகுதான் அந்த இடத்திலே காற்றாலைகளை அமைக்க முடியும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 'சாலி அணைக்கட்டு' கட்டுகிற கருத்துருவோ, மதிப்பீடோ அரசின் பரிசீலனையில் இல்லை.

தாராபுரத்தில் காற்றின் மூலம் மின்சார உற்பத்தி.

*7106 டாக்டர் த. சாந்தகுமாரி :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாராபுரத்தில் காற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டத்தில் தாராபுரத்தில் நல்ல காற்று விசையுடன் இருக்கும் என்று கருதப்படுகிறது. காற்றின் தன்மையை அறிய ஒரு உபகரணம் தாராபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு இந்த காற்றின் தன்மையை அறிந்து அதன் பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் த. சாந்தகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒரு தொழிற்சாலை தமிழகத்தில் உருவாக்கும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்வத்தோடு ஆக்கபூர்வமான முறையில் செயலாற்றி வருகின்ற இந்தத் தருணத்தில், மிகவும் பின்தங்கிய என்னுடைய தாராபுரம் தொகுதியில் தொழிற்சாலைகள் இயங்க மின்சாரம் அடிப்படையான தேவை என்பதால் அதனைக் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டிலேயே என்னுடைய தொகுதியில் கிடைக்கின்ற "ஃப்ரி ஏர்"-ஐப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்து மக்களுக்கு உதவ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலம் மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு முக்கியமாகத் தேவை காற்று. அந்தக் காற்றினுடைய வேகம், Velocity, duration, distribution இவைகளெல்லாம் எந்த அளவுக்கு இருக்கிறதென்று தெரிந்த பிறகுதான் அந்த இடத்திலே காற்றாலைகளை அமைக்க முடியும்.

1990 ஆகஸ்டு 22]

அதற்காக இரண்டு டெஸ்டிங் உண்டு. ஒன்று, Manual Collection of Data என்பது. அந்தப் பரிசோதனையை தாராபுரத்திலே நாங்கள் நடத்தியிருக்கிறோம். அதிலே சாதக மான சூழ்நிலை வந்திருக்கிறது. அடுத்து, Automatic Collection of Data என்கின்ற அடுத்த பரிசோதனை நடத்த வேண்டியிருக்கிறது. தாராபுரத்திலே கோ-ஆப்டெக்ஸ் ஸ்பின்னிங் மில்ஸ் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் அந்த ஆலையை நிறுவ முன்வந்திருக்கிறார்கள். எனவே இந்த Automatic Collection of Data தயாரிப்பதற்கு $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவாகும். அதை அந்த ஆலை நிர்வாகத்திடத்திலேயே கேட்டிருக்கிறோம். பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வந்த பிறகு அதுகுறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது, தாராபுரத்தில் காற்றின் தன்மை எப்படி இருக்கிறது என்பதை அறிய வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், சுல்தான்பேட்டையைப் பொறுத்தவரையில் காற்றின் தன்மையை அறிய வேண்டிய அவசியம் கிடையாது. பாலக்காட்டு கணவாயின் வழியாக வீசுகின்ற காற்றினுடைய முழு தாக்கமும் அந்தப் பகுதியிலே வீசுகின்றது. அங்கே ஏற்கெனவே இரு காற்றாலைகள் இருக்கின்றன. மின்சாரம் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரு காற்றாலை மட்டும் டிரடிஷனல் டைப்பிலே இருக்கிறது. இன்னொன்று சுற்றுகின்ற காற்றாலை. அது இயங்குவதில்லை. ஆண்டுக்கு ஒரு முறை அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை ஹைதராபாத்திலேயிருந்து யாரோ வந்து இயக்கிப் பார்த்து விட்டு சென்று விடுவதாகச் சொல்கிறார்கள். காரணம் அந்தக் காற்றாலைக்கு அங்கே காற்று அதிகம் என்று சொல்கிறார்கள். இந்த 'டிரடிஷனல் டைப் ஆப்' காற்றாலைக்குப் போதுமான காற்று இருக்கிறது. ஒரே ஒரு காற்றாலை இருக்கின்ற காரணத்தால் அது 'நாட் வையபிள்' என்று சொல்கிறார்கள். குறைந்த பட்சம் மூன்று நான்கு காற்றாலைகள் இருக்குமேயானால் பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்கிறார்கள். எனவே, மூன்றாக அல்லது நான்காக மாற்றுவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

9.40 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காற்றாலைகள் வருடம் பூராவும் ஓடாது. வருடத்தில் 8,760 மணி நேரம் என்றால் அதிலே சுமார் 2,000 மணி நேரம்தான் ஓடும். வருடத்தில் நான்கைந்து மாதங்கள்தான் ஓடும். அது காற்றினுடைய வேகம், தாக்கம் இவைகளைப் பொறுத்தது. சுல்தான்பேட்டையில் ஏற்கெனவே ஒன்று இருக்கிறது. இன்னொன்று போடலாமா என்று ஆய்வில் இருக்கிறது.

தூர் வாரி ஆழப்படுத்துதல்.

*10301 திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோமுகி அணையையும், அதன் மூலம் நீர் தேக்கப்படும் ஏரிகளையும், தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையிலிருந்து உருவெடுத்து வருகிற தொட்டியத்தாறு, சித்தாறு, கல்படையாறு ஆகிய மூன்று ஆறுகளில் இருந்து இயற்கையின் காரணமாக ஒரே நாளில் அந்த அணை நிரம்புகிற அளவுக்குத் தண்ணீர் வருகிற நிலைமை இருக்கிறது. இந்தக் கோமுகி அணையைச் சுற்றி 146 ஏரிகள் இருக்கின்றன. கள்ளக்குறிச்சி, சின்ன சேலம் ஆகிய பகுதிகளின் குடிநீர்ப்பஞ்சத்தைப் போக்குகிற வகையிலேயும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்ற வகையிலேயும் இருப்பது இந்த அணையேயாகும். நீண்ட நெடுங்காலமாக இந்த அணை கட்டப்பட்டதிலிருந்து தூர் வாரவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் தூர் எடுப்பதற்கு ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோமுகி அணை மற்றும் அதை உள்ளடக்கி இருக்கின்ற ஏரிகளைத் தூர் வாருவது என்பதுதான் கேள்வியினுடைய நோக்கம். இந்த அடிப்படையில் தூர் வாராவிட்டாலும் பொதுவாக மெய்ன்டெனன்ஸ் என்ற முறையிலும், ஐரோப்பிய பொருளாதாரத்தின் அடிப்படையிலும் மற்றும் பல்வேறு வகைகளிலும் அந்தத் தூர் வாருகின்ற பணி நடந்துகொண்டிருக்கிறது.

திரு. தா. உதயசூரியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் நீர்ப்பாசனக் கருத்தரங்குகள் நடைபெறுகிறபோது கொட்டாங்குச்சி போல் இருந்த இந்த ஆறுகள் எல்லாம் தாம்பூலத் தட்டு போல் ஆகிவிட்டன. எனவே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் இதைக் கருத்தில் கொண்டு தூர் வாரும் பணிகளில் ஈடுபடும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால், அங்கே 146 ஏரிகள் இருக்கின்ற காரணத்தால் எல்லா ஏரிகளையும் தூர் எடுக்க முடியுமா என்றால் முடியாது என்பது உண்மை

தான். ஆனால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற முக்கிய ஏரிகளிலேயாவது தூர் எடுக்கிற வேலையை இந்த அரசாங்கம் ஏற்று நடத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற ஏரிகளைப் பொறுத்தவரையில் அது தேவை என்றால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோமுகி நீர்த்தேக்கத்திலே குறைந்தது 200 ஏக்கருக்கு மேலே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். தண்ணீர் பிடிப்பதற்கு விடுவதேயில்லை. 10 அடியோடு அது நின்று விடுகிறது. அதனால் எங்கள் பகுதியிலே மணிமுத்தாறு நதியில் தண்ணீர் வருவதில்லை. எங்கள் பகுதி விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன் உள்ளே இருக்கிற அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அது பற்றி அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம் என்பதை பல முறை மாமன்றத்திலும், கருத்தரங்குகளிலும் நான் தெரிவித்திருக்கிறேன். ஆனால், அகற்றுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களே அகற்ற வேண்டும் என்று ஒரு பகுதியினர் சொல்கிறார்கள். அகற்றக்கூடாது என்று மற்றொரு பகுதியினர் கூறுகிறார்கள். ஆகவே, சில நேரங்களில் நீக்கு போக்காக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லை, இல்லை, இது எங்களுக்கு ரொம்ப முக்கியம் என்று கூறுகிறார்கள். இருந்தாலும், பாசனத்திற்கு இடையூறாக இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை நிச்சயம் அரசு அகற்றும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தூர் வாரும் பணி சம்பந்தமாக சில விஷயங்களைச் சொன்னார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு ஏரி, குளங்களை மேடாக்கி சரியான மழை பெய்கிற நேரத்தில் கூட தண்ணீர் எல்லாம் வீணாகி வெளியே போய்விடுகிறது. சில நேரங்களிலே அவற்றை ஆழப்படுத்த வேண்டுமென்றால் விதிகளிலே மூன்று ஆண்டுகள் தொடர்ந்து ''ஓவர் ஃப்ளோ'' ஆனால்தான் அதைத் தூர் வாரலாம், ஆழப்படுத்தலாம், கரை உயர்த்தலாம் என்று விதி இருக்கிறது. ஆனால், மூன்று ஆண்டுகள் தொடர்ந்து மழை பெய்வது என்பது நம்முடைய நாட்டிலே ரொம்ப அபூர்வமாகி இருக்கிறது. ஆகவே, அந்த விதிகளைத் தளர்த்தி எங்கெங்கு

மேடாகி இருக்கிறதோ அந்தக் குளங்களை எல்லாம் ஆழப்படுத்தி மழை பெய்கிற காலங்களில் அதிகமான நீரைத் தேக்கக்கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி முக்கியமான, நீர்ப்பரப்பு அதிகம் உள்ள ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்துவதற்காகத்தான் பல இடங்களில் புல்டோசர் மூலமாகக்கூட ஆழப்படுத்துகிற அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, தேவையான, மிக முக்கியமான ஏரிகள் என்ற அந்த வகையில் ஆழப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராசிபுரம் அரசு மருத்துவமனை

***3365 திரு. ஏ. சுப்பு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசிபுரம் அரசு மருத்துவமனையில் 100 M.A. பவர் கொண்ட நுண்கதிர் கருவி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது இல்லை.

9-45 மணி.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் அரசு மருத்துவமனையில் 100 எம். ஏ. பவர் கொண்ட நுண்கதிர் கருவி அமைக்கும் திட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளார்கள் என்று அறிகிறேன். அது அமைச்சருக்குத் தெரியுமா என்பதை உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட மருத்துவ அலுவலரிடத்தில், இராசிபுரத்தில் இத்தகைய கருவி அமைப்பதற்கான இட வசதி இருக்கிறதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவரது அறிக்கை வந்த பிறகு, அங்கே பணியாளர்கள் நியமிப்பது பற்றியும், கருவிகள் அமைப்பது குறித்தும் முடிவு எடுக்கப்படும்.

மேடாகி இருக்கிறதோ அந்தக் குளங்களை எல்லாம் ஆழப்படுத்தி மழை பெய்கிற காலங்களில் அதிகமான நீரைத் தேக்கக்கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி முக்கியமான, நீர்ப்பரப்பு அதிகம் உள்ள ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்துவதற்காகத்தான் பல இடங்களில் புல்டோசர் மூலமாகக்கூட ஆழப்படுத்துகிற அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, தேவையான, மிக முக்கியமான ஏரிகள் என்ற அந்த வகையில் ஆழப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராசிபுரம் அரசு மருத்துவமனை

*3365 திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசிபுரம் அரசு மருத்துவமனையில் 100 M.A. பவர் கொண்ட நுண்கதிர் கருவி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது இல்லை.

9-45 மணி.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் அரசு மருத்துவமனையில் 100 எம். ஏ. பவர் கொண்ட நுண்கதிர் கருவி அமைக்கும் திட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளார்கள் என்று அறிகிறேன். அது அமைச்சருக்குத் தெரியுமா என்பதை உங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட மருத்துவ அலுவலரிடத்தில், இராசிபுரத்தில் இத்தகைய கருவி அமைப்பதற்கான இட வசதி இருக்கிறதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவரது அறிக்கை வந்த பிறகு, அங்கே பணியாளர்கள் நியமிப்பது பற்றியும், கருவிகள் அமைப்பது குறித்தும் முடிவு எடுக்கப்படும்.

1990 ஆகஸ்டு 22]

மூளைக் காய்ச்சல்

*4923—திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) தனியார்கள் வளர்த்து வரும் பன்றிகளின் நடமாட் டத்தினால் மூளைக் காய்ச்சல் போன்ற தொற்றுநோய் பரவு கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பன்றிகளைக் கட்டுப்படுத்தி வளர்ப்ப தற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கொசுக்கள் பன்றிகளைக் கடித்து, பின்பு அது மனி தர்களைக் கடிப்பதனால் மூளைக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவுகின்றன.

(ஆ) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 241 பிரிவு, பன்றிகளைப் பிடித்து அழிக்கவும் கட்டுப் படுத்தவும் வழி செய்கிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் மேற் கூறப்பட்ட சட்டத்தைப் பிரகடனம் செய்து பன்றிகளை அழிக்க லாம் அல்லது கட்டுப்படுத்தலாம்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகள், நகராட்சிகள் போன்ற பெரிய நகர்ப் புறங்களில் மூளைக் காய்ச்சல் நோய் என்பது தொடர்ந்து தாக் கும் நிலையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட தைப் போல, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆரம்ப காலத்தில் பன்றிகளைச் கொன்றார்கள். தற்போது நிறுத்தி விட்டார்கள். ஆகவே, அந்த நோய் தொடர்ந்து தாக்கும் சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. ஆகவே, பன்றிகள் வளர்ப்பதைத் தடை செய்ய அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்திலேயே வழிவகை இருக்கின்ற கார ணத்தால், அதிகாரிகளுக்கு இது குறித்து வலியுறுத்தப்பட்டு, அவர்களும் நடவடிக்கைகள் எடுப்பதற்கான வழிவகைகளை இந்த அரசு உள்ளாட்சித்துறை மூலமாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மூளைக் காய்ச்சல் நோயைத் தடுக்கும் வகையில் தடுப்பூசி தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? இலவச ஊசி போட அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தடுக்கிற வகையில் பூச்சிகொல்லி மருந்துகள், இந்த நோய் பரவுகிற இடங்களில் முன்னெச்சரிக்கையாக தெளிக்கப்படுகிறது. அது தான் இப்போது செயல்படுகின்ற முன்னேற்பாடு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இந்தக் கேள்வியில் தனியார் வளர்த்துவரும் பன்றிகள் என்று இருக்கிறது. இதில் பிரைவேட் செக்டார், பப்ளிக் செக்டார் என்று தனித்தனியாக இருக்கிறதா? (சிரிப்பு) எங்கள் ஊரில் செயின்ட் ஜோசப் காலேஜில் நிறைய பன்றிகளை வளர்க்கிறார்கள். அவர்கள் பராமரிப்பு ரொம்ப நன்றாக இருக்கிறது. அதாவது ரைனாசரஸ் மிருகம் போல பெரியதாக இருக்கிறது. பெரும் பெரும் பன்றிகளாக இருக்கின்றது. அவர்கள் வளர்க்கும் முறை நன்றாக இருக்கிறது. 100, 100 பன்றிகளாக அழைத்துக் கொண்டு போகிறார்கள். அழைத்துக் கொண்டு வருகிறார்கள், காவிரியில் குளிப்பாட்டுகிறார்கள். ஆனால், தனியார் சிலர் பன்றிகளை வளர்க்கும்போது, இதுபோல சில சமயங்களில் அவைகளைப் கொல்வதற்காகப் பிடிக்கும்போது பிரச்சினை வருகிறது. இதற்கு சட்டத்தில் வழிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால், அந்தச் சட்டத்தை நீங்கள் அமல்படுத்துகிறீர்களா என்றுதான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : சட்டத்தை அமல் படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அமைக்கப்பட்ட பிறகு, தொடர்ந்து இந்தக் கேள்வியை நான் எழுப்பி வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்களும் சட்டத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் பன்றிகள் ஒழிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. என் தொகுதியில் அவைகள் கழிப்பறைகளில்தான் வாசம் செய்கின்றன. பெண்கள் போக முடியவில்லை. இதைப் பலமுறை நான் பேசியிருக்கிறேன். ஆகவே, கறாராக நடவடிக்கை எடுத்து, இப்போது அந்தப் பன்றிகளைக் கட்டுப்படுத்தி, திரு. தீட்சிதர் அவர்கள் சொன்னது போல, வெள்ளைப் பன்றிகளைக் கட்டுப்பாட்டோடு வளர்க்க பண்ணை முறைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? தனியார் பன்றிகளை வளர்க்க கட்டுப்பாடு முறைகள் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பன்றிகள், மாடுகள் இவைகளைப் போன்றவைகளை மாநகராட்சிகள், நகராட்சிகள் எல்லாம் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், சட்டத்தை மட்டுமே முழுவதும் நடைமுறைப்படுத்தி, அவைகளைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அம்மையார் அவர்கள் நன்றாக அறிவார்கள். இவைகளை வளர்ப்பதால் பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. முறையாக வளர்ப்பதற்கான முறைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, முறையாகத்தான் அதைச் செயல்படுத்த வேண்டுமே தவிர, தடுத்தால் பிரச்சினை வரும். பிறகு, அம்மையார் அவர்களே, இந்தந்தக் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், என்ன செய்வது என்றும் கேட்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே நாம் இதன் மூலமாக வலியுறுத்தித்தான் படிப்படியாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-50 மணி

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பன்றி வளர்ப்பவர்களுடைய சௌகரியத்திற்காக ஊருக்கு வெளியே தனியாக இடங்களை ஒதுக்கி, பட்டிகள் அமைத்து இந்த இடங்களில்தான் பன்றிகள் அடைக்கப்படுமென்று ஓர் அறிவிப்பு தந்து, அந்த அடிப்படையில் அரசு பாதுகாப்பு தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடுகள் வளர்ப்பது குறித்து இதுபோல செய்யலாமா என்ற பரிசீலனை உள்ளது. இப்படித் திட்டங்கள் வந்தால் பொதுமக்கள் எந்த அளவிற்கு அதற்கு ஆதரவு அளிப்பார்கள் என்பதையும் அறிய வேண்டிய காலக் கட்டம் இருப்பதால் இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 7887 திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கண்ணங்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அந்தப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும்'

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பன்றிகள், மாடுகள் இவைகளைப் போன்றவைகளை மாநகராட்சிகள், நகராட்சிகள் எல்லாம் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், சட்டத்தை மட்டுமே முழுவதும் நடைமுறைப்படுத்தி, அவைகளைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அம்மையார் அவர்கள் நன்றாக அறிவார்கள். இவைகளை வளர்ப்பதால் பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. முறையாக வளர்ப்பதற்கான முறைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, முறையாகத்தான் அதைச் செயல்படுத்த வேண்டுமே தவிர, தடுத்தால் பிரச்சினை வரும். பிறகு, அம்மையார் அவர்களே, இந்தந்தக் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், என்ன செய்வது என்றும் கேட்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே நாம் இதன் மூலமாக வலியுறுத்தித்தான் படிப்படியாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-50 மணி

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பன்றி வளர்ப்பவர்களுடைய சௌகரியத்திற்காக ஊருக்கு வெளியே தனியாக இடங்களை ஒதுக்கி, பட்டிகள் அமைத்து இந்த இடங்களில்தான் பன்றிகள் அடைக்கப்படுமென்று ஓர் அறிவிப்பு தந்து, அந்த அடிப்படையில் அரசு பாதுகாப்பு தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடுகள் வளர்ப்பது குறித்து இதுபோல செய்யலாமா என்ற பரிசீலனை உள்ளது. இப்படித் திட்டங்கள் வந்தால் பொதுமக்கள் எந்த அளவிற்கு அதற்கு ஆதரவு அளிப்பார்கள் என்பதையும் அறிய வேண்டிய காலக் கட்டம் இருப்பதால் இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 7887 திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கண்ணங்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த உஞ்சனை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அந்தப் பணிகள் எப்பொழுது துவங்கப்படும்’

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உஞ்சனை மற்றும் 20 குடியிருப்புகள் சேர்ந்த ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக, நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீடு, தொழில்நுட்ப குழுவின் அங்கீகாரம் பெறும் பொருட்டு ஆய்வில் உள்ளது.

(ஆ) இக்கூட்டுக் குடிநீர்த் திட்ட மதிப்பீடு தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டு, பின்னர் வாரியத்தின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, இந்த ஆண்டு (1990-91) செயலுக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உஞ்சனை என்ற ஊரிலே இரண்டு கிணறுகளும் அமைக்கப்பட்டு 3 ஆண்டுகளாகி விட்டன. இந்தத் திட்டத்தை உடனடியாக ஏற்படுத்தித் தந்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற குடி தண்ணீர் பஞ்சம் நீங்கும். ஆகவே, அரசு உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு உத்தேச மதிப்பீடாக ரூபாய் 40 லட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, 1990-91-ல் மட்டும் இந்தத் திட்டத்திற்காக 10 லட்சம் ரூபாய் குடி நீர் வாரியத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டே பணிகள் விரைவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே, பட்டாளம், தொந்தி, நம்புதாலை, நுள்ளிமனை, காரங்காடு, புதுப்பட்டினம் ஆகிய பஞ்சாயத்துக்களில் கடுமையான குடிதண்ணீர் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கேட்கும் போது அங்கே போதுமான ஊழியர்கள் இல்லை. முழு நேரமும் அந்த மோட்டார் பம்புகளை இயக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள். அந்தக் குறைகளை அரசு நிவர்த்தி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் பம்புகள் போன்றவற்றை எல்லாம் பராமரிக்கும் பணி அந்தந்த ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் செய்யப்படுகிறது.

1990 ஆகஸ்டு 22]

கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருக்குமானால், அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை குடிநீர் வடிகால் வாரியம் செய்து வருகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆட்கள் இல்லை என்ற குறை ஏதும் இல்லை. அப்படி ஏதாவது குறிப்பாக இருக்குமானால், அதை மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவாரானால் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு சிறப்புத் திட்டம்.

* 1535 திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்களையும் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக ஆக்கி, அவர்களுக்கு நிரந்தரப் பணி, பணிப் பாதுகாப்பு, குறைந்த பட்ச மாத ஊதியம் போனஸ், வருங்கால வைப்பு நிதி ஆகியவை உறுதி செய்யும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா!

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது கைத்தறிகளை கூட்டுறவுமயமாக்கினால், நூல் வழங்குதல், தள்ளுபடி வழங்குதல், நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி, உற்பத்திக்கு ஏற்ப கூலியின் அடிப்படையில் போனஸ் வழங்குதல் ஆகிய திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அது தவிர, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அறிவித்துள்ளதுபோல நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 3,000 வழங்கப்பட்டது. அது 10 ஆயிரம் ரூபாயாக இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அது போல ஓடு போட்ட வீடுகளுக்குப் பதிலாக கான்கிரிட்—ஆல் அமைக்கப்படும் திட்டத்தின்கீழ் 2 ஆயிரம் வீடுகள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உருவாக இருக்கிறது. தனியாக, புதிய நவீன ரகங்களை உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களுக்கு பழுதடைந்த தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேற்படி சிறப்புத் திட்டங்கள் எல்லாம் தற்போது நடைமுறையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயுள்ள தனியார் நெசவு ஆலைகளில் வேலை செய்யும் நெசவாளர்கள் பெறுவது போல தமிழகத்திலே இயங்கும் தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில்

1990 ஆகஸ்டு 22]

கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருக்குமானால், அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை குடிநீர் வடிகால் வாரியம் செய்து வருகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆட்கள் இல்லை என்ற குறை ஏதும் இல்லை. அப்படி ஏதாவது குறிப்பாக இருக்குமானால், அதை மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவாரானால் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு சிறப்புத் திட்டம்.

* 1535 திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்களையும் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக ஆக்கி, அவர்களுக்கு நிரந்தரப் பணி, பணிப் பாதுகாப்பு, குறைந்த பட்ச மாத ஊதியம் போனஸ், வருங்கால வைப்பு நிதி ஆகியவை உறுதி செய்யும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா!

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது கைத்தறிகளை கூட்டுறவுமயமாக்கினால், நூல் வழங்குதல், தள்ளுபடி வழங்குதல், நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி, உற்பத்திக்கு ஏற்ப கூலியின் அடிப்படையில் போனஸ் வழங்குதல் ஆகிய திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அது தவிர, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அறிவித்துள்ளதுபோல நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 3,000 வழங்கப்பட்டது. அது 10 ஆயிரம் ரூபாயாக இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அது போல ஓடு போட்ட வீடுகளுக்குப் பதிலாக கான்கிரிட்—ஆல் அமைக்கப்படும் திட்டத்தின்கீழ் 2 ஆயிரம் வீடுகள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உருவாக இருக்கிறது. தனியாக, புதிய நவீன ரகங்களை உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களுக்கு பழுதடைந்த தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேற்படி சிறப்புத் திட்டங்கள் எல்லாம் தற்போது நடைமுறையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயுள்ள தனியார் நெசவு ஆலைகளில் வேலை செய்யும் நெசவாளர்கள் பெறுவது போல தமிழகத்திலே இயங்கும் தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில்

உள்ள விற்பனையாளர்களுக்கு மற்றும் நெசவு தொடர்பான தொழிலாளர்களுக்கு நிரந்தரப்பணி, பணிப் பாதுகாப்பு, குறைந்த பட்ச மாத ஊதியம், போனஸ், வருங்கால வைப்பு நிதி ஆகியவை களை விரிவு செய்யும் சிறப்புத் திட்டத்திற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு கொடுக்கின்ற அனைத்து சலுகைகளும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி துணிகள் தேக்கத்தை நீக்கவும், கைத்தறி துணிகள் விற்பனை பெருகவும், கைத்தறித் துணி விற்பனைக்கு பண்டிகை நாட்களுக்கு 20 விழுக்காடு கழிவுத் தொகைக் கொடுக்கப்படுகிறது. அத்துடன் கைத்தறி விற்பனைக்கு மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு 20 விழுக்காடு கழிவுத் தொகை, ரிபேட் வழங்கி, நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்க அரசு அவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணிகளை விற்பனை செய்ய 20 சதவிகிதம் தள்ளுபடி மானியம் இந்த அரசு வருவதற்கு முன்னால் 30 நாட்களாக இருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நிதி நிலை அறிக்கையில் அறிவித்தது போல 90 நாட்கள் தள்ளுபடி மானியம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தள்ளுபடி பண்டிகை காலங்களில் மட்டுமல்லாமல், மாதந் தோறும் 1 முதல் 5 நாட்கள் வழங்குவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை, கோவை, மதுரை போன்ற மாநகராட்சிகளிலே வாழ்கிற கைத்தறி நெசவாளர்களைப் பாதிக்கக்கூடிய வகையில், அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கடன் தள்ளுபடி பொருந்தாது என்று உத்தரவு வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதை மாற்றி மாநகராட்சிகளில் வாழும் கைத்தறி நெசவாளர்களும் அந்தத் பயனைப் பெறும் அளவில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஆகஸ்டு 22]

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்திலே கைத்தறி சங்கங்களிலே பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு மோசடி செய்யப்பட்டு, அதைப் பற்றி ஆய்வு செய்ய தனிக் குழு அமைக்கப்பட்டது. அந்த விசாரணை அடிப்படையில் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அருப்புக்கோட்டையில் கடந்த காலத்தில் நடைபெற்ற அந்தத் தவறுகளுக்காக 15 பேர்கள் சிறைத் தண்டனை வரையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்காக தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு பல்வேறு சங்கங்களில் கடந்த காலத்தில் நடந்த தவறுகளை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. முழுமையான அறிக்கை வந்த பிறகு அதைப் பற்றி இங்கே விவரங்களைத் தருகிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களிலே உள்ள உறுப்பினர்களுக்கும், அதைப்போல கைத்தறி நெசவு வேலையில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று உத்தரவிட்டும், அந்தக் கூலி பல இடங்களில் அமலாகவில்லை என்பது அமைச்சரவர்களின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். கூட்டுறவு சங்கங்களின் பெரிய அதிகாரிகளே, இதை அமல் படுத்தினால் அந்தச் சங்கங்களை முறையாக நடத்த முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுமென்று காரணம் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களைச் சொல்லி, அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதைத் தடுப்பது சரியல்ல. அதை நிறைவேற்ற அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் விரைவில் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் கடனுதவி

*3555—திரு. பி. வி. இராஜேந்திரன் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்கள் கட்ட பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கடனுதவி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்.

1990 ஆகஸ்டு 22]

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்திலே கைத்தறி சங்கங்களிலே பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு மோசடி செய்யப்பட்டு, அதைப் பற்றி ஆய்வு செய்ய தனிக் குழு அமைக்கப்பட்டது. அந்த விசாரணை அடிப்படையில் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அருப்புக்கோட்டையில் கடந்த காலத்தில் நடைபெற்ற அந்தத் தவறுகளுக்காக 15 பேர்கள் சிறைத் தண்டனை வரையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்காக தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு பல்வேறு சங்கங்களில் கடந்த காலத்தில் நடந்த தவறுகளை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. முழுமையான அறிக்கை வந்த பிறகு அதைப் பற்றி இங்கே விவரங்களைத் தருகிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களிலே உள்ள உறுப்பினர்களுக்கும், அதைப்போல கைத்தறி நெசவு வேலையில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று உத்தரவிட்டும், அந்தக் கூலி பல இடங்களில் அமலாகவில்லை என்பது அமைச்சரவர்களின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். கூட்டுறவு சங்கங்களின் பெரிய அதிகாரிகளே, இதை அமல் படுத்தினால் அந்தச் சங்கங்களை முறையாக நடத்த முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுமென்று காரணம் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களைச் சொல்லி, அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதைத் தடுப்பது சரியல்ல. அதை நிறைவேற்ற அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் விரைவில் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் கடனுதவி

*3555—திரு. பி. வி. இராஜேந்திரன் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்கள் கட்ட பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கடனுதவி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : I. U. D. P. திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம்/திருமண மண்டபம் கட்ட ''இராணிப்பேட்டை'' மற்றும் ''உடுமலைப்பேட்டை'' ஆகிய இரு நகராட்சிகளுக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தனியார் முதலீடு இது போன்ற திட்டங்களுக்கு அதிகம் இருக்கும் நிலையில் அரசு நிதியையும் இதில் செலவிடத் தேவையில்லை என்று கருதப்படுவதால் மற்ற நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் இவ்வாறான கடனுதவி வழங்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

மாணவர் விடுதி கட்டுதல்

*10055: திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியத்தில் மெலட்டூர் பேரூராட்சியில் மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மெலட்டூர் பேரூராட்சியில் இயங்கிவரும் மாணவர் விடுதி சிறிய வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அங்கு சுமார் 80 மாணவர்கள் தங்கி, கல்வி பயில்கிறார்கள். அந்தக் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது, முறையாக தண்ணீர் வசதி கூடக் கிடையாது. கடந்த ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி நான் அதைப் பார்வையிட்டபோது, மாணவர்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்தனர்.
எனவே அரசுக்குச் சொந்தமான மாணவர் விடுதி ஒன்று இந்த ஆண்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

10-00 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : I. U. D. P. திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம்/திருமண மண்டபம் கட்ட ''இராணிப்பேட்டை'' மற்றும் ''உடுமலைப்பேட்டை'' ஆகிய இரு நகராட்சிகளுக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தனியார் முதலீடு இது போன்ற திட்டங்களுக்கு அதிகம் இருக்கும் நிலையில் அரசு நிதியையும் இதில் செலவிடத் தேவையில்லை என்று கருதப்படுவதால் மற்ற நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் இவ்வாறான கடனுதவி வழங்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

மாணவர் விடுதி கட்டுதல்

*10055: திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியத்தில் மெலட்டூர் பேரூராட்சியில் மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மெலட்டூர் பேரூராட்சியில் இயங்கிவரும் மாணவர் விடுதி சிறிய வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அங்கு சுமார் 80 மாணவர்கள் தங்கி, கல்வி பயில்கிறார்கள். அந்தக் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது, முறையாக தண்ணீர் வசதி கூடக் கிடையாது. கடந்த ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி நான் அதைப் பார்வையிட்டபோது, மாணவர்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்தனர்.

எனவே அரசுக்குச் சொந்தமான மாணவர் விடுதி ஒன்று இந்த ஆண்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

10-00 மணி

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய மெலட்டூரில் விடுதி கட்டுவதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. பொதுவாக அவசியத்தைக் கருத்தில் கொண்டு விடுதிகள் கட்ட இடம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. நிலம் தேர்வு செய்த பிறகு, பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டிடம் கட்டுவதற்குத் தாமதம் இருந்தாலும் பழுதான கட்டிடத்தை மாற்றி- வேறு ஒரு மாணவர் விடுதிக்கு மாற்றித்—தருவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் [1990 ஆகஸ்டு 22

1—

பாம்பை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

வினா எண். 401—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் கிராமம் அருகே உள்ள பாம்பை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பாலப் பணி மத்திய சாலை நிதித் திட்டத்தில் சேர்ப்பதற்கு செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்று இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

2—

தமிழக லாட்டரி சீட்டின் மூலம் அரசுக்கு இடைத்துள்ள இலாபம்.

வினா எண். 1360—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல், 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய தமிழக லாட்டரி சீட்டின் மூலம் அரசுக்கு கிடைத்துள்ள இலாபம் எவ்வளவு ?

(ஆ) பரிசுத் தொகை பெறப்படாமல் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு ?

விடை—

(அ) 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1989 ஆம் ஆண்டு மார்ச் முடிய தமிழ்நாடு பரிசுச்சீட்டு திட்டத்தின் மூலம் கிடைத்த நிகர வருமானம் ரூ. 3,46,12,007.

(ஆ) 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய பரிசுத் தொகை பெறப்படாமல் சேர்ந்துள்ள தொகை ரூ. 7,13,05,435.

1990 ஆகஸ்டு 22]

3—

குடிநீர்க் கிணற்றை சீரமைத்தல்.

வினா எண். 1596—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் பரமசிவம் நகரில் உள்ள குடிநீர்க் கிணற்றை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் பரமசிவம் நகரில் உள்ள குடிநீர்க் கிணற்றை சீரமைக்க நடப்பு நிதியாண்டில் எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லையாதலால், வரும் நிதியாண்டில் (1990–91) முன்னுரிமை அடிப்படையில் மாவட்ட திட்டங்கள் தயாரிக்கும் போது மேற்படி கிணற்றை சீரமைக்கவோ அல்லது புதிய கிணற்றைத் தோண்டும் பணியினை எடுத்துச் செய்ய தக்க நடவடிக்கை எடுக்கும்படி செங்கை-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

4—

வடதிருச்சிற்றம்பலம் ஆலயத்தை சீர்படுத்துதல்.

வினா எண். 2783—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் வட திருச்சிற்றம்பலம் ஆலயத்தை சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை அரசு எப்பொழுது செயல்படுத்தும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

5—

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் மேல்நிலைத் தொட்டிகள் சீர் செய்தல்.

வினா எண். 2905—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் 28—2—1989 முடிய செயல்படாமல் உள்ள மேல் நிலைத் தொட்டிகள் எவை எவை ?

(ஆ) அவைகளை சீர் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் 28—2—1989 முடிய செயல்படாமல் உள்ள மேல்நிலைத் தொட்டிகளின் எண்ணிக்கை 10 ஆகும். அக்கிராமங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு :

(1) அத்திமானம்.

(2) சம்பாதி நல்லூர்.

(3) வையாவூர்.

(4) ஒணம்பாக்கம்.

(5) வேடவாக்கம்.

(6) ஒழவேட்டி.

(7) சாலையூர்.

(8) முந்நூற்றி குப்பம்.

(9) தச்சூர் கிராமம்.

(10) கருணாகரச்சேரி.

(ஆ) மாற்று ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1990 ஆகஸ்டு 22]

6—

திரு. ஏ. கலாநிதி என்பவரின் ஆய்வுப்பணிகள் தொடர அரசு உதவி.

வினா எண். 4222—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கண்பார்வை இழந்த திரு. ஏ. கலாநிதி என்ற முதுகலை மற்றும் சட்டம் படித்த இளைஞரிடமிருந்து தனது ஆய்வுப் பணிகளைத் தொடர அரசு வேண்டிய உதவிகள் செய்ய வேண்டுமென விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கண்பார்வையற்ற முதுகலை பட்டதாரியான திரு. கலாநிதி என்பவர் தனது ஆய்வுப் பணிகள் தொடர்வதற்கு அரசு உதவி தரவேண்டும் என்று விண்ணப்பம் ஏதும் அரசால் பெறப்படவில்லை.

7—

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தளவாட பொருட்கள்.

வினா எண். 4273—திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முன் இருந்த நகராட்சி ஆணையர் அவர்கள் திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தளவாட பொருட்களை எடுத்துச் சென்றதை திரும்பப் பெற்றுத்தர வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பெற்றுத்தர அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நகராட்சிக்குச் சொந்தமான தளவாடங்களை எடுத்துச் சென்றுவிட்ட புகார் குறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8—

குடமுருட்டி ஆற்றில் கல்பாலம் கட்டுதல்.

வினா எண் 4401—திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடவாசல் ஒன்றியம், ஆடிப்புலியூர் ஊராட்சியில் ராதாநல்லூர் என்ற இடத்தில் குடமுருட்டி ஆற்றில் கல்பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

பேராவூரணி-மதுரை பேருந்து.

வினா எண். 4566—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி—மதுரைக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை —

பேராவூரணியிலிருந்து மதுரை வழியாக திருச்செந்தூருக்கு பேருந்து இயக்குவது குறித்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் ஆய்வு செய்யப்பட்டது. திருச்செந்தூரில் பணி மனை கட்டும் பணி முடிந்தவுடன் மேற்கூறிய தடத்தில் பேருந்து இயக்கப்படும்.

10—

பாலம் கட்டுதல்.

வினா எண். 4664—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி நகரப் பேருந்து நிலையத்திற்கு தெற்குப் பக்கம் பொதுப்பணித்துறை வாய்க்கால் குறுக்கே செங்கொல்லை போவதற்கு பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1990 ஆகஸ்டு 22]

விடை—

இது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

11—

கால்நடை மருந்தகத்திற்கு வழங்கப்படும் மருந்துகளை கூட்டுப் பொறுப்பில் வைத்திடல்

வினா எண். 4710—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கால் நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆண்டிற்கு 40,000 ரூபாய்க்கு மேல் கால்நடை மருந்தகத் திற்கு வழங்கப்படும் மருந்துகளை, மனித மருத்துவத்துறையில் உள்ளது போல் கூட்டுப்பொறுப்பில் வைத்திட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

12—

ஆதி திராவிடர்களுக்கு மயானப்பாதை வசதி.

வினா எண். 4825—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி உடைய நாடு ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்கு தடையை நீக்கி சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம். நில எடுப்புச் சட்டத்தின் கீழ் நில எடுப்பு செய்து ஆதிதிராவிடர்களுக்கு மயானப் பாதை வசதி அளிக்க உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

13—

பத்திரப்பதிவு அலுவலகம் ஏற்படுத்துதல்.

வினா எண். 5144—திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை வட்டம், தச்சம்பட்டு என்னும் ஊரில் புதிய பத்திரப்பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

14—

குத்தாலம் பேரூராட்சியில் நான்கு குழந்தைகள் காப்பகம் அமைக்க கோரிக்கை.

வினா எண். 5387—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், குத்தாலம் பேரூராட்சியில் நான்கு குழந்தைகள் காப்பகம் வேண்டுமென கோரிக்கை மனு அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

15—

மேக்கிரிமங்கலம் ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்.

வினா எண். 5403—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்திலுள்ள மேக்கிரிமங்கலம் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம். எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) மேக்கிரிமங்கலம் ஊராட்சியினை இரண்டாகப் பிரிக்கவும், புதிய ஊராட்சிக்கு சென்னியநல்லூர் எனப் பெயரிடவும் தக்க அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1990 ஆகஸ்டு 22]

16—

மேலச்சிவன் குளத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

வினா எண். 5626—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியத்தில் மேலச்சிவன் குளத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டப்படுமா ?

விடை—

இல்லை. பரமக்குடி ஒன்றியம், மேலச்சிவன்குளம் கிராமத்திற்கு ஏற்கனவே பயனில் உள்ள கொழுந்தாபுரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்திலிருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது. தற்போது நீரேற்றுக் குழாயிலிருந்து குடிநீர் குழாய் இணைப்பு தரப்பட்டுள்ளது. நீரேற்று நேரம் மட்டிலுமே குடிநீர் பெற இயலும். மேலச்சிவன்குளம் மக்கட் தொகை 160 என உள்ளதால் தனியாக ஒரு மேல்நிலைத் தொட்டி கட்ட வாய்ப்பில்லை.

17—

போகலூர் ஒன்றியத்தில் ஆதி திராவிட மக்கள் தொகை.

வினா எண். 5748—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி தொகுதியில் போகலூர் ஒன்றியத்தில் ஆதிதிராவிட மக்கள் தொகை எவ்வளவு ?

(ஆ) இது ஒன்றியத்தின் சதவீதத்தில் எவ்வளவு ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி தொகுதியில் போகலூர் ஒன்றியத்தில் 1981 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கட்தொகை 36,229 ஆகும். இதில் ஆதிதிராவிட மக்கள் தொகை 12,730 ஆகும்.

(ஆ) இது ஒன்றியத்தின் மொத்த மக்கள் தொகையில் 35.14 சதவீதம் ஆகும்.

18—

ஆதி திராவிட வகுப்பினருக்கு பதவி உயர்விலும் விகிதாச்சார பிரதிநிதித்துவமுறை.

வினா எண். 5861—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசுப் பணிகளில் ஆதி திராவிட வகுப்பினருக்கு பதவி உயர்விலும் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை கடைபிடிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த துறைகளில் எத்தனை விழுக்காடு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்கண்ட துறைகளில் அதற்கெதிராக குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவிகிதம் இட ஒதுக்கீடு கடைபிடிக்கப்படுகிறது :—

துறையின் பெயர்.	பணியிடத்தின் பெயர்.
(1)	(2)
வருவாய்த்துறை	துணை ஆட்சியர்.
வருவாய்த்துறை	துணை வட்டாட்சியர்.
வணிகவரித்துறை	வணிக வரி அலுவலர்.
வணிகவரித்துறை	உதவி வணிக வரி அலுவலர்.
பொதுப்பணித்துறை	உதவி கோட்டப் பொறியாளர். இளநிலைப் பொறியாளர்.
பதிவுத்துறை	துணைப் பதிவாளர் நிலை 2.
நில அளவைத்துறை	உதவி இயக்குநர், நில அளவை நிலப் பதிவேடுகள்.

1990 ஆகஸ்டு 22]

19—

காலகம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விஸ்தரித்தல்.

வினா எண். 5933—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விஸ்தரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை. காலகம் கிராமத்தில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் திட்டத்தின் கீழ் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 2,000 மீட்டர் நீளத்திற்கு பகிர்மான குழாயும் 5 பொதுக் குடிநீர் குழாயுடன் கூடிய ஒரு மின் விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதி குடிநீர் வசதி பெற்ற கிராமமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய வாரிய விதிமுறைகளின்படி குடிநீரே இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதியளிப்பதில் முன்னுரிமை கொடுக்கப்படுவதால், இக்குடியிருப்பிற்கு தேவையான அபிவிருத்திப் பணிகளை பின்னர் தான் மேற்கொள்ள இயலும்.

20—

அண்ணா சாலையை விரிவுபடுத்த நில ஆர்ஜிதம் செய்ததில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள்.

வினா எண். 6143—திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை அண்ணா சாலையை விரிவுபடுத்த நில ஆர்ஜிதம் செய்ததில் எத்தனை (ரிட்) மனுக்கள் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) அவற்றை நீக்க அரசு என்ன நடவடிக்கைகள் மேற் கொண்டுள்ளன ?

விடை—

(அ) சென்னை அண்ணா சாலையை விரிவுபடுத்த நில எடுப்பு செய்ததில் சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

(ஆ) அரசு தரப்பில் வழக்கை எதிர்த்து எதிர் ஆணை உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு, இரண்டு வழக்குகளும் 6—3—1989 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. எனவே, தற்சமயம் வழக்குகள் ஏதும் நிலுவையில் இல்லை.

21—

பழனி அரசு மருத்துவமனையில் போட்டோ பிலிம் வசதி.

வினா எண். 6187—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி அரசு மருத்துவமனையில் தேவையான அளவு போட்டோ பிலிம் வசதியில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அவ்வசதி செய்து தரப் படுமா?

விடை—

(அ) தேவையான அளவு பிலிம்கள் இருப்பில் உள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

22—

வெள்ளோடு ஓடைப் புறம்போக்கில் உள்ள மயானப்பாதையை விரிவுபடுத்துதல்.

வினா எண். 6307—திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றிய வெள்ளோடு ஓடைப்புறம்போக்கில் உள்ள மயானத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

வெள்ளோடு கிராமத்தில் க.ச. 1227 மற்றும் 1276 ஓடைப் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இது மயானமாக பயன்படுத்தப்பட்டு, தற்போது சடலங்கள் புதைக்கப்படுவதில்லை. ஆக்கிரமிப்பினை அகற்றும் நடவடிக்கையின் மீது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் ஈரோடு கூடுதல் முதலாவது மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களில் தடையாணை பெற்றிருப்பதால், தடையாணை நீக்கி ஆக்கிரமிப்புதாரர்களை வெளியேற்றியதும் மயானத்தை விரிவுபடுத்த இயலும்.

1990 ஆகஸ்டு 22]

23—

ஆம்னி பஸ்கள் நிறுத்தப்பட்டதால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வருமான உயர்வு.

வினா எண். 6408—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1989 மே மாதம் ஆம்னி பஸ்கள் நிறுத்தப்பட்டதால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வருமானம் எவ்வளவு உயர்ந்தது ?

விடை—

1989 ஆம் ஆண்டு மே மாதம் ஆம்னி பஸ்கள் நிறுத்தப் பட்ட பிறகு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களில் வருவாய் சுமார் ரூ. 31 இலட்சங்கள் அளவு உயர்ந் தது. இவ்வுயர்வுக்கு ஆம்னி பஸ்கள் நிறுத்தப்பட்டது மூல காரணமாகும்.

24—

பேரூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம்.

வினா எண். 6525—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சொந்த அலுவலகக் கட்டிடம் இல்லாத பேரூராட்சி களுக்கு கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம். சொந்த அலுவலகக் கட்டிடம் இல்லாத பேரூராட்சி களுக்கு கட்டிடம் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

25—

ஆதி திராவிடர்களுக்குக் காலனி வீடுகள்.

வினா எண். 6562—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், மேலக் கொள்ளுக்காடு புதுநகர் ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந் தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சி களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து மாநில அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

26—

வினா எண். 6553—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பளுக்காடு ஆதிதிராவிடர்களுக்குக் காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சி களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து மாநில அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

1990 ஆகஸ்டு 22]

27—

சென்னை பல் மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்.

வினா எண். 6651—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பல் மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பல் மருத்துவமனையில் பட்ட மேற்படிப்புக்கான கூடுதல் கட்டிடம் ஒன்று ரூ. 44.50 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

28—

புனித தீர்த்தக் குளத்தை தூற்று அதன் மேல் பேருந்து நிலையம், கட்டுதல்.

வினா எண். 7086—திரு. ஒய். வெங்டேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னார்காடு மாவட்டம், பெண்ணாடம் சரகத்தில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான புனித தீர்த்தக் குளத்தை தூற்று அதன் மேல் பேருந்து நிலையம் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

29—

தாமரைக்கரை-செங்குளம் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு.

வினா எண். 7163—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி பர்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட தாமரைக்கரை முதல் செங்குளம் வரை உள்ள வன இலாகா ரோடுகளின் அளவை சற்று அகலப் படுத்தி பஸ் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளின் அளவை அகலப்படுத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனை யில் இல்லை. 1991-92-ம் ஆண்டு சாலை மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ், இச் சாலையை விரிவுபடுத்தி மேம்பாடு செய்ய தகுந்த செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

30—

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தச்சு கொல்லுப் பட்டறைகள்.

வினா எண். 7356—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தச்சு கொல்லுப் பட்டறைகள் எத்தனை ஒன்றியங்களில் இயங்கு கின்றன?

(ஆ) இதன் மூலம் எத்தனை பேர் பயன் அடைகின்றனர்?

விடை—

(அ) தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 153 இடத்தில் தச்சு கொல்லுப் பட்டறைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) இதன் மூலம் 983 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

31—

கண்மாய்கள் மராமத்து செய்தல்.

வினா எண். 7448—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் உள்ள போகலூர், நெல்மடூர், பார்த்திபனூர், காமன் கோட்டை, எட்டிவயல், முத்துவயல் கண்மாய்கள் மராமத்து செய்யப்படுமா?

விடை—

போகலூர், நெல்மடூர், பார்த்திபனூர், எட்டிவயல் ஆகிய நான்கு கண்மாய்களிலுள்ள கரைகள், மடைகள் மற்றும் கலிங்குகள் பொதுவாக நல்ல நிலைமையில் உள்ளன. காமன்கோட்டை, முத்துவயல் ஆகிய இரு கண்மாய்களின் மடைகள் சில, இனி வரும் ஆண்டுகளில் நிதி ஒதுக்கம் இடம் தரும் அளவில் முன்னுரிமை அடிப்படையில் மராமத்து செய்ய எடுத்துக் கொள்ளப்படும்.

32—

மஞ்சூரில் ஆரம்ப பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 7496—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், மஞ்சூரில் ஆரம்பப் பள்ளிக்கு அரசு கட்டிடம் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள போகலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த மஞ்சூர் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

33—

குட்டத்திலிருந்து திசையன்விளைக்கு பேருந்து.

வினா எண். 7553—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த குட்டத்திலிருந்து தாலுகா தலைநகர், நீதிமன்றம் (வள்ளியூர்) வழியாக திசையன் விளை செல்ல பேருந்து இயக்கப்படுமா ?

விடை—

ராதாபுரம் தாலுகாவில் உள்ள குட்டம் வழியாக 20 க்கும் மேற்பட்ட வெளியூர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் குட்டத்திலிருந்து திசையன்விளை ராதாபுரம் வழியாக வள்ளியூருக்கு நேரடிப் பேருந்து வசதி செய்ய கட்டபொம்மன் போக்குவரத்து இயக்குநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு அதன்பின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

34—

காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண். 7589—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி பரமக்குடி ஒன்றியம் பார்த்திடனூர் பஞ்சாயத்து, மரிச்சிகட்டி ஊரில் காலனி வீடுகளுக்கு களம் புறம்போக்கில் பட்டாக்கள் வழங்கி காலனி வீடுகள் கட்ட அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் வட்டம், பரமக்குடி வட்டம் மற்றும் பரமக்குடி ஒன்றியம் பார்த்திபனூர் பஞ்சாயத்து மரிச்சுகட்டி ஊரில் மேலப்பார்த்திபனூர் குரூப் புல எண் 152-ல் 0.58.0 ஹெக்டேர் களம் புறம்போக்கு நிலத்தை நத்தமாக மாற்றி அதில் குடியிருந்து வரும் 14 ஏழை ஆதிதிராவ்டர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

35—

பட்டுக்கோட்டை—சேதுபாவாசத்திரம் (அதிராம்பட்டினம் வழியாக) தனி நகரப் பேருந்து.

வினா எண் 7396—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழக கடற்கரை மீனவர்கள் தங்கள் மீன்களை வியாபாரத்திற்கு கொண்டு செல்ல வசதிக்காக பட்டுக்கோட்டையிலிருந்து சேதுபாவாசத்திரத்திற்கு (அதிராம்பட்டினம் வழியாக) தனி நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

கடற்கரை ஓரங்களில் இயக்கப்படும் சோழன் போக்குவரத்துப் பேருந்துகளின் அடிச் சட்டத்தில் மீன் கூடைகளை ஏற்றிச் செல்வதற்கு ஏற்ப பெட்டிகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே மீன்களை ஏற்றிச் செல்வதற்கு ஒரு புதிய நகரப் பேருந்து பட்டுக்கோட்டை—சேதுபாவாசத்திரம் தடத்தில் இயக்கத் தேவையில்லை.

36—

நகரப்பேருந்து இரட்டை அனுமதி நிறுத்தப்பட்டுள்ளதை மறுபரிசிலனை செய்தல்.

வினா எண் 7896—திரு மா. மணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகரப் பேருந்து இரட்டை அனுமதி நிறுத்தப்பட்டுள்ளதை மறு பரிசீலனை செய்ய தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றம் டிசம்பரில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை என்ன ?

விடை—

(அ) இது குறித்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து கடிதம் ஏதும் அரசு பெறவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1990 ஆகஸ்டு 22

37—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுது பார்த்தல்.

வினா எண் 7920—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம் கம்பளியம்பட்டி ஊராட்சி கிராமத்தில் பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், கம்பளியம்பட்டி கிராமத்திலுள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும் மேற்படி மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியை உடனே மராமத்து செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சாணார்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

38—

பழனி நகரில் பொதுக் கழிப்பிடம் கட்ட கடன் கேட்டு அரசுக்கு கோரிக்கை.

வினா எண் 8023—திரு என் பழனிவேல் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி நகரில் சுகாதார வசதியை முன்னிட்டு 5 இடங்களில் பொதுக் கழிப்பிடம் கட்ட ரூ. 10.00 லட்சம் கடன் கேட்டு இவ்வரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) உலக வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் பல்வேறு திட்டப் பணிகளை எடுத்துக்கொள்ள ரூ. 204 லட்சம்

1990 ஆகஸ்டு 22]

கடன் உதவி கோரி பழனி நகராட்சி ஆணையர் பிரேரணை சமர்ப்பித்துள்ளார். அவற்றுள் பழனி நகரில் 5 இடங்களில் பொதுக் கழிப்பிடம் கட்ட ரூ. 10 லட்சம் கடன் உதவிக் கோரப் பட்டதும் ஒன்றாகும். பிரேரணை, திட்ட மேலாண்மைக் குழு விற்கு அனுப்பப்பட்டு, திட்ட அறிக்கைகள் தயாரிக்க கலந்தாய் வரைளா நியமிக்க, கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. திட்ட மேலாண்மைக் குழுவினால் கலந்தாய்வாளர் நியமிக்கப்பட்டு திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டவுடன் அரசுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரை செய்வார். அப்பரிந்துரையின் மேல் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

39—

பள்ள தென்னங்குடியான் கால்வாய் அகலப்படுத்தி சீரமைத்தல்.

வினா எண். 8082—திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பூம்புகார் தொகுதியில் உள்ள, பள்ள தென்னங்குடியான் கால்வாய் வடிகாலுக்கு போதுமானதாக இல்லாததால் அகலப் படுத்தியும் சீரமைத்தும் தரப்படுமா ?

விடை—

நடப்பு நிதியாண்டில் (1990–91)ல் நிதி வசதியைப் பொறுத்து பூம்புகார் தொகுதியில்உள்ள, பள்ளதென்னங்குடியான் கால்வாய் வடிகாலுக்கு போதுமானதாக சீரமைக்க திட்டமிடப் பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

40—

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் தற்காலிகமாகப் பணி செய்த வேலை நாட்களை சர்வீஸில் சேர்த்தல்.

வினா எண் 8135—திரு பி. என். வல்லரசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கல்வித்துறை அரசு ஆணை எண் 235, நாள் 22–2–1989ன்படி தற்காலிகமாக வேலை செய்யும் கல்லூரி விரிவுரையாளர்களை மீண்டும் நிரந்தரமாக வேலையில் அமர்த் தும்பொழுது தற்காலிகமாக பணி செய்த வேலை நாட்களை அவர்கள் சர்வீஸில் சேர்க்க அரசாங்கக் கல்லூரி ஆசிரியர்களுக்கு

மட்டும் வகை செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது போல், தனியார் கல்லூரியில் பணி செய்யும் ஆசிரியர்களுக்கும் கிடைக்க வழிவகை செய்யப்படுமா ?

(ஆ) ஆமெனில் எப்பொழுது ?

விடை—

(அ) உதவிபெறும் தனியார் கல்லூரிகளில் தற்காலிக மற்றும் நிரந்தரப் பணியிடத்துக்கென தனித்தனி சுழற்சி முறைப் பதிவேடு பேணப்படுவதால், விடுப்புப் பதிலியாக நியமனம் செய்யப்படும் ஆசிரியரை நிரந்தரப் பணியாளர்களாக எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்புகள் இல்லை. தனியார் கல்லூரிகளில் விடுப்புப் பணியிடங்களில் நியமனம் செய்யப்படுபவர்களின் பணிக்காலத்தையும் கணக்கில் கொண்டு தேர்வுநிலை/முதுநிலை கணக்கிட இயலாது. மேலும் நிரந்தரப் பணியிடங்களில் தற்காலிகமாகப் பணியாளர்களை ஆசிரியர்களை உதவிபெறும் கல்லூரிகளில் நியமிக்க இயலாது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

41—

தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரிக்கும் திட்டம்

வினா எண் 8199—திரு. எம். முத்தையன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) சங்கராபுரத்தை புதிய தாலுகா மையமாக மாற்றி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

(அ) உள்ளது.

(ஆ) உள்ளது.

வினாக்கள்—விடைகள்.

42—

தொங்கனூர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தல்.

வினா எண். 8276—திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மொரப்பூர் தொகுதியில் உள்ள தொங்கனூர் நடு நிலைப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுமா ?

(ஆ) ஆம், எனில் எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதியிலுள்ள தொங் கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை 1990–91ஆம் கல்வி யாண்டில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த கருத்துரு பெறப்பட்டுள்ளது. இது உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

43—

இராமநாதபுரம் மாவட்டத்தில், அறநிலையத் துறையின் கண்காணிப்பில் உள்ள திருக்கோயில்கள்.

வினா எண். 8537: டாக்டர் எஸ். சுந்தர்ராஜ் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் அறநிலையத்துறையின் கண் காணிப்பில் உள்ள திருக்கோயில்கள் எத்தனை ?

விடை—

தற்போதைய இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, இராம நாதபுரம், இராமேஸ்வரம், பரமக்குடி, திருவாடாணை, முது களத்தூர் என்ற 6 வட்டங்கள் உள்ளன. அவற்றில்

(1) ஆண்டு வருமானம் ரூ. 2,000-க்குள் உள்ள கோயில்கள்.	..	205
(2) ஆண்டு வருமானம் ரூ. 2,000-க்கு மேல் உள்ள கோயில்கள்.	..	119
ஆக மொத்தம் திருக்கோயில்கள்	..	324

44—

மணிமுத்தாறில் விவசாய டிப்போ அமைக்கும் திட்டம்.

வினா எண். 8573—திரு. கே. ரவி அருணன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மணிமுத்தாறில் விவசாய டிப்போ அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறில் வேளாண்மை கிடங்கு அமைக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. மணிமுத்தாறுக்குப் பக்கத்தில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் அயன்சிங்கம்பட்டியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையம் தற்போது செயல்பட்டு வருவதால், தனியே ஒரு துணை விரிவாக்க மையம் மணிமுத்தாறில் தேவையில்லை.

(ஆ) வினா எழவில்லை.

45—

கட்டயங்காட்டில் கூட்டுறவு தொடக்க வங்கி துவக்குதல்.

வினா எண். 8737—திரு. ஆர். [illegible]ங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கட்டயங்காட்டில் கூட்டுறவு தொடக்க வங்கி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வினாக்கள்—விடைகள்.

46—

தெத்தூரில் உள்ள துவக்கப் பள்ளியை அரசினர் உயர் நிலைப்பள்ளியாக்கும் செயற்குறிப்பு.

வினா எண் 8918—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியத்திற்குட்பட்ட தெத்தூரில் உள்ள துவக்கப்பள்ளியை அரசினர் உயர்நிலைப் பள்ளியாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) வரும் கல்வியாண்டிலாவது மாறுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கருத்துரு பெறப்பட்டால் உயர்மட்டக் குழு பரிசீலனைக்கு வைத்து அதன் பரிந்துரைக்கேற்ப மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

துறையூரில் புதிதாக அரசினர் உயர்நிலைப்பள்ளி அமைத்தல்.

வினா எண். 9091—திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உப்பிலியாபுரம் தொகுதி துறையூரில் அரசினர் உயர் நிலைப்பள்ளி ஒன்று புதிதாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இது தொடர்பாகக் கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

வினாக்கள்—விடைகள்.

48—

அதிராம்பட்டினத்தை தனி தாலுகாவாக மாற்றும் செயற்குறிப்பு.

வினா எண் 9933.—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த அதிராம்பட்டினத்தை தனி தாலுகாவாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

49—

வீட்டுமனைப்பட்டா.

வினா எண் 52—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணாமாவட்டம், செய்யூர் வட்டம், பெரும்பாக்கம் கிராமம் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், பெரும்பாக்கம் கிராமம் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

50—

வினா எண் 55—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுராந்தகம் வட்டம், கத்திரிசேரி கிராம ஆதி திராவிட மக்கள் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி மனு செய்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுராந்தகம் வட்டம், கத்திரிசேரி கிராம புல எண். 53, மேய்க்கால் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ள 52 ஆதிதிராவிட நபர்களிடமிருந்தும் வீட்டுமனைப்பட்டா கோரி மனுக்கள் வரப்பெற்றுள்ளன. மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் ஒப்படை வழங்குவதை அரசு ஆணை எண். 959, வருவாய்த்துறை, நாள் 23—6—1987-ல் தடை விதித்துள்ள காரணத்தால் மேற்கண்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது சம்பந்தமாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

51—

வினா எண். 71—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், இரும்பேடு கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள் வீட்டு மனைப் பட்டா கோரி மனு செய்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், இரும்பேடு கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள் வீட்டுமனைப் பட்டா கோரி மனு ஏதும் செய்யவில்லை.

52—

ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு சாலை வசதி.

வினா எண். 289—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மலைவையாவூர் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு சாலை வசதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மலைவையாவூர் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனிக்கு பாதை அமைக்க நில எடுப்புச் சட்டம், 1894 பிரிவு 7-ன் கீழான வரைவு இயம்பல் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இந்நில எடுப்பினை எதிர்த்து நில உடமையாளர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளனர். இந்த ரிட் மனுவின் மீது இறுதி தீர்ப்பு அளிக்கப்பட்டதும், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

53—

ஆதிதிராவிடர் மயான நிலத்தை விரிவுபடுத்துதல்.

வினா எண். 1196.—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், செய்யூர் வடக்கு காலனி ஆதிதிராவிடர் மயான நிலத்தை விரிவு படுத்த கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை.—

(அ) மற்றும் (ஆ)

செங்கை—அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், செய்யூர் 'எ' பிளாக் கிராமம், வடக்கு காலனியில் வசிக்கும் ஆதிதிராவிடர் மயானத்தை விரிவுபடுத்த நில எடுப்புச் சட்டம் பிரிவு 4 (1) கீழான அறிவிக்கை முன்மொழிவை மாவட்ட ஆட்சித் தலைவர் சமர்ப்பித்துள்ளார். இவ்வறிக்கையினுக்கு அரசாணை நிலை எண். 386, நாள் 8—3—1990ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வினாக்கள்—விடைகள்.

54—

பவானி ஆற்றுப் பாலம்.

வினா எண். 1152—திரு. ஜி. ஜி. குருமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானி நகரத்தையும், காலிங்கராயன் பாளையத்தையும் இணைக்கும் பவானி ஆற்றுப் பாலம் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை.—

(அ) ஆம்.

(ஆ) இப்பணி இதுவரை அரசின் அங்கீகரிக்கப்பட்ட எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. ஆனால், இப்பாலப் பணியானது அரசு ஆணை எண். 257 போக்குவரத்து, நாள் 24 மார்ச் 1988ல் அரசால் முன்னுரிமை தந்து அங்கீகரிக்கப்பட்டுள்ள "பணி தொகுப்பு பட்டியலில்" இடம் பெற்றுள்ளது. எனவே, எதிர்வரும் ஆண்டுகளில் பகுதி 2 திட்டத்தின் கீழ் இப்பாலப் பணியை நிதி நிலைமைக்கேற்ப [illegible] செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

55—

வீட்டு மனைப் பட்டா.

வினா எண். 1294.—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் நகராட்சி சின்னக்காலனி மக்கள் வீட்டு மனைப்பட்டா கோரி மனு செய்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) செங்கை அண்ணா மாவட்டம் மதுராந்தகம் நகராட்சி, சின்னக்காலனி மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரி மனு ஏதும் செய்யவில்லை.

வினாக்கள்—விடைகள்.

56—

வினா எண். 1253.—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

மதுராந்தகம் வட்டம், தேவனூர் கிராம ஆதி திராவிடர் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

செங்கை—அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், தேவனூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

57—

சென்னை—ஆலங்குளம் பேருந்து.

வினா எண். 1362. திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

சென்னையிலிருந்து ஆலங்குளத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து விடப்படுமா ?

விடை—

தற்பொழுது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 4 விரைவுப் பேருந்துகள் நான்கு ஒருவழிப் பயணத்துடன் சென்னையிலிருந்து திண்டிவனம், தொழுதூர், திருச்சி, மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, கயத்தார், ஆலங்குளம், தென்காசி வழியாக செங்கோட்டைக்கு நாள்தோறும் இயக்கப்படுகின்றன. இது ஆலங்குளத்திலிருந்து பயணம் செய்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் உள்ளது. சென்னை—ஆலங்குளம் தடத்தின் நீளம் 632 கிலோ மீட்டராகும். பயணிகளின் விகிதாச்சாரம் அதிகரிக்கும்போது சென்னை—ஆலங்குளம் ரோட்டில், பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

மாமல்லபுரம் கூட்டுறவு விநியோக மையம்.

வினா எண். 1606. திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

மாமல்லபுரத்தில் உள்ள செங்கை—அண்ணா மாவட்ட கூட்டுறவு விநியோக மையத்தில் இரண்டு கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

1990 ஆகஸ்டு 22]

விடை—

மாமல்லபுரத்தில் உள்ள நியாய விலைக் கடையில் தற்போது 2,101 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அரசு ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாதவாறு குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டுமென முடிவெடுத்துள்ளது. இந்நிலையில் மாமல்லபுரம் நியாய விலைக் கடையினை மூன்றாகப் பிரிப்பதற்கு மாவட்ட வழங்கல் அலுவலரை கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

59—

நாட்டுச் செக்குகள்.

வினா எண் 1631—திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

(அ) விருத்தாசலம் தாலுகாவில் எண்ணெய் எடுக்கும் நாட்டுச் செக்குக்கு லைசென்ஸ் எத்தனை வழங்கப்பட்டது.?

(ஆ) அவைகள் நல்ல முறையில் இயங்குகின்றதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : விருத்தாசலம் பகுதியில் 26 நாட்டுச் செக்குகள் உள்ளன. அவற்றுள் 18 செக்குகள் நல்ல முறையில் ஓடுகின்றன. நாட்டு செக்குகளுக்கு லைசென்ஸ் வழங்கப்படவில்லை. அவைகள் யாதொரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. தனிப்பட்ட நபர்கள் அவற்றை இயக்குகின்றனர். தங்களுக்கு தேவையான கடலை மற்றும் எண்ணெய் வித்துக்களை தாங்களே கொள்முதல் செய்து எண்ணெயை பிழிந்து தாங்களே விற்பனை செய்து கொண்டு இருக்கின்றனர்.

60—

தூர் வாரும் பணி.

வினா எண் 1982—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம் வெடால் கிராமத்தில் உள்ள ஏரியும், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் நெல்வாய் ஏரியும் தூர் வாராமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறித்துள்ள இரண்டு ஏரிகளில் கடந்த 5 ஆண்டுகள் பாசன விவரங்களின்படி, பயிர்செய்யும் பரப்பில் அதிகமாக மாற்றம் ஏதும் இல்லாததால், ஏரிகளில் கொள்ளளவுகள் குறையவில்லை எனக் கருதி, தூர்வாரும் பணி தற்போது தேவையில்லையென கருதப்படுகிறது.

61—

தொழிற் பயிற்சி பெற்ற ஊனமுற்றவர்கள்.

வினா எண் 2724—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1985–86, 1986–87, 1987–88-ல் தொழில் பயிற்சி பெற்ற ஊனமுற்றவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு என்ன வழி செய்யப்பட்டுள்ளது.

விடை—

(அ) 1985–86 முதல் 1987–88 ஆம் ஆண்டு வரை அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற ஊனமுற்றவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு:—

வரிசை எண்.	வருடம்.	மொத்தம்,
(1)	(2)	(3)
1	1985–86	166
2	1986–87	162
3	1987–88	170
	மொத்தம் ...	498

மேற்கண்ட பயிற்சி பெற்ற ஊனமுற்ற நபர்களில் பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை (ஆண்டு வாரியாக)

வரிசை எண்.	வருடம்.	மொத்தம்.
(1)	(2)	(3)
1	1985	17
2	1986	31
3	1987	71
4	1988	82
	மொத்தம் ..	201

(ஆ) ஊனமுற்றோரின் வேலைவாய்ப்பிற்காக அரசு ஆணை பல்வகை எண் 602, சமூகநலம், நாள் 14—8—1981-ன்படி 3 சதவீதம் இட ஒதுக்கீடு அரசு, அரசு சார்பு நிறுவனங்களில் செய்யப்பட்டுள்ளது. அரசு ஆணை பல்வகை எண் 99, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 26—2—1988 ன்படி ஒரு சதவீதம் கண்பார்வையற்றோருக்கும், ஒரு சதவீதம் காது கேளாதோருக்கும், ஒரு சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் வேலை வாய்ப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றவர்களுக்கு சிறப்பு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு மாவட்ட தேர்வுக்குழு நிறுவப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இக்குழு ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஓர் ஆண்டுக்கு செயல்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

62—

கம்பர் கோட்டம்.

வினா எண். 3068—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரெழுந்தூரில் கட்டப்பட்டுள்ள கம்பர் கோட்டத்திற்கு 1987–88, 1988–89 ஆண்டுகளில் பராமரிப்பு செலவு செய்த தொகை எவ்வளவு ?

விடை—

தஞ்சை மாவட்டம், தேரெழுந்தூரில் கட்டப்பட்டுள்ள கம்பர் கோட்டத்தின் பராமரிப்புக்கு செய்த செலவு பின்வருமாறு :

	ரூ. பை.
1987–88 மின்கட்டணம்	544.90
பணியாளர் சம்பளம்	445.00
மின்சாதனங்கள் பழுது பார்த்தல் ..	395.00
மொத்தம் ..	1,384.90
1988–89 மின் கட்டணம்	205.50

1988-89ஆம் ஆண்டில் திருக்கோயில் பணியாளரைக் கொண்டே மேற்படி கம்பர் கோட்டத்தின் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப் பட்டதால் தனியாக பணியாளர் சம்பளச் செலவு இல்லை.

63—

வீட்டு மனைப் பட்டா.

வினா எண் 3173—திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நந்தம்பாக்கம் பூந்தண்டலம், அமரம்பேடு, சோமங்கலம், நடுவீரப்பட்டு, எருமையூர், பழந்தண்டலம், திருமுடிவாக்கம் போன்ற கிராமங் களில் உள்ள ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நந்தம்பாக்கம், பூந்தண்டலம், அமரம்பேடு, சோமங்கலம், நடுவீரப்பட்டு, எருமையூர், பழந்தண்டலம், திருமுடிவாக்கம் ஆகிய கிராமங் களில் நத்தம் சர்வே திட்டத்தின்கீழ் வரன்முறை செய்து பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கிராம நத்தங்களில் குடியிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. இந்த கிராமங்களில் நத்தம் நில அளவை நடவடிக்கையில் குடிமனைப் பட்டா வழங்க பிரேரணைகள் தயாரிக்கும் பணி விரைவில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. மேற்படி பட்டாக்கள் திருவண்ணாமலை உதவி நிலவரித் திட்ட அலுவல ரால் ஒப்புதல் பெற்று வழங்கப்படும்.

1990 ஆகஸ்டு 22]

64—

என். ஆர். ஈ. பி. மூலம் கட்டப்பட்டுள்ள கழிவறைகள்.

வினா எண். 3716—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராதாபுரம் தொகுதியில் என். ஆர். ஈ. பி. மூலம் கட்டப்பட்டுள்ள கழிவறைகள் கதவுகள் இன்றி இருப்பதும் செப்டிக் டாங்கு உடைந்திருப்பதும் அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அக்கழிவறைகளை மக்கள் உபயோகிக்கும் முறையில் அரசு சீர் செய்து தருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1984 முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்/ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 429 ஆதிதிராவிடர் குடியிருப்பு வீடுகள் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கட்டப்பட்டு பயனாளிகளிடம் நல்ல நிலையில் ஒப்படைக்கப்பட்டு. பயனாளிகள் அவற்றில் வசித்து வருகின்றனர். ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவற்றில் 111 கழிவறை கதவுகளும், 76 செப்டிக் டாங்குகளும் பயனாளிகள் சரிவர பராமரிக்காததாலும் நீண்ட நாள் உபயோகித்ததினாலும் பழுதடைந்துள்ளது. அவற்றை பராமரிக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட பனயனாளிகளையே சார்ந்ததாகும்.

65—

நயினார்கோயில் ஒன்றியத்தில் குடிநீர் கிடைக்கப்பெறாத கிராமங்கள்.

வினா எண். 3923—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி நயினார்கோயில் ஒன்றியத்தில் குடிநீர் கிடைக்கப்பெறாத கிராமங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் இக்குறையைப் போக்க ஆழ்குழாய் கிணறுகள் நிறுவப்படுமா ?

(இ) ஆம் எனில், 1989-90ஆம் ஆண்டில் எந்தெந்த இடங்களில் நிறுவப்படும் ?

விடை—

(அ) பரமக்குடி தொகுதி, நயினார்கோயில் ஒன்றியத்தில் குடிநீர் ஆதார வசதிகள் அறவே இல்லாத குக்கிராமம் ஆத்தங்குடி காலனி ஒன்று மட்டுமே.

(ஆ) ஆத்தங்குடி காலனி கிராமத்திற்கு முன்னுரிமை தந்து, இந்த நிதியாண்டில் நீர் ஆதாரங்கள் கண்டுபிடித்து குடிநீர் வசதி செய்து தர, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நீர் உறிஞ்சும் கிணறு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

66—

போகலூர் ஒன்றியத்தில் குடிநீர் கிடைக்கப் பெறாத கிராமங்கள்.

வினா எண். 3924—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் குடிநீர் கிடைக்கப் பெறாத கிராமங்கள் எவை?

(ஆ) இக்குறையைப் போக்க புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் நிறுவப்படுமா?

(இ) ஆம் எனில், 1989-90-ல் எந்தெந்த இடங்களில் நிறுவப்படும்?

விடை—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் குடிநீர் கிடைக்கப்பெறாத கிராமங்கள் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகள் எழ இடமில்லை.

67—

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் தமிழில் மொழி பெயர்த்துள்ள நூல்கள்.

வினா எண். 4276—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) டாக்டர் அம்பேத்கார் அவர்களின் தமிழில் மொழி பெயர்த்துள்ள நூல்கள் அரசு பொது நூலகம், கல்லூரி, பள்ளி ஆகிய நூல் நிலையங்களில் வைக்க அரசு ஆணையிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) பொது நூலகத் துறையில், நூலகங்களுக்கு நூல்கள் வாங்கும் போது, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எழுதிய நூல்களின் தமிழ் மொழி பெயர்ப்பு நூல்களும் வாங்கப்படுகிறது. இதற்கென தனியாக அரசு ஆணை ஏதும் பொது நூலகத் துறைக்கு வழங்கப்படவில்லை. அரசு பள்ளிகள், கல்லூரிகளிலுள்ள நூலகங்களில் மேற்படி நூல்களை வாங்குவதற்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

(ஆ) பொது நூலகங்களுக்கு நூல்கள் வாங்க அரசு தனி நூல் தேர்வுக்குழு அமைத்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப, ஆண்டுதோறும் நூல்கள் வாங்கப்படும்போது டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எழுதிய நூல்களின் தமிழ் மொழி பெயர்ப்பு நூல்களை, அதன் பதிப்பாளர்கள் அனுப்பினால், அவைகளை நூல் தேர்வுக் குழுவில் வைக்கப்பட்டு, அதன் பின் தேர்வு செய்து வாங்கப்படுகின்றன.

68—

பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் கல்விக்கூடங்கள்.

வினா எண். 4546—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள் ஆகியோரின் குழந்தைகளுக்கும், அநாதைக் குழந்தைகளுக்கும், வாழ்வுத் தரவும், வாய்ப்பான கல்வியைத் தரவும் இந்த துறையின் மூலம் பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் கல்விக்கூடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள், ஆகியோரின் குழந்தைகளுக்கும், அநாதைக் குழந்தைகளுக்கும் வாழ்வு தரவும், கல்வி தரவும் சமூக நலத் துறையில் 22 அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் இயங்கி வருகின்றன. மேற்படி இல்லங்களில் 250 குழந்தைகள் தங்கி படிக்க வசதி செய்து தரப்பட்டுள்ளது. அக்குழந்தைகளுக்கு உணவிற்காகவும் சீருடைக்காகவும் படுக்கை வசதிக்காகவும் கீழ்க்கண்டவாறு செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு குழந்தைக்கு கீழ்க்கண்டவாறு செலவிட அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

	ரூ.	
உணவிற்காக	90	மாதத்திற்கு
சீருடை பொருட்டு	35	வருடத்திற்கு
படுக்கை பொருட்டு	20	வருடத்திற்கு

நீலகிரி மாவட்டம் பொறுத்தவரை :—

சீருடைக்காக	60	வருடத்திற்கு
படுக்கைக்காக	50	வருடத்திற்கு

புத்தகத்திற்காக :

1 முதல் 5 ஆம் வகுப்பு வரை	ரூ.	35
6 முதல் 8 ஆம் வகுப்பு வரை	ரூ.	50
9 முதல் 10 ஆம் வகுப்பு வரை	ரூ.	90
ப்ளஸ் 1 முதல் ப்ளஸ் 2 வரை	ரூ.	190

படிப்பில் கவனம் குறைவாக உள்ள மாணவிகளுக்கு தையலில் பயிற்சி அளிக்கவும் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

69—

திருப்பத்தூர் பேருந்து நிலையம்.

வினா எண். 5522—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் பேருந்து நிலையத்திற்கு முன்னாள் நகர மன்றத் தலைவர் சி. கே. சின்னராசு அவர்கள் பெயர் வைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

திருப்பத்தூர் பேருந்து நிலையத்திற்கு தந்தை பெரியார் அவர்களின் பெயரையும் மேற்படி நகராட்சியில் துரைசாமியார் சாலையில் உள்ள மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டிக்கு முன்னாள் நகரமன்றத் தலைவர் மறைந்த திரு. சி. கே. சின்னராசு கவுண்டர் அவர்களின் பெயரையும் வைக்க திருப் பத்தூர் நகர மன்றத்திற்கு அரசு அனுமதியளிக்கிறது.

1990 ஆகஸ்டு 22]

70—

இடையாத்தி உயர்நிலைப் பள்ளி.

வினா எண். 4593—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, இடையாத்தி உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் நியமனம், தளவாட சாமான்கள், கட்டட வசதி, ஆய்வுக் கூடம் போன்ற வசதிகள் செய்து தரப்படுமா ?

விடை—

அவ்வப்போது வாய்க்கும் நிதி வசதியைப் பொறுத்து முயற்சி எடுக்கப்படும்.

71—

நடுவிக்கோட்டை உயர்நிலைப் பள்ளி.

வினா எண். 4594—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, நடுவிக்கோட்டை உயர்நிலைப் பள்ளிக்கு கட்டட வசதி, கூடுதல் ஆசிரியர் நியமனம், ஆய்வுக்கூடம், தளவாட சாமான்கள் போன்ற வசதிகள் செய்துதர அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

அவ்வப்போது வாய்க்கும் நிதி வசதியைப் பொறுத்து முயற்சி எடுக்கப்படும்.

72—

பைங்கால் உயர்நிலைப் பள்ளி.

வினா எண். 4595—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, பைங்கால் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் நியமனம், கட்டட வசதி, தளவாட சாமான்கள், ஆய்வுக்கூடம் போன்ற வசதிகள் செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

அவ்வப்போது வாய்க்கும் நிதி வசதியைப் பொறுத்து முயற்சி எடுக்கப்படும்.

73—

புதிய தொடக்கப் பள்ளி தொடங்குதல்.

வினா எண். 4768—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி ஒன்றியம், பனஞ்சேரி கிராமத்தில் புதிய தொடக்கப்பள்ளி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

1990–91ஆம் ஆண்டு நிதிநிலை ஒதுக்கீட்டில் புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்குவதற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பனஞ்சேரி கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி தொடங்க கருத்துரு பெறப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

74—

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனை.

வினா எண். 5573—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை, சம்புவராயர் மாவட்டம், போளூர் நகரத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக டெப்போ துவக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் நகரத்தில் சர்வே எண். 683/2, 683/4ல் 4.97 ஏக்கர் நிலம் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனை கட்டவேண்டி நில ஆய்வுக் குழுவினரால் 27—2—1989ல் பார்வையிடப்பட்டது. அந்நிலம் போளூர் அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமானதால் இந்து அறநிலையத்துறை ஆணையாளர் இந்நிலத்தினை அப்போக்குவரத்துக் கழகத்திற்கு விற்பனை செய்ய இசைவு அளிக்கவில்லை. நேரில் பேசி அந்நிலத்தை வாங்கலாம் அல்லது வேறு மாற்று நிலத்தினை தேர்வு செய்யலாம் என பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்டு 22]

75—

ஆழ்குழாய்க் கிணறு தோண்டுதல்.

வினா எண். 5684—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, மரிச்சிக் கட்டி, வடக்கூர் ஆகிய இடங்களில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டப்படுமா ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, மரிச்சிக் கட்டி, வடக்கூர் ஆகிய இரு இடங்களுக்கும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை. மேற்கூறிய இரு இடங்களும் சோமத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றன.

76—

அருந்ததியர் காலனிக்கு குடிநீர் இணைப்பு.

வினா எண். 5775—திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வெள்ளங்குழி குடிநீர்த் திட்டத்திலிருந்து அப்பகுதி யில் இருக்கின்ற அருந்ததியர் காலனிக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வெள்ளங்குழி குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு, தற்போது பஞ்சாயத்தின் பராமரிப்பில் உள்ள தால், பஞ்சாயத்தின் அனுமதி பெற்று அருந்ததியினர்களுக்குத் தனியாக ஒரு பொது நல்லி அமைத்துத் தரப்படும்.

77—

குன்றக்குடி முருகன் கோவில்.

வினா எண். 5926—திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை ஆதீனத்திற்கு உட்பட்ட குன்றக்குடி முருகன் கோவிலுக்கு நிர்வாக அதிகாரி உள்ளாரா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கோயிலின் மாத வருமானம் என்ன ?

(இ) இல்லையெனில், நிர்வாக அதிகாரி நியமிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

விடை—

(அ) நிர்வாக அதிகாரி இல்லை.

(ஆ) சராசரி மாத வருமானம் சுமார் ரூ. 21,700.

(இ) தமிழ்நாட்டில் உள்ள முக்கிய திருமடங்களின் ஆளுகையிலுள்ள திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்களை நியமனம் செய்ய 1976-ஆம் ஆண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவ்வாணைக்கு ஆட்சேபனை தெரிவித்து தருமபுரம் திருவாவடுதுறை மற்றும் குன்றக்குடி ஆதீன கர்த்தர்கள் அரசுக்கு முறையீடு செய்தனர். இம்முறையீடு அரசால் நிராகரிக்கப்பட்டது. பின்னர் இவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து இடைக்கால உத்தரவு பெற்றனர். நிர்வாக அதிகாரி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கும் முன்னர் உரிய அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்ற தீர்ப்புடன் மேற்படி ரிட் மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. இதனை எதிர்த்து மேல் முறையீடு செய்ய இவை ''நல்ல வழக்கு இல்லை'' என்று அரசு வழக்கறிஞர் கருத்துத் தெரிவித்ததின் அடிப்படையில் இலாகா மேல் முறையீடு செய்யவில்லை. எனவே இந்த கோயிலுக்கு நிர்வாக அதிகாரி நியமிக்கப்படவில்லை.

78—

பென்சன் மற்றும் குரூப் இன்சூரன்ஸ்.

வினா எண். 6087—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கைத்தறித் தொழில் தொடர்பான உபதொழில்களான பாவு துவைத்தல், சாயம் தோய்த்தல், நூல் சுற்றுதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு பென்சன் மற்றும் குரூப் இன்சூரன்ஸ் திட்டம் அமுல்படுத்தப்படுமா ?

விடை—

தற்பொழுது தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள ‘ ஏ’ வகுப்பு உறுப்பினர்களுக்கு (அதாவது நெசவாளர்களுக்கு மட்டும்) செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கைத்தறித் தொழில் தொடர்பான உபதொழில்களான பாவு ஓடுதல், சாயம் தோய்த்தல், நூல் சுற்றுதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பெயரளவில் மட்டும் உறுப்பினர்களாக (‘பி’ வகுப்பு உறுப்பினர்கள்) வேலை புரிகிறார்கள். இத்தொழிலாளர்களை சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சந்தாதாரர்களாக சேர்த்துக்கொள்ள மேற்படி சட்ட திட்டங்களில் வழிவகை எதுவும் இல்லை.

79—

ஆரம்ப பாடசாலைக்குக் கட்டிடம்.

வினா எண். 6328—திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், மேச்சேரி பேரூராட்சியில் உள்ள செட்டிகாரிச்சியூர் ஆரம்ப பாடசாலைக்குக் கட்டிடம் கட்டப் படுமா ?

விடை—

சேலம் மாவட்டம், மேச்சேரி பேரூராட்சியில் உள்ள செட்டிகாரிச்சியூர் ஆரம்ப பாடசாலைக்கு நடப்பு நிதி யாண்டில் (1990–91) ஒதுக்கப்பட்டுள்ள சிறப்பு நிதி ஒதுக் கீட்டிலிருந்து இப்பள்ளிக் கட்டிட பணியினை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

80—

கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண். 6418—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டத்தில் காவிரி மற்றும் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க எத்தனை கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் TWAD-ன் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) ஆய்வில் உள்ளது ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டத்தில் காவிரி மற்றும் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க கீழ்க்கண்ட ஐந்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளன :—

காவிரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு ஆய்வில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

1. மத்தூர், வெள்ளக்கோவில், காங்கேயம் மற்றும் குண்டடம் பேரூராட்சி மற்றும் வழியோரக் கிராமங்கள் இணைந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

2. சித்தோடு, நசியனூர் மற்றும் பெருந்துறை கோ. சி. பாளையம், கூட்டுக் குடிநீர்த் திட்டம் ;

3. பி.பி. அக்ரஹாரம் மற்றும் சூரம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

பவானி ஆற்றை நீர்ஆதாரமாகக் கொண்டு ஆய்வில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்—

4. காசிப் பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ;

5. டோம்பாளையம் மற்றும் 116 வேறு வழியோர கிராமங்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

81—

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள்.

வினா எண். 6537—திரு. கு. வெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிய தொழில் நுட்பப் பட்டதாரிகளை ஆணையாளர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிய தொழில் நுட்பப் பட்டதாரிகளை ஆணையர்களாக நியமிக்க செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1990 ஆகஸ்டு 22]

82—

பொறியியல் கல்லூரிகளில் அனுமதி.

வினா எண். 6811—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொறியியல் கல்லூரிகளில் 1979 முதல் 1989 வரை அனுமதிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவர்களில் யாரேனும் தகுதி காரணமாக பொதுப் பட்டியலில் வந்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ)

ஆண்டு.		பொதுப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள். பிற்படுத்தப் பட்டோர்.	பொதுப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள். தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர்.
(1)		(2)	(3)
1979–80 ..		272	..
1980–81 ..		185	1
1981–82 ...		179	6
1982–83 ...		233	4
1983–84 ...		210	2
1984–85 ..		256	3
1985–86 ...	(க்ரூப்)	424	7
1986–87 ...		596	6
1987–88 ..	க்ரூப் -1	257	8
	க்ரூப்-2	354	8
1988–89 ..	க்ரூப்-1	212	3
	க்ரூப்-2	331	5
1989–90 ...	க்ரூப்-1	220(*)	1
	க்ரூப்-2	165(**)	1

(*) 220 மாணவர்களில் 20 பேர் மிக பிற்படுத்தப்பட்டோர்.

(**) 165 மாணவர்களில் 16 பேர் மிக பிற்படுத்தப்பட்டோர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

83—

விக்கிரமசிங்கபுரம் மதுரா கோட்ஸ் மில் தொழிலாளர்களின் வசதிக்கென நகரப் பேருந்து

வினா எண் 7126 —திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரம சிங்கபுரம் மதுரா கோட்ஸ் மில் தொழிலாளர்களின் வசதிக்காக இரவு 11 மணிக்கு மேல் மில் கேட்டிலிருந்து கடையத்திற்கு புதிதாக நகரப் பேருந்து வசதி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ). தற்சமயம் விக்கிரமசிங்கபுரம் மற்றும் பாபநாசம் பகுதிகளிலிருந்து கடையம் செல்ல இரவு கடைசி சுற்று 9.25 மணி அளவில் பேருந்து கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகத்தால் இயக்கப்படுகின்றது. ஏற்கெனவே, மதுரை கோட்ஸ் தொழிலாளர்களுக்காக, அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர் போன்ற பகுதிகளுக்கு இரவு 11-00 மணியளவில் இயக்கப்பட்டு வரும் சுற்றுக்களில் பயணிகள் விகிதாச்சாரம் குறைவாகவே உள்ளது. ஆம்பூர், ஆழ்வார்குறிச்சி, பொட்டல்புதூர், கடையம் ஆகிய பகுதிகளிலிருந்து மொத்தத் தில் 100 தொழிலாளர்களே மதுரை கோட்ஸ் நூற்பாலையில் பணி புரிவதாகவும், இவர்களில் சுமார் 90 சதவீத தொழி லாளர்கள் மிதி வண்டி மற்றும் தானியங்கி இரு சக்கர ஊர்தி களைப் பயன்படுத்தி நூற்பாலைக்கு சென்று வருவதாகவும் எங்களின் ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது. ஆகவே, கோரிக் கையின்படி இரவு 11-00 மணிக்கு வி. கே. புரத்திலிருந்து கடையத்திற்கு பேருந்து இயக்கும் சாத்தியக் கூறு இல்லை.

84—

மறைமலை நகர் —காஞ்சிபுரம் பேருந்து

வினா எண் 7230—திரு, பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மறைமலை நகரிலிருந்து காஞ்சிபுரம் வரை உந்து வண்டிகள் விடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போதிலிருந்து விடப்படும்?

1990 ஆகஸ்டு 22]

விடை—

(அ) மற்றும் (ஆ). மறைமலை நகரை காஞ்சீபுரத்துடன் பல்வேறு வழிகளில் இணைக்கும் தடங்களில், போதுமான அளவு போக்குவரத்து வசதிகள் பகுதிவாரியாக உள்ளன. எனவே, மறைமலை நகர்—காஞ்சீபுரம் தடத்திற்கென பேருந்துகளை இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

85—

உல்லாசப் பயண மையங்கள்.

வினா எண். 7248—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு போக்குவரத்துக் கழகத்தால் உல்லாசப் பயண மையங்கள் ஏதேனும் நடத்தப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) போக்குவரத்துக் கழகங்களினால் உல்லாசப் பயண மையங்கள் எதுவும் நடத்தப்படவில்லை. ஆனால் சுற்றுலாத் துறையினால் மேம்படுத்தப்பட்டுள்ள உல்லாசப் பயண மையங்களுக்கு இதுவரை போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 16 இலட்சம் உதவியளித்துள்ளன.

86—

கூட்டுறவு பயிற்சி நிலையம்.

வினா எண். 7250—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு பயிற்சி நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு பயிற்சி நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

87—

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு பேருந்துகள்.

வினா எண். 7261—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு எத்தனை பேருந்து விடப்படுகின்றன?

(ஆ) மேலும் அதிகப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

(அ) 747 பேருந்துகள்.

(ஆ) ஆம். பிற மாநிலங்களுடன் ஒப்பந்தங்கள் ஏற்பட்ட பின் விடப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

88—

போயர் இன மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா

வினா எண். 7280— திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, குப்பாண்டம் பாளையம் ஊராட்சிக்குச் சேர்ந்த மிகப் பிற்படுத்தப்பட்ட போயர் இனத்திற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் நில ஆர்ஜிதம் செய்து வீட்டு இடம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1990 ஆகஸ்டு 22]

விடை—

இதுகாறும் அந்தியூர் தொகுதி குப்பாண்டம்பாளையம் கிராமத்தில் போயர் இன மக்களுக்கு வீட்டிடம் வழங்க நில மெடுப்பு நடவடிக்கை ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை. இலவச வீட்டுமனைப் பட்டா பெறத் தகுதி வாய்ந்த போயர் இன மக்கள் குப்பாண்டம் பாளையத்தில் இருப்பின் அவர்களிட மிருந்து கோரிக்கை ஏதும் வரப் பெறின் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

89—

கோயில் கட்ட நிதி உதவி.

வினா எண். 7287—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி கீழ்வாணி பஞ்சாயத்துக்குட்பட்ட காலங்காட்டுப்புதூர் அருந்ததியர் காலனிக்கு ''அண்ணமார்சாமி'' கோவில் கட்ட அரசு நிதி உதவி வழங்குமா?

விடை—

பெரியார் மாவட்டம், பவானி வட்டம், கீழ்வாணி கிராமம், காலங்காட்டுப்புதூர் அருந்ததியர் காலனியில் உள்ள அருள்மிகு அண்ணமார் சாமி திருக்கோயில் இதுகாறும் இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் கொண்டு வரப்படாத, வருமானம் ஏதுமில்லாத சிறிய திருக்கோயிலாகும். இத்திருக் கோயிலுக்கு கிராமப்புற திருக்கோயில் திருப்பணி நிதியுதவி திட் டத்தின் கீழ் நிதியுதவி செய்யத் தகுந்த நடவடிக்கை இந்துசமய அறநிலையத் துறையால் எடுக்கப்பட்டு வருகிறது.

90—

பூமி தான இயக்கம்.

வினா எண். 7357—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை-அண்ணா மாவட்டத்தில் பூமிதான இயக்கத்திற்கு எங்கெங்கு எவ்வளவு நிலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது?

விடை—

செங்கை-அண்ணா மாவட்டத்தில் பூமிதான இயக்கத்திற்கு தானமாக பெறப்பட்டுள்ள நிலங்கள் விவரம்:—

வரிசை எண்ணும் தாலுக்கா பெயரும்.	பூமிதானம் நிலம் கொடுக்கப் பட்ட விபரம். விஸ்தீரணம்.	
(1)	(2)	
	ஏ.	செ.
செங்கை அண்ணா மாவட்டம்:—		
1 உத்திரமேரூர்	75	50
2 சைதாப்பேட்டை	1	00
3 கும்மிடிப்பூண்டி	20	59
4 பொன்னலூர்பேட்	31	93
5 காஞ்சிபுரம்	126	50
6 திருத்தணி	92	71
7 செங்கற்பட்டு	64	88
8 ஸ்ரீபெரும்புதூர்	255	67
9 பொன்னேரி	68	83
10 பள்ளிப்பட்டு	8	77
11 திருவள்ளூர்	64	89
12 மதுராந்தகம்	502	72
மொத்தம் ..	1,313	99

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மேற்காணும் 1,313.99 ஏக்கர் நிலங்களில் 20.22 ஏக்கர் நிலம் அரசால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அதற்கான நஷ்ட ஈட்டுத் தொகை பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,293.77 ஏக்கர் பரப்பு நிலத்தில் 993.28 ஏக்கர் பரப்புள்ள நிலம் 1,446 நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள 300.48 ஏக்கர் நிலம் ஏழை நபர்களுக்கு விநியோகம் செய்யத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

91—

சாலையோர உணவு விடுதி.

வினா எண். 7364—திரு எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை—விழுப்புரம் சாலையில் மேல்மருவத்தூர் அருகில் எல்லா வித வசதிகளுடன் கூடிய சாலையோர உணவு விடுதி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேல் மருவத்தூரில் மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ. 19.00 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக ஒரு சாலையோர விடுதி கட்டும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, முதற்கட்டமாக ரூ. 2.50 இலட்சம் வழங்கியுள்ளது. இப்பணி மத்திய அரசு பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது.

92—

ஆதி திராவிட மக்களுக்குக் காலனி வீடுகள்

வினா எண் 7417—டாக்டர் எஸ் சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் எஸ். கொடிக்குளம் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்குக் காலனி வீடுகள் கட்டித் தரப்படுமா?

விடை—

எஸ். கொடிக்குளம் கிராமத்தில் 1986–87 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 11 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள விதிமுறைகளின்படி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில், மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

93—

கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு விகிதம்.

வினா எண் 7426—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு விகிதம் (Maternal Mortality Rate) எவ்வளவு?

விடை—

1987—ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, தமிழகத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு விகிதம் பின்வருமாறு:—

கிராமப்புறம்	..	1,000 பிறப்புக்களுக்கு 2.34 இறப்புகள்
நகர்ப்புறம்	..	1,000 பிறப்புக்களுக்கு 1.10 இறப்புகள்
பொதுவாக	..	1,000 பிறப்புக்களுக்கு 1.94 இறப்புகள்

94—

சுடுகாட்டுப் பாதைகள் சீர்செய்தல்.

வினா எண் 7654—திரு கே. ரவி அருணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், விக்கிரமசிங்கபுரம், பேரூராட்சி ராமலிங்கம் தெரு, பூந்தோட்டம் தெரு, அருந்ததியர் தெரு, சாலைத் தெரு, அம்பலவாணபுரம் தெரு, கட்டபுளித் தெரு, மீனாட்சிபுரம் தெரு, ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் உபயோகித்து வரும் சுடுகாட்டுப் பாதைகள் எப்போது சீர் செய்யப்படும்?

1990 ஆகஸ்டு 22]

விடை—

மேற்கூறப்பட்ட சுடுகாட்டுப் பாதைகள் அமைக்க நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. நிலம் கையகப்படுத்த திரு நெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலு வலர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். நிலம் கையகப்ப படுத்தப்பட்ட பின்னர் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

95—

மதுரை மருத்துவக் கல்லூரி.

வினா எண் 7793—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) மதுரை மருத்துவக் கல்லூரி நுண்ணுயிரியல் (Microbiology Department) பிரிவில் வைராலஜி (Virology) ஆரம்பிக்க அரசு செலவு செய்துள்ள தொகை எவ்வளவு?

(ஆ) இத்துறையின் மூலம் எத்தனை நோயாளிகள் பயன் பெற்றுள்ளார்கள்?

விடை—

(அ) ரூ. 1,41,33,594.

(ஆ) மூளைக் காய்ச்சல், மஞ்சள் காமாலை, இளம் பிள்ளைவாதம், வெறிநோய், எய்ட்ஸ் லெப்டோஸ்பைரோசிஸ் போன்றவை பற்றி 1981 முதல் 1989 வரை நோய்க்கான பரி சோதனை செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 51,815.

96—

பிள்ளையார் நத்தம்—புதூர் காலனி சாலை.

வினா எண் 7934—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், பிள்ளையார் நத்தம்-புதூர் காலனிக்கு இடையில் உள்ள சாலையை புதுப் பிக்கவும், அந்த சாலையில் குறுக்கே ஓடும் வாய்க்கால் மீது பாலம் கட்டவும் அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கவிருக்கும் நட வடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ). பிள்ளையார் நத்தம் முதல் புதூர் காலனி வரை 2.20 கி.மீ. தூரத்திற்கு சாலை அமைத்து மேம்பாடு செய்யும் பணி ரூ. 6.00 இலட்சத்திற்கு 1986—87 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு சாலை அமைக்கும் பணி தற்போது செயல்பட்டு வருகின்றது. இப்பணி கூடிய விரைவில் செய்து முடிக்கப்படும். மேலும், இச்சாலையில் கி.மீ. 1/2-ல் சுமார் 55.00 மீட்டர் நீர் வழிப்பாதையுடன் கூடிய காட்டாறு ஒன்று குறுக்கிடுகிறது. இச்சாலையின் போக்குவரத்தை கருத்திற் கொண்டு பார்க்கையில் இவ்விடத்தில் உயர்மட்ட பாலம் கட்ட வேண்டிய அவசியமில்லை. ஓர் தரைமட்ட தாம்போகி ரூ. 6.00 இலட்சம் செலவல் அமைத்தால் போதுமானது. இப்பணி தற்சமயம் அரசின் திட்டப் பணிகள் எதிலும் இடம் பெறவில்லை.

97—

இணைப்புச் சாலை அமைத்தல்.

வினா எண். 7911—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், அளக்குடி குத்துவாக்கரை ஆதி திராவிடர் தெருவிற்கு இணைப்புச் சாலை அமைக்க அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ). தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி வட்டம், அளக்குடி கிராமம் குத்துவாக்கரையில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து கொடுப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்ய நில எடுப்புச் சட்டத்தின் பிரிவு 4 (1)ன் கீழ் அறிவிக்கைக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

98—

புதியதாக ரேஷன் கடை.

வினா எண். 7940—திரு. மெ. ஆண்டி அம்பலம்; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியத்திற்குட்பட்ட பிள்ளையார் நத்தத்தில் புதிதாக ரேஷன் கடை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1990 ஆகஸ்டு 22]

விடை—

பிள்ளையார் நத்தம் பகுதியில் பகுதி நேர நியாய விலை அங்காடி திறக்கத் தக்க நடவடிக்கை எடுக்க திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

99—

சத்துணவு மையங்களுக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 65—திரு. எஸ். டி. உகம்சந்த்; மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சத்துணவு மையங்களுக்கும் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

அரசின் நிதி நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டு பல கட்டடங்களில் மேலும் கட்டிடங்கள் கட்டித் தருவதற்கு சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடவடிக்கை மேற்கொள்ள அரசு கருது கின்றது.

100—

நகரப் பேருந்து விடும் திட்டம்.

வினா எண் 100—திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

திருக்கழுக்குன்றத்தில் இருந்து அகத்தீஸ்வரமங்கலம், சாலூர், கோரப்பட்டு, ஆனூர், களத்தூர் வழியாக செங்கல் பட்டுக்கு நகரப் பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வரையிலான பகுதியில் ஆனூருக்கும், சாலூருக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள சாலை மிகவும் குறுகலானதாகவும், பேருந்தை திருப்ப இயலாத குறுகிய வளைவுகளை உடையதாகவும் இருப்பதால், இத் தடத்தில் நகரப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

101—

செங்கை-அண்ணா மாவட்டத்தில் ஏரிகளை ஆழப்படுத்துதல்.

வினா எண். 122—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

செங்கை-அண்ணா மாவட்டத்தில் உள்ள ஏரிகளை ஆழப் படுத்தவும், வரத்துக் கால்வாய்களை நவீனப்படுத்தவும் அரசு முன்வருமா?

விடை—

செங்கை-அண்ணா மாவட்டத்தில் ஏற்கெனவே மாவட்ட செயல் திட்டத்தின் கீழ் 1988–89 மற்றும் 1989–90-ல் 63 ஏரிகள் ரூ. 93.50 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டு வரு கின்றன. மேலும் ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் நிதி உதவியுடன் 40 கண்மாய்கள் ரூ. 901.51 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின் கீழ் மேலும் பல கண்மாய்கள் நவீனப்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

102—

ரயில்வே மேம்பாலம் கட்டும் பணி.

வினா எண் 178—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட கோயம்பத்தூர் ரயில்வே மேம்பாலம் கட்டும் பணி தொடங்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், இதைக் கட்டி முடிக்க எவ்வளவு காலம் ஆகும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சுமார் இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும்.

1990 ஆகஸ்டு 22]

103—

ஆதிதிராவிடர் குடியிருக்கும் காலனிகளைப் பழுது பார்க்கும் திட்டம்.

வினா எண் 205—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதியில் ஆதி திராவிட மக்கள் குடியிருக்கும் அம்மையாண்டி, கஞ்சங்காடு முதலிய காலனிகளைப் பழுது பார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

பேராவூரணி தொகுதியில் ஆதி திராவிட மக்கள் குடியிருக்கும் அம்மையாண்டி, கஞ்சங்காடு முதலிய காலனிகளைப் பழுது பார்க்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

104—

தனியார் பொறியியற் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்குகள்.

வினா எண். 274—திரு. வி. தமிழ்மணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தனியார் பொறியியற் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்குகளை அரசே ஏற்று நடத்தும் செயற் குறிப்பு உண்டா?

விடை—

இல்லை.

105—

கோட்ட ஆட்சியாளர் அலுவலகம் துவக்குதல்.

வினா எண். 278—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் மற்றும் செய்யூர் தாலுகாக்களுக்கென கோட்ட ஆட்சியாளர் அலுவலகம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

106---

கடலோரப் பகுதிகளில் உப்புக்காற்றால் மின்கம்பிகள் பழுதடைதல்.

வினா எண் 291—திரு. எஸ். டி. உகம்சந்த்—மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடலோரப் பகுதிகளில் உப்புக் காற்றால் மின்கம்பிகள் அடிக்கடி பழுதடைவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கடலோரப் பகுதிகளில் மின்கம்பிகள் உப்புக்காற்றால் பழுதடைவதைத் தவிர்க்க, கிரீசு (Grease) பூசிய எஃகு கம்பி உள்ளீடு செய்த அலுமினிய மின்கம்பிகள் உபயோகிக்கப்படுகிறது.

107—

வெளி மாநிலங்களிலிருந்து முறைப்படி பில்லுடன் கொண்டுவரப்படும் அரிசி.

வினா எண் 323—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு முறைப்படி பில்லுடன் கொண்டுவரப்படும் அரிசி லோடுகள் கோவை, பெரியார் மாவட்ட எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள சுங்கச் சாவடிகளில் சோதனை என்ற பெயரால் பல நாள் தடுத்து நிறுத்தப்படுவதால் அரிசி விலையில் ஏற்றம் ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்நிலையை மாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1990 ஆகஸ்டு 22]

விடை—

(அ) வெளி மாநிலங்களிலிருந்து முறைப்படி பில்லுடன் கொண்டு வரப்படும் அரிசியை, கோவை பெரியார் மாவட்ட எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள சுங்கச்சாவடிகளில் தடுத்து நிறுத்தப்படுவதில்லை. வெளிச்சந்தை அரிசி நிலையில் ஏற்றமும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

108—

ஆம்னி பஸ்கள்.

வினா எண் 341—திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்படும் வகையில் சட்ட விதிகளை மீறி ஓட்டப்படும் ஆம்னி பஸ்களை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

ஆம். சட்டத்திற்கு புறம்பாக, அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்படும் வகையில் ஓட்டப்படும் ஆம்னி பஸ்களை, அவ்வப்போது கண்காணித்து சட்ட மீறல்களுக்குத் தணிக்கை அறிக்கை கொடுத்து நடவடிக்கை எடுத்து தமிழ்நாட்டிற்கான வரித்தொகையும் வசூலிக்கப்படுகிறது.

109—

லட்சுமிபுரம் கலை மற்றும் விஞ்ஞானக் கல்லூரியை அரசு ஏற்று நடத்துதல்.

வினா எண் 347—திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசின் மேற்பார்வையில் இயங்கி வரும் லட்சுமிபுரம் கலை மற்றும் விஞ்ஞானக் கல்லூரியை முழுமையான அரசுக் கல்லூரியாக அரசே ஏற்று நடத்த முன் வருமா ?

விடை—

லட்சுமிபுரம் கலை மற்றும் விஞ்ஞானக் கல்லூரியை அரசு கல்லூரியாக அரசே ஏற்று நடத்த வாய்ப்புகள் இல்லை.

110—

பெருஞ்சாணி அணையில் சிறிய நீர்மின் திட்டம்.

வினா எண் 352—திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருஞ்சாணி அணையில் சிறிய நீர்மின் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஆம்.

111—

சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 35 தொழிலாளர்கள் வேலை நீக்கம்.

வினா எண் 368—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தில் போனஸ் கேட்டு போராடிய 35 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அவர்களுக்கு வேலை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தில் போனஸ் கேட்டு போராடியதற்காக எந்த ஒரு தொழிலாளியும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடம் இல்லை.

[1990 ஆகஸ்டு 22]

112—

ஊராட்சி ஒன்றிய சாலைகளைச் சீரமைக்க சிறப்பு நிதி ஒதுக்கும் திட்டம்

வினா எண். 378—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியச் சாலைகளைச் சீரமைக்க சிறப்பு நிதி ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஊராட்சி ஒன்றியச் சாலைகளைச் சீரமைக்க சிறப்பு நிதி ஒதுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

113—

கொல்லிமலையில் நீர் மின்சார உற்பத்தி நிலையம்

வினா எண். 476—திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், கொல்லிமலையில் நீர் மின்சார உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 20 மெகாவாட் திறன் கொண்ட புனல்மின் நிலையம் அமைக்க விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

114—

அழகர் கோவில் சாலைக்குப் பெயர் மாற்றம்

வினா எண். 514—திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை, கோரிப்பாளையம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை அமையப்பெற்றுள்ள அழகர்கோவில் சாலைக்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை எனப் பெயர் சூட்டப்படுமா ?

விடை —

பெயர், மாவட்டம் குறித்த கோரிக்கையினைத் தேர்ந் தெடுக்கப்படவிருக்கும் மதுரை மாநகராட்சி மன்றம் ஆராயும்.

115—

வருவாய்த்துறை சம்பந்தப்பட்ட குறைகளைக் கண்டுபிடிக்க கண்காணிப்புக் குழுக்கள்

வினா எண் 525—திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட குறைகளையும், தவறுகளையும் கண்டுபிடிக்க கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

1990 - ஆகஸ்டு 22]

116—

பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பறைகளின் பராமரிப்பு

வினா எண். 662—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பறைகளில் கட்டணம் வசூலிப்பதை நிறுத்திவிட்டு, அந்தப் பராமரிப்பை உள்ளாட்சி மன்றங்களே ஏற்றுக்கொள்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

117—

சென்னை சட்டக் கல்லூரி மாணவர் விடுதி உணவகம்

வினா எண். 672—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் மூடப்பட்டிருக்கும் உணவகத்தைத் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மூடப்பட்டிருந்த மாணவர் விடுதி உணவகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

[1990 ஆகஸ்டு 22

118—

விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கூலி

வினா எண். 716—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்தபட்ச கூலி தற்போது எவ்வளவு ?

(ஆ) அதை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கு 3—4—1989 முதல் குறைந்த அளவு ஊதியங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

1. ஏர் உழவு (தொழிலாளருடைய மாடு மற்றும் ஏருடன்).	ரூ. 32.00 ஒரு நாளைக்கு.
2. ஏர் உழவு (தொழிலாளருடைய ஏர் மாடு இல்லாமல்).	ரூ. 16.00 ஒரு நாளைக்கு.
3. நெல் அறுவடை (கதிர் அறுத்தல், களத்திற்கு எடுத்துச் செல்லல், தூற்றுதல், அளத்தல் மற்றும் மூட்டை கட்டுதல்).	ரூ. 16.00 ஒரு நாளைக்கு அல்லது கண்டு முதலில் எட்டில் ஒரு பாகத்தில் தொழிலாளியின் பங்கின் பண மதிப்பு இதில் எது அதிகமோ அது.
4. நெல் தவிர பிற பயிர்கள் அறுவடைக்கு.	ரூ. 16.00 ஒரு நாளைக்கு.

1990 ஆகஸ்டு 22]

5.	விதைத்தல், நாற்று பிடுங்குதல், நாற்று நடுதல் அல்லது களை எடுத்தல்.	ரூ. 15.00 (நாற்று பிடுங்குதல் மற்றும் நடுதல்).
		ரூ. 14.00 (களை எடுத்தல்).
		ரூ. 16.00 (விதை விதைத்தல்).
6.	ஏனைய வேலைகளுக்கு (அண்டை வெட்டுதல், பரம்படித்தல், தேனீ வளர்த்தல், கோழிப் பண்ணை, பால் பண்ணையில் வேலை, மரம் ஏறுதல் முதலியன).	ரூ. 16.00 ஒரு நாளைக்கு.
7.	பண்ணையாள்	ரூ. 375.00 ஒரு மாதத்திற்கு

(ஆ) மேற்படி குறைந்த அளவு ஊதியங்கள் சமீபத்தில்தான் அதாவது 3—4—1989 அன்றுதான் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

119—

பழனி நகர மேம்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ஒதுக்கீடு.

வினா எண். 717—திரு என். பழனிவேல் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழனி நகர மேம்பாட்டிற்கும், அபிவிருத்திக்கும் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

பழனி நகர மேம்பாட்டிற்கும், அபிவிருத்திக்கும் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் ஒதுக்கித்தர இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

120—

தமிழக அரசுக்குச் சொந்தமான கப்பல்கள்.

வினா எண். 720—திரு. என் பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமான கப்பல்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) என்னென்ன பணிகளுக்காக அக்கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன ?

(இ) அவைகளினால் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் எவ்வளவு ?

விடை—

(அ) மூன்று.

(ஆ) தூத்துக்குடி மின் நிலையத்திற்கு ஹால்டியா துறைமுகத்திலிருந்து நிலக்கரி கொண்டுவருவதற்காக.

(இ) ஓராண்டுக்கு நிகர இலாபம் ரூபாய் 1.48 கோடி.

121—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி வளர்ச்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

வினா எண். 724—திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உசிலம்பட்டி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி வளர்ச்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்யப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1990 ஆகஸ்டு 22]

122—

உசிலம்பட்டியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி நிறுவும் செயற் குறிப்பு.

வினா எண் 726—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பார்வார்டு பிளாக் தலைவர் பி. கே. மூக்கையாத் தேவர் பெயரில் உசிலம்பட்டியில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி நிறுவும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயற்படுத்தப் படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

123—

கொக்குளம்-உத்தப்ப நாயக்கனூர் நெடுஞ்சாலைத் திட்டம்.

வினா எண். 728—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உசிலம்பட்டி தாலுக்கா கொக்குளம்-உத்தப்பநாயக்கனூர் நெடுஞ்சாலைத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

பராமரிப்பு நிதி வசதிக்கேற்ப சிறுகச் சிறுக மேற்படித் திட்டம் நிறைவேற்றப்படும்.

124—

கண்மாய்ப் பாசனப் பகுதிகளை ஆயக்கட்டில் சேர்க்கும் திட்டம்.

வினா எண். 743—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயில் இதுவரை ஆயக்கட்டில் சேர்க்கப்படாமல் உள்ள முதலைக்குளம் மற்றும் சங்கம்பட்டி கண்மாய் பாசனப்பகுதிகளை ஆயக்கட்டில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) (1) முதலைக்குளம் கண்மாய் : பாசனம் பெறுவதற்காக திருமங்கலம் பிரதான நீட்டிப்புக் கால்வாயிலிருந்து பிரிவு வாய்க்கால் அமைக்கும் பணி ரூ. 11.42 இலட்சம் செலவில் 1982 இல் துவங்கப்பட்டு 1985-இல் முடிவடைந்து விட்டது. இதனால் 635.48 ஏக்கர் நிலம் பாசனம் பெற்றது.

(2) சங்கம்பட்டி கண்மாய் : பெரியாறு-வைகை மேம்பாட்டுத் திட்ட பாசனப் பரப்பில் வராததால் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனினும், சங்கம்பட்டி கண்மாய் பாசனப் பரப்பை பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி பல விண்ணப்பங்கள் வந்துள்ளதால், இதனை பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் சாத்தியக் கூறு பற்றி ஆய்வு நடைபெற்று வருகிறது.

125—

மோட்டார்களுக்கு போதிய மின் இணைப்பு வழங்கும் சிறப்புத் திட்டம்.

வினா எண். 764—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில் பாசனத்திற்கு போதிய தண்ணீர் இல்லாததால், நிலத்தடி நீர் பயன்பெற போதிய மின் இணைப்பு மோட்டார்களுக்கு வழங்க சிறப்புத் திட்டம் உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவள வங்கிகளால் உதவியளிக்கப்பட்ட பம்பு செட்டுகள் மற்றும் காவிரி டெல்டா பகுதிகளில் அமைந்துள்ள பம்புசெட்டுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

126—

காவிரி ஆற்றை சீர் செய்ய உலக வங்கி உதவி.

வினா எண் 766—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவிரி ஆற்றை சீர் செய்ய உலக வங்கியின் உதவி கிடைத்துள்ளதா ?

விடை—

காவிரி ஆற்றை சீர் செய்ய உலக வங்கியின் உதவி இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

127—

குடும்ப அட்டைகள் வழங்குதல்.

வினா எண். 775—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கட்டுப்பாட்டுப் பொருள் வாங்குவதற்கான அட்டை வழங்கப்படாமல் விடுபட்டவர்கள் அதனைப் பெறுவதற்கான நடைமுறையை எளிமையாக்கித் தர அரசு ஏதேனும் வழி செய்துள்ளதா?

விடை—

தக்க சான்றுகளுடனும் உண்மையான விவரங்களுடனும் பெறப்படும் புதிய குடும்ப அட்டைகளுக்கான மனுக்களை தீவிர விசாரணை செய்து உடனுக்குடன் புதிய குடும்ப அட்டைகள் வழங்க அனைத்து அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

128—

கே. வி. கே. அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான இடம் ஆக்கிரமிப்பு.

வினா எண் 862—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பு. புளியம்பட்டி, கே.வி.கே. அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான இடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

129—

அய்யனார் குளம் கிராமத்திற்கு நகரப் பேருந்து

வினா எண் 903—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதி, அய்யனார் குளம் கிராமத்திற்கு விடப்பட்ட ஒரு டவுன் பஸ் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அங்கு பஸ் விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆலங்குளம் அய்யனார்குளம் தடத்தில் இயக்கப்பட்ட நகரப் பேருந்து 14–12–1988 முதல் 16–2–1989 வரை சாலை சீரமைக்கும் வேலை நடைபெற்றதின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. சாலை சீரமைக்கப்பட்ட பின் 17—2—1989 முதல் மீண்டும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

130—

அத்தாணி தண்ணீர் பள்ளம் நீர்த்தேக்கத்தின் கரையை உயர்த்தி பாசன வசதி செய்து தரும் செயற்குறிப்பு.

வினா எண். 934—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியிலுள்ள தண்ணீர் பள்ளம் திட்டத்தில் அத்தாணி தண்ணீர் பள்ளம் நீர்த்தேக்கத்தின் கரையை இன்னும் 9 அடி உயர்த்தி பாசன வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1990 ஆகஸ்டு 22]

131—

பழந்தமிழ் இலக்கியங்கள் மற்றும் காப்பியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடும் திட்டம்

வினா எண். 1114—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழந்தமிழ் இலக்கியங்கள் மற்றும் காப்பியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்கோவையார், பெரியபுராணம், பாரதியாரின் பாடல்கள், கம்பராமாயணம், சங்கவிலக்கியங்கள், சரசுவதி மகால் ஓலைச் சுவடிகள், சித்தர் பாடல்கள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

132—

எண்ணூர் அருகே ஒரு துணைத் துறைமுகம் அமைக்கும் திட்டம்.

வினா எண். 1115.—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்குத் தேவையான கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய எண்ணூர் அருகே தனியாக ஒரு துணைத்துறைமுகம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) எண்ணூரில் துணைத் துறைமுகம் அமைக்கும் திட்டம் சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இது குறித்த விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆய்வு அந்த துறைமுகக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

133—

சூரிய ஒளி, மின்னல், கடல் அலைகள் மூலம் மின் உற்பத்தி.

வினா எண். 1198.—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சூரிய ஒளி, மின்னல், கடல் அலைகள் ஆகியவை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

134—

ஐ. ஆர். டி. பி. கடன் வழங்கியதில் தவறு.

வினா எண். 1206—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியம் பெரிய வெளிக்காடு கிராமத்தில் ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்கியதில் தவறு நடந்துள்ளதாக புகார் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

135—

தமிழகத்தில் உள்ள அனைத்து உயர்நிலைப்பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டித்தர உலக வங்கியிடம் கடன்.

வினா எண். 1232— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டித்தர உலக வங்கியிடம் கடன் கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை கோரப்பட்டுள்ளது?

(இ) தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்கள் எழவில்லை.

136—

கோவை மத்திய சிறை வளாகத்துக்குள் குழந்தைகள் திரையரங்கு கட்டுதல்

வினா எண். 1243 — திரு. கே. ரமணி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை மாநகரத்தில் மத்திய சிறை வளாகத்துக்குள் குழந்தைகள் திரையரங்கு கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

கோவை மாநகரத்தில் மத்திய சிறை வளாகத்திற்குள் குழந்தைகள் கலை அரங்கம் கட்டுவதற்குப் பதிலாக கோவை நகரின் மையப் பகுதியில் டாக்டர் நஞ்சப்பா சாலையை ஒட்டியும், நேரு விளையாட்டுத் திடலை அடுத்தும் அமைந்துள்ள சுமார் 1.5 ஏக்கர் நிலத்தில் குழந்தைகள் கலை அரங்கம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

137—

விருகம்பாக்கம் ஆதிதிராவிடர் நலப்பள்ளியை வேறு இடத்தில் மாற்றி அமைத்தல்

வினா எண். 1259 — திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், விருகம்பாக்கம் ஆதிதிராவிடர் நலப்பள்ளியை வேறு இடத்தில் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், விருகம்பாக்கம் ஆதி திராவிடர் நலப்பள்ளியை வேறு இடத்தில் மாற்றி அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

138—

செய்யூர் அரசு பொது மருத்துவமனையில் 'போஸ்ட் மார்டம்' செய்ய வசதி

வினா எண். 1270—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், செய்யூர் அரசு பொது மருத்துவமனையில் 'போஸ்ட் மார்டம்' செய்ய வசதி யில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) போஸ்ட் மார்டம் செய்ய வசதிகள் உள்ளன.

(ஆ) இக்கேள்வி எழாது.

139—

தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் அனைத்துப் பணியாளர் களையும் நிரந்தரமாக்குதல்

வினா எண். 1343—திருமதி பாப்பா உமாநாத் :
திரு. உ. ரா. வரதராசன் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகின்ற அனைத்துப் பணியாளர்களையும் நிரந்தரம் செய்து மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு இணையான சம்பளம் மற்றும் சலுகைகள் அனைத்தும் வழங்க ஏதேனும் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

140—

மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல்

வினா எண். 1382—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் கோபி நகராட்சி எல்லைக்குள் உள்ள ஈரோடு சந்தி நெடுஞ்சாலைத்துறை இரு புறமும் மழை நீர் வடிகால் கட்டவும், சிறுபாலங்கள் அமைக்கவும் அரசுக்குல பரிந்துரைகள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

141—

ஓணான் ஊத்துத் திட்டம்

வினா எண். 1416—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, ஐம்புத்துறை கோட்டை கிராமம் அருகில் உள்ள ஓணான் ஊத்துத் திட்டம் எப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது?

(ஆ) இதுவரை இவ்வேலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

விடை—

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, ஐம்புத்துறை கோட்டை கிராமம் அருகில் ஓணான் ஊத்துத் திட்டத்திற்கு ரூ. 3.30 இலட்சத்தில் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 15—3—1989-ல் நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலும், நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையும் கிடைக்கப் பெற்றவுடன் திட்டம் பரிசீலிக்கப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

142—

பேய்க்காட்டுக் கண்மாய்க்கு தண்ணீர் விடும் செயற் குறிப்பு

வினா எண். 1427—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, ஐம்புத்துறைக் கோட்டை கிராமம், ஊத்துப்பட்டி அருகில் சிறுமலையிலிருந்து வரும் நீரைத் தடுத்து பேய்க்காட்டுக் கண்மாய்க்கு தண்ணீர் விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

143—

விருத்தாசலம் அரசு மருத்துவமனை

வினா எண். 1672—திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விருத்தாசலம் நகராட்சி எல்லையில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை, கட்டிடம் மற்றும் புதிய நவீன சிகிச்சை வசதிகள் இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

விடை—

(அ) அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

(ஆ) இவி எழாது.

144—

செங்கற்பட்டு—மாமல்லபுரம் சாலை

வினா எண். 1711—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கற்பட்டிலிருந்து மாமல்லபுரம் போகும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

145—

மயிலாடுதுறை அரசு மருத்துமனை.

வினா எண். 2371—திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மயிலாடுதுறை அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள தொழுநோய் வார்டை, மகப்பேறு மருத்துவ வார்டாக மாற்றி அமைக்கவும். தொழுநோய்க்கான வார்டை அரசு மருத்துவ மனைக்கு வெளியில் உள்ள புறம்போக்கு நிலத்தில் தனியாக அமைக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

இது போன்ற திட்டம் எதுவும் இல்லை.

146—

மேம்பாலம் கட்டுதல்.

வினா எண். 2460—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலூர்—சித்தூர் சாலையில் கலசப்பாக்கம் அருகில் செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் வேலை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

147—

நகரப் பேருந்து விடுதல்

வினா எண். 3072—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திலிருந்து பதூர்-வடமட்டம் வழியாக பரவாக்கரை வரையில் நகரப் பேருந்து விட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

148—

நகரப் பேருந்து விடுதல்

வினா எண். 3073.—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திலிருந்து ஆடுதுறை, கோமல் வழியாக மங்கநல்லூர் வரையில் நகரப் பேருந்து விட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்

(அ) பட்டதாரி அல்லாத குடும்பத்தவர்களைச் சார்ந்த மாணவர்களுக்கு ஐந்து மதிப்பெண்கள் வழங்கும் திட்டம் பற்றி 21—8—1990 ஆம் நாளன்று அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு மாறாக தொலைக்காட்சி செய்தியில் கூறியுள்ளது குறித்தும். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் அவையில் எடுத்து வைக்கப்பெற்ற கருத்துக்களை முழுமையாக செய்தித்தாள்கள் வெளியிடாதது குறித்தும்.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் விவாதத்தில் கலந்து கொள்ளும் போது நான் 'ஐந்து மார்க் திட்டத்தை' எதிர்க்கவில்லை என்று சொன்னேன்..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. எச். பாண்டியன் தொடர்ந்து பேசலாமே.

திரு. பி. எச். பாண்டியன் : நேற்றையதினம் விவாதத்தில் கலந்துகொள்ளும்போது 'ஐந்து மார்க் திட்டத்தை' நான் எதிர்க்கவில்லை; என்னுடைய கருத்தை நான் இங்கே வலியுறுத்திப் பேசினேன். நான் பேசியவைகளை எல்லாம் முழுமையாக வெளியிடாவிட்டாலும் பேசிய மற்றக் கருத்துக்களை பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் பேசிய கருத்துக்களை வெளியிடாமல் தொலைக்காட்சி நேற்றையதினம் பி. எச். பாண்டியன் எதிர்ப்புத் தெரிவித்தார் என்று மொட்டையாக ஒரே வார்த்தையில் தெரிவித்து இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், டி.வி.-யிடம் விளக்கம் கேட்டு, திருத்திக்கொள்ள வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் பேசும்பொழுது அந்தக் கருத்துக்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளி வரவில்லை. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவரவில்லை. சில பத்திரிகைகள் அதை இருட்டடிப்பு செய்து இருக்கின்றன என்பதையும் வேதனையோடு தெரிவித்துக் கொள்கின்றேன். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் எடுத்து வைக்கக்கூடிய கருத்துக்களை நம்முடைய நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் அதைப் பிரசுரிக்காத பத்திரிக்கைகளிடம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் கூறிய கருத்தினை ஏற்று, இந்த அவையில் அவர் பேசியதற்கு மாறாக வெளியிட்ட செய்திகள்

தொடர்பாக தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாட்களுக்கு எழுதி, விவரம் கேட்டு அதற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை இந்த அவையில் அறிவிக்கின்றேன்.

[ஆ] வாயைத் துணியால் கட்டிக்கொண்டு அவைக்கு அ.இ. அ. தி. மு.க உறுப்பினர்கள் வந்திருப்பது குறித்து.

திரு. ஓய். வெங்கடேஸ்வரதீட்சிதர் : பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி நேரம் முடிந்ததும் இங்கே சில உறுப்பினர்கள் (வாயைக் கைக்குட்டையால் கட்டிக்கொண்டு அவைக்கு வந்திருக்கும் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைச் சுட்டிக்காட்டி) ஜைன மதத்தினராக ஆகி விட்டனரா என்று தெரியவில்லை. ஜைன மதத்தினர் தான் வாயை மூடிக்கொண்டு வருவார்கள். ஆனால் இப்போது இவர்கள் எல்லாம் மதம் மாறிவிட்டார்களா அல்லது கட்சி மாறிவிட்டார்களா என்பது தான் கேள்வி. இவர்கள் இப்படிச் செய்வது கட்சி மாறியதற்காகவா அல்லது மதம் மாறியதற்காகவா? அதற்குப் பதில் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல 'Point of order'. யாரும் காதுகளை மூடிக்கொள்ளவில்லை என்று நம்புகிறேன்.

[இ] தாதர் எக்ஸ்பிரஸ் இரயிலில் பயணம் செய்த 3 பெண்களைச் சிலர் கற்பழித்துள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் இரயிலில் சென்ற 3 பெண்கள், எட்டு குண்டர்களால் கற்பழிக்கப்பட்டு இருக்கக் கூடிய கோரமான நிகழ்ச்சி சம்பந்தமாக முதல்வர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவந்து, அதற்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆகஸ்ட் 17, வெள்ளிக்கிழமையன்று கேரளா எர்ணாகுளத்தைச் சேர்ந்த 3 பெண்களிடம், 8 பேர் கொண்ட சமூகவிரோதக்கும்பல் சென்னைக்கும் அரக்கோணத்துக்கும் இடையே இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக குண்டக்கல்லுக்குச் செல்லக்கூடிய பெட்டியாக இருந்ததனால் கூட்டம் குறைவாக இருந்ததாகவும், அந்த கம்பார்ட்மெண்ட்டில் ஆண்களை விட பெண்கள் அதிகம் இருந்ததாகவும் அந்த நேரத்தில் இரயில் புறப்பட்டவுடன் அந்த 8 குண்டர்களும் அந்த வண்டியிலே ஏறி அந்தப் பெண்களை மற்றப் பெண்களுக்கு முன்னால் பகிரங்கமாக பட்டப் பகலில் கற்பழித்து இருக்கக்கூடிய ஒரு அநாகரீகமான செயல் நடந்து இருக்கிறது என்பதை நான் வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தொடர்பாக தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாட்களுக்கு எழுதி, விவரம் கேட்டு அதற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை இந்த அவையில் அறிவிக்கின்றேன்.

[ஆ] வாயைத் துணியால் கட்டிக்கொண்டு அவைக்கு அ.இ. அ. தி. மு.க உறுப்பினர்கள் வந்திருப்பது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வரதீட்சிதர் : பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி நேரம் முடிந்ததும் இங்கே சில உறுப்பினர்கள் (வாயைக் கைக்குட்டையால் கட்டிக்கொண்டு அவைக்கு வந்திருக்கும் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைச் சுட்டிக்காட்டி) ஜைன மதத்தினராக ஆகி விட்டனரா என்று தெரியவில்லை. ஜைன மதத்தினர் தான் வாயை மூடிக்கொண்டு வருவார்கள். ஆனால் இப்போது இவர்கள் எல்லாம் மதம் மாறிவிட்டார்களா அல்லது கட்சி மாறிவிட்டார்களா என்பது தான் கேள்வி. இவர்கள் இப்படிச் செய்வது கட்சி மாறியதற்காகவா அல்லது மதம் மாறியதற்காகவா? அதற்குப் பதில் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல 'Point of order'. யாரும் காதுகளை மூடிக்கொள்ளவில்லை என்று நம்புகிறேன்.

[இ] தாதர் எக்ஸ்பிரஸ் இரயிலில் பயணம் செய்த 3 பெண்களைச் சிலர் கற்பழித்துள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் இரயிலில் சென்ற 3 பெண்கள், எட்டு குண்டர்களால் கற்பழிக்கப்பட்டு இருக்கக்கூடிய கோரமான நிகழ்ச்சி சம்பந்தமாக முதல்வர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவந்து, அதற்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆகஸ்ட் 17, வெள்ளிக்கிழமையன்று கேரளா எர்ணாகுளத்தைச் சேர்ந்த 3 பெண்களிடம், 8 பேர் கொண்ட சமூகவிரோதக்கும்பல் சென்னைக்கும் அரக்கோணத்துக்கும் இடையே இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக குண்டக்கல்லுக்குச் செல்லக்கூடிய பெட்டியாக இருந்ததனால் கூட்டம் குறைவாக இருந்ததாகவும், அந்த கம்பார்ட்மெண்ட்டில் ஆண்களை விட பெண்கள் அதிகம் இருந்ததாகவும் அந்த நேரத்தில் இரயில் புறப்பட்டவுடன் அந்த 8 குண்டர்களும் அந்த வண்டியிலே ஏறி அந்தப் பெண்களை மற்றப் பெண்களுக்கு முன்னால் பகிரங்கமாக பட்டப் பகலில் கற்பழித்து இருக்கக்கூடிய ஒரு அநாகரீகமான செயல் நடந்து இருக்கிறது என்பதை நான் வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தொடர்பாக தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாட்களுக்கு எழுதி, விவரம் கேட்டு அதற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை இந்த அவையில் அறிவிக்கின்றேன்.

[ஆ] வாயைத் துணியால் கட்டிக்கொண்டு அவைக்கு அ.இ. அ. தி. மு.க உறுப்பினர்கள் வந்திருப்பது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வரதீட்சிதர் : பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி நேரம் முடிந்ததும் இங்கே சில உறுப்பினர்கள் (வாயைக் கைக்குட்டையால் கட்டிக்கொண்டு அவைக்கு வந்திருக்கும் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைச் சுட்டிக்காட்டி) ஜைன மதத்தினராக ஆகி விட்டனரா என்று தெரியவில்லை. ஜைன மதத்தினர் தான் வாயை மூடிக்கொண்டு வருவார்கள். ஆனால் இப்போது இவர்கள் எல்லாம் மதம் மாறிவிட்டார்களா அல்லது கட்சி மாறிவிட்டார்களா என்பது தான் கேள்வி. இவர்கள் இப்படிச் செய்வது கட்சி மாறியதற்காகவா அல்லது மதம் மாறியதற்காகவா? அதற்குப் பதில் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல 'Point of order'. யாரும் காதுகளை மூடிக்கொள்ளவில்லை என்று நம்புகிறேன்.

[இ] தாதர் எக்ஸ்பிரஸ் இரயிலில் பயணம் செய்த 3 பெண்களைச் சிலர் கற்பழித்துள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் இரயிலில் சென்ற 3 பெண்கள், எட்டு குண்டர்களால் கற்பழிக்கப்பட்டு இருக்கக் கூடிய கோரமான நிகழ்ச்சி சம்பந்தமாக முதல்வர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவந்து, அதற்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆகஸ்ட் 17, வெள்ளிக்கிழமையன்று கேரளா எர்ணாகுளத்தைச் சேர்ந்த 3 பெண்களிடம், 8 பேர் கொண்ட சமூகவிரோதக்கும்பல் சென்னைக்கும் அரக்கோணத்துக்கும் இடையே இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக குண்டக்கல்லுக்குச் செல்லக்கூடிய பெட்டியாக இருந்ததனால் கூட்டம் குறைவாக இருந்ததாகவும், அந்த கம்பார்ட்மெண்ட்டில் ஆண்களை விட பெண்கள் அதிகம் இருந்ததாகவும் அந்த நேரத்தில் இரயில் புறப்பட்டவுடன் அந்த 8 குண்டர்களும் அந்த வண்டியிலே ஏறி அந்தப் பெண்களை மற்றப் பெண்களுக்கு முன்னால் பகிரங்கமாக பட்டப் பகலில் கற்பழித்து இருக்கக்கூடிய ஒரு அநாகரீகமான செயல் நடந்து இருக்கிறது என்பதை நான் வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1990 ஆகஸ்டு 22] [திருமதி பாப்பா உமாநாத்]

10-05 மணி.

இந்த நேரத்தில் கடப்பை மாவட்டம் நுகர்வோர் கூட்டுறவு சங்க உறுப்பினரான திரு. இராமச்சந்திரன் என்பவர் அந்தப் பெட்டியில் இருந்துள்ளார். அவர் பேட்டியும் தந்து இருக்கிறார். குண்டர்களைத் தடுத்தபோது அவரும் தாக்கப்பட்டிருக்கிறார். மற்ற பலரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவமானத்திற்கு அஞ்சி அந்தப் பெண்கள் புகார் செய்ய விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய சமுதாய சூழ்நிலையில் அது இயற்கைதான். அதற்காக சம்பவமே நடக்கவில்லை என்று காவல் துறை கைவிரிப்பது பரிகாரமாகாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெண்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தையும், எழுச்சியையும் இது ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும், இரயிலில் பயணம் செய்வதற்கே அஞ்சக்கூடிய அளவிற்கு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பதையும் அரசுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்து, இது விஷயமாக விசாரணை நடத்தி உண்மை நிலையை அறிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராமச்சந்திர ரெட்டி சாட்சியம் அளிக்கத் தயாராக இருப்பதாக எங்களுடைய ஆந்திரா மாநில மாதர் சங்க அமைப்போடு தொடர்பு கொண்டபோது தெரிகிறது. மற்றும் பலரும் தயாராக இருப்பார்கள் என்று தெரிகிறது. ஆகவே இந்தச் சம்பவத்தைப்பற்றி பொது விசாரணை நடத்த முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன இந்தப் புகார் குறித்து காவல் துறையினர் விசாரித்த அளவில், அன்றையதினம் இரயிலில் எந்தப் பெட்டியும் காலியாக அல்லது நான்கைந்து பயணிகளோடு சென்றதாகத் தகவல் இல்லை. ஒவ்வொரு பெட்டியிலும் பயணிகள் நிரம்பி வழிந்தார்கள் என்றும், எனவே இந்தப் புகாருக்கு ஆதாரம் இல்லையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மையார் குறிப்பிட்டதைப் போல நான் அந்தக் கூற்றை அப்படியே நம்பி அவர்கள் எடுத்து வைத்த இந்தக் கருத்தை அலட்சியப்படுத்திட எண்ணிடவில்லை. ஆனால் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர், கண்டதாகச் சொன்ன ஒருவரிடத்திலே விசாரித்தபோது மேற்கொண்டு அவர் சொல்வதற்கு மறுத்துவிட்டார் என்ற தகவல் வந்திருக்கிறது. இது குறித்து ஆந்திர மாநிலத்தில் விசாரணை நடைபெற்று வருவதாகத் தகவல் வந்திருக்கிறது. தமிழக அரசு சார்பிலும் இரயில்வே துறையோடு தொடர்பு கொண்டு அந்தப் பெட்டியில் எத்தனை பேர் பயணம்

செய்தார்கள், இது போன்ற சம்பவம் பலர் மத்தியில் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் உண்டா என்பதைப் பற்றியெல்லாம் அரசு அறிந்து, முடிந்தால் அவைக்கு, இல்லாவிட்டால் நாட்டுக்குக்கூறும்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டிருந்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையில் உட்கார வேண்டும். இதுபோல நின்று கொண்டிருப்பது அவையின் மரபுக்கு முரணானது மட்டுமல்ல; அவையின் நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பதாகும். ஆகவே, அனைவரும் உட்கார வேண்டும். அப்படி உட்காராவிட்டால், மூன்றாவது நாள் இதுபோன்று நடைபெறுகிறது என்ற முறையில் நடவடிக்கை கடுமையாக எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) அனைவரும் உட்காருவார்கள் என்று நம்புகிறேன். அனைவரும் உட்காருமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) அனைவரும் உட்கார வேண்டுமென்று கட்டளையிடுகிறேன். இப்போது அனைவரும் உட்காராத காரணத்தால் அனைவரையும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் மேசைமீது சில தாள்களை வைத்து விட்டுப் பேரவையினின்றும் வெளியேறினர்.)

(ஈ) உறுப்பினர்களுடைய சில இருக்கைகள் மாற்றம் செய்யப்பெற்றுள்ளது. தொடர்பாக 20—8—1990 ஆம் நாளன்று தலைவர் அளித்துள்ள தீர்ப்பு குறித்தும் சில உறுப்பினர்கள் அவைக்கு வந்து சுதந்திரமாகச் செயல்பட முடியாமல் அடைத்து வைக்கப் பெற்றுள்ளதாகக் கூறப்படுவது குறித்தும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள். இதிலே திரு. திருநாவுக்கரசு பேசுவதற்கு இடமே கிடையாது. (குறுக்கீடுகள்) அனைவரும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்) யாருடைய பேச்சும் பதிவேட்டில் ஏறாது. அனைவரும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். அல்லது என்னுடைய கட்டளைக்கு உட்பட்டு முதலில் உட்காருங்கள். திரு. திருநாவுக்கரசு.

செய்தார்கள், இது போன்ற சம்பவம் பலர் மத்தியில் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் உண்டா என்பதைப் பற்றியெல்லாம் அரசு அறிந்து , முடிந்தால் அவைக்கு, இல்லாவிட்டால் நாட்டுக்குக்கூறும்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டிருந்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையில் உட்கார வேண்டும். இதுபோல நின்று கொண்டிருப்பது அவையின் மரபுக்கு முரணானது மட்டுமல்ல; அவையின் நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பதாகும். ஆகவே, அனைவரும் உட்கார வேண்டும். அப்படி உட்காராவிட்டால், மூன்றாவது நாள் இதுபோன்று நடைபெறுகிறது என்ற முறையில் நடவடிக்கை கடுமையாக எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) அனைவரும் உட்காருவார்கள் என்று நம்புகிறேன். அனைவரும் உட்காருமாறு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) அனைவரும் உட்கார வேண்டுமென்று கட்டளையிடுகிறேன். இப்போது அனைவரும் உட்காராத காரணத்தால் அனைவரையும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் மேசைமீது சில தாள்களை வைத்து விட்டுப் பேரவையினின்றும் வெளியேறினர்.)

(ஈ) உறுப்பினர்களுடைய சில இருக்கைகள் மாற்றம் செய்யப்பெற்றுள்ளது. தொடர்பாக 20—8—1990 ஆம் நாளன்று தலைவர் அளித்துள்ள தீர்ப்பு குறித்தும் சில உறுப்பினர்கள் அவைக்கு வந்து சுதந்திரமாகச் செயல்பட முடியாமல் அடைத்து வைக்கப் பெற்றுள்ளதாகக் கூறப்படுவது குறித்தும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள். இதிலே திரு. திருநாவுக்கரசு பேசுவதற்கு இடமே கிடையாது. (குறுக்கீடுகள்) அனைவரும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்) யாருடைய பேச்சும் பதிவேட்டில் ஏறாது. அனைவரும் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். அல்லது என்னுடைய கட்டளைக்கு உட்பட்டு முதலில் உட்காருங்கள். திரு. திருநாவுக்கரசு.

1990 ஆகஸ்டு 22]

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களில் பலபேர், எங்களுக்கு ஆதரவு தந்து கொண்டிருக்கிற பலபேர், செல்வி ஜெயலலிதா அவர்களால் கடத்திச் செல்லப்பட்டு, பல இடங்களிலே அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். சட்டமன்றம் நடக்கும் நேரத்திலே கூட அவர்களால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. எனவே, அவர்களையெல்லாம் சபாநாயகர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்பத்தை உணர்ந்து, அந்த சட்டமன்ற உறுப்பினர்களில் பலபேரை மீட்டுத் தர வேண்டுமென்று, நாங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கேட்டுக்கொள்ளுகிறோம். அது போல, செல்வி ஜெயலலிதா பிரிவிலே இருக்கிற சில சட்டமன்ற உறுப்பினர்களும், எங்களுக்குச் சாதகமாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இன்னும் அங்கே பிடித்துக்கொண்டு போய், சிறை வைக்கப்பட்டதைப் போல வைக்கப்பட்டு, சில சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுப் பிரச்சினையில் பேசக் கூடாது, திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துப் பேசக் கூடாது, இந்த ஆட்சியை விமர்சிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று வெளியேற்றப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இந்த வளாகத்திற்குள்ளே இருக்கக் கூடாது என்பது மட்டுமல்ல, விதிமுறைகளின்படி கூட இரண்டு முறை வெளியேற்றப்பட்டால், பிறகு அந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவர்கள் வர இயலாது. எனவே, இந்தக் கூட்டத் தொடர் முடியும் வரை அவர்களை வெளியேற்றுமாறு கட்டளையிடுகிறேன்.

10-10 மணி

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுப் பிரச்சினைகளில் பொது மக்களை பாதிக்கிற எத்தனையோ பிரச்சினைகள் இருக்கிறபோது—இன்று கூட பத்திரிகைகளில் ஆட்டோ சங்கர் விவகாரம் எல்லாம் வந்திருக்கிறது. அவர் தப்பிச் சென்ற காரணத்தால் தமிழகத்தில் பதட்டநிலை மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. இப்படி பல பிரச்சினைகளைப் பேசாமல் இருக்க வேண்டும், தி.மு.க. அரசுக்கு சாதகமாக நடந்து கொள்ள வேண்டும் என்று, ஏற்கெனவே தி.மு.க. அரசுக்கு சாதகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற செல்வி ஜெயலலிதா அவர்கள், தன் கூட இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களை வாயைக் கட்டி, இங்கே சட்டசபைக்கு அனுப்பி இருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரிகிறது. எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் தினமும் சட்டமன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்று,

பொதுப் பிரச்சினைகளில் ஈடுபாடு கொள்ள, கலந்து பேச நாங்கள் விரும்புகிறோம். எங்கள் கருத்துக்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எடுத்து வைக்க விரும்புகிறோம். ஆனாலும், உயர்நீதிமன்றம் எங்களை எல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே உறுப்பினர்களாகப் பணியாற்ற, பழைய நிலையிலே பணியாற்ற அனுமதித்து இருக்கிறது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தச் செய்திக்குப் போக வேண்டாம். இப்போது பேசிய வரைக்கும் சரி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : முக்கியமான பிரச்சினையே அதுதான். நீங்கள் எங்கள் இடத்தை மாற்றி இருக்கிறீர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, அந்தச் செய்திக்குப் போகக் கூடாது நான் ஏற்கெனவே தீர்ப்பு அளித்தது தொடர்பாகப் பேசினால், நான் வெளியேற்ற வேண்டி நேரிடும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, உங்கள் முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறோம். ஏற்கெனவே ஒதுக்கிய இடத்தை எங்களுக்கு ஒதுக்கித் தர வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களை இந்த நேரத் தில் கேட்டுக் கொள்கிறோம். எனவே, நாங்கள் உட்காருகிற அந்த இடத்தில் உட்கார வேண்டும். துணைத் தலைவர், கொறடா இடத்தை நீங்கள் மாற்றி இருக்கிறீர்கள். உயர்நீதி மன்றத் தீர்ப்பிற்குப் பின்னாலும் மாற்றி இருக்கிறீர்கள். எனவே, அந்த இடத்தை எங்களுக்கு மீண்டும் ஒதுக்கித் தருமாறு, பேர வைத் தலைவர் அவர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைஆறின்படி, பேரவைத் தலைவர் வகுத்த வரிசையின்படி அமர வேண்டும். இப்போது நீங்கள் அமர வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, உயர் நீதிமன்ற ஆணை இருக்கிற காரணத்தால், நீங்கள் முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப் பிறகு இந்த சட்டமன்றத்திலே பேரவைத் தலைவருடைய ஆணை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இருந்தாலும் கூட நாங்கள். .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் எல்லாம் இல்லை. பேரவைத் தலைவருடைய ஆணை. அதுதான் ஆறாவது விதி. அதுதான் கடைசி விதி, கடைசி ஆணை. அதற்குக் கட்டுப்பட்டால் நீங்கள் உட்காரலாம். (குறுக்கீடு) இல்லையென்றால் வெளியேற்ற வேண்டி இருக்கும். (குறுக்கீடு) இனிமேல் அதுபற்றிப் பேசினால் வெளியேற்றி விடுவேன்...

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றி திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். உயர்நீதிமன்றத் தீர்ப்பு அவர்கள் உறுப்பினர்களாக நீடிக்கலாம் என்பதுதான். ஆனால் ஜெயலலிதா அவர்களால் அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளர் என்கிறமுறையில் அவர்களுடைய எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் தலைவர், துணைத் தலைவர், கொறடா என்கிற வரிசையில் துணைத் தலைவர், கொறடா, செயலாளர் இவர்கள் எல்லாம் மாற்றப்பட்டு இருக்கிறார்கள். தாங்கள் அந்தக் கட்சி எடுத்த முடிவின்படி அந்தப் பதவிகளை மாற்றி அவர்களுக்கு இடம் தந்திருக்கிறீர்கள். நீதிமன்றத்தினுடைய முடிவின்படி அவர்களை உறுப்பினர்களாக அனுமதித்து இருக்கிறீர்கள். இந்த இரு நிலையையும் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் போது தேவையில்லாமல் வீணாகப் பேசி அவையினுடைய நேரத்தை வீணாக்குவது நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநாவுக்கரசு அவர்கள் இது தொடர்பாகப் பேச அனுமதிக்க மாட்டேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் பேசினால் அனுமதிக்க மாட்டேன். திருநாவுக்கரசு அவர்கள் ஒலிவாங்கி இயங்காது. உட்கார வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு). உட்கார வேண்டுமென்று கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு). அடுத்து வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) வெளியேறவில்லை என்றால் நான் காவலர்களை அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு). வெளியேறவில்லை என்றால் காவலர்களை அழைத்து வெளியேற்ற வேண்டியிருக்கும். (குறுக்கீடு). மார்ஷல் இவர்களை வெளியேற்றலாம். அவர்களே வந்து விடுவார்கள். ஏனென்றால் நேற்று குமரி அனந்தன் அவர்கள் சொன்னது எல்லோருக்கும் காதில் விழுந்து இருக்கும். அவர்களே மரியாதையோடு வந்து விடுவார்கள்.

(திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த், வெ. இராசு, கொ. மாதப்பன், ஆர். மூக்கன், திருமதி. பி. லட்சுமி ஆகியவர்களைப் பேரவையினின்றும் பேரவைக் காவலர்கள் அழைத்துச் சென்றனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியேற்றப் பட்ட அனைத்து உறுப்பினர்களும் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடியும் வரையில் இந்த அவை நடவடிக்கையில் கலந்து கொள்ள முடியாது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்கனவே கேள்வி நேரத்தை அனுமதித்ததைப் பற்றி சொல்கிற போது, உங்களுடைய யுக்தானுசாரம் என்று சொல்கிற விருப்பத்திற்கேற்ப ''may'' என்று வருகிற காரணத்தால், கேள்வியை அனுமதித்ததோடு, செவிச் செல்வம் என்று சொல்கிற ஒன்றையும் சொன்னீர்கள். இங்கே இன்று செவிகள் அடைக்கப்பட வில்லை, என்பதையும் நீங்களே குறிப்பிட்டுக் காட்டினீர்கள். எனவே, இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு ''....The Speaker may direct any Member....'' என்று இருக்கிற காரணத்தால் உங்களுடைய யுக்தானுசாரம் என்று சொல்கிற உங்களுடைய விருப்பத்திற்கேற்ப அவர்களை முழுவதுமாக இந்த செஷனில் வெளியே அனுப்புவதற்கு பதிலாக, தங்கள் கடுமையைக் கொஞ்சம் குறைத்து, நாளைக்கும் அவர்கள் வருவதற்கு, மீதி நாட்களில் அவர்கள் வந்து கலந்து கொள்வதற்கு தாங்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீதி நாட்கள் அல்ல, மீதி நாள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி நாளையோடு இந்தக் கூட்டத் தொடர் முடிவடைகிறது—நாளையுடன். அதற்குப் பிறகு தொடர்வதைப் பற்றிப் பிறகு முடிவு எடுக்கப்படவிருக்கிறது. நாளைக்கு இப்படி ஒரு கால் மணி நேரம், அரை மணி நேரம் இந்த அவை வீணாவதை நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் நிச்சயமாக மனமார விரும்ப மாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

10-15 மணி

நாளைக்கும் இதேதான் நடக்கும். நடக்காது என்று அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களேயானால்-- ஏனென்றால், அவர்களுக்காக உத்தரவாதம் அளிக்கக் கூடிய பொறுப்பு அவர்களுக்கு இருப்பதாக நான் கருதுகிறேன்-- இப்படி நடக்காது என்று உத்தரவாதம் அளிப்பார்களேயானால், தாங்கள் தயவு செய்து, அந்த 2 நாள் என்பதை ஒரு நாள் என்று குறைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன், வேறு ஒன்றும் இல்லை. ஒரே ஒரு உத்தரவாதம் தான்.

திரு. குமரி அனந்தன் : வேண்டுகோள், நான் விட்டது. உத்தரவு, அவர்களுடைய வாதத்தைப் பொறுத்து நீங்கள் செய்ய வேண்டியது. அதுதான் உத்தரவாதம். அதைத் தவிர நான் விடுத்தது வேண்டுகோள் மட்டும்தான்.

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் தங்களுடைய வேண்டுகோளை மற்றவர்களும் ஏற்றுச் செயல்படும் அளவிற்கு நீங்கள் ஒரு முயற்சி செய்து பார்க்கலாம். ஏற்கனவே அப்படி ஒரு தடவை முயற்சி செய்து நீங்கள் வெற்றியோடு திரும்பி வந்தது நினைவு இருக்கும் என்று நம்புகிறேன்.

(உ) ஒரு கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அவைக்கு வந்து சுதந்திரமாகச் செயல்பட முடியாது அடைத்து வைக்கப் பட்டிருப்பதாக ஓர் உறுப்பினர் தெரிவித்துள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்சினையைப் பற்றி இங்கே எழுப்ப விரும்புகிறேன். அதுவும் ஒரு பெரிய குற்றச்சாட்டாக இங்கே வந்து இருக்கிறது. எனவே அதை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இந்த அவையைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் எங்கோ மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய சுதந்திரம் கட்டுப்படுத்தப் பட்டு இருக்கிறது என்று, ஒரு குற்றச்சாட்டு இந்த அவையிலே எழுப்பப்பட்டு இருக்கிறது. அவை நடந்து கொண்டிருக்கும் போது உறுப்பினர்கள் சில பேர்கள் அவைக்கு வராமல் தடுக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது ஜனநாயகத்திற்கு விடப்பட்டு இருக்கிற சவால் மட்டுமல்ல. அதிலே தாங்கள் கவனம் செலுத்த வேண்டிய மிகப் பெரிய கடப்பாடு இருக்கிறது. சாதாரணமாக, சாதாரண நிலையில் கூட பொதுச் சட்டத்திலே சில மெம்பர்கள் கைது செய்யப்பட்டாலும், உடனடியாக அந்தத் துறையினர் சபாநாயகருக்கு, இன்னின்னார்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள், இங்கே வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவிப்பது ஒரு மரபாகும். சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கும் போது, உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாட முடியாமல், ஒரு இடத்தில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று அவையிலே, அவை உறுப்பினர் ஒருவர் தங்களிடத்திலே முறையிடும் போது, அதைப் பற்றி, அவர்கள் எங்கிருக்கிறார்கள், யாரால் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள், எதற்காக அடைக்கப் பட்டு இருக்கிறார்கள், அவர்கள் இந்தச் சபைக்கு வர யார் தடை விதித்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் நீங்கள் கண்டு அறிந்து, எந்தெந்தத் துறையை நீங்கள் உதவிகரமாகக் கோர வேண்டுமோ, அதை முதலமைச்சரிடத்திலே கோரி, அதனுடைய விவரங்களை எல்லாம் இந்த அவைக்கு அளிக்க வேண்டியது தங்களுடைய கடமை. குறிப்பாக சபை நடந்து கொண்டு இருக்கும் போது, சபை உறுப்பினர்கள் மீது இப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு, அல்லது ஒரு தடை அல்லது ஒரு ஆக்கிரமிப்பு அவர்கள் மீது நடத்தப்பட்டு இருப்பது மிகவும், மிகவும் நம்முடைய கவலைக்குரிய ஒன்றாகும். எனவே இதை நான் உரிமைப்

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் தங்களுடைய வேண்டுகோளை மற்றவர்களும் ஏற்றுச் செயல்படும் அளவிற்கு நீங்கள் ஒரு முயற்சி செய்து பார்க்கலாம். ஏற்கனவே அப்படி ஒரு தடவை முயற்சி செய்து நீங்கள் வெற்றியோடு திரும்பி வந்தது நினைவு இருக்கும் என்று நம்புகிறேன்.

(உ) ஒரு கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அவைக்கு வந்து சுதந்திரமாகச் செயல்பட முடியாது அடைத்து வைக்கப் பட்டிருப்ப தாக ஓர் உறுப்பினர் தெரிவித்துள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்சினையைப் பற்றி இங்கே எழுப்ப விரும்பு கிறேன். அதுவும் ஒரு பெரிய குற்றச்சாட்டாக இங்கே வந்து இருக்கிறது. எனவே அதை இந்த அவையினுடைய கவனத் திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இந்த அவையைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் எங்கோ மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய சுதந்திரம் கட்டுப்படுத்தப் பட்டு இருக்கிறது என்று, ஒரு குற்றச்சாட்டு இந்த அவையிலே எழுப்பப்பட்டு இருக்கிறது. அவை நடந்து கொண்டிருக்கும் போது உறுப்பினர்கள் சில பேர்கள் அவைக்கு வராமல் தடுக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது ஜனநாயகத்திற்கு விடப்பட்டு இருக்கிற சவால் மட்டுமல்ல. அதிலே தாங்கள் கவனம் செலுத்த வேண்டிய மிகப் பெரிய கடப்பாடு இருக்கிறது. சாதாரணமாக, சாதாரண நிலையில் கூட பொதுச் சட்டத்திலே சில மெம்பர்கள் கைது செய்யப்பட்டா லும், உடனடியாக அந்தத் துறையினர் சபாநாயகருக்கு, இன் னின்னார்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள், இங்கே வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவிப்பது ஒரு மரபாகும். சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கும் போது, உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாட முடி யாமல், ஒரு இடத்தில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று அவையிலே, அவை உறுப்பினர் ஒருவர் தங்களிடத்திலே முறை யிடும் போது, அதைப் பற்றி, அவர்கள் எங்கிருக்கிறார்கள், யாரால் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள், எதற்காக அடைக்கப் பட்டு இருக்கிறார்கள், அவர்கள் இந்தச் சபைக்கு வர யார் தடை விதித்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் நீங்கள் கண்டு அறிந்து, எந்தெந்தத் துறையை நீங்கள் உதவிகரமாகக் கோர வேண்டுமோ, அதை முதலமைச்சரிடத்திலே கோரி, அதனுடைய விவரங்களை எல்லாம் இந்த அவைக்கு அளிக்க வேண்டியது தங்களுடைய கடமை. குறிப்பாக சபை நடந்து கொண்டு இருக்கும் போது, சபை உறுப்பினர்கள் மீது இப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு, அல்லது ஒரு தடை அல்லது ஒரு ஆக்கிரமிப்பு அவர்கள் மீது நடத்தப்பட்டு இருப்பது மிகவும், மிகவும் நம்மு டைய கவலைக்குரிய ஒன்றாகும். எனவே இதை நான் உரிமைப்

பிரச்சினையாக எழுப்புகிறேன். தலைவர் அவர்களே, தாங்கள் தான் இது குறித்து முடிவு சொல்ல வேண்டும். அந்த உறுப்பினர்கள் சபை முன் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இரண்டு மாறுபட்ட கருத்துக்களை உடையவர்கள் இங்கே ஒருவருக்கொருவர் சொன்ன செய்திகளை வைத்துக்கொண்டு, நாம் அவையிலே அதை ஒரு பிரச்சினையாக தொடர்ந்து எழுப்புகிறபோது, ஒருவர் சொல்கிறார், 'எங்களை முன்னாலே இருந்த இடத்திலே அமர வைத்து இருந்தால், எங்களுக்குப் பிரச்சினை இல்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் உடனே அதற்கு, இன்னின்ன காரணத்தாலே நான் அமர வைக்கவில்லை என்று சொல்கிறீர்கள். ஒருவர் சொல்கிறார், 'ஏற்கனவே இப்படி ஒரு சம்பவம் நடந்த போது, நெகமம் கந்தசாமி, தாமரைக்கனி போன்றவர்களை வேறு இடத்திலே உட்கார வைத்தார்களே, என்று சொல்கிறார்கள். இரண்டு பேர்கள் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்கிற போது, ஒரு தீர்ப்பை அளித்து, நீங்கள் இதற்கு ஒரு முடிவைக் கண்டு இருக்கிறீர்கள். அதற்குப் பிறகு, அதையே நாம் எடுத்துக் கொண்டு இங்கே பேசுவதிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்றவர்கள் சொல்வதைப் போல, இங்கே அதற்கும் மேலே இதை விவாதிக்க வேண்டுமா என்பதையும், அதைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதையும் நான் உங்கள் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் சொல்வது எனக்குத் தெரியும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும், திரு. குமரி அனந்தன் அவர்களும் மற்றவர்களும் சொன்ன செய்திகளை கவனத்தில் கொண்டு, உறுப்பினர்கள் தடுக்கப்பட்டு இருக்கிறார்களா, வேறு ஏதேனும் சிக்கல்களுக்கு ஆளாகி இருக்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டியது, அப்படி ஒரு சூழ்நிலை நேர்ந்தால், பேரவைத் தலைவருடைய பொறுப்பு தான் அது. ஆனால் உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்திருக்கிறார்களா என்று கவனிக்க, வருகைப் பதிவேட்டைக் கவனித்துவிட்டு, நான் கவனிக்க வேண்டும். ஏன் என்றால் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டுப் போய் இருந்திருக்கலாம். எனவே அவற்றை எல்லாம் கவனித்துத் தக்கவாறு முடிவு செய்து பின்னர் அறிவிக்கப்படும்.

(ஊ) குவைத் நாட்டிலுள்ள தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலமாக வளைகுடா நாடுகளிலே குறிப்பாக, குவைத்—ஈராக் தகராறு ஏற்பட்ட உடன் ஏறத்தாழ

பிரச்சினையாக எழுப்புகிறேன். தலைவர் அவர்களே, தாங்கள் தான் இது குறித்து முடிவு சொல்ல வேண்டும். அந்த உறுப்பினர்கள் சபை முன் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இரண்டு மாறுபட்ட கருத்துக்களை உடையவர்கள் இங்கே ஒருவருக்கொருவர் சொன்ன செய்திகளை வைத்துக்கொண்டு, நாம் அவையிலே அதை ஒரு பிரச்சினையாக தொடர்ந்து எழுப்புகிறபோது, ஒருவர் சொல்கிறார், 'எங்களை முன்னாலே இருந்த இடத்திலே அமர வைத்து இருந்தால், எங்களுக்குப் பிரச்சினை இல்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் உடனே அதற்கு, இன்னின்ன காரணத்தாலே நான் அமர வைக்கவில்லை என்று சொல்கிறீர்கள். ஒருவர் சொல்கிறார், 'ஏற்கனவே இப்படி ஒரு சம்பவம் நடந்த போது, நெகமம் கந்தசாமி, தாமரைக்கனி போன்றவர்களை வேறு இடத்திலே உட்கார வைத்தார்களே, என்று சொல்கிறார்கள். இரண்டு பேர்கள் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்கிற போது, ஒரு தீர்ப்பை அளித்து, நீங்கள் இதற்கு ஒரு முடிவைக் கண்டு இருக்கிறீர்கள். அதற்குப் பிறகு, அதையே நாம் எடுத்துக் கொண்டு இங்கே பேசுவதிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்றவர்கள் சொல்வதைப் போல, இங்கே அதற்கும் மேலே இதை விவாதிக்க வேண்டுமா என்பதையும், அதைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதையும் நான் உங்கள் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் சொல்வது எனக்குத் தெரியும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும், திரு. குமரி அனந்தன் அவர்களும் மற்றவர்களும் சொன்ன செய்திகளை கவனத்தில் கொண்டு, உறுப்பினர்கள் தடுக்கப்பட்டு இருக்கிறார்களா, வேறு ஏதேனும் சிக்கல்களுக்கு ஆளாகி இருக்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டியது, அப்படி ஒரு சூழ்நிலை நேர்ந்தால், பேரவைத் தலைவருடைய பொறுப்பு தான் அது. ஆனால் உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்திருக்கிறார்களா என்று கவனிக்க, வருகைப் பதிவேட்டைக் கவனித்துவிட்டு, நான் கவனிக்க வேண்டும். ஏன் என்றால் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டுப் போய் இருந்திருக்கலாம். எனவே அவற்றை எல்லாம் கவனித்துத் தக்கவாறு முடிவு செய்து பின்னர் அறிவிக்கப்படும்.

(ஊ) குவைத் நாட்டிலுள்ள தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலமாக வளைகுடா நாடுகளிலே குறிப்பாக, குவைத்—ஈராக் தகராறு ஏற்பட்ட உடன் ஏறத்தாழ

இந்தியர்கள் 2 லட்சம் பேர்கள் இன்றைக்கு குவைத் நாட்டிலே இருந்து இந்தியாவிற்குத் திரும்பி வர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் குவைத் நாட்டிலே இன்றைக்கு இருந்து கொண்டு, இங்கே தமிழ்நாட்டிற்குத் திரும்பி வர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இதைக் குறித்து மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும் கூட தரை மார்க்கமாக இது வரையிலும் 20 ஆயிரம் பேர்கள் மட்டும்தான் அந்த குவைத் நாட்டினுடைய எல்லையைத் தாண்டி வந்து கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வருகிறது.

10-20 மணி.

தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய, அந்தக் குவைத் நாட்டில் இருக்கக் கூடியவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மிகுந்த கவலைக்கும் மிகுந்த ஒரு பாதிப்புக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் மத்தியில், தமிழக அரசினுடைய சார்பில் மிகப் பெரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையோ என்கின்ற அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பாக இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது எல்லாம், ஏற்கனவே கேரள மாநிலத்தைச் சார்ந்த பல்லாயிரக் கணக்கானவர்கள் அங்கே இருக்கிறார்கள் என்பதை கருத்திற்கொண்டு அங்கே இருக்கக் கூடிய அமைச்சர் மாண்புமிகு டி. கே. அம்சா அவர்கள் குவைத் நாட்டிற்கு அனுப்பப்பட்டார் என்கின்ற செய்தியும் நமக்குக் கிடைக்கிறது. அவரும் சென்று வந்தார், அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார் என்கின்ற செய்தியும் நமக்குக் கிடைத்திருக்கிறது.

அதே போல கர்நாடக மாநில அரசினுடைய சார்பில் அந்த மாநிலத்தைச் சார்ந்த அமைச்சர் மாண்புமிகு யாஹியா அவர்கள் மத்தியில் இருக்கக் கூடிய வெளி உறவுத்துறை அமைச்சகத்தின் மூலமாகவும், மத்திய அமைச்சரவையில், அதை எடுத்துச் சொல்லி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற வகையில், இந்த நேரத்தில் தமிழகத்தினுடைய சார்பில் ஒரு மிகப் பெரிய சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்கின்ற உணர்வு அந்தக் குடும்பத்தினர்கள் மத்தியில், நாட்டில் நிலவுகின்ற காரணத்தால், இந்த அவையிலே, இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, அதற்கு என்ன பரிகாரம், என்ன முயற்சி தமிழக அரசின் சார்பிலே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாதர் எக்ஸ்பிரசில் நடந்த கற்பழிப்பு சம்பந்தமாக நான் தலைவரிடத்திலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். அதே நேரத்தில் மற்றவர்கள் பேசுகின்றபோது

என்னுடைய பெயர் இணைக்கப்படுகிறதே தவிர, எனக்கு என்று சுதந்திரமாக முன் கூட்டியேஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்குமென்று தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முதலமைச்சர் அவர்களும் பதிலளித்து விட்டார்கள். அதன் பிறகும் நான் நீண்ட நேரம் பேசுவது என்பது முறையாகாது. இருந்தாலும் எங்கு பார்த்தாலும் கற்பழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. ரயிலில்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குவைத்திலிருந்து உடனே உள்ளூருக்கு ஏன் வருகிறீர்கள் ?

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, ஏற்கனவே இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். இது இந்திய நாட்டை மட்டுமல்லாமல், நம்முடைய தமிழகத்தையும் பாதித்திருக்கிறது. மிகப் பெரிய பா : தூரமான, பொருளாதார, சமுதாய விளைவுகள் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்றன, ஏற்பட இருக்கின்றன என்கின்ற பெரும் கவலை நம்மை எல்லாம் ஆட் கொண்டிருக்கிறது.

குறிப்பாகவே தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களை இந்த அரபு நாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலைகள் வெகுவாக பாதிக்கும் என்று அஞ்சுவதற்கு இடம் என்று சொல்லவில்லை. இப்போதே அந்த அச்சமும், அதிர்ச்சியும் ஏற்படத் தொடங்கி விட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான பேர்கள் கையிலே காசு இல்லாமல் குவைத் நாட்டினுடைய நாணயம், காகித நாணயம், இன்றைக்கு வெறும் காகிதமாக மாறி, பலர் அங்கிருந்து வெளி யேற்றப்பட்டு, பம்பாய்க்கு வந்து எப்படியோ ஒரு சிலர் சேர்ந்த போது கூட, ஊருக்கு வருவதற்குக் கூட அவர்களிடத்திலே கையில் காசு இல்லாமல், அரசே அதற்கு ஏற்பாடு செய்யக் கூடிய வகையில் அவர்கள் பராரியாக இங்கே வந்திருக்கிறார்கள் என்பது கவலைக்குரியது. நம்முடைய திட்டங்களிலே கூட, பல திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சருடைய என். ஆர். ஐ. திட்டத்தில் பலர் பங்குகொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் எல்லாம் கூட ஏற்பட்டிருக்கக் கூடிய புதிய சூழ்நிலைகளாலே அவர்களுக்கு என்ன சிக்கல் உருவாகும், அவர் களுடைய நிலை என்ன என்பது எல்லாம் கூட இன்றைக்கு பிரச்சினைகளாக உருவாகியிருக்கின்றன. எனவே இந்தச் சூழ்நிலைகளில் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப்போல் நம் முடைய மத்திய அமைச்சர் திரு. ஆரிப் முகமதுகான் அவர்கள் அங்கே சென்றார்கள். கேரள அமைச்சரும் சென்றார். கர்நாடக அமைச்சரும் சென்றார். அவர்களாலே அங்கே என்ன செய்ய முடிந்தது என்று தெரியவில்லை.

மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதற்கான விவரங்களை மாநில அரசு கோரி பெற்றிருக்கிறதா? இன்றைய தினம் பத்திரிகையிலேகூட ஒரு அறிக்கை வந்திருக்கிறது. அரபு நாடுகளில் குறிப்பாக குவைத்திலே வேலை செய்கிற தமிழ்நாட்டைச் சேர்ந்த நம்முடைய மக்கள், அவர்களைக் குறித்த விவரங்கள் ஏதாவது தேவையானால் அரசை அணுகலாம் என்று ஒரு அறிக்கைகூட தமிழக அரசாங்கத்தின் சார்பாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் விவரங்கள் ஒவ்வொருவராகக் கேட்பது என்பது முடியாத, இயலாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். பலர் வீடுகளில் பெண்கள் மட்டும் இருக்கிறார்கள். ஆண்கள் பூராவும் அரபு நாட்டிலே இருக்கிறார்கள், அவர்களுடைய வருமானத்தை நம்பித்தான் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இது குறித்து மத்திய அரசாங்கம் தமிழக அரசுக்கு விவரம் தெரிவித்திருக்கிறதா? தமிழக அரசாங்கத்தின் சார்பாக விசேஷமாக மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்த்திடும் வகையில் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் என்ன விவரங்கள்? நம்முடைய மக்கள் எல்லாம் எப்போது வந்து சேர்வார்கள்? குவைத் நாட்டு நாணயம் அவர்களுக்கு செல்லுபடியாகாமல் இருக்கிற நிலைமையை மாற்றி, சர்வதேச உடன்பாட்டின் அடிப்படையில் ஏற்கெனவே அவர்கள் வைத்திருக்கின்ற நாணயத்தின் மதிப்பை வெளிநாட்டுச் செலாவணி என்ற அடிப்படையில் இந்திய மதிப்பிற்கு உரிய பணத்தை அவர்கள் வழங்குவதற்கு சர்வதேச சட்டத்தில் இடம் இருக்கிறது. அதை வலியுறுத்தவேண்டுமென்று அரசு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு இருக்கிறதா என்பதையெல்லாம் இந்த அவையும் மக்களும் அறிய துடித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்பதற்காகத்தான் பொன். விஜயராகவன் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையோடு நானும் எழுப்பி விவரங்களை கேட்க விரும்புகிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

10—25 மணி

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் குவைத் நாட்டிலே அடைபட்டுக் கிடக்கின்ற தமிழர்களை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கு, தமிழக அரசு முயற்சி செய்ய வேண்டும் என்ற செய்தியை நான் இந்த அவையிலே கொண்டு வருகின்றேன். அதுவும் என்னுடைய தொகுதியைச் சார்ந்த கடைநிலையூர், வடகரை போன்ற இடங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு சென்று கூலிகளாக வேலை பார்த்தவர்கள் இன்றைய தினம் பரிதாபப்படக்கூடிய வகையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்ன, உயிரோடு இருக்கிறார்களா என்பது எல்லாம் தெரியவில்லை.

ஆகவே, அந்தச் செய்தியை தெரிந்துக் கொள்வதற்கு-கேரளாவிலே தொலை தொடர்பு மூலமாக அறிந்து கொள்ள எர்ணாகுளம், திருவனந்தபுரம் போன்ற பகுதிகளிலே வசதி செய்து தரப்பட்டிருப்பதாக தெரிகிறது. அதே போன்று சென்னையிலோ அல்லது தென்பகுதி மதுரையிலோ இது போன்ற தொலை தொடர்புகள் கொள்ள வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசை வேண்டுகிறேன்.

அது மட்டும் அல்ல, சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் மதுரைக்கு வந்து என்ன பொசிஷன் என்று தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே தாலுக்காபீசிலே சென்று, தாசில்தாரிடத்திலே மனுகொடுத்தால் அவர்கள் மூலமாக அந்த செய்தியைத் தெரிந்து கொண்டு, அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லக் கூடிய நிலையிலே இருக்க வேண்டும். ஆகவே இந்தக் கடுமையான நிலையிலே சிக்கித் தவிக்கின்ற தமிழர்களை காப்பாற்ற, தமிழர்களுக்கு உதவிட இந்த அரசு முன் வரவேண்டும் என்ற செய்தியை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு குவைத் நாட்டிலே வாழுகின்ற தமிழகத்தைச் சார்ந்தவர்கள் மாத்திரம் அல்ல, ஈராக் குவைத்தை ஆக்கிரமிப்பு செய்ததை தொடர்ந்து, அமெரிக்க போர்க் கப்பல்கள் அந்தப் பகுதியிலே வளையம் இட்டிருக்கிற காரணத்தால் அரேபிய நாடுகள் முழுவதிலும் இன்றைக்கு ஒரு போர் அபாய நிலை ஏற்பட்டு, அரேபிய நாடுகள், வளைகுடா நாடுகளில் வாழுகின்ற மக்களுக்கும், இந்திய நாட்டிலே இருக்கும் குடும்பத்தினர்களுக்கும் இடையேயான தொடர்புகள் முழுவதுமாக இன்றைக்கு துண்டித்துப் போயிருக்கிறது.

ஆகவே குவைத் மாத்திரம் அல்ல, அரேபிய நாடுகளிலேயும், வளைகுடா பகுதிகளிலேயும் வாழுகின்ற மக்களுக்கு கூட இந்தப் பிரச்சினை இன்று மிகப் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது என்பதை கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட வகையில் கேரளத்திற்கு அடுத்தபடியாக மக்கள் தமிழகத்திலிருந்து சென்று தான் அந்தப் பகுதியில் வாழுகிறார்கள். வயிற்றுப் பிழைப்புக்காக அங்கே சென்றிருப்பவர்களின் வாழ்க்கைக்கு கூட இன்றைக்கு ஆபத்து நேரிடுமோ என்ற நிலைமைக்கு தள்ளப்பட்டு இருப்பதனால், அவர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலேயும், குடும்பத்தாரோடு அவர்களுக்கு தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கிற வகையிலேயும் ஒரு உத்திரவாதத்தை ஏற்படுத்துவதற்கு தமிழக அரசு ஏதாவது ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று தமிழக முதல்வர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1990 ஆகஸ்டு 22]

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே' கேரளத்திற்கு அடுத்தபடியாக அதிகமான மக்கள் குவைத்திலே இருப்பது என்னுடைய பகுதியிலே குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள். கேரள அரசு, அவர்கள் எந்த நாணயத்தைக் கொண்டு வந்தாலும் கூட, எந்த வங்கியிலேயும் பணத்தை வாங்கிக் கொள்ளலாம் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். மரியாதைக்குரிய மத்தியிலே இருக்கிற பைனான்ஸ் மினிஸ்டர் மது தண்டவதே அவர்களும் அது குறித்து ஆணையிட்டிருக்கிறார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அங்கு சென்று திரும்பி வருகிற மக்களுக்கு நம்முடைய மாநிலத்தில் எந்த வங்கியிலும் பணம் கொடுப்பதற்கான எந்த வழி வகையும் செய்யப்படவில்லை. அங்கே இருப்பவர்களின் நிலைமை மிக பரிதாபகரமாக இருக்கிறது. அங்கேயிருந்து 20,000 பேர்கள் அந்த எல்லையைத் தாண்டி வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் யார், யார், எத்தனை பேர் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், கேரளத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவில்லை. ஆனால் அதிகமான மக்கள் அங்கே வாழ்கிறார்கள். பல கோடி ரூபாயை நம்முடைய நாட்டிற்கு ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவது கேரளாவிலே செய்தது போல—கேரளாவிலே திருவனந்தபுரத்திற்கு அவர்களுடைய குடும்பத்தினர் சென்றால், அவர்களுடைய உறவினர்களுடைய நிலைமையை அறிந்து கொள்ள முடியும்—அது போல் நமக்கென்று, திருவனந்தபுரத்தில் இருப்பது போல, சென்னையிலே அல்லது மதுரையிலே நம்முடையவர்களுக்கு என்று ஒரு ஏற்பாடும் இனிஷியேட் செய்யப்படவில்லை. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது. அங்கேயிருந்து வருபவர்கள் கொடுக்கும் தினார் என்னும் பணத்தை, எந்த வங்கியில் கொடுத்தாலும் நம்முடையவர்களுக்கு பணம் கிடைக்கும் என்ற உத்திரவாதத்தை நம்முடைய அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் யார், யார் எல்லாம் வருகிறார்களோ—இதேபோன்ற பிரச்சினை சவுதியிலேயும் இருக்கிறது—சவுதி, குவைத் போன்ற நாடுகளில் இருப்பவர்கள் யார் யார் இங்கே வர விரும்புகிறார்களோ அவர்களை உடனடியாக தாய் நாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்வதற்கு நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். கேரள அரசில் தினம் தினம் கேபினட் கூடி அதை விசாரிக்கிறார்கள். மாலையிலே எல்லா அமைச்சர்களும் உட்கார்ந்து என்ன செய்வது என்று யோசித்து முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இப்படி இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து, எப்படியோ நம்முடைய காரியங்களை செய்து, நம்முடையவர்களுக்கு கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

10-30 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே குவைத்தில் திடீரென மின்னல் வேகத்தில் நடைபெற்றுவிட்ட தாக்குதலின் காரணமாக இந்தியாவிலேயிருந்து அந்தப் பகுதிக்குச் சென்றிருக்கின்ற மக்கள்—அவர்கள் தமிழர்கள், கேரளத்தைச் சேர்ந்தவர்கள், கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள், வடமாநிலங்களைச் சேர்ந்தவர்கள்—இவர்களுடைய நிலை என்ன என்பது குறித்துக் கவலைப்பட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு ஆறுதல் அளிக்கின்ற வகையிலும், ஆறுதல் அளித்தால் மாத்திரம் போதாது, ஆவன செய்ய வேண்டும் என்ற நிலையிலும் நம்முடைய மத்திய அரசு பல பணிகளை மேற்கொண்டிருக்கிறது.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்த கருத்துக்களின் அடிப்படையில் அவர்கள் அனைவருக்கும் உள்ள அந்தக் கவலையோடு இந்த அரசும் தன்னுடைய கவலையைப் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கிறது. ஏனென்றால் நம்முடைய மக்களின் நிலை ஒரு கேள்விக்குறியாக ஆகிவிட்டிருக்கின்ற இந்தச் சூழலில் அவர்களைப் பற்றி ஒரு பொறுப்புள்ள அரசு சும்மா இருந்துவிட முடியாது. மேலும், பரபரப்பு, பதட்டம் இவைகள் விளையக்கூடாது என்பதற்காக, நாம் மத்திய அரசோடு கொண்டுள்ள தொடர்புகளையும், நாம் எடுத்துச் சொன்ன வகையிலே மத்திய அரசு இன்றைக்கு மேற்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளையும் அதிகமாக வெளியிடவில்லையே தவிர, மாநில அரசு அதற்கான நடவடிக்கைகள் எதையும் எடுக்காமல் இருந்துவிடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் மத்திய அரசு மேலும் இதில் தீவிரமாக நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் நம்புகிறேன். இதில் ஏதோ ஒரு அரசியல் ஆதாயத்தோடு எந்த ஒரு உறுப்பினரும் பேசியதாக யாரும் எடுத்துக்கொள்ள முடியாது. மனித நேய உணர்வோடு அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டு மக்கள் ஏராளமானவர்கள் அந்தப் பகுதியிலே தொழில் நடத்த, வாழ்க்கை நடத்த, பிழைக்கச் சென்றவர்கள், என்ன ஆனார்கள் என்கின்ற துன்ப, துயரத்திலே சிக்கிக் கொண்டு இருக்கும்போது அவர்களைப் பாதுகாப்பாக, பத்திரமாக அனுப்ப வேண்டிய பெரும் பொறுப்பை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

மத்திய அரசின் உள் துறையுடனும், வெளியுறவுத் துறையுடனும் மாநில அரசின் சார்பாக தொடர்ந்து தொடர்பு கொள்ளப்பட்டு வருகின்றது. நேற்றைய தினம் மத்திய அரசு அதனுடைய உள் துறையினுடைய வேண்டுகோளின்படி, குவைத்திலிருந்து பம்பாய் வந்து சேர்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு உதவிகளைச் செய்து, அவரவர்கள் சொந்த ஊருக்கு

அனுப்புகின்ற ஏற்பாடுகளைச் செய்வதற்காக நமக்கு தாக்கீது அனுப்பியது. உடனடியாக இன்று காலையிலே கூட 3 காவல் துறை அதிகாரிகள் விமானம் மூலமாக பம்பாய்க்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள். அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த அந்தப் பயணிகளை பம்பாயிலே விமான நிலையத்திலே சந்தித்து மத்திய அரசின் மூலமாகவும், மாநில அரசின் மூல மாகவும் தேவையான உதவிகளை அவர்களுக்குச் செய்வதற் காகவே இன்று பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டிருக் கிறார்கள். மேலும் இன்று இந்த அவையிலே இப்பொழுது எழுப்பப்பட்ட இந்த மிக முக்கியமான மனித நேயப் பிரச்சினை கள் அடிப்படையில் இன்றும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு புதிய தகவல்கள் இருப்பின் நாளைய தினமும் இந்த அவையிலே அறிவிப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

(எ) விசாக்கள் பெறுவதற்காக தமிழர்கள் சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்பு வெயிலில் காத்துக் கிடக்கும் அவலநிலை குறித்து.

* திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைய தினம் வெளிநாடுகளிலே இந்தியர்களுக்கு ஏற்படுகின்ற அவலங்களையும், துயரங்களையும் பற்றி நம்முடைய அரசினுடைய கவனத்தை ஈர்த்தார்கள். நான் இன்று தமிழகத்தினுடைய தலைநகரிலே, நமது சென்னையி லேயே, நாம் பிறந்த மண்ணில் நமது சுயமரியாதைக்கும், சுய கௌரவத்திற்கும் ஏற்பட்டிருக்கின்ற ஒரு பங்கத்தைக் குறித்து நமது அரசினுடைய, குறிப்பாக முதலமைச்சருடைய, கவனத்தை தங்கள் மூலமாக ஈர்க்க ஆசைப்படுகிறேன். தென் மாநிலங்களிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு வேலை வாய்ப்பு, படிப்பு, சுற்றுலாவிற்கு, பணி தேடி, செல்கின்றவர் கள் இங்கே சென்னை அண்ணா சாலையிலே இருக்கின்ற கான்சு லேட் ஜெனரல் ஆபீசிலே விசா வாங்கிச் செல்ல வேண்டியிருக் கிறது. அந்த விசா வாங்கச் செல்லுகின்ற நமது மண்ணின் மைந்தர்களை, மௌண்ட் ரோடிலே நடுத்தெருவிலே நிறுத்தி வைத்து, வயோதிகர்கள், கர்ப்பிணிப் பெண்கள், இளம் பெண்கள், குழந்தைகள் இவர்களை எல்லாம் அந்த வெயிலில் நிற்கச் சொல்லுகின்ற கொடுமை அங்கே கண் எதிரே நடக்கிறது. ஆகவே, நான் அந்த அலுவலகத்தினுடைய நடைமுறையை மாற்றச் சொல்லவில்லை. நமது மண்ணிலேயே நமது இந்தி யனுக்கு ஒரு சுய கௌரவம் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க் கிறோம். எனவே, அந்த அலுவலகத்திற்குள்ளே ஒரு ஷெட் மாதிரி போட்டு அவர்களை அமர வைத்து சற்று மரியாதை யோடு விசா வழங்குகின்ற பார்மாலிட்டிசை நடத்தினால் நன்றாக இருக்கும். இது குறித்து தினமலர் பத்திரிகையில் கடந்த வாரம் ஒரு பெரிய செய்தி வெளிவந்திருக்கிறது.

அனுப்புகின்ற ஏற்பாடுகளைச் செய்வதற்காக நமக்கு தாக்கீது அனுப்பியது. உடனடியாக இன்று காலையிலே கூட 3 காவல் துறை அதிகாரிகள் விமானம் மூலமாக பம்பாய்க்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள். அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த அந்தப் பயணிகளை பம்பாயிலே விமான நிலையத்திலே சந்தித்து மத்திய அரசின் மூலமாகவும், மாநில அரசின் மூல மாகவும் தேவையான உதவிகளை அவர்களுக்குச் செய்வதற் காகவே இன்று பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டிருக் கிறார்கள். மேலும் இன்று இந்த அவையிலே இப்பொழுது எழுப்பப்பட்ட இந்த மிக முக்கியமான மனித நேயப் பிரச்சினை கள் அடிப்படையில் இன்றும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு புதிய தகவல்கள் இருப்பின் நாளைய தினமும் இந்த அவையிலே அறிவிப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

(எ) விசாக்கள் பெறுவதற்காக தமிழர்கள் சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்பு வெயிலில் காத்துக் கிடக்கும் அவலநிலை குறித்து.

* திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைய தினம் வெளிநாடுகளிலே இந்தியர்களுக்கு ஏற்படுகின்ற அவலங்களையும், துயரங்களையும் பற்றி நம்முடைய அரசினுடைய கவனத்தை ஈர்த்தார்கள். நான் இன்று தமிழகத்தினுடைய தலைநகரிலே, நமது சென்னையி லேயே, நாம் பிறந்த மண்ணில் நமது சுயமரியாதைக்கும், சுய கௌரவத்திற்கும் ஏற்பட்டிருக்கின்ற ஒரு பங்கத்தைக் குறித்து நமது அரசினுடைய, குறிப்பாக முதலமைச்சருடைய, கவனத்தை தங்கள் மூலமாக ஈர்க்க ஆசைப்படுகிறேன். தென் மாநிலங்களிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு வேலை வாய்ப்பு, படிப்பு, சுற்றுலாவிற்கு, பணி தேடி, செல்கின்றவர் கள் இங்கே சென்னை அண்ணா சாலையிலே இருக்கின்ற கான்சு லேட் ஜெனரல் ஆபீசிலே விசா வாங்கிச் செல்ல வேண்டியிருக் கிறது. அந்த விசா வாங்கச் செல்லுகின்ற நமது மண்ணின் மைந்தர்களை, மௌண்ட் ரோட்டிலே நடுத்தெருவிலே நிறுத்தி வைத்து, வயோதிகர்கள், கர்ப்பிணிப் பெண்கள், இளம் பெண்கள், குழந்தைகள் இவர்களை எல்லாம் அந்த வெயிலில் நிற்கச் சொல்லுகின்ற கொடுமை அங்கே கண் எதிரே நடக்கிறது. ஆகவே, நான் அந்த அலுவலகத்தினுடைய நடைமுறையை மாற்றச் சொல்லவில்லை. நமது மண்ணிலேயே நமது இந்தி யனுக்கு ஒரு சுய கௌரவம் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க் கிறோம். எனவே, அந்த அலுவலகத்திற்குள்ளே ஒரு ஷெட் மாதிரி போட்டு அவர்களை அமர வைத்து சற்று மரியாதை யோடு விசா வழங்குகின்ற பார்மாலிட்டிசை நடத்தினால் நன்றாக இருக்கும். இது குறித்து தினமலர் பத்திரிகையில் கடந்த வாரம் ஒரு பெரிய செய்தி வெளிவந்திருக்கிறது.

எனவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப் பட்ட அந்த வெளிநாட்டு தூதரக அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது—how the protocol permits என்று எனக்குத் தெரியவில்லை—நமது வெளிநாட்டு அமைச்சரகத்தின் மூலமாகவோ தொடர்பு கொண்டு நமது சுய கௌரவத்திற்கு பங்கம் இல்லாத வகையில் அந்த அபிஷியல் பார்மாலிட்டிஸ் நடப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

10–35 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்கள் எடுத்துக்கூறிய இந்தக் கருத்து உண்மையானது. நானே கூட பத்திரிகைகளில் அந்தப் புகைப்படங்களைப் பார்த்து அதிர்ச்சியுற்றேன். விசா பெறுவதற்காக அமெரிக்க அலுவலகத்திற்கு முன்னால் க்யூ வரிசையில் கொளுத்தும் வெய்யிலில் ஏராளமான தமிழர்கள் அமர்ந்து இருக்கின்ற காட்சி மனதை உருக்குவதாகத்தான் இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இங்கு நடைபெற்ற இந்த விவாதத்தை அடிப்படையாக வைத்து அந்த அலுவலகத்தார் அப்படி விசா பெற வருகிறவர்களுக்கு அங்கே நிழல் தருகின்ற நிலையிலே அந்த வளாகத்திற்குள்ளேயே சுவர் அடைப்புக்குள்ளாகவே இருக்கின்ற அந்த வளாகத்திற்குள்ளேயே தங்கி அந்த விசா பெறுவற்கு ஏற்ற வசதிகளைச் செய்து தருவார்கள் என்று நம்புகிறேன். அரசின் சார்பிலும் அவர்களுக்கு அறிவிக்கப்படும். சுயமரியாதை பற்றி திரு. ஆல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். அமெரிக்கர்களுக்குக் கூட ஒரு அலட்சியம். தமிழ் நாட்டிலே சில பேர் சுயமரியாதையைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்களே என்ற காரணத்தால் அவர்கள்கூட நம்முடைய சுயமரியாதையை அலட்சியப்படுத்துகிறார்கள். சுயமரியாதை இங்கே பலருக்கு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி அரசு அமெரிக்க அலுவலகத்திற்கு எழுதும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை பெருங்களத்தூரிலுள்ள ''ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை'' மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ்.டி. உகம்சந்த், சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, எஸ். திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், ஆர். மூக்கன், வெ. இராசு, கொ. மாதப்பன், திருமதி ?. லட்சுமி மற்றும் திரு. உ.ரா. வரதராசன் ஆகியோர் ''சென்னை பெருங்களத்தூரிலுள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை

எனவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப் பட்ட அந்த வெளிநாட்டு தூதரக அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது—how the protocol permits என்று எனக்குத் தெரியவில்லை—நமது வெளிநாட்டு அமைச்சரகத்தின் மூலமாகவோ தொடர்பு கொண்டு நமது சுய கௌரவத்திற்கு பங்கம் இல்லாத வகையில் அந்த அபிஷியல் பார்மாலிட்டிஸ் நடப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

10–35 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்கள் எடுத்துக்கூறிய இந்தக் கருத்து உண்மையானது. நானே கூட பத்திரிகைகளில் அந்தப் புகைப்படங்களைப் பார்த்து அதிர்ச்சியுற்றேன். விசா பெறுவதற்காக அமெரிக்க அலுவலகத்திற்கு முன்னால் க்யூ வரிசையில் கொளுத்தும் வெய்யிலில் ஏராளமான தமிழர்கள் அமர்ந்து இருக்கின்ற காட்சி மனதை உருக்குவதாகத்தான் இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இங்கு நடைபெற்ற இந்த விவாதத்தை அடிப்படையாக வைத்து அந்த அலுவலகத்தார் அப்படி விசா பெற வருகிறவர்களுக்கு அங்கே நிழல் தருகின்ற நிலையிலே அந்த வளாகத்திற்குள்ளேயே சுவர் அடைப்புக்குள்ளாகவே இருக்கின்ற அந்த வளாகத்திற்குள்ளேயே தங்கி அந்த விசா பெறுவற்கு ஏற்ற வசதிகளைச் செய்து தருவார்கள் என்று நம்புகிறேன். அரசின் சார்பிலும் அவர்களுக்கு அறிவிக்கப்படும். சுயமரியாதை பற்றி திரு. ஆல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். அமெரிக்கர்களுக்குக் கூட ஒரு அலட்சியம். தமிழ் நாட்டிலே சில பேர் சுயமரியாதையைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்களே என்ற காரணத்தால் அவர்கள்கூட நம்முடைய சுயமரியாதையை அலட்சியப்படுத்துகிறார்கள். சுயமரியாதை இங்கே பலருக்கு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி அரசு அமெரிக்க அலுவலகத்திற்கு எழுதும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை பெருங்களத்தூரிலுள்ள ''ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை'' மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ்.டி. உகம்சந்த், சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, எஸ். திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், ஆர். மூக்கன், வெ. இராசு, கொ. மாதப்பன், திருமதி ?. லட்சுமி மற்றும் திரு. உ.ரா. வரதராசன் ஆகியோர் ''சென்னை பெருங்களத்தூரிலுள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை

1990 ஆகஸ்டு 22] [பேரவைத் தலைவர்]

கடந்த 20 மாதங்களுக்கு மேல் மூடிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பும், அதனால் அவதியுறும் தொழிலாளர்கள் நிலையும் குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். திரு. சோ. அழகர்சாமி.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலை மூடப்பட்டு ஏறக்குறைய 18 மாதங்களுக்கு மேல் ஆகிறது. அது 3 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றக் கூடிய மிகப் பெரிய ஒரு முக்கியமான தொழிற்சாலையாகும். அது மட்டுமல்லாமல் ஏற்கனவே பிர்லாவினுடைய தலையீடு காரணமாக அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு இருப்பதாக கடந்த காலத்தில் பேசப்பட்டது. 'கண்டசா' என்று சொல்லக் கூடிய அந்த கார் உற்பத்தி செய்ததன் காரணமாக தனக்கு போட்டியாக தொழில் வருகிறது என்ற ஒரு நோக்கத்திற்காக அந்த எண்ணத்தோடு பிர்லா தலையீடு காரணமாக ஆரம்பத்திலிருந்தே அந்த தொழிற்சாலைக்கு பல்வேறு இடைஞ்சல்கள் செய்ததாகவும், அதனால் அந்தத் தொழிற்சாலைக்கு பல இக்கட்டான நிலைகள் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றக்கூடிய 3 ஆயிரம் தொழிலாளர்கள் என்று சொன்னால் அந்தக் குடும்பங்களில் இருக்கின்ற ஏறக்குறைய 20 ஆயிரம் மக்கள் இன்றைக்கு பட்டினியால் பரிதவிக்கின்ற ஒரு மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களில் 30 பேர் இன்றைக்கு இறந்து இருக்கிறார்கள். பட்டினியால் அல்லது வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய வருமானம் இல்லாமல் இறந்து இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் ஏற்கனவே மாதம் 2 ஆயிரம் ரூபாய் வருமானம் பெறக்கூடிய ஒரு மத்திய தரத் தொழிலாளியாக இருக்கக் கூடியவர்கள் தங்களுடைய பண்ட பாத்திரங்கள் முதற்கொண்டு டி.வி. அல்லது ரேடியோ போன்றவைகளை எல்லாம் விற்றும் கூட இன்றைக்கு அதற்கு மேல் அவர்கள் வாழ முடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு அதிலே நம்முடைய தொழிற் சங்கத் தலைவர் திரு. கோபு அவர்கள் உண்ணாவிரதம் இருக்கும்போது 3 கோடி ரூபாய் அரசு சார்பில் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், இருந்தாலும் கூட அந்தத் தொழில் முனைவர் அந்தத் தொழிலைத் தொடர்ந்து நடத்துவதற்கு விருப்பம் இல்லாமல்

இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏன் என்றால் அவருக்கும், அரசுக்கும் உறவு சரியாக இல்லை; ஆகவே அவர் நடத்த மாட்டேன் என்று சொல்கிறார் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்தத் தொழிற்சாலை ஒரு முக்கியமான தொழிற் சாலை, சென்னை மாநகரத்தில் இருக்கின்ற, அதுவும் கார் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு முக்கியமான தொழிற்சாலையாக இருப்பதன் காரணமாக ஏறக்குறைய 3 ஆயிரம் குடும்பங்கள் சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு தொழிற்சாலையாகும்.

இது சம்பந்தமாக பி.ஐ.எப்.ஆர். என்று சொல்லக்கூடிய அந்த ஸ்தாபனத்தினரை அழைத்துப் பேசிய காலத்தில் அந்தத் தொழிற்சாலையின் முனைவர் 3 கோடி ரூபாயும், அரசாங்கம் 3 கோடி ரூபாயும் கொடுத்தால் அதற்கு வேண்டிய நிதி உதவி செய்கிறோம் என்று அந்த ஸ்தாபனம் சொல்லியிருக்கிறது. ஆகவே இப்போது நம்முடைய அரசு சார்பில் அந்த 3 கோடி ரூபாய் கொடுப்பதாகவும், ஆனால் அந்த முதலாளி 3 கோடி ரூபாய் கொடுக்கிறேன் என்று சொல்லாததன் காரணமாக அது அப்படியே நின்று விட்டது. ஆகவே அதற்குப் பின்னாலே 3-1-90-ல் லேபர் கமிஷனருடைய முன்னிலையிலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, ஜூன் மாதம் முதல் தேதியன்று கட்டாயமாக திறக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறார்கள். இன் றைக்கு, ஜூன்-க்கு மேலே, ஜூலை, ஆகஸ்ட் என்று இரண்டு மூன்று மாதங்கள் கடந்து விட்டன. ஆகவே, இந்தத் தொழிற் சாலை எப்போது திறக்கப்படும்? இந்த தேதியிலே திறக்கப் படும் என்ற உத்தரவாதத்தை இந்த அரசாங்கம் தர வேண்டும்.

10.40 மணி

அந்த முதலாளியால் நடத்த முடியவில்லை என்று சொன் னால் இந்த அரசாங்கமே, லாபம் நஷ்டம் என்றெல்லாம் பார்க்காமல் இந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்த வேண்டும். 3 ஆயிரம் குடும்பங்கள் சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல, இங்குள்ள ஒரு முக்கியமான தொழிற்சாலை. என்பதன் காரணமாக மட்டுமல்ல, மாதம் ஒரு தொழிற்சாலை புதிதாகத் தொடங்கப்படும் என்று சொல்லப்படுகின்ற இந்த அரசாங்கத்தினுடைய அறிவிப்புக்கு விரோதமாக இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பது நமக்கெல்லாம் மிக மன வேதனை அளிக்கக் கூடிய ஒரு காரியமாக இருப்பதன் காரண மாக, இது ஏன் மூடப்பட்டது, திறப்பதற்குண்டான இடைஞ் சல்கள் என்ன, அதைப் போக்குவதற்கு என்ன செய்யலாம், இந்த மாதிரி பேசப்படுகின்ற காரணங்களை யெல்லாம், அந்தத் தொழில் முனைவர் மாட்டேன் என்று

சொல்வதற்கும், அரசுக்கும் அவருக்கும் உறவு சரியில்லை என்று சொல்வதற்கும் உண்டான காரணங்கள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் நல்ல முறையில் இந்த அவையிலே விவாதித்து, இந்தத் தொழிற்சாலையை உடனடியாகத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்கான உத்தரவாதத்தை அரசாங்கம் அளிப்பது, அந்தத் தொழிலாளிகளுக்கு நம்பிக்கையை ஊட்டக் கூடிய முறையில் இருக்கும் என்று நான் என்னுடைய கருத்தைச் சொல்லி, இது சம்பந்தமாக மேலும் பல விவரங்களை விவாதித்து, மூடப்படக் கூடிய தொழிற்சாலைகள், இந்த மாதிரி மூடாமல் இருப்பதற்கும், மூடினால் எப்படி திறப்பது என்று சொல்லக் கூடிய ஒரு முறையில் ஒரு கொள்கை வகுப்பதற்கும் ஏதுவாக இருக்கும். ஆகையால் இது சம்பந்தமாக அவையினுடைய இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் எடுத்துச் சொன்னது போல இது மூன்றாயிரம் தொழிலாளர்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கிற, 20 மாத காலமாக நீடித்துக் கொண்டிருக்கிற ஒரு பிரச்சனையாகும். இதிலே தமிழக அரசு அதனுடைய பொறுப்பிலே 3 கோடி ரூபாய், அரசின் மூலம் தரத் தேவையில்லை என்று சொன்னாலும் கூட, தருவதற்குத் தயார் என்று அறிவித்த பின்னாலும் அந்தத் தொழில் முனைவர், இப்போது அதற்குப் பொறுப்பாக இருக்கக் கூடியவர், அவரும் இதைத் தொடர்ந்து நடத்தவில்லை, வேறு தொழில் முனைவரைப் பார்த்து இந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம் என்று அரசு ஆலோசித்து வருவதாகவும், இது சம்பந்தமாக சில தொழிலதிபர்களை அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பேசியதாகவும் கூட செய்திகளெல்லாம் பார்த்தோம்.

தமிழக அரசினுடைய தொழிலாளர் துறை ஆணையாளர் முன்னாலே தொழில் தகராறு சட்டம் 12 (3) பிரிவின் கீழ் ஒரு ஒப்பந்தமே போடப்பட்டது. அந்த ஒப்பந்தத்திலே 3 ஆயிரம் தொழிலாளர்களிலே 999 பேர் சுயமாக ஓய்வு பெற்றுவிட வேண்டுமென்பதற்கான ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு அதையும் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். தொழிலாளர் தரப்பிலேயிருந்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பல்வேறு தொகைகள், போனஸ், பஞ்சப்படி நிலுவைகள் இவற்றையெல்லாம் கூட தள்ளி வைப்பதற்கு, தியாகம் செய்வதற்கெல்லாம் கூட ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இப்படி, பல இழப்புகளைத் தாங்கிக் கொண்டாவது இந்தத் தொழிற்சாலை திறக்கப்படுமா என்ற ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருந்த நேரத்திலே அந்த முதலாளி அதைத் திறக்க மறுப்பது

என்பது தொழிலாளர் துறை ஆணையாளர் முன்னாலே போடப்பட்டிருக்கக் கூடிய, புனிதமானது என்று சொல்லப்படக் கூடிய ஒப்பந்தத்தையே முதலாளி தன்னிச்சையாக, எந்த பாதிப்பும் இல்லாமல் மீறுகிறபொழுது இதை பார்த்துக் கொண்டு இருப்பது சரியல்ல என்கின்ற முறையிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

அதோடு கூட, அந்த பி.ஐ.எப்.ஆர். நிறுவனம் ஒரு கட்டத்திலே இந்த ஆலையை மூடிவிடுவதற்காக, கம்பெனியையே லிக்விடேஷன் செய்வதற்காகத்தான் இனிமேல் நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவித்தது அந்தத் தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கு ஒரு பேரதிர்ச்சியாக அமைந்திருக்கக் கூடியதாகும். அந்த முறையிலே தமிழக அரசு தன்னுடைய பொறுப்புக்கு 3 கோடி ரூபாய் தர முன் வந்தும் கூட, அந்த ஆலையைத் திறக்க மறுக்கிற அந்த ஆலை முதலாளி மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு வேறு வழியில்லை என்று சொன்னால் அரசே ஏற்று இந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கும் நடத்துவதற்கும் முன் வர வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, இது சம்பந்தமாக பல்வேறு பிரச்சினைகளையும் விரிவாகப் பேச வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினால் அவையினுடைய இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தத் தீர்மானத்தை அனுமதித்து, இதன் மீது விவாதத்தை அனுமதிக்குமாறு தங்களைப் பணிவன்போடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மிகவும் நலிவுற்றபடியால் மத்திய அரசின் தொழில் மற்றும் நிதி சீரமைப்புக் குழுவினரால் பதிவு செய்யப்பட்டு 9–12–1988 அன்று நலிவுற்ற நிறுவனம் என்று அறிவிக்கப்பட்டது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி—ஐ.டி.பி.ஐ.——இதன் செயல் முனைவராக நியமிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த நிறுவனத்தின் நிர்வாகம் கைமாறி திரு. ஏ.சி. முத்தையா இந்த நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். தொழிலாளர்களுடன் தொடர்ந்த பேச்சு வார்த்தைக்குப் பின்னரும் ஒரு நல்ல முடிவு ஏற்படாததால் நிர்வாகம் இந்நிறுவனத்தின் செயலாக்கத்தை 7–2–1989 முதல் நிறுத்தி வைத்தது.

10.45 மணி

தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு தொடர்ந்த பல விசாரணைகளுக்குப் பிறகு 26–2–1990 அன்று அதன் பெஞ்ச் விசாரணையில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் இந்த நிறுவனத்துக்கான புனரமைப்புத் திட்டத்தை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி இந்திய தொழில் வளர்ச்சி வங்கி இந்த நிறுவனத்துக்கான புனரமைப்பு

மற்றும் புதுமைப்படுத்தும் ஒரு திட்டத்தைக் கொடுத்து அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அது குறித்த யோசனைகளையும், திருத்தங்களையும் தெரிவிக்குமாறு கேட்டு அனுப்பப்பட்டது. 26–6–1990 அன்று தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு மீண்டும் விசாரணை நடத்தியது. புனரமைப்புத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தன்னால் 4.13 கோடி ரூபாய் தருவதற்கு இயலாது என்றும், 2 கோடி ரூபாய் மாத்திரம் தருவதற்கு இயலும் என்றும் திரு. ஏ.சி. முத்தையா தெரிவித்தார். இந்த நேரத்தில் மாநில அரசும் தன்னால் ரூபாய் 3 கோடி அளவுக்கு மானியமோ அல்லது கடனோ வழங்க இயலும் என இறுதியாகக் கூற முடியவில்லை. 6–7–1990 அன்று நானும், தலைமைச் செயலாளரும், நிதித் துறைச் செயலாளரும் மற்ற அதிகாரிகளையும் அழைத்து இது குறித்துப் பேசியதற்குப் பின் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனத்திற்காக 3 கோடி ரூபாய் அளவுக்கு அரசின் சார்பில் முன் பணமாக வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவு இந்தத் தொழிலாளர் பிரச்சினைக்காக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த தோழர் ஏ.எம். கோபு அவர்களுக்கும் என் மூலம் கடிதமாகத் தெரிவிக்கப்பட்டு அவரின் உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்கும் அந்த முடிவு அடிப்படையாக அமைந்தது. மேலும் இந்த முடிவானது தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுவுக்கும், திரு. ஏ.சி. முத்தையா அவர்களுக்கும் தொலையச்சு மூலமாகவும், கடிதம் மூலமாகவும் உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்த தனது கருத்தை திரு. ஏ.சி. முத்தையா அவர்கள் இன்னும் தெரிவிக்கவில்லை.

பி.ஐ.எஃப்.ஆர். அதாவது தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழு இந்த நிறுவனத்திற்கு புதிய முனைவர் ஒருவரைக் கண்டு பிடிக்குமாறு ஆலோசனை வழங்கி இருந்தது. விருப்பம் உடைய பல தொழில் முனைவர்களோடு அரசாங்கம் இது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தியது. பின்வரும் தொழில் அதிபர்கள் இதிலே ஆர்வம் காட்டினார்கள்: —

(1) விஜய் மல்லய்யா — யு.பி. க்ரூப்.

(2) ஜே. வி. பட்டேல் — இங்கிலாந்தில் வாழும் இந்தியர். தலைவர், ஏ.ஏ.ஜி. ஹோல்டிங்ஸ் லிமிடெட்.

(3) திரு. சகாணி, ஆர். ஜே. — அசோக் லேலண்ட்.

(4) ரவி புருஷோத்தமன், காந்தி வெங்கடபதி இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்.

(5) திரு. பழனிச்சாமி, சேரன் க்ரூப் ஆஃப் கம்பெனி.

இந்தத் தொழில் முனைவர்களுடன் தமிழக அரசு இப்போது ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறது. நான் தெரிவித்த முதல் மூன்று தொழில் முனைவர்களும் மிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். தற்போதுள்ள புனரமைப்புத் திட்டத்திற்கு திரு. ஏ.சி. முத்தையா அவர்கள் ஒத்து வராவிட்டால் மேற் குறிப்பிட்ட திட்டம் குறித்து மத்திய அரசின் தொழில் மற்றும் நிதிச் சீரமைப்புக் குழுவிடம் இந்தப் பிரச்சினையைத் தமிழக அரசு எடுத்துச் செல்லும். இது குறித்து திரு. ஏ.சி. முத்தையா அவர்களிடம் இருந்து இறுதி முடிவைத் தெரிந்து கொள்வதற் காக தலைமைச் செயலாளர் அவர்கள் இன்று ஒரு கூட்டத்தைக் கூட்டி இருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இடையிலே மூன்றாயிரத்து முப்பத்து ஆறு தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக தலா 200 ரூபாயும், நிவாரணம் பெறாது விடுபட்ட 50 தொழிலாளர்களுக்கு அடுத்த உத்திரவுப்படி தலா 200/- ரூபாய் வீதமும் வழங்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். எவ்வளவு விரைவில் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற் சாலை பிரச்சினை தீர்ந்து தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறையோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே 3036 தொழிளர்களுக்கு முதல் தடவையாக 200 ரூபாயும், விடுபட்ட 50 தொழிலாளர்களுக்கு இரண்டாவது உத்திரவு மூலம் 200/- ரூபாயும் அந்த 3086 தொழிலாளர்களுக்குத் தரப்பட்டது போல் இப்போதும் இங்கே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்ட பின்னர் இந்தப் பிரச்சினையில் அந்தத் தொழிலாளர் களின் தேவையான வாழ்வை எண்ணி அந்த 3086 தொழிலாளர் களுக்கும் தலா ரூபாய் 250 வீதம் நிவாரணம் அளிக்க இந்த அரசு முன்வருகிறது என்பதையும் அதற்கு சுமார் $7\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி) அரசுக்கு இதிலே மிகுந்த அக்கறை இருக் கின்றது என்ற காரணத்தால் இதிலே அக்கறையுடன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இதை மேலும் வலியுறுத்தமாட்டார் கள் என்று நம்பி இந்த அளவில் என்னுடைய கருத்தை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச் சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை யில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

10-50 மணி

4. விதி 111-ன் கீழ் அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. அன்பில் பொய்யாமொழி அவர்களின் துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்படவேண்டிய பகுதி :

''ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்தில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அந்த ஊரிலிருக்கிற மக்கள் 5 ஏக்கர் நிலமும் ரூ. 10,000 பணமும் தருவார்களானால் அதைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆண்டில் 30 ஆயிரம் மக்களுக்கு ஒன்று அடிப்படையில், 174 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.''

திருத்திய பகுதி :

''ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்திலிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அந்த ஊரிலிருக்கிற மக்கள் 5 ஏக்கர் நிலமும், ரூ. 10,000 பணமும் தருவார்களானால் அதைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டுகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த ஆண்டில் 30,000 மக்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 164 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.''

5. கவன ஈர்ப்பு.

கடானா நீர்த்தேக்க விரிவாக்கத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''366 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வு செய்யப்

10-50 மணி

4. விதி 111-ன் கீழ் அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. அன்பில் பொய்யாமொழி அவர்களின் துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்படவேண்டிய பகுதி :

''ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்தில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் 8 கிலோ மீட்டர் தூரத் திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அந்த ஊரிலிருக்கிற மக்கள் 5 ஏக்கர் நிலமும் ரூ. 10,100 பணமும் தருவார்களானால் அதைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுகிறது. மாண்பு மிகு கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆண்டில் 30 ஆயிரம் மக்களுக்கு ஒன்று அடிப்படையில், 174 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட் டிருக்கிறது.''

திருத்திய பகுதி :

''ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்திலிருக் கிற ஆரம்ப சுகாதார நிலையம் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் அந்த ஊரிலிருக் கிற மக்கள் 5 ஏக்கர் நிலமும், ரூ. 10,000 பணமும் தருவார் களானால் அதைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டுகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த ஆண்டில் 30,000 மக்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 164 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக் கிறது.''

5. கவன ஈர்ப்பு.

கடானா நீர்த்தேக்க விரிவாக்கத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''366 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வு செய்யப்

[திரு. கே. ரவி அருணன்]

பட்டுள்ளகடானா நீர்த்தேக்க விரிவாக்கத் திட்டத்தைஉடனடியாக நிறைவேற்ற வேண்டியது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கடனா நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் சுமார் 20 குளங்கள் பயன்பெற்று சுமார் 357 ஏக்கர் பாசன வசதி பெற, ரூ. 3.66 கோடி செலவில், வலதுபுற கால்வாய் விஸ்தரிப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் குறித்து பொதுப்பணித் துறையால் ஒரு முன்னோடி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆய்வில் உள்ளது. விரிவான ஆய்வுக்குப் பின் இதற்கான திட்ட மதிப்பீடு இறுதியாக்கப்படும். திட்ட மதிப்பீடு இறுதியாக்கும் பணி தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்ட மதிப்பீடு அரசுக்கு கிடைத்த பின் நிதிநிலைக்கேற்ப பரிசீலனை செய்து திட்டத்தின்மீது முடிவெடுக்கப்படும்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனா நீர்த்தேக்கமானது முன்பு ராமநதி மற்றும் கடனா நதி ஆகிய நதிகளை இணைத்து, ஒரு பெரிய அணைக் கட்டுத் திட்டமாகக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அந்த அணைக்கட்டுத் திட்டம், ராமநதி நீர்த்தேக்கம் என்றும், கடனா நதி நீர்த்தேக்கம் என்றும் இரண்டு சிறிய நீர்த் தேக்கங்களாக ஏற்படுத்தப்பட்டதால், அந்த நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு மிகச் சிறியதாக ஆகிவிட்டது. அதனால் அந்தப் பகுதியில் இருக்கிற பாசன விவசாயிகள், அந்த நீர்த்தேக்கம் நிரம்பினாலும் கூட ஒரு உறுதியற்ற முறையிலும் தயக்கத்துடனும் சாகுபடியை மேற்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே கடனா நீர்த்தேக்க விஸ்தரிப்புத் திட்டத்தை உடனடியாக விரிவாக ஆய்வு செய்து, அதை அடுத்த நிதியாண்டிலாவது செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, கடனா நீர்த் தேக்கத் திட்டம் 1974-ல் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. இது தாமிரபரணியினுடைய உப நதி

கவன ஈர்ப்பு

[திரு. துரைமுருகன்]

இந்த அணையின் மூலமாக சுமார் 8,605 ஏக்கர் நிலங்கள் பயிர் சாகுபடியைப் பெறுகின்றன. அதனுடைய வலது புறக் கால்வாயை விஸ்தரிப்பு செய்தால் மேலும் 20 குளங்களுக்கு பாசன வசதி அளிக்க முடியும் என்று அரசு ஒரு திட்டத்தை மேற் கொண்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவன மெல்லாம் புளியங்குளத்தின் பக்கத்தில் உண்டு என்று எனக்குத் தெரியும். கழுதைப்புலிக் குளத்திற்குப் பக்கத்தில் இருக்கிற அந்த புளியங்குளத்திற்கும் சேர்த்து 20 குளங்களுக்குப் பயன் தரத்தக்க வகையில்தான் ரூ. 366 லட்சத்தில் ஒரு விரிவாக்கத் திட்டத்தை அரசு ஆய்ந்திருக்கிறது. திட்டம் தீட்டி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அது முடிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாவது, உப நதிகளிலும் வருகிற தண்ணீரை முழு வதும் தேக்கி நிறுத்த மாட்டார்கள். அப்படியானால் அதனுடைய மெயின் ஆற்றில் பாசனம் அற்றுப் போய்விடும். அது சட்டப் படியும் குற்றம். எனவே, அந்த அளவுக்குக் கொள்ளளவை வைத்து அந்த அணை கட்டப்பட்டிருக்கிறது.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் ஒரே வாரத்தில் அந்த அணை நிரம்பி, உபரி நீர் வழிந்து கடலில் சென்றுவிடுவதை நாங்கள் பத்து ஆண்டுக் காலமாகக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம். அமைச்சர் அவர்கள் கூறியுள்ள விவர அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள 20 குளங்கள் எவையெவை என்பதையும், அந்த வலது புறக் கால்வாய் விஸ்தரிப்புத் திட்டம் என்றால் என்ன என்பதை யும், இருக்கிற நீர்த்தேக்கத் திட்டம் விரிவுபடுத்தப்பட இருக் கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : இருக்கிற நீர்த்தேக்கத் திட்டத்தை விரிவுபடுத்துவது என்பதல்ல இந்தத் திட்டம். அணையின் வலதுபுறக் கால்வாயை மட்டும் தான் விரிவுபடுத்து கிற திட்டம். அதைத்தான் நான் சொன்னேன். அது தாமிர பரணியின் கிளை நதி. கிளை நதியிலிருந்து வருகிற நீரை முழு வதுமே தடுத்து நிறுத்திவிட்டால், தாமிரபரணி என்ற ஜீவநதி வறண்டு போய்விடும். அது சட்டப்படியும் முடியாது. ஆகவே தான் ஓரளவுக்கு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்களைப் போல பலர் வற்புறுத்துகின்ற காரணத்தால், அதனுடைய வலது புறக் கால்வாயை மட்டும் விஸ்தரித்து அதன் மூலமாக 20 குளங்களுக்கு பாசன வசதி அளிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதனுடைய அறிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வினாக்கள்—விடைகள்.

10-55 மணி

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 51-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91—மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-91 ஆம் ஆண்டு கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, Clause 3 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1990—91."

8. முதல் துணை நிதிநிலை அறிக்கை 1990-91 பொது விவாதம் மற்றும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1990-91 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20—8—1990 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1990-91 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

வினாக்கள்—விடைகள்.

10-55 மணி

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 51-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91—மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-91 ஆம் ஆண்டு கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, Clause 3 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1990—91."

8. முதல் துணை நிதிநிலை அறிக்கை 1990-91 பொது விவாதம் மற்றும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1990-91 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20—8—1990 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1990-91 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

10-55 மணி

6. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 51-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91—மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990-91 ஆம் ஆண்டு கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, Clause 3 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1990—91."

8. முதல் துணை நிதிநிலை அறிக்கை 1990-91 பொது விவாதம் மற்றும் மேற்படி ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1990-91 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20—8—1990 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1990-91 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு பொது மருத்துவ மனையில் கண் மருத்துவம், பல் மருத்துவம் செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச நவீன கருவிகளை வாங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,07,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் தீர்மானமும், மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. பேரவை விதிகளின்படி இன்று விவாதமும் பதிலுரையும் சரியாக 1 மணிக்கு முடிந்து வாக்கெடுப்பு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதை உறுப்பினர்கள் மனதில் கொண்டு, குறைந்த அளவு நேரம் எடுத்துக்கொண்டு உரையாற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கையின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தினைத் துவக்கி வைக்கின்ற வாய்ப்பினை நீங்கள் எனக்கு அளித்தமைக்காக நான் என்னுடைய நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன். துணை மானியக் கோரிக்கையாக 244.38 கோடி ரூபாய் கேட்கப்பட்டிருக்கிறது. அதில், ரூபாய் 170 கோடி நடப்பு ஆண்டில், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட மிகைப் பற்றுக்களைத் திருப்பிக் கொடுக்கத் தேவைப்படுகிறது. இது சாதாரண ஒரு தொகை அல்ல. சரியாக வரவு-செலவினங்கள் கணக்கிடப்பட்டு, செலவழிக்கப்படாததால் இவ்வளவு பெரிய தொகை தேவைப்படுகிறது. தற்போது மீண்டும் வழி வகை முன் பணம், மற்றும் மிகைப் பற்றுக்கள் பெற ஏதுவாக இருக்கும் பொருட்டு, இந்தத் தொகையை திருப்பிச் செலுத்துவதாக முதலமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். அப்படி எவ்வளவு தொகை வழிவகை முன் பணமாகவும், மிகைப் பற்றாகவும் தேவைப்படுகிறது என்பதை இந்தத் தருணத்திலாவது அவர்கள் வரையறுத்துக் கூற வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

இந்த மன்றத்தின் ஒப்புதலைப் பெறாமலேயே, அதிகப்படியான தொகையைச் செலவிட்டுவிட்டு, ஒப்புக்காக பின்னர் இம்மா மன்றத்தில் கொண்டு வந்து, செலவினங்களைப் படித்துக்காட்டுவது என்பது நல்ல மரபாக இருக்க முடியாது. திறமையான நிதி நிர்வாகமாகவும் எடுத்துக்கொள்ள முடியாது. வரிகளைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம் என்று சொன்ன வாக்குறுதிக்கும் தற்போதைய நடைமுறைக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. மக்கள் மீது ஒவ்வொரு கட்டத்திலும் வரிச் சுமை ஏற்றப்படுகிறது. ஆனால், வசதிகள் மறுக்கப்படுகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம் என்று சொன்ன மத்திய அரசு, இந்த நடப்பு ஆண்டில் அதற்காக ஒதுக்கப்படும் நிதியில் பெரும் அளவை வெட்டியிருக்கிறது அல்லது குறைத்திருக்கிறது.

என்னுடைய தொகுதியை எடுத்துக் கொள்வீர்களானால் அப்பநாயக்கன்பட்டி என்ற ஊராட்சிக்கு சென்ற ஆண்டு முதல் தவணையாக தரப்பட்டது ரூ. 80,575. இந்த ஆண்டு முதல் தவணையாக 29,113 ரூபாய் தான் தரப்பட்டிருக்கிறது. போகன்பட்டி ஊராட்சிக்கு சென்ற ஆண்டு முதல் தவணையாக தரப்பட்டது ரூ. 60,469. ஆனால் இந்த ஆண்டு முதல் தவணையாக ரூ. 17,971 தான் தரப்பட்டிருக்கிறது. இடையபாளையத்திற்கு சென்ற ஆண்டு தந்தது ரூ.49,935, ஆனால் இந்த ஆண்டு தந்தது 13 ஆயிரம். ஜல்லிபெட்டிக்கு சென்ற ஆண்டு தந்தது 35 ஆயிரம். இந்த ஆண்டு தந்தது 8 ஆயிரம். ஜே. கிருஷ்ணாபுரத்திற்கு சென்ற ஆண்டு தந்தது 1,16,552. ஆனால் இந்த ஆண்டு தந்தது 41,000. அதுபோலவே, கள்ளப்பாளையத்திற்கு சென்ற ஆண்டு தந்தது 75 ஆயிரம். என்னுடைய தொகுதி மட்டும் அல்ல, இப்படி எல்லா இடங்களிலும் எடுத்துக்கொள்வீர்களானால், இம்மாதிரி தான் இருக்கிறது. கிட்டத்தட்ட 25 சதவிகிதம் அல்லது 30 சதவிகிதமாக சென்ற ஆண்டு கொடுத்த தொகை இந்த ஆண்டு மத்திய அரசால் வெட்டப்பட்டிருக்கிறது அல்லது குறைக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய நல்ல திட்டங்களை அவர்கள் கைவிட்டுவிடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன். தமிழக அரசு மத்திய அரசோடு போராடி, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிறைய நிதியைப் பெற்று, கிராமப்புற மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்த‘ அதிக நிதியைப் பெற முயற்சிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம்] 11-00 மணி

அதேபோல ஸ்டான்லி மருத்துவ மனையில் அதிகமான பொருட் செலவில் கட்டப்பட்ட, குளிர்சாதன வசதி கொண்ட அறைகளும், விலை உயர்ந்த நவீனக் கருவிகளும் பயன்படுத்தப் படாத நிலையில் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. காரணம், தேவையான பணியாளர்களை நியமிக்காத காரணத்தினால் தான் அவ்வாறு முடக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அதில் முதலீடு செய்யப்பட்ட பணமும் வீண் விரயமாகி இருக்கிறது. அதே நேரத்தில் மருத்துவ மனையின் மற்ற பகுதிகளும் பராமரிப்பு இல்லாத நிலையில் படுமோசமாகக் காட்சியளிக்கிறது. முதலமைச்சர் அங்கு ஒருமுறையாவது நேரில் சென்றால் நிலைமைகள் சீரடையலாம் என்று அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதே போன்று மக்களுக்கு உற்ற நண்பனாக விளங்க வேண்டிய காவல் துறையை நினைக்கும்போது நெஞ்சம் பதறுகிறது. அரசியல் கட்சிகள் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும், அரசியல்வாதிகளை முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யவும், கண்காணிக்கவும், அளவுக்கு அதிகமாகக் காவல் துறையினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதே நேரத்தில் சமூக விரோதிகளையும், குற்றவாளிகளையும் கண்காணிக்கவும், ஒடுக்கவும் முடியாத நிலை இருந்து வருகிறது. இதன் விளைவாகத்தான் ஆட்டோ சங்கரும், அவன் கூட்டாளிகளும் சென்னை மத்திய சிறையிலிருந்து தப்பியிருக்கிறார்கள். தாதர் எக்ஸ்பிரசில் பயணமான கல்லூரி மாணவிகள் தமிழக எல்லைக்குள் கற்பழிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தப் பரிதவிப்பு சம்பவம் பற்றி காலையிலே அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நேரில் கண்டவர் விளக்கிக் கூறினால், அதற்கு ஆவணச் சான்றுகள் இல்லை என்று நம்முடைய போலீசால் மறுக்கப்படுகிறது. காவல் துறையினர் முன்கூட்டியே இப்படி முடிவிற்கு வருவது, பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்காகும். சம்பவத்தைக் கண்ணாரக் கண்ட சாட்சியேகூட தமிழ் நாட்டுப் போலீசை நம்ப மாட்டேன் என்று சொல்லி, ஆந்திராவிலேபோய் புகார் செய்திருக்கிறார்........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தான் நேரில் கண்டதாக ஒருவர் கூறுகிறார். பாதிக்கப்பட்டவர்களை விசாரித்துதான் எந்த ஒரு வழக்கையும் நாம் விசாரிக்க முடியும். பாதிக்கப்பட்டவர்கள் யார் என்றே தெரியவில்லை. அவர்கள் புகாரும் கொடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டம் படித்தவர்கள். அதிலே தேர்ந்தவர்கள். அவரே சொல்ல வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் யார் என்று தெரியாத சூழ்நிலையில், அவர்கள் எந்தப் புகாரும் செய்யாத சூழ்நிலையில், எப்படி ஒரு வழக்கைப் பதிவு செய்ய முடியும் என்பதை அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, it is a Co nizable offence. அவர்கள் புகார் செய்ய வேண்டுமென்ற அவசியமே கிடையாது. புகார் செய்யாவிட்டாலும்கூட, அதைக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். இதற்கு என்ன டாக்குமென்டரி எவிடன்ஸ் என்று கேட்டால், இதற்கு டாக்குமென்டரி எவிடென்ஸ் வர வாய்ப்பு கிடையாது. எப்படி டாக்குமென்டரி எவிடன்ஸ் கிடைக்கும்? அதிலே அதிகம் பேர் பயணம் செய்தார்கள் என்று சொல்லுகிறார்கள்.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் இதிலே கொஞ்சம் விரிவாகவே கேட்க விரும்புகிறேன். புகார் செய்யாமல் நாம் வழக்குத் தொடர வேண்டுமென்று சொன்னார்கள். 2 பேரைப் பிடித்து, 2 பெண்களைக் கற்பழித்தாய் என்று சொல்லி, நீதிமன்றத்திலே நிறுத்தினால் குறுக்கு விசாரணை செய்ய மாட்டார்களா? எந்தப் பெண்ணை யார் கற்பழித்தது என்று விசாரணை செய்ய மாட்டார்களா? அதற்குத் தடயங்கள் தராமல் இருக்கும்போது, நாங்கள்தான் பாதிக்கப்பட்டோம் என்று யாரும் சொல்ல முன்வராதபோது, அந்தக் குற்றவாளிகள், அந்தக் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தப்பித்து விட மாட்டார்களா?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் சொல்ல விரும்புவது, போலீசார் விசாரித்து விட்டு, பிறகு சொல்லியிருக்கலாம். அப்படிப்பட்ட சம்பவமே நடக்கவில்லை, டாக்குமென்டரி எவிடன்ஸ் இல்லை என்று சொல்வது முறையாக இருக்குமா? நேற்றையதினம் அதை மறுத்திருக்கிறார்கள். அதே நேரத்திலே தாம்பரத்திலே இதே போன்ற சம்பவம் நடைபெற்றிருக்கிறது. ஒரு குடும்பப் பெண் மானபங்கப்படுத்தப்பட்டிருக்கிறார். மானபங்கப்படுத்தப்பட்ட பெண் போலீசிலே புகார் செய்து, போலீசாரும், அந்த மானபங்கப்படுத்தப்பட்ட பெண்ணும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கச் சென்ற நேரத்திலே, அவர்கள் இருவருமே கூட்டாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே சமூக விரோத சமூகம், ஒரு புறம் தங்களையே காத்துக் கொள்ள முடியாத காவல் துறை அதிகாரிகள் மறுபுறமும் போராடியிருக்கிறார்கள். காவல் துறை அதிகாரிகளும், அந்தப் பெண்மணியும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்நிலை நீடித்தால், காவல் துறையினர் மீது மக்களுக்கு எப்படி நம்பிக்கை பிறக்கும்?

சம்புவராயர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறைக் கண்காணிப்பாளரும், மற்றவர்களும் இருக்கும்போதே ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஒருவர், கடுமையாகத் தாக்கப்பட்டு, வெளியே தூக்கி வீசப்பட்டிருக்கிறார்,

அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும், குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தன் கடமையைச் செய்யத் தவறிவிட்டார் என்பது வெளிப்படையாக இருக்கிறது. இதற்கு முன்னர் நகர்மன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லாததால், அவர்கள் ஒவ்வொருவரும் துப்பாக்கி வைத்துக்கொண்டு நகர்மன்றக் கூட்டத்திற்கு வர அனுமதிக்க வேண்டுமென்று திருச்சி நகர் மன்றம் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. அதேபோன்று தாலுகாக்களின் நிர்வாக மாஜிஸ்டிரேட்டுகளாக இருக்கும் தாசில்தார்களும், தங்களுக்குப் பாதுகாப்பு தர காவல் துறை தவறிவிட்டதாகக் கூறி, தங்களுடைய மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். ஏற்கெனவே பத்மநாபா உள்ளிட்ட 15 பேர் சென்னை நகரில் படுகொலை செய்யப்பட்டு, அந்தக் குற்றவாளிகள் எவரையும் காவல் துறை கைது செய்யவில்லை. மாறாக அந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்க முடியாது என்று டி.ஜி.பி.யே விளக்கமளிக்கிறார். பின்னர் கைது செய்யப்பட்ட சிலரும் ஜாமீனில் விடப்பட்டார்கள். . . .

11-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தவறான தகவல்களைச் சொல்லக்கூடாது. அவர்கள் விடுதலைப் புலிகள் அல்ல என்று டி.ஜி.பி. விளக்கம் அளித்து இருக்கிறார் என்று சொல்வது தவறு. அப்படிப்பட்ட தவறான செய்தியை டி.ஜி.பி. அப்போதே மறுத்து இருக்கிறார். இப்போது யார் என்று சொல்ல முடியாது என்று தான் அவர் குறிப்பிட்டு இருக்கிறாரே அல்லாமல் வேறு அல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கொட்டை எழுத்துக்களிலே பத்திரிக்கைகளிலே வந்து இருக்கிறது. 'விடுதலைப்புலிகளாக இருக்க முடியாது' என்று பத்திரிக்கையிலே செய்தி வந்து இருக்கிறது. புலிகள் இல்லை என்கிறார் டி.ஜி.பி. என்று கொட்டை எழுத்துக்களிலே நான்காவது பக்கத்திலே தினமலர் பத்திரிக்கையிலே மறுநாள் காலையிலே வந்து இருக்கிறது. பி.பி.சி.யிலே செய்தி வாசிக்கப்பட்டது. பிறகு ஒரு மாதம் கழித்து டி.ஜி.பி. சொல்கிறார், 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்று; அதை மறுநாள் மறுக்கவில்லை; சில நாட்களுக்குள்ளாகவாவது மறுக்கவில்லை. ஒரு மாத காலம் கழித்து 'நான் அப்படிச் சொல்லவே இல்லை' என்று

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மறுக்கிறார். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? போலீசார் ஏன் பிடிக்கவில்லை என்று கேட்டால், அவரே சொல்கிறார் 'நாங்கள் என்ன நகரைச் சுற்றி சுவரா எழுப்ப முடியும்?' என்று கேட்கிறார். இப்படி ஒரு டி.ஜி.பி. சொல்லலாமா? Why didn't he seal the border ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தினமலர் என்ற பத்திரிகை வேண்டுமென்றே அப்படிப்பட்ட உண்மைக்கு மாறான ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கிறது. வேறு பத்திரிகைகளில் அப்படிப்பட்ட செய்தி வரவில்லை. ஒரு குற்றம் நடைபெற்ற உடன் இன்னார்தான் செய்தார்கள் என்று எந்தப் போலீஸ் அதிகாரியும் சொல்ல இயலாது. சந்தேகப் படலாம்; சந்தேகப்பட்டு சில பேரைக் கைது செய்யலாம்; இன்னார் செய்யவில்லை அல்லது இன்னார் செய்தார்கள் என்று சொல்ல இயலாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாறாக பத்மநாபாவின் கூட்டாளிகள் 18 பேர் அன்றையதினமே கைது செய்யப்பட்டு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் அந்த சவ ஊர்வலத்திலே கலந்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது; சாட்சியம் அளிக்க முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. இந்தக் காவல் துறை எடுத்து இருக்கிற இந்த நடவடிக்கை நியாயமானதுதான் என்று நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்; நல்ல அறிவாளர்களும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். காவல் துறையிலே ஒழுங்கு கட்டுப்பாடு மிகவும் குறைந்துவிட்டது என்ற நிலை பெருகி வருகிறது. இந்திய குடியரசுத் தலைவர் தங்கி இருந்த ஆளுநர் மாளிகையிலேயே காவலுக்கு வந்த அதிகாரி காவலராலேயே சுட்டுக்கொல்லப்படுகிறார். இந்த நிலை தொடருமானால் நமது மாநிலம் மற்றொரு காஷ்மீரம் ஆகத்தான் காட்சி அளிக்கும்.

சென்னையில் அண்மையிலே ஏ.ஐ.டி.யு.சி. மாநாடு நடைபெற்றது. அதிலே நம்முடைய முதல்வர் அவர்கள் கலந்துகொண்டு பேசி இருக்கிறார்கள். அவர்கள் பேசும்பொழுது இங்கே தொழில் அமைதி நிலவுவதாகவும் பெருமையாகக் குறிப்பிட்டு இருக்கிறார். ஆனால் அவர் அவ்வாறு பேசிய ஒரு சில நாட்களுக்கு முன்னர் தான் சென்னைக்கு அருகேயுள்ள டபிள்யு. எஸ். தொழிற்சாலை சட்ட விரோதமாகக் கதவடைப்பு செய்யப்பட்டது. அரசாங்கத்தின் ஆணையையோ, அதிகாரிகளின் ஆணையையோ, சட்டத்தையோ கொஞ்சமும் மதிக்காத நிர்வாகம் ஆயிரக் கணக்கான குடும்பங்களைப் பட்டினி போட்டு வதைக்க அனுமதிக்கப்படுகிறது. தொழில் அமைதியையும், தொழில் உறவையும், உற்பத்தியையும் திட்டமிட்டே கெடுக்கும் இத்தகைய தேச விரோத, சமூக விரோத சக்திகளை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து தொழிற்சாலை நிர்

வாகத்தை அரசாங்கமே மேற்கொண்டு இருக்கவேண்டும். ஆனால் அதைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயங்குகிறது. அகதிகளைக் கைது செய்து சிறைகளிலே வைக்கிறார்கள். ஆனால் இதுபோன்ற தேச விரோத சக்திகளை சிறையில் வைக்க....

திரு. உ. ரா. வரதராசன்: On a point of clarification. மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த காலங்களிலே அருமை நண்பர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களுடைய கட்சி மத்தியிலே ஆட்சி செய்து கொண்டு இருந்தபோது இப்படி நலிவடைந்து மூடப்பட்ட தொழிற்சாலைகளை ஏற்று நடத்த வேண்டுமென்று மாநில அரசுகள் எல்லாம் கூறியபோதும் கூட, 'முடியாது' என்று மறுத்தார்களே! இப்போது மட்டும் அதைச் சொல்கிறீர்களே? இப்போது தேசிய முன்னணி அரசுவந்து இருப்பதனாலே ஏற்பட்டு இருக்கக்கூடிய மாற்றத்தில் இது நிகழும் என்று நம்பிச் சொல்கிறாரா என்பதை விளக்க வேண்டுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் இங்கே யதார்த்தமான நிலைமைகளைச் சொல்கிறேன். எதிர்வரிசையிலே இருந்து பேசுகிறேன். அன்றே ஏன் செய்யவில்லை என்று சொல்வதைக் கேட்டாலும், இன்று செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வது தவறா என்று முதலமைச்சரே விளக்கட்டும். அவர்கள் பதில் சொல்ல இருக்கின்றார்கள். அப்படி நான் கேட்பது தவறா? அவர்கள் செய்தது சரியா? அரசாங்கத்தினுடைய ஆணையை அவர்கள் செயல்படுத்தவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : யாரைக் கைது செய்ய வேண்டுமென்று தெளிவாகச் சொன்னால் அதைப் புரிந்துகொள்ள முடியும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் நிர்வாகத்தைச் சொல்கிறேன். அரசாங்கம் ஆணையிட்டு இருக்கிறது. இங்கே இருக்கிற தொழிலாளர் ஆணையாளர் சொல்லி இருக்கிறார். அதையே செயல்படுத்த மாட்டேன் என்று சொல்லி, திடீரென்று கதவடைப்புச் செய்து இருக்கிறார். ஏன் அந்த நிர்வாகத்தை, நிர்வாகியை அல்லது நிர்வாக இயக்குநரை கைது செய்யக்கூடாது? பல ஆலைகளுக்குச் சொந்தக்காரராக அவர் இருக்கிறார். தமிழகத்திலே மட்டும் அவருக்குப் பல ஆலைகள் இருக்கின்றன; பெங்களூரிலே ஆலைகள் இருக்கின்றன. அத்தனை ஆலைகளையும் வைத்துக்கொண்டு முதலாளிகளுடைய தலைவராக அவர் இருக்கிறார். அவரைக் கைது செய்தால் என்ன குறைந்துவிடும் என்று கேட்கிறேன்.

திரு. இரா. மோகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு.எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் நல்ல கருத்தைச் சொன்னார். தொழிற்சாலைகளை வேண்டு

[திரு. இரா. மோகன்]

மென்றே மூடுகின்றவர்களை தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்ய வேண்டுமென்று சொன்னார். அது அருமையான கருத்து. அவருடைய கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் கோவை-நீலகிரித் தொகுதியிலிருந்து வெற்றி பெற்றவர் பிரபு அவர்கள். அவருக்குச் சொந்தமான ராதா-கிருஷ்ணா மில் கடந்த ஐந்தாண்டுக்காலமாக கோவையிலே மூடிக்கிடக்கின்றதே, அவரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யலாமா? அது எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு உடன்பாடா ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அது வேண்டுமென்றே மூடப்பட்டு இருப்பதாக நான் கருதவில்லை. உண்மையைச் சொல்கிறேன், குடும்பச் சண்டையாலே அந்த ஆலை மூடப்பட்டு இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

11-10 மணி.

குடும்பச் சண்டை அங்கே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட எவ்வளவோ சொன்னார்கள். அவரிடத்திலே நான் கேட்டிருக்கிறேன். அந்த ஆலையைத் திறக்க உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள். பல்லாயிரம் தொழிலாளர்களை அங்கே பட்டினி போட்டிருக்கிறார்கள். அந்த ஆலையைத் திறக்க, முயற்சி செய்ய வேண்டும் என்று அவர் தொழிலாளர் நல அமைச்சராக இருந்த நேரத்தில் பேசியிருக்கிறேன்.. அது அவருக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு.மோகன் எடுத்துச் சொல்லிய வாதத்திற்குப் பதில் சொல்ல வேண்டும். இராதாகிருஷ்ணா மில் மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறக்கும் முயற்சியில் அதன் நிர்வாகம் ஈடுபடவில்லை. இந்தக் காலக் கட்டத்திலே நீங்கள் எடுத்துத் தெரிவித்த கொள்கையின் அடிப்படையிலே அவரையும் கைது செய்யலாமா என்பதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நிதி ஆதாரங்கள் உள்ள தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கும், குடும்பச் சண்டை காரணமாக மூடப்படுவதற்கும் நிறைய வேற்றுமை இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்தக் காரணத்தால் ஒரு தொழிற்சாலை மூடப்பட்டாலும் அதனால் பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளர்கள்தான். அந்தத் தொழிலாளர்களுக்காகவேதான் பேச வேண்டுமே தவிர, என்ன காரணத்தால் மூடப்பட்டது என்பது முக்கியம் அல்ல.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நீங்கள் அந்த ஆலையை எடுத்து நடத்தினால் நிச்சயமாக என்னுடைய ஆதரவு உண்டு. அதற்கு மேல் இந்தப் பிரச்சினையை நான் வளர்க்க விரும்பவில்லை.

திரைப்படத் துறையிலும் இன்றைய தினம் அமைதி இல்லை. தொழிற் சங்கப் போட்டியால் தொழில் பாதிக்கப் பட்டிருப்பதாக நிறைய புகார்களும் மனுக்களும் வந்திருக் கின்றன. அங்கேகூட முதலமைச்சர் அவர்கள் கலைத்துறை யில் அமைதி நிலவ ஏற்படுத்திக் கொடுத்த முத்தரப்பு ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கின்றது. எனவே அந்த தொழிலாளர்களுடைய யூனியன்களிடையே போட்டிச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கக் கூடிய குறைகளைக் களைய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்த அர சாங்கம் ஒரு வழுக்கல் கொள்கையைப் பின்பற்றுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தியை மட்டுமே ஏற்றுக் கொண்டு ஆங்கிலத்திற்கு தடை விதிக்கும் இயக்கங்களோடு சேர்ந்த மத்திய அரசிலே அதிகாரத்தைப் பகிர்ந்து கொண் டிருக்கும் இந்த அரசு இரு மொழிக் கொள்கையைப் பற்றி இன்னும் பேசிக்கொண்டிருப்பது நியாயம்தானா?]

அதே போல் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரை யில் வேலை செய்யும் உரிமையை அடிப்படை உரிமையாக ஆக்குவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த தேசிய முன்னணி அரசு இன்னும் அதை நிறைவேற்றவில்லை. மத்திய பணி களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் புதிதாக நியமனம் செய்வதற்கு இருந்து வரும் தடையையும் நீக்கவில்லை. இரயில்வே துறை, அஞ்சல் துறை போன்ற மத்திய அரசு துறைகளில் பல்லாயிரக்கணக்கான பேர் தற்காலிக ஊழியர் களாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் தற் காலிக ஊழியர்களாக பணியில் சேர்ந்து, தற்காலிக ஊழியர் களாகவே ஓய்வுபெறும் அவல நிலை நீடித்து வருகிறது. இவற் றைப் போக்க வேண்டும். நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகளில் ஐம்பதாயிரம் பேர் தற்காலிக ஊழியர்களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அண்மையிலே சென்னை யிலே நடந்த வங்கி ஊழியர்கள் மாநாடு சுட்டிக்காட்டி யிருக்கிறது. மேலும் மத்திய அரசிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் தேவைக்கு அதிகமான பணியாளர்கள் இருக் கிறார்கள். மாநிலத்திலும் இதே நிலை நீடிக்கிறது. எனவே புதிதாக யாரையும் வேலைக்கு எடுக்கக் கூடாது என்று எட்டாவது நிதிக்குழு திட்டவட்டமாகக் கூறிவிட்டது. இந்நிலையில் இல்லாத வேலைகளைப் பிரித்துக் கொடுக்க இட

ஒதுக்கீடு செய்துவிட்டோம் என்பதும், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதால் மாபெரும் சமுதாயப் புரட்சிக்கு வழி வகுத்து விட்டோம் என்று மார் தட்டுவதும் சரிதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில் மேற்குத் தொடர் மலையில் காடுகளை வளர்க்க ரூ. 2.87 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்திலே காடுகளை வளர்க்க வேண்டும், மரங்களை வளர்க்க வேண்டும் என்ற முயற்சி, மறுபக்கத்திலே காடுகளை அழிப்பதற்கான முயற்சி நடைபெறுகிறது. ஹாரிசன் மலையாளம் பிளான்டேஷன் என்பது கொச்சியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு செயல்படுகிற ஓர் அமைப்பு. அவர்களுக்கு நீலகிரி மாவட்டத்திலே இரண்டு தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. ஒன்று 'மேஃபீல்ட் எஸ்டேட்'. 'தேவர் சோலா' இன்னொன்று 'விண்ட்ஸ்வொர்த்' சேரம்பாடி. இதிலே 'மேஃபீல்ட் எஸ்டேட்டுக்குச்' சொந்தமான சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம், காடு ஒருவருக்கு விற்கப்பட்டிருக்கிறது. பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள மரங்கள் அதிலே இருப்பதாகவும், ரோஸ்வுட், ஈட்டி போன்ற உயர் ரக மரங்கள் இருப்பதாகவும் தகவல்கள் வந்திருக்கின்றன. கூடலூர் டி.எஃப்.ஓ. வேண்டுகோளை ஏற்று கலெக்டருக்கு பரிந்துரை செய்திருப்பதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மரங்களை வெட்டி, அப்புறப்படுத்த அனுமதி மறுத்திருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. அந்தப் பகுதியிலே பரவலாக இச்செய்தி பேசப்படுகிறது. ஆனால் வன இலாக்கா உயர் அதிகாரிகள் மூலமாக அந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும், அநேகமாக அந்த முதலாளிகள் அதிலே வெற்றி பெறக்கூடும் என்றும் அந்தப் பகுதி மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நிச்சயமாக அந்த வனத்தை அழிப்பதற்கு எந்தக் காரணத்தை கொண்டும் அனுமதி அளித்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த அனுமதி கொடுக்கப்படமாட்டாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : 1970ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் கம்பெனியாக இருந்தபோது பெங்களூரை சேர்ந்த ஏர்லைன்ஸ் ஒட்டலுடைய அதிபருக்கு அந்தக் காடு விற்கப்பட்டது. அவரும் முயற்சித்தார். அந்த மரங்களை எப்படியாவது வெட்ட வேண்டுமென்று பல்லாண்டுகளாக முயற்சித்துக் கொண்டு வந்து அவர் தோல்வி அடைந்து

விட்டார். இப்போது புதிய நபருக்கு விற்கப்பட்டு அவர் வெட்டுவதற்கு முயற்சி செய்வதாக நண்பர்கள் சொல்லுகிறார்கள். எனவே எப்படியாவது இதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11–15 மணி

அதைப்போல இங்கே மாநில சுயாட்சிக்காக முதல்வர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் என்ன நடைபெறுகிறது என்று சொன்னால், திண்டிவனத்தில் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு நகராட்சித் தலைவர் அழைக்கப்படவில்லை. நகர் மன்றக் கவுன்சிலர்கள் அழைக்கப்படவில்லை. அரசாங்க முத்திரையோடு அழைப்புகள் அச்சிடப்பட்டு வெளியே வந்துள்ளன. அதிலே யார் கலந்து கொள்கிறார் என்றால் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சிமன்றச் செயலர் கலந்து கொள்கிறார். அந்த நிகழ்ச்சியிலே நகராட்சிக்குச் சேர வேண்டிய அந்தக் குடிநீர்த் தொட்டி திறக்கிற நிகழ்ச்சியினை நகராட்சித் தலைவரே இல்லாமல் நடத்தியது முறைதானா என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல முதலமைச்சர் அவர்கள் இங்கே பல உறுதிமொழிகளை அளிக்கிறார்கள். நான் சென்ற கூட்டத் தொடரில் கேட்ட போது ஒரு உறுதிமொழியை எனக்குக் கொடுத்தார்கள். இரண்டு மாவட்டங்களில் ஒரு உறுப்பினருடைய தொகுதி இடம் பெறுமானால் அவர்கள் இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளலாம். நான் இப்போது சொல்வதையே ஆணையாக ஏற்று அதிகாரிகள் செயல்பட வேண்டுமென்று மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அவருடைய அந்த அறிவிப்பிலே நான் குறை காணவில்லை. அவருடைய அறிவிப்பிலே எந்தத் தவறும் கிடையாது. ஆனால் இன்று வரையில் நாங்கள் அழைக்கப்படுவதில்லை. நான் அழைக்கப்படவில்லை...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அன்றைக்கு நான் குறிப்பிட்டதைப் போலவே உடனடியாக அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. அப்படி அழைக்கப்படவில்லை என்று தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு இருக்குமேயானால், எழுதி அனுப்பினால், உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, நானே அழைக்கப்படவில்லை. வேறு பலரும், நமது கரிய இராமசாமி போன்றவர்கள் அழைக்கப்படவில்லை. அநேகமாக நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதி கூட

இரண்டு மாவட்டங்களில் இடம் பெற்றிருக்கிறது. அவருக்கும் அழைப்புகள் வரவில்லையென்றுதான் அவரும் சொல்ல நான் கேள்விப்பட்டேன். எனவே, முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பிலே, அவர்கள் அளித்த சலுகையில் நான் சந்தேகிக்கவில்லை. நீங்கள் கொடுக்கிற ஆணையை அதிகாரிகள் எந்தளவிற்குப் பின் பற்றுகிறார்கள் என்பதற்குத்தான் நான் சொல்கிறேன். அதிகாரிகள் அப்படித்தான் இருக்கிறார்கள். அதிகாரிகளிடம் கொஞ்சம் கொக்கி போட்டு வேலை வாங்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களைப் போன்ற எதிர்க் கட்சிக்காரர்களை ஜனநாயகக் கடமையாற்ற நீங்கள் அனுமதிக்க வேண்டும். காரணம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பேச்சு மேடைக்கு நம்முடைய ஜனநாயகத்திலே ஒரு தனி மதிப்பும், மரியாதையும், இடமும் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். நாம் பேச்சு மேடைகளில் நிறைய நம்பிக்கை வைத்திருப்பவர்கள். எங்களுடைய கட்சிக்காரர்கள் பாளையங்கோட்டையில் பொதுக்கூட்டம் நடத்தினால், அந்தப் பொதுக் கூட்ட மேடையில் பேசிக் கொண்டிருந்தவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். மேடையில் இருந்த மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர், மற்றவர்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றுவரையில் தாக்கியவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிகாரிகளுக்கு நீங்கள் உத்தரவிட வேண்டும். இதுபோன்று எதிர்க் கட்சிக்காரர்கள் குரல்வளையை நசுக்குகிற முயற்சியை எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்கள் ஒப்புக் கொள்ளக் கூடாது என்று உங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல எங்களுடைய கட்சி உறுப்பினர் அவர்கள், இராதாபுரம் தொகுதியில் ஒரு சிக்கல் இருப்பதாக எனக்குத் தகவல் சொன்னார்கள். அங்கே நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 6,000 ரூபாய் என்று 'கைட் லைன் வேல்யூ' கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலம் உள்ளபடியே விற்கிற விலை, தண்ணீர் இல்லாத காரணத்தால் 500 ரூபாய்க்குத்தான் விற்கப்படுவதாகச் சொல்கிறார்கள். 500 ரூபாய் விற்கிற நிலத்திற்கு 6,000 ரூபாய்க்கு யாரும் ஸ்டாம்பு பேப்பர் வாங்க மாட்டார்கள். ஆகவே, நில மாற்றங்கள் நிகழாமல் நின்று விட்டன. இந்த நிலைமைக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*திரு. செங்கைசிவம் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, 1990—91 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே

பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் தேவையற்ற செலவுகளைச் செய்துவிட்டு இந்த மாமன்றத்தில் இந்த மதிப்பீட்டைப் படைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே. அவருடைய கவனத்திற்கும், இந்த மாமன்றத்திற்கும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிற இந்த துணை மதிப்பீடுகள் சர்க்கரைப் பேழையில் வைத்த பலாச் சுளைகளாக இருக்கின்றன என்பதை நான் எடுத்துக் கூறி, சில புள்ளி விவரங்களை வைக்க விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சிக்கு இந்த துணை மதிப்பீட்டில் ஏறக்குறைய ரூ. 10.38 கோடி ஒதுக்கப்பட்டு, அதன் மூலமாக நம்முடைய சென்னையில் உள்ள 3,600 சாலைகள் பயன்பட உள்ளன. இந்தச் சாலைகள் பேருந்து சாலைகளோடு இணைக்கப்பட உள்ளன. கடந்த 13 ஆண்டுகளில் இந்தச் சாலைகள் பற்றி சிந்திக்க மனமில்லாத அரசு இருந்த காரணத்தால் அவைகள்பெரும்பாலும் பழுதடைந்த நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றுக்காக ஏறக்குறைய 3 கோடி ரூபாயை ஒதுக்கி, 2,200 தெருச் சாலைகள் போடுவதற்கு இன்றைய தினம் அரசு திட்டம் தீட்டி அந்த வேலைகள் இன்றைக்குத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அத்தெருச் சாலைகள் மட்டுமல்ல, அவைகளை ஒட்டி கால்வாய்களை அமைத்து, மழை நீர் செல்வதற்கான எல்லாவிதமான நடவடிக்கைகளும் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

11-20 மணி

சென்னையில் ஏறக்குறைய 2,500 டன் குப்பைகள் சேருகின்றன. அவைகளில் 1,500 டன் குப்பைகள்தான் கடந்த காலங்களிலே அகற்றப்பட்டுக் கொண்டு இருந்தன. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அருமை அண்ணன் திரு. கோ. சி. மணி அவர்கள் அதற்காக முயற்சி எடுத்துக் கொண்டு, ஏறக்குறைய 100 லாரிகள் வாங்குவதற்கு 4.38 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் வேகமாக—2,500 டன் குப்பைகளை இன்றைய தினம் அகற்றுகிற ஒரு சூழ்நிலையை, இந்த 100 லாரிகள் வாங்கப்படுவதன் மூலமாக சென்னையிலே குப்பைகளே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைக்கு காரியங்கள் வேகமாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

அதுமட்டுமல்ல, ஏறக்குறைய குடிசைப் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற இடங்களில் கழிப்பிடங்கள் இல்லாமலே மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த கருணை உள்ள

அரசு, கழக அரசு, கலைஞர் அவர்கள் 200 கழிப்பிடங்களை, சென்னை மாநகரத்திலே அமைக்க வேண்டும் என்று திட்டம் தீட்டி, அதற்காக 3 கோடி ரூபாயை ஒதுக்கி அந்த 3 கோடி ரூபாயின் மூலமாக 150 கழிப்பிடங்களை, அதுவும் குறிப்பாக குடிசைப் பகுதிகளிலே அமைப்பது என்று திட்டம் தீட்டி, அந்த வேலைகள் வேகமாக இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்கும் நம்முடைய உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, 1971இல், 1,200 குடிசைப் பகுதிகள் இருந்தன. கழக அரசு பொறுப்பேற்ற பின்னால், அவைகளில் 421 குடிசைப் பகுதிகளை அகற்றி மாடி வீடுகளைக் கட்டித் தந்தது. ஆனால், தற்போது 1,417 குடிசைப் பகுதிகள் உள்ளன. 13 ஆண்டுக் காலமாக அவைகள் கேட்பாரற்ற நிலையிலே இருந்த காரணத்தாலே, அந்த மாடி வீடுகள் செப்பனிடப்படாத காரணத்தாலே இடிந்த நிலையிலே இருந்ததை மாற்ற, ஏறக்குறைய 2.64 கோடி ரூபாய் ஒதுக்கி, இன்றைக்கு அந்த மாடி வீடுகளை செப்பனிட்டது மட்டுமல்ல 1,417 குடிசைப் பகுதிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டு, 12,000 மாடி வீடுகளைக் கட்டத் திட்டமிட்டு, ஆண்டுக்கு 4 ஆயிரம் வீடுகளைக் கட்ட இந்த அரசு திட்டமிட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு மனமகிழ்ச்சியான விஷயம். இந்த நிதிநிலை அறிக்கையில் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே கடந்த ஆண்டு 2.64 கோடி ரூபாய் ஒதுக்கி செப்பனிட்டது. இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அப்படி ஒதுக்குவதினுடைய முதல் காரணம், 1971-க்கு முன்னால் கட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான வீடுகள், அவைகளைத் தவணை முறையில், வீட்டிலே குடியிருப்பவர்களுக்குச் சொந்தமாக்குவதில் பல்வேறு சிக்கல்கள் இருந்தன. அந்த வீடு யாருக்குச் சொந்தம், காரணம் 10 நாளைக்கு ஒருவர் இருப்பார், அதற்குப் பிறகு இன்னொருவருக்கு அலாட்மென்ட் வரும். குடிசை மாற்று வாரியத்தால் அவர்களுடைய வீட்டில் தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் வெளியிலே எடுத்து வீசப்படும். இந்த நிலையை மாற்றியமைக்க, இன்றைக்கு இருக்கிற குடிசை மாற்று வாரியமும், நம்முடைய முதல்வர் அவர்களும், யார் அந்த வீட்டிலே குடியிருக்கிறார்களோ, அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும் என்று ஒரு நிலையை உருவாக்கி, 1971, அதற்கு முன்னாலே இருந்த வீடுகளுக்கு 10 வருடத்திற்கு 50 ரூபாய் செலுத்தினால் போதும், ஒரு வீட்டினுடைய மதிப்பு 13 ரூபாய். ஆனால், இன்றைக்கு ஏறக்குறைய 7 ஆயிரம் ரூபாய் ஒருவர் அதிலே பயன்பெறுகிற வண்ணம், 60 சதவீதம் பயன்பெறுகிற வண்ணம் அந்த வீட்டைச் சொந்தமாக்கித் தருகிறார்கள்.

அதைப்போல 1971லிருந்து 1975 வரை கட்டப்பட்ட வீடுகளுக்கு 75 ரூபாய் செலுத்தி அதன் மூலம் ஒரு வீட்டுக்கு 6,100 ரூபாய் பயன் அடைகிறார்கள். 1975லேயிருந்து 1980 வரை கட்டப்பட்ட வீடுகளுக்கு 100 ரூபாய் வீதம் செலுத்தி அதிலே 6,400 ரூபாய் பயன் அடைகிறார்கள். ஒருவர் ஒரு வீட்டுக்கு 6,400 ரூபாய் பயன் பெறுகிறார்கள். அதுமட்டுமல்ல 1980லேயிருந்து 1990இல் கட்டப்பட்ட வீடுகளுக்கு 125 ரூபாய் என்று சொல்லி, 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு வீடு அளிக்கப்பட்டது. இதன் மூலமாக ஒருவர் ஒரு வீட்டுக்கு 5 ஆயிரம் ரூபாய் வரை பயன்பெறுகிறார்கள். தற்சமயம் 1990க்கு மேலே கட்டப்படுகிற 12 ஆயிரம் வீடுகள், ரூபாய் 40 ஆயிரம் மதிப்புள்ள வீடுகளாக கட்டப்படுகின்றன. ஆனால், பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற பணம் ஏறக்குறைய 30 ஆயிரம் ரூபாய் தான். 10 ஆயிரம் ரூபாய்க்கு மேலே ஒருவர் இந்தத் திட்டத்தாலே பயன்அடைகிறார்கள். 1971லேயிருந்து பழுதுபட்ட அந்தக் கட்டிடங்களை எல்லாம் செப்பனிட இன்றைக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கி, அவைகளைப் பழுது பார்த்து, அதற்குப் பிறகு, அவர்களிடம் ஒப்படைக்கின்ற திட்டம் ஒரு நல்ல திட்டம். ஆகவே இந்தத் திட்டம் மிகச் சிறப்புக்குரிய திட்டம். அதைத் தான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள்.

11-25 மணி

அதுமட்டுமல்ல, இன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த வரையில், ஏறக்குறைய ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் சென்னையிலுள்ள குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக 300க்கும் மேற்பட்ட லாரிகளை வாடகைக்கு அமர்த்தி, இன்றைக்குத் தண்ணீர் பஞ்சம் உள்ள லேண்டு என்று சொல்லப்படுகின்ற தண்ணீர் வராத பகுதிகளில், லாரிகளைக் கொண்டு தண்ணீர் சப்ளை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

நான் இன்னொன்றையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த காலங்களில் ஒரு தடவைக்கு லாரியை ரூ. 190க்கு வாடகைக்கு அமர்த்தினார்கள். ஆனால், நம்முடைய ஆட்சி வந்த பின்னால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் பொறுப்பேற்ற பின்னால், அந்த ரூ. 190 என்பது ரூ. 130ஆக குறைக்கப்பட்டது. இதன் மூலம்

சர்க்காருக்குக் கிடைக்கின்ற இலாபம் ரூ. 1 கோடி. கடந்த ஆட்சிக் காலத்தில் ஊழலாகப் போன பணம் ரூ. 1 கோடி. இப்படிப்பட்ட நிலைகளிலிருந்த கடந்த கால அரசை மாற்றியமைப்பதற்காக மட்டுமல்லாமல், இன்றைக்கு ரூ.10 கோடிக்கு மேலே சென்னை மாநகராட்சிக்கும், குடிசை மாற்று வாரியத்திற்கு ரூ. 2 கோடி, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 4 கோடி என்று இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கின்ற நிதியை தவறான காரியங்களுக்கு பயன்படுத்துகிறது என்று எந்த மனத்தோடு இங்கே அருமை நண்பர் பாலசுப்பிரமணியம் எடுத்துச் சொன்னாரோ என்று எனக்குப் புரியவில்லை. இங்கே அந்தத் துணை மதிப்பீட்டைப் படித்துப் பார்த்தாரா என்பது கூட எனக்குப் புரியவில்லை. 'பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டுவிட்டது' போல் அவருடைய பேச்சு இங்கே அமைந்தது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, இம்மாமன்றத்திற்கு நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இக்குடிசை மாற்று வாரியம், சென்னை மாநகராட்சி இப்படிப்பட்ட பல்வேறு நலக் காரியங்களுக்காக துணை மதிப்பீட்டில் பணம் ஒட்டு மொத்தமாக ஏழைகளுக்குப் போய் சேருகின்ற அளவிற்கு இன்றைக்கு காரியங்கள் நடைபெறுவதை எண்ணிப் பார்க்கின்றபோது நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். அதையொட்டி, ஒரேயொரு கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்னையிலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அருமை அண்ணன் லத்தீப் அவர்கள் கூட பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலே 1,400க்கும் மேற்பட்ட குடிசைப்பகுதிகளில், நகர்ப்புறத் திட்டத்தின் மூலம், தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், உலக வங்கித் திட்டத்தின் மூலம், பல்வேறு வகைகளில் அவைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், கடந்த காலங்களில் அந்த வீட்டு மனைகளுக்கான பட்டா வழங்குவதாகக் கூறி ரூ. 12,000க்கு குடிசைவாசிகளிடம் அக்ரீமென்ட் போட்டு, இன்றைக்குப் பணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த, காலங்களில் மக்கள் அதைச் சரிவர கட்டமுடியவில்லை. ஆகவே, நான் கருணை கூர்ந்து நம்முடைய குடிசைப் பகுதி மக்களுடைய கண்கண்ட தெய்வமாக விளங்குகின்ற கலைஞரை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அந்தக் குடிசைப் பகுதி மக்கள் 1,400க்கும் மேற்பட்டு சென்னை மாநகரத்தில் இருக்கிறவர்களில், ஏறக்குறைய 40 சதவீதம், 50 சதவீதம், 60 சதவீதம் அளவில் பணம் கட்டியிருக்கிறார்கள். மீதியை 'ரைட்-ஆஃப்' செய்து விட்டு, அவர்களுக்கே அதைச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1990 ஆகஸ்டு 22] [திரு. செங்கைசிவம்]

அதுமட்டுமல்ல, நம்முடைய தலைவர் சென்னை மாநகரத்திற்குமட்டுமல்ல, இலங்கையிலேயிருந்து அகதிகளாக வந்திருக்கின்ற நம்முடைய தமிழ் இன சகோதரர்கள் 70,000 பேர் இன்றைக்கு சென்னையை நோக்கி வந்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னமும் வந்துகொண்டேயிருக்கிறார்கள். அவர்களுடைய துயர் துடைப்பு நிவாரணப் பணிகளில், அவர் மட்டுமல்ல, நம்முடைய அமைச்சர்களை எல்லாம் வெகு வேகமாக ஈடுபடுத்தி காரியங்கள் முனைப்பாக செயல்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, சுதந்திர நன்நாளில், இந்த நாடு பெற்று இருக்கிற சுதந்திர நன் நாளில் ரூ. 34 இலட்சத்திற்கும் மேலாக அவர்கள் அனைவருக்கும் புத்தாடை வழங்குகின்ற ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் இப்படிப்பட்ட நல்லவைகளே அடங்கியிருக்கின்ற இந்தத் துணை மதிப்பீட்டைப் பார்த்து அனாவசியமான செலவு என்பதால் எது அவசியமான செலவு என்பதே எனக்குப் புரியவில்லை.

11-30 மணி

அவசியமான செலவாக நாட்டு மக்களுக்கு நல்லவைகளையே செய்யக் கூடிய செலவாக, சொன்னதைச் செய்கிற, செய்வதைச் சொல்கிற அரசாக இருக்கின்ற கலைஞருடைய அரசில் கடந்த ஓராண்டு, ஒன்றரை ஆண்டுகளாகத் தொடர்ந்து காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சிறந்த அரசாக ஏழை மக்கள், நலிந்த மக்கள், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் நம்பிக்கைக்கு உரியவராக மண்டல் கமிஷனைப் பெற்றுத் தந்த மாமனிதராக இன்றைக்கு திகழ்கிற நம்முடைய முதலமைச்சரைப் பார்த்தா தேவையற்ற செலவு என்று சொல்வது என நான் திரு. பாலசுப்பிரமணியத்தை சந்தேகிக்கிறேன். ஆகவே, அருமை நண்பர்களுக்கு இந்தத் துணை மதிப்பீட்டில் பலப்பல திட்டங்கள் ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவைகள் அத்தனையும் மக்களுடைய நல்வாழ்வின் பொருட்டு பயன்படுத்தக் கூடிய மதிப்பீடுகள் என்பதையும் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தாலே இன்னும் சொல்ல வேண்டும் என்று நினைத்தாலும் சொல்ல முடியவில்லை. புள்ளி விவரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் அவைகளைச் சொல்லுவதற்கு நேரம் இல்லாத காரணத்தாலே சொல்ல முடியவில்லை. இந்தத் துணை மதிப்பீடு குடிசை மக்களுடைய குறைகளை போக்குவதற்காக மட்டுமல்ல, ஏழைகளுடைய கண் கண்ட தெய்வமாக விளங்குகிறார் கலைஞர் என்பதை இது நிரூபிக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. இந்த நேரத்தில் தமிழக அரசு சென்னை அரசு பொது மருத்துவ மனையில், சிறுநீர் மருத்துவ இயல் துறைக்காக லித்தோ டிரிப்டர் சீமன்ஸ் அல்லது டார்மிஸ் என்கிற ஒரு நல்ல கருவியை வாங்கி ஏழை எளிய மக்களெல்லாம் இந்த சிறுநீரக நோய்க்கு உட்படுத்தப்படுகிறபோது பயன்படுத்தி, அந்த நோயிலிருந்து விடுபடுகிற வகையில் ஒரு நல்ல வாய்ப்பினை தந்திருக்கிற தமிழக அரசுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதோடு, அதை உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தைப் பயன்படுத்தி ஒரு சில பிரச்சினைகளைப் பற்றி அரசினுடைய கவனத்தை நான் ஈர்க்க விரும்புகிறேன். இன்றைக்கு வெளி மார்க்கெட்டில் மிகக் கடுமையான விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக அரிசி, சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை என்றும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு ஏறிக் கொண்டிருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கின்ற காரணத்தால் ஏழை எளிய மக்கள் சாதாரண மக்கள் அந்தப் பொருளை வாங்க முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளை கருத்தில் கொண்டு, ரேஷன் கடைகள் மூலமாக அத்தியாவசியப் பொருள்கள் சாதாரண மக்களுக்கு கிடைக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ரேஷன் கடைகள் மூலமாக கொடுக்கப்படுகிற பொருள்கள் எடை குறைவாக இல்லாத அளவுக்கு கொடுப்பதற்கு, அரசு பல அறிவிப்புகளையெல்லாம் செய்திருந்தாலும்கூட, இன்றைக்கு அதிலே விசேஷமான முன்னேற்றங்கள் இல்லை, என்பதை கருத்தில் கொண்டு, அதை உத்திரவாதப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி பல பொருள்களை நாம் ரேஷன் கடைகள் மூலம் வினியோகித்தாலும் கூட, அதை பயன்படுத்த முடியாத நிலையில் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. நமக்கு வாக்களித்து நம்மையெல்லாம் தேர்ந்தெடுக்கிற ஏழை எளிய மக்கள் பல ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாக்களிக்க உரிமை இருந்தாலும் கூட, ரேஷன் கார்டுகள் மூலமாக அரிசி வாங்கும் உரிமை இல்லாமல் இருக்கிறது. காரணம் அவர்களுக்கு கார்டுகள் இல்லை. புதிய கார்டுகள் கொடுக்கப்படும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அவையிலேயே அறிவித்தும் கூட, அது நடைமுறைப்படுத்தப்படாத நிலை எல்லா மாவட்டங்களிலேயும் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்கு உடனடியாக புதிய கார்டுகள் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நூர்முகமது அவர்கள் விலைவாசி உயர்வு பற்றியும், அரிசி, சமையல் எண்ணெய் உயர்வு பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். எடை குறைவாக இல்லாமல் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இங்கே அவர்கள் அரிசி வாங்குகின்ற உரிமை கூட இல்லாமல் இருக்கிறார்கள், புதிய குடும்ப அட்டைகள் வழங்கப் படவில்லை என்றும் தெரிவித்தார்கள். புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. எல்லா மாவட்டங்களிலேயும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகிறது. குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் வந்த நேரத்திலே அவைகளையெல்லாம் 100 சதவீதம் பரிசீலனைக்குப் பின்னாலே வழங்கப்பட வேண்டும் என்ற ஆணையின் காரணமாக தீர விசாரணை செய்து தான் குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. எல்லா மாவட்டங்களிலேயும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படுகிறது. வேண்டுமானால் எங்கே எவ்வளவு குடும்ப அட்டைகள் வழங்கவேண்டும் என்ற விவரத்தை தெரிவிப்பார்களேயானால் உரிய தகவல் தொடர்புடைய அதிகாரிகளுக்கு தெரிவித்து குடும்ப அட்டைகள் வழங்கப்படுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. விலைவாசி முக்கியத்துவத்தைப் பற்றி உயர்வைப் பற்றி தெரிவித்தார்கள். எல்லா நியாய விலைக் கடைகளிலேயும் அரிசி தாராளமாக கிடைக்கிறது. சமீபத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த திட்டத்தின்படி தேவைப்பட்டால் 5 கிலோ பச்சரிசி அதிகமாக வழங்கப்படலாம் என்று அறிவித்தார்கள். அதேபோல தான் சமையல் எண்ணெய்-யைப் பொறுத்த மட்டில் இப்போது எல்லா மாவட்டங்களிலேயும் ஓரளவிற்கு கிடைக்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. படிப்படியாக எல்லா அட்டைகளுக்கும் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சமையல் எண்ணெயின் விலையும், உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல அபாய கட்டத்தை அடையவில்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

11-35 மணி

*திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவைப்பட்டால் 5 கிலோ பச்சரிசியும் வழங்கப்படும் என்று சொன்னார்கள். குறிப்பாக கிராமப்புற ஏழை எளிய மக்கள் பச்சரிசியைப் பயன்படுத்த முடியாத நிலையினால் அதை வாங்க முடியாமல் இருக்கிறார்கள். கிராமப்புற ஏழைகளுக்கு குடும்பக் கார்டுக்கு வழங்குவதை புழுங்கல் அரிசியாகவே ஐந்து கிலோ அரிசி வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்ப அட்டைக்கு 12 கிலோ அன்னியில் 5 கிலோ பச்சரிசி வேண்டுமானால் பெற்றுக்கொள்ளலாம் என்பது தான் தமிழக முதல்வருடைய அறிவிப்பாகும். பச்சரிசி தேவைப்பட்டால் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்ததற்குக் காரணம் மத்திய அரசிடமிருந்து வருகின்ற—நமக்கு வருகின்ற அரிசி பச்சரிசியாகத்தான் தரப்படுகிறது. புழுங்கல் அரிசி என்பது நாம் இங்கே கொள்முதல் செய்கின்ற நெல், அது போன்ற வெளிச் சந்தையிலே வாங்கக் கூடிய அரிசி இவைகள் தான் புழுங்கல் அரிசியாக நம்மாலே வாங்க முடிகிறது. அந்தக் காரணத்தினாலே தான் புழுங்கல் அரிசி சாப்பிடுகின்ற மாவட்டங்களுக்கு முழுவதும் புழுங்கல் அரிசியாக தரக்கூடிய நிர்பந்தம் இருக்கிறது. அது போன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எல்லாம் 100 சதவிகிதம் புழுங்கல் அரிசி வழங்கப்படுகிறது. மற்றைய மாவட்டங்களுக்கு 75 சதவிகிதம், 25 சதவிகிதம் என்ற சதவிகிதத்தில் இப்பொழுது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதாவது 75 சதவிகிதம் புழுங்கல் அரிசியும், 25 சத விகிதம் பச்சரிசியும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிலே 25 சதவிகிதமும் இல்லாமல் 100 சதவிகிதம் புழுங்கல் அரிசி வழங்கப்பட வேண்டும் என்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே தான் மத்தியிலிருந்து வரக்கூடிய அந்த பச்சரிசியையும் பொதுமக்களுக்கு வினியோகம் செய்ய வேண்டும் என்கின்ற அடிப்படையிலே தான் தேவைப்பட்டால் 5 கிலோ பச்சரிசி வழங்கப்படும் என்கின்ற அரசு ஆணை இருக்கிறது. இது ஒரு தவிர்க்க முடியாத சூழல் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. செ. நூர்முகமது: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் நேற்றைய முன்தினம் இந்த அவையிலே இந்த மானியத்தை, நிதிநிலை அறிக்கையினை அறிவிக்கின்ற போது பருவ மழை தவறிய காரணத்தால் ஏற்பட்டு இருக்கின்ற வறட்சி நிலைமைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி அதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளையும் எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு வறட்சியின் காரணமாக மிகக் கடுமையான நிலைமைக்குத் தமிழகம் தள்ளப்படுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக குடிநீர்த் தட்டுப்பாடு இன்றைக்குப் பரவலாக ஏற்படத் துவங்கியிருக்கிறது. ஆகவே அதற்கு தற்காலிகமான ஏற்பாடாக ஏராளமான ஆழ்குழாய் கிணறுகள் அவசர நிலையோடு போடப்பட வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன். ஆனால் அது மாத்திரம் நிரந்தரத் தீர்வாக முடியாது. எனவே, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் கிடைக்கின்ற வகையில் அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன். அதுமட்டுமன்றி, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட பல குடிநீர்த் திட்டங்கள் கூட இன்றைக்குச்

செயல்படாமல் சீரழிந்த நிலையும் பல இடங்களில் காணப்படு கிறது. அரசு பணம் செலவழித்து இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் பலன் மக்களுக்கு கிடைக்காத நிலையி னைக் கருத்தில் கொண்டு அவைகளைச் சீர்படுத்தவும் ஆழ்குழாய் கிணறுகள் பழுதுபட்டிருந்தால் சீர்படுத்தவும் துரித நடவடிக்கை தேவை என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அதே போல தமிழகத்திலேயே குடிநீர்த் திட்டம் இல்லாத ஒரே நகராட்சியாக இருக்கின்ற பத்மநாபபுரம் நகராட்சிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தயவின் காரணமாக, கருணையின் காரணமாக ஒரு குடிநீர்த் திட்டம் இன்றைக்கு உருவாக்கப்பட்டு நிறைவேறுகின்ற தருவாயில் இருந்துகொண் டிருக்கிறது. அதிலே 1/3 மானியமாகத் தந்தால்தான் அந்தத் திட்டம் நிறைவேற முடியும் என்ற நிலையில் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணைக்காக அது காத் திருக்கிறது. அதையும் நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்கான ஆணை மாண்புமிகு உறுப்பினர் மகிழத்தக்க வகையில் ஏற்கெனவே இடப்பட்டுவிட்டது.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நகர மக்கள் சார்பாகவும், தொகுதி மக்கள் சார் பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கடன் தள்ளுபடி பிரச்சினை. இன்றைக்கு விவசாயிகளுக்கு 10,000 ரூபாய் வரையிலும் கடன் தள்ளுபடி என்று மத்திய அரசு அறிவித்தது. அது நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற கூட்டுறவு அமைப்புகளில் அமல் படுத்தப்படுகின்ற போது அதிலே பல நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. குறிப்பாக அணாவாரி சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை பல விவசாயிகளுக்கும் அதனுடைய பலன் கிடைக்க முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக குமரி மாவட் டத்தில் மிகப் பெரும்பான்மையினருக்கு அதனுடைய பலன் கிடைக்காது என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப் பட்ட நிபந்தனை எதுவும் போடப்படாமல் எல்லா விவசாயி களுக்கும் 10,000 ரூபாய் வரையிலும் கடன் தள்ளுபடி கொடுக் கின்ற வகையிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல சமீப காலமாக தமிழகத்திலே ஏற்பட்டிருக் கின்ற சில நிகழ்ச்சிகள் நமக்கு எல்லாம் கவலை தரக்கூடியதாக இருக்கின்றன. குறிப்பாக பொதுமக்களுக்கு பல நிகழ்ச்சிகளால் பாதிப்பு ஏற்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம் காரணம் என்ன என்பதை அரசு ஆய்ந்தறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக பத்மநாபா கொலையும் அதை யொட்டி நடந்த சம்பவங்களும் தமிழக மக்கள் மத்தியிலே மிகுந்த அதிர்ச்சியையும், அச்ச உணர்வையும் ஏற்படுத்தியிருக்கிறது.

11-40 மணி

குறிப்பாக, காவல்துறையினர் மத்தியில்கூட கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவைகள் குறைந்து வருகிறதோ என்று எண்ணுகின்ற வகையில் சில நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன. கவர்னர் மாளிகையில் கூட, ஒரு எஸ்.ஐ. சுடப்பட்ட நிகழ்ச்சி, அதுபோல, ராமேஸ்வரத்தில் ஒரு காவலர் மற்றொரு காவலரைச் சுட்ட நிகழ்ச்சி, இவைகளெல்லாம் மிகக் கவலை தரக்கூடியவை. இவையெல்லாம் காவல் துறையிலே ஒரு கட்டுப்பாடற்ற நிலை ஏற்பட்டிருக்கிறதோ என்று மக்கள் எண்ணுகின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. மாண்புமிகு முதல்வரவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும். அதை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, பல்வேறு இடங்களிலே வழிப்பறிகள், கொள்ளைகள் போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கின்ற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதை எல்லாம் சீர்ப்படுத்துவதற்கும், பொதுமக்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குவதற்கும் தமிழக அரசும், முதல்வர் அவர்களும் முன் வரவேண்டும். தடுப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், தொழில் தகராறுகளில் காவல்துறையினுடைய தலையீடு என்பதிலே மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. குறிப்பாக டி. வி. எஸ். தொழிலாளர் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் மருத்துவமனையில் கூட கை விலங்கோடு வைக்கப்பட்டு இருந்த நிகழ்ச்சியெல்லாம் வேதனை தரத்தக்க நிகழ்ச்சிகள். ஆகவே, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். குமரி மாவட்டத்தில் சட்ட விரோதமான முறையில் கைது செய்யப்பட்டு, அவர்கள் நீதி மன்றத்திலே ஆஜர் செய்யப்படாத நிலை தொடர்ந்து நீடிக்கிறது. சமீபத்திலே ரமேஷ் என்கின்ற ஒரு பொற்கொல்லர் கூட கைது செய்யப்பட்டு பல நாட்கள் வைக்கப்பட்டு சட்டமன்றம் கூடுகின்ற தினத்தில்தான் விடுதலை செய்யப்பட்டார்.

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது-நீதிபதி இராமமூர்த்தி அவர்கள் கமிஷனுடைய பரிந்துரையை அரசு ஏற்றுள்ளதை நடைமுறைப்படுத்தி, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்காமல் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும் இன்றைக்கு ஏராளமான தொழிலாளர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருந்துகொண்டிருக்கின்றன. குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர்கள், போனஸ் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை வைத்து நீண்டகாலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தீர்வு ஏற்படவில்லை. கைத்தறித் தொழிலாளர்கள் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் அமல்படுத்தப் படவேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். தீர்வு ஏற்படவில்லை. அதுபோல, இன்றைக்கு கைத்தறியைப்

பொறுத்தமட்டிலும், ஏராளமான துணிகள் தேங்கிக் கொண்டு இருக்கின்றன. இலவச வேஷ்டி, சேலைகள் ஆகியவற்றிற்கு நாம் கொள்முதல் செய்கின்றபோது இப்படி கைத்தறியினால் உருவாக்கப்பட்ட துணிகளைக் கொள்முதல் செய்வதை உத்தரவாதப் படுத்த வேண்டும். இன்றைக்கு விசைத்தறித் துணிகள்தான் அதில் பெரும்பாலும் கொள்முதல் செய்யப்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, அதை மாற்றி, கைத்தறித் துணிகளையே கொள்முதல் செய்யவேண்டுமென்று நாம் ஏற்பாடு செய்தால் தேங்கிக் கிடக்கின்ற கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கும் அந்தக் கைத்தறித் தொழிலாளர்களுடைய வாழ்வு மறுமலர்ச்சி ஏற்படுவதற்கும் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, மணலி உரத் தொழிற்சாலையிலே உள்ள தொழிலாளர் பிரச்சினை நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றது. தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். 5 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படவேண்டும் என்று ஒரு போராட்டத்திலே ஈடுபடுகின்ற நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, அதிலே ஒரு பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். வடலூர் சேஷசாயி தொழிற்சாலை லே ஆஃப் முடிக்கப்பட்டு மூன்று மாதத்திலே திறக்கப்படும் என்று அரசு அறிவித்தும்கூட இதுவரையிலும் இந்தப் பிரச்சினை முடிக்கப்படவில்லை. தொழிலாளர்களுடைய குடும்பங்கள் எல்லாம் பட்டினியாலே இன்றைக்கும் ஆழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, விரைந்து நடவடிக்கை எடுத்து அதை உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மின்சார வாரிய கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும் என்று நீண்டகாலமாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு நிரந்தரம் அளிக்கவேண்டும். அதுபோல, குமரி மாவட்டத்திலே சம்பளம் தரப்படாமலே 10 ஆண்டுக் காலமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். பகுதி நேர ஆசிரியர்கள் தங்களை முழு நேர ஊழியர்களாக அறிவிக்க வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே அரசு ஊழியர்களுக்கு ஆதரவான ஒரு நிலை எடுத்து உத்தரவாதமான, அவர்களுடைய வாழ்வைப் பாதுகாக்கின்ற நிலையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

அதுபோல, பராமரிக்கப்படாமல் இருக்கின்ற சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்கு உடனடியாக அதிக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை 50 சதவிகிதம் மான்யத்துடன் கொடுப்பதற்கும், தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஜிப்சம்

என்பது தட்டுப்பாடான நிலையிலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி நாட்டு மக்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகள் வருகின்றபோது, அரசு இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இந்தப் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படுவதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மீண்டும் வலியுறுத்தி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. இளம்வழுதி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆம் தேதி இந்த மாமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முதல் துணை மதிப்பீடுகளின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு வழங்கியமைக்காக தங்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

11-45 மணி

இந்த விவாதத்திலே கலந்துகொண்ட பல்வேறு கட்சிகளினுடைய உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். அவரவர்கள் தங்களுடைய கோணத்திலே அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவற்றுக்கு எல்லாம் பதில் சொல்லவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இருந்தாலும் நீங்கள் ஒதுக்கியிருக்கின்ற நேரம் மிகவும் குறைவு. எனவே, ஒன்றை மட்டும் தெளிவாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு இந்த ஆட்சியின் மீது குற்றம் குறை சொல்லிப் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைத் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த ஆட்சி பொறுப்பை ஏற்றபோது எங்களுடைய முதலமைச்சர் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகின்ற நேரத்தில் இந்த நாட்டின் நிதி நிலைமை என்ன தெரியுமா ? மைனஸ் 70 கோடி. கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி என்ற இந்த நிலையில் பொறுப்பு ஏற்ற அவர் பல்வேறு சிக்கல்களுக்கிடையே மிகவும் சாமர்த்தியமாக மிகச் சிறந்த பொருளாதார நிபுணர்கள் எல்லாம் வியந்து பாராட்டக் கூடிய அளவுக்கு 2 நிதிநிலை அறிக்கைகளை இந்த மன்றத்தில் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதேபோல் இந்த துணை மதிப்பீட்டையும் சமர்ப்பித்து இருக்கிறார்கள். இதைப் பார்க்கின்ற நேரத்தில் நான் பள்ளி மாணவனாக இருந்தபோது எங்கள் வகுப்பு ஆசிரியர் திருக்குறள் நடத்துகின்ற நேரத்தில் ஒரு திருக்குறளைச் சொன்னார்கள்.

"ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்".

என்று என்னுடைய வகுப்பு ஆசிரியர் திருக்குறள் நடத்துகின்ற போது இந்தக் குறளைச் சொல்லி விளக்கத்தைச் சொன்னார். ஆனால் அப்போது அதற்கான பொருளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இந்த நேரத்தில் வள்ளுவர் கூறிய அந்தக் குறளின் வடிவத்தை இங்கே நிதர்சனமாக என் கண் முன்னால் காண முடிகிறது. இந்த மாநிலத்தினுடைய முதல் அமைச்சராக தமிழினத் தலைவராக ஏக இந்தியாவின் வழிகாட்டியாக வள்ளுவர் கூறிய அந்த கடலை சான்றோரின் இலக்கணத்தின் படி தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை அந்த வடிவத்தில் நான் காண்கிறேன்.

எனது தலைவரின் நெஞ்சக் கடலிலே எப்படிப்பட்ட நல் முத்துக்கள் உருவாகும் என்பதற்கு கடந்த கால நிதி நிலை அறிக்கைகளும் அதைத் தொடர்ந்து வருகின்ற துணை மானியக் கோரிக்கைகளும் சான்றாகத் திகழ்கின்றன.

இந்த அவையின் கவனத்தைக் கொஞ்சம் பின்னோக்கி அழைத்துச் செல்ல விரும்புகிறேன். 1985 ஆம் ஆண்டு இந்த அவையிலே ஒரு இறுதி துணை மான்ய கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதுவும் அந்த கோரிக்கையே ஒரு நிதிநிலை அறிக்கைக்கு பட்ஜெட்டிற்கு ஒதுக்குகிற அளவுக்கு பெரியதாக இருந்து அதிலும் ஏறத்தாழ 530 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனக் கடன் என்ற வகையிலே ஒதுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட துணை மதிப்பீடுகள் எல்லாம் நிதிநிலை அறிக்கையிலே பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை மூடி மறைக்கவும் ஏதோ உபரி பட்ஜெட் சமர்ப்பித்து பெரிய சாதனையை செய்து விட்டோம் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளவும் வேண்டுமானால் பயன்பட்டிருக்கலாமே தவிர வேறு அல்ல. அதே போல் அதற்கு பின்னால் 1988-89 ஆம் ஆண்டிலே நவம்பர் திங்களிலே 419 கோடி ரூபாய்க்கு நாடாளுமன்றத்திலே தமிழ் நாட்டிற்காக வைக்கப்பட்டது.

அடுத்து பொதுத் தேர்தலுக்குப் பின்னாலே 1989 ஆம் ஆண்டு ஜனவரி கடைசி வாரத்திலே ஆட்சிப் பொறுப்பேற்ற நமது முதல்வர் மார்ச் திங்கள் கடைசி வாரத்திலே ஒரு இறுதி துணை மதிப்பீட்டை இந்த அவையிலே வைத்தார்கள். அதிலே 577 கோடி ரூபாய் ரிசர்வ் வங்கியிலே கடனுக்காக செலுத்தப் பட்டது. மத்திய அரசிடமிருந்த முன்பணங்களுக்காக 16 கோடி ரூபாய் செலுத்தப்பட்டது. ஓய்வு ஊதியச் செலவுகளை சரிகட்ட 33 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலை ஏற் படுவதற்கு காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு முன்னாலேயிருந்த ஆட்சியாளர்கள் போகிற

போக்கிலே ஒன்றுமே இல்லாமல் நாசம் செய்து விடவேண்டும் என்ற வகையிலே இருப்பவைகளை எல்லாம் இஷ்டத்திற்கு செலவு செய்து கஜானாவைக் காலி செய்துவிட்டு போவோம். இனி வருகிறவர்கள் வழி தெரியாமல் தவிக்கட்டும் என்று கருதி செய்துவிட்டுப் போன திருப்பணிகளினால் ஏற்பட்ட விளைவு தான் இவைகள் எல்லாம். ஆனால் நிதி நிர்வாகத்திலே ஒப்பாரும் மிக்காருமற்றவர் என்று கற்றறிந்தவர்களாலே பாராட்டப்படுகின்ற எங்களது முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் முதல் நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்கின்றபோது கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி என்ற நிலையிலே மிகுந்த மனவுறுதியோடு தெளிவான சிந்தனையோடு செயல்பட்டு கடந்த காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கெல்லாம் ஈடு கொடுத்து 1990 ஆம் ஆண்டு 1989-90 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டு அறிக்கைகளை வைக்கின்றபோது அது 582 கோடி ரூபாய் என்கிற அளவிலே வைக்கப்பட்டது.

அதிலே அரசு ஊழியர்களின் ஊதிய உயர்வுக்கு 120 கோடி ரூபாயும், வறட்சி நிவாரணத்திற்காக ஏறத்தாழ 49 கோடி ரூபாயும் மற்றும் கல்விக்காகவும், பொது சுகாதாரத்திற்காகவும் இந்த தொகைகள் செலவிடப்பட்டன. இன்றைய தினம் இந்த முதல் துணை மதிப்பீடு 244.03 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது. இதிலே ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கிய கடனுக்கு 170 கோடி ரூபாய் திருப்பித் தர வகை செய்யப்பட்டுள்ளது. இந்த துணை மதிப்பீட்டில் மூலதனக் கடன் என்ற வகையிலே 178.75 கோடி ரூபாய் தான் இடம் பெற்றிருக்கிறது. இது இந்த மாநிலத்தின் நிதி விவகாரங்களை எப்படிப்பட்ட நிதி நிர்வாக வல்லுநர் கையாள்கிறார் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இதில் முக்கியமான ஒரு அம்சம் குடிநீர் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இந்த அரசு $19\frac{1}{2}$ கோடி ரூபாயை அனுமதித்திருக்கிறது. இதிலே ஆழ் குழாய் கிணறுகளை அமைப்பதற்கு $7\frac{1}{2}$ கோடி ரூபாயும், மாநிலத்தின் மற்ற பகுதிகளிலே குடிநீர் திட்டங்களை நிறைவேற்ற நான்கு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

11-50 மணி

சென்னை நகரத்திலே குடிநீர் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ள மெட்ரோ வாட்டர் போர்டுக்கு 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகர மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் கிடைப்பதற்கு இந்த 8 கோடி ரூபாய் பயன்பட இருக்கிறது என்பதை எண்ணுகிறபோது என்னுடைய உள்ளத்திலே உற்சாகம் ஊற்றெடுக்கிறது. ஊற்றெடுக்கும் உற்சாகம் ஒன்றி உணர்வென்னும் வெள்ளமாகப் பிரவாகிக்கிறது. இந்த முயற்சி சென்னை நகர மக்கள் துயர்தீர்க்கும் முயற்சி, குடிநீருக்காக மக்கள் படும் அல்லலை இது தவிர்க்கும் என்று எண்ணுகிற

போது நானும் இந்த நகரத்துவாசி என்ற முறையில் இந்த அரசைப் பாராட்ட அருட்பெருஞ்சோதி வள்ளலாரிடம்தான் வார்த்தைகளைக் கடன் வாங்க வேண்டியவனாக இருக்கிறேன். 'கழனியிலே காய்ந்த பயிரைக் காக்க வந்த கார்கால மழையாக' நம்முடைய முதல்வரின் இந்தத் துணை மதிப்பீடு அமைந்துள்ளது.

அடுத்து, சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகராட்சிகளிலே அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இந்த அரசு தனியாக திட்டம் ஒன்றைத் தீட்டி அதற்காக நிதி ஒதுக்கீட்டையும் செய்திருக்கிறது. சென்னையிலே சாலைகளைச் செப்பனிட 3 கோடி ரூபாய்; துப்புரவுப் பணிகளைத் துரிதமாகச் செய்திட லாரிகளை வாங்க வேண்டும். அதற்காக 4.38 கோடி ரூபாய். அதுபோலவே விளக்கு, தண்ணீர் வசதிகளோடு கூடிய கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு 3 கோடி ரூபாய் என்று சென்னைக்கு 10.38 கோடி ரூபாயிலே திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதேபோல, மதுரை, கோவைக்கும் பல கோடி ரூபாய்கள் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை ஆதாரங்கள் தாராளமாக இல்லாத நிலையிலும் மக்களுடைய நலனுக்காக, மக்களுடைய தேவைகளை உணர்ந்து இந்த அளவு நிதி ஒதுக்கியிருப்பது எதைக் காட்டுகிறது என்றால், இந்த அரசு மக்கள் நலனில் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. இதை விமர்சிப்பவர்கள் அரசியல் கண்ணோட்டத்தோடு எப்படி வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். அது அவர்களுடைய உரிமை. ஆனால் " Rose by any name smells and sweet " என்று ஷேக்ஸ்பியர் கூறியதைப்போல ரோஜாவை எந்த பெயரிட்டாலும் அது மணக்கும், இனிக்கும். எனவே, யார் எப்படி விமர்சித்தாலும் இது மக்கள் நலனுக்காக ஆற்றுகிற பணியே தவிர வேறு அல்ல.

மேலும் பல ஆண்டுக் காலமாக தேர்தலே நடத்தப்படாமலிருந்த மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துகிற இந்த அரசை பாராட்டுகிற பெரிய மனதை நாங்கள் எதிர் தரப்பிலிருந்து எதிர்பார்க்கவில்லை. ஏன் என்றால், அவர்கள் காலத்தில் அவர்கள் செய்யாத அந்த நல்ல காரியத்தை இந்த அரசு செய்கிற போது, அதை மனமார பாராட்டுகிற பக்குவம் எதிர்கட்சிகளுக்கு இருந்திருக்குமேயானால், குடிநீருக்கும் மாநகராட்சியின் அடிப்படை வசதிகளை பெருக்குவதற்கும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிற முயற்சிகளை நிச்சயம் பாராட்டுவார்கள்.

மேலும் சென்னையின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிற ரயில்வே துறையினருக்கு 18 எக்டேர் நிலத்தை வழங்க அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளை நான் மனமாரப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இவைகளுக்கெல்லாம் மேலாக, இதுவரை ஏட்டிலும் எழுத்திலும் மட்டுமே இடம் பெற்றிருந்த ஒரு பெரும் புரட்சியை நாட்டிலே நடைமுறைப்

படுத்துகிற வகையிலே, எங்களுடைய தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், குடியிருப்பவனுக்கே வீடு சொந்தம் என்கின்ற கொள்கையை முதல் கட்டமாக அமல்படுத்தும் வகையிலே குடிசைமாற்று வாரியத்தினாலே கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி வீடுகளில் குடியிருக்கிற மக்களுக்கே அந்த வீடுகளைச் சொந்தமாக்குகிற திட்டத்தை வகுத்துள்ள இந்த அரசு மிகுந்த பொறுப்புணர்வோடு அந்த வீடுகளையெல்லாம் பழுது பார்த்துத் தருவதற்கும் பணம் ஒதுக்கியிருக்கிறது. எங்கள் முதல்வருடைய பண்பை, பரந்த மனதைப் பாராட்டாவிட்டால் இந்த மண்ணிலே வேறு எதை இவர்கள் பாராட்டப்போகிறார்கள் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்படி தன்னுடைய எண்ணமெல்லாம், தன்னுடைய சிந்தனை அணு ஒவ்வொன்றிலும் இந்த நாட்டின் ஏழையெளிய மக்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிற இந்தத் தலைவர் மக்களுக்காக திட்டங்களைத் தீட்டி அவர்களுக்காகத் தருகின்ற அந்த நன்மைகள் மூலம் பயன் அடைகின்ற அந்த மக்கள், அவர்கள் 100 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ வேண்டுமென்று வாழ்த்திகொண்டிருக்கிறார்கள்; எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தலைவரை எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் குற்றம் சொல்லட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனால் செய்கின்ற நல்லவைகளைப்பாராட்டிச் சொல்லவேண்டும். அதை விடுத்துவிட்டு நூறாண்டுக்காலம் இவர் இருக்கவேண்டும்; எதையெதையோ அனுபவிக்க வேண்டுமென்று இவர்கள் பத்தினித் தெய்வங்களைப்போல் சாபம் இடுகிறார்கள். அவர்களுக்கு இந்த மாமன்றத்தில் தங்கள் மூலமாகத் தெரிவிக்கிறேன். திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே, வைக்கம் போராட்ட மாவீரர் தந்தை பெரியார் அவர்கள் சாக வேண்டுமென்பதற்காக அந்த சமஸ்தானத்து மகாராஜா 48 நாட்கள் நம்பூதிரிகளை வைத்து ஒரு பெரிய யாகம் நடத்தினார். கடைசியில், என்ன நடந்தது தெரியுமா? 48 ஆவது நாளான கடைசி நாளன்று அந்த யாகத்தை நடத்திய சமஸ்தானத்து மகாராஜா செத்துப் போனாரே தவிர, தந்தை பெரியார் அவர்கள் 95 ஆண்டுக்காலம் இந்த நாட்டிலே வாழ்ந்து வரலாறு படைத்தார் (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோன்று என்னுடைய தலைவர், எதையும் தாங்கும் இதயம் கொண்ட தலைவர், தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இத்தகைய சுடு சொற்களுக்கு அசைந்து கொடுப்பார் என்று யாராவது எதிர்பார்ப்பீர்களேயானால் அவர்களுக்கு நான் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை.

இறுதியாக இந்தத் துணை நிதிநிலை மதிப்பீட்டைப் பற்றிச் சொல்கின்ற நேரத்தில் இதில் முழுக்க முழுக்க ஏழையெளிய மக்களுக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அன்று மாவீரன் லெனின் சொன்னானே, ''நான் அரண்மனை உப்பரிகையிலே உலாவிக் கொண்டிருந்தாலும், அங்கு சைபீரியா பாலைவனத்தில் இருக்கின்ற மக்களைப் பற்றித்தான் என் சிந்தனை

11-55 மணி

இருக்கிறது'' என்று. அதேபோல் என்னுடைய தானைத் தலைவன் இன்றைக்கு கோட்டையிலே உட்கார்ந்திருந்தாலும், —உல்லாச சுகபோகங்களை ஒரு காலத்திலே அனுபவித்து வந்தார் களே அதுபோல இல்லாமல்—தனது சிந்தனை அனு ஒவ்வொன்றிலும் இந்த நாட்டு மக்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்காக வழங்கப் பட்ட இந்தத் துணை மதிப்பீடு ஒரு வரப் பிரசாதம்; இந்த வரப் பிரசாதத்தை வழங்கிய எங்கள் காவல் தெய்வம் நூறாண்டு, நூறாண்டு, கோடானு கோடி ஆண்டுகள் வாழ்ந்து, சரித்திரம் படைக்க வேண்டுமென்று தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன்: சட்டப் பேரவை துணைத்தலைவர் அவர்களே, துணை நிதிநிலை மதிப்பீட்டில். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை நான் இங்கே முன்வைக்க ஆசைப்படுகிறேன். காரணம், ஒரு எதிர்க்கட்சி வேண்டாமா? (சிரிப்பு) எதிர்க்கட்சிப் பணியைச் செய்ய வேண்டாமா? எதிர்க்கட்சி இல்லாவிட்டால், ஜனநாயகமே இருக்காது. ஆகவே, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்க்கட்சியாக இன்றைக்குச் செயல்படுவதற்கு, முதல் துணை மதிப்பீடு ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. ஆகவே, என்னுடைய கருத்துக் களை முன்வைக்க ஆசைப்படுகிறேன்.

நம்முடைய முதலமைச்சரவர்கள், சுமார் 170 கோடி ரூபாய் 'ஓவர் டிராப்ட்'—ஆக 'ரிசர்வ் வங்கியில்' செலுத்த வேண்டும் என்று இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் நிதிநிலை எப்படி இருக்கிறது? இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் எல்லா அலுவலகங்களிலும் எல்லாத் துறைகளிலும் முதல் தேதி சம்பளத்தை வழங்குவதற்கு நம்முடைய கையில் கையிருப்பு நிதி இருக்கிறதா என்பதையெல் லாம் தெரிந்து கொள்வதற்கு ஆசைப்படுகிறேன். நிதிநிலையைப் பெருக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு முயற்சிகளை முதலமைச்சரவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். நிதிநிலையைப் பெருக்கும்போது, சாதாரண சாமானிய மக்களுடைய நிதியைப் பெற்று—வரியைப் பெற்றுத்தான் நம்முடைய தமிழக அரசு இன் றைக்கு ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. ஆனால், சில நேரங் களில் முதலமைச்சருடைய நிவாரண நிதி என்று யாராவது ஒன்று கொடுப்பார்களேயானால், அதை ஏற்று நம்முடைய ஆட்சி நடைபெற வேண்டாம் என்பதை நான் இங்கே ஆலோ சனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வரியைப் போட்டு நாம் பணத்தைப் பெருக்க வேண்டும். நமக்கு வர வேண்டிய நிலுவையை நாம் மீண்டும் பெறுவோம்.

இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில், ஓட்டல் பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும், சாதாரண சாமானிய மக்கள் கிராமங்களிலிருந்து வரும்போதுகூட ஓட்டலிலேதான் அதிகமாக சாப்பிடுகிறார்கள். ஆனால், அந்த ஓட்டல் முதலாளிகள் கொடுக்கக் கூடிய நிவாரண நிதியை முதலமைச்சர் அவர்கள் பெற்றிருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணமாகும். . . (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டல் பண்டங்களினுடைய விலையைக் குறைப்பதற்கு, குழு நியமிக்கப்பட்டு, அந்தக் குழுவில் ஓட்டல் உரிமையாளர்களுடைய பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோர் பங்கு பெற்று, இறுதி முடிவுக்கு வந்து, இன்னும் ஓரிரு நாட்களில் விலை அறிவிக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : நான் சொல்வதெல்லாம் அவர்களுடைய வேண்டுகோள் நம்முடைய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கும்போது, அவர்களிடமிருந்து நிதியைப் பெறுவது நமக்குத் தேவையில்லை. நீங்கள் வரியை உயர்த்துங்கள். இன்னும் சொல்லப் போனால் கண்டிப்பாக வசூலியுங்கள். இன்னும் சொல்லப்போனால், 'கோயர்சிவ் மெத்தட்'— சட்டப்படி (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏழை எளியவர்களுக்கும், சிலருக்கு இருதய அறுவை சிகிச்சை போன்ற உதவிகளுக்காகவும், திடீரென்று ஏற்படுகின்ற விபத்துக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும், 'முதலமைச்சர் நிவாரண நிதி' என்ற ஒரு நிதி—இன்றல்ல—தொடர்ந்து பல ஆண்டுகளாகவே, எல்லா ஆட்சிகளிலும் இருந்து வந்திருக்கிறது. அதே போல், மத்தியிலும் 'பிரதமர் நிவாரண நிதி' என்ற ஒன்று இருக்கிறது. அதற்கு தாராள மனது உடையவர்கள் நிதியை வழங்குவது வழக்கமாக இருந்து வருகிறது. நம்முடைய நண்பர் திரு. பாண்டியன் அவர்களே தலைவராக ஏற்றுக் கொண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலேகூட, ஓட்டல் சங்கத்தின் சார்பாக இதுபோல், ரூ. 10 லட்சம், 20 லட்சம் என்று நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

12-00 மணி

இப்படி வழங்கப்படுகிற நிதிகள் எல்லோரிடமும் வசூலிக்கப்படுவது ஒரு பேரத்திற்காக அல்ல, ஒரு உதவிக்காக, முதலமைச்சர் நிவாரண நிதிக்காக வழங்கப்படுகிற நிதியே அல்லாமல் வேறு எந்தப் பேரமும் அதிலே கிடையாது. அப்படிப்பட்ட நிதியை வாங்கிக் கொண்டு அதற்காகப் பேரம் பேசி நாங்கள் யாரும் சோரம் போய்விட மாட்டோம் என்ற நம்பிக்கையைத் திரு. பாண்டியன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நோக்கத்தைக் குறை சொல்லவில்லை. நிவாரண நிதியின் நோக்கம் நல்ல நோக்கம். அது ஏழை எளிய மக்களுக்காகத்தான். ஆனால் அவர்களிடமிருந்து நாம் கொஞ்சம் வேகமாக அதாவது 'கோயர்சிவ் மெத்தட்' என்ற அளவுக்கு எப்படி வசூலிக்க முடியுமோ அப்படி அதை வசூலிப்போம். நான் ஏற்கெனவே பேசிய சில கருத்துக்கள்தான் இவை. ஒன்றரை ஆண்டு காலத்திற்கு முன்பு பேசியதை நான் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மில் முதலாளி அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணம் பல கோடி ரூபாய் என்று இங்கே முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எல்லோரும் அதை ஆதரித்தோம். அதை ஏன் வசூலிக்கவில்லை? ஏன் அந்த மில்களை நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது? எத்தனை கல்லூரிகளை எடுத்துக் கொள்கிறோம். எனவே ஒரு பெரிய கடனாளி ஏன் மில் முதலாளியாக இருக்கவேண்டும்? சாதாரண மனிதன் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்தவில்லை என்றால், ஒரு ஏழை விவசாயி, ஐ.ஆர்.டி.பி. கடனை வாங்கியவன் அதைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்றால் வண்டி மாடு போய்விடுகிறது, வீட்டில் உள்ள பாத்திர பண்டங்கள் எல்லாம் போய்விடுகின்றன. ஏன் அந்த மில் முதலாளியினுடைய மில்லை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை? அதற்கு என்ன சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமோ அதைக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய அடுத்த வேண்டுகோளாகும். காரணம் எல்லா ஆட்சியிலும் பணம் படைத்தவர்களும், வசதி படைத்தவர்களும் தப்பித்துவிடுகிறார்கள். எல்லா ஆட்சியிலும் அவர்கள் யாரையாவது பிடித்துத் தப்பித்துக் கொள்கிறார்கள். அவர்களை விட்டுவிடாதீர்கள். மின் கட்டணத்தை வசூலியுங்கள். அதன்மூலம் 30 அல்லது 40 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எண்ணுகிறேன். அது ஒன்று.

அடுத்து, சென்னை மாநகரத்தில் பல மாடிக் கட்டடங்கள் இன்றைக்கும் எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கும் மாடி, மாடியாகக் கட்டடங்கள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எப்படி அதற்கு உத்தரவு வழங்கினீர்கள்? இன்றைக்கு நம்முடைய சென்னைக்கு பல மாடிக்கட்டடங்கள் தேவையா? நாம் பம்பாயாக மாறிவிடக்கூடாது. நம்முடைய சாதாரண மக்கள் இன்றைக்கு சென்னையிலே வசிக்க வேண்டுமென்றால் அவர்களால் வாடகை கொடுக்க முடியவில்லை. வீடும் வாங்க முடியவில்லை. ஆகவே எப்போது கொடுத்தீர்கள்? இந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் மாடிக் கட்டடங்கள் எப்படி உயர்ந்தன என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சான்று. ஒருவர் பல மாடிக் கட்டடம் கட்டுகிறார் என்றால்—நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரி லேயே குறிப்பிட்டேன்—அவரே எம்.எம்.டி.ஏ. பெர்மிஷன் கொடுக்கிறார். யார் கட்டினாரோ அவரே. ஃபோர்ஜரி. அவரே ஹவுஸிங் போர்ட் பெர்மிஷன் கொடுத்திருக்கிறார். வேறு எங்கும் இல்லை. என்னுடைய வீட்டிற்கு எதிரிலேயே கட்டி இருக்கிறார். பெயரைச் சொல்ல விரும்பவில்லை. முதலமைச்சர் கையில் அதைக் கொடுத்துவிடுகிறேன். The document is forged one. The original N.O.C. issued by the Tamil Nadu Housing Board was not produced for verification. The M. M. D. A. permission was also a forged one. ஆகவே அரசாங்கம் எங்கே நடக்கிறது? அவனே அவனுக்கு வீடு கட்ட பெர்மிஷன் கொடுத்துக்கொள்கிறான். அவனே மாடி, மாடியாகக் கட்டுவதற்கு ஹவுஸிங் போர்டினுடைய அந்த உத்தரவை வழங்கிக் கொள்கிறான்.

இந்த ஒரு இடத்தில் மட்டும் இல்லை. சென்னையிலே பல கட்டிடத்தை இந்த நபர் கட்டி இருக்கிறார், குறிப்பாக அடையார். பல்வேறு வழக்கறிஞர் நண்பர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். இந்த நபர் எந்தக் காலத்திலும் உத்தரவே வாங்கியது கிடையாதாம். தானாக உத்தரவு போடுவது, தானே எம்.டி., தானே சேர்மன் ஹவுஸிங் போர்டுக்கு. இப்படி செய்துகொண்டிருக்கிற அவர்மீது ஒரு ஃபோர்ஜரி வழக்கு மட்டும் இன்றைக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அவரைப் பிடித்து முதலிலே உள்ளே போட்டிருக்கவேண்டும். ஏழைகளை எல்லாம் காலை 11-00 மணிக்கு பிடித்து ஸ்டேஷனில் போட்டு, சந்தேகக் கேஸிலே போட்டு.. (குறுக்கீடு) திருமதி காந்திமதி பிரபாகர், என்னுடைய நோட்டீஸ் இது. இதை முதலமைச்சர் படிக்கலாம். இதை நான் ஒரு சான்றாகச் சொல்வதற்குக் காரணம் பலபேர் இன்றைக்கு அரசாங்கத்தை மதிப்பதில்லை. என் கையில் பணம் இருக்கிறது; நான் எதையும் செய்வேன் நான் யாரையும் விலைக்கு வாங்குவேன், யாரும் என்னை எதுவும் செய்ய முடியாது என்ற கொழுப்பு இன் றைக்கு சில பணம் படைத்தவர்களிடம் இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. ஏன் இதை வேகமாகச் சொல்கிறேன் என்றால் இன்றைக்கு பஞ்சாயத்து இடங்களில், நகராட்சி இடங்களில் என்க்ரோச்மென்ட் செய்தவுடனே நீக்கிவிடு கிறோம். இந்த பலமாடிக் கட்டடங்கள் கட்ட ஒன்றரை ஆண்டுக்காலத்தில் எத்தனை உத்தரவுகள் வழங்கப்பட்டன? ஏன் வழங்கப்பட்டன? இன்றைக்கு நம்முடைய நாட்டில்....

12-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் என்னிடத்தில் கொடுத்த இந்தத் தாளை எல்லோரும் ஏதோ சந்தேகத்தோடு பார்த் தார்கள். அவரே அதை முழுவதையும் படித்திருந்தால்

தெரிந்திருக்கும். "This was detected and a demolition notice was issued on 4-11-1989 for removing the unauthorised construction. A second demolition notice was issued on 29-3-1990 and the construction reached Second floor roof level. Meanwhile, Tmt. Gandhimadhi Prabhakar submitted a revised plan on 6-9-1989 for a commercial Complex in the site under reference. This plan was examined and revised on 2-4-1990 for the following reasons :(1) The document is a forged one. (2) Original N.O.C. issued by the Tamil Nadu Housing Board was not produced for verification. "இதற்கு மேலே தான் முக்கியம்.... " The demolition of the unauthorised construction could not be taken since the applicant has obtained an interm injunction from the High Court.. எதற்கெடுத்தாலும் நீதிமன்றத்தில் 'ஸ்டே' கொடுத்து விடுகிற காரணத்தால்—ஏழை, பணக்காரன் என்று சொன்னார்கள்—ஏழையால் ஸ்டே வாங்க முடியவில்லை. பணக்காரர்களால் வாங்கமுடியும். அதுதான் காரணம்.

திரு. பி. எச். பாண்டியன் : இப்போது என்ன பண்ணியிருக்கிறார்கள் என்றால் ' For Sale ' என்று அந்தக் கட்டிடத்தில் போட்டிருக்கிறார்கள். இப்போது அந்தக் கட்டிடத்தில் போர்டு மாட்டப்பட்டிருக்கிறது. போலீசார் வேகமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். கடைசியில் எழுதியிருக்கிறேன்.

நீதிமன்றத்தில் 'ஸ்டே' வாங்குவதாகச் சொன்னார்கள். நம்முடைய ஹைக்கோர்ட்டில் பப்ளிக் பிராசிகியூட்டரே கிடையாது, கவர்ன்மெண்ட் பிளீடரே கிடையாது. நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு எங்கேயிருந்தாவது யாரையாவது கொண்டுவந்து போட்டுவிடக் கூடாது. தமிழ்நாட்டிலிருந்து பிற்படுத்தப்பட்டவர்களைக் கொண்டுவரவேண்டும். யாரை வேண்டுமானாலும் போடுங்கள். காரணம் சில வேளைகளில் காலதாமதம் ஆகும்போது, உள்ளே சிலபேர் நுழைவதற்கு வருவார்கள். அவர்களை உள்ளே விடக்கூடாது என்பதுதான் வேண்டுகோளாகும். பப்ளிக் பிராசிகியூட்டர் இல்லாமல் இதுவரை இருந்தது கிடையாது. காரணம் பொறுப்பேற்கவேண்டிய பப்ளிக் பிராசிகியூட்டர் இல்லாமல் இருக்கக்கூடாது. பல்வேறு பெரிய பெரிய வழக்குகள் ஹைக்கோர்ட்டில் இருக்கின்றன. அதுபோலத்தான் கவர்ன்மென்ட் பிளீடரும். அவர் இன்றைக்கு அங்கே இருந்திருப்பாரேயானால், இதுபோன்ற ஸ்டே-க்களை எல்லாம் உடனே உடைத்திருப்பார். இதை ஏற்கெனவே சென்றமுறையும் பேசியிருக்கிறேன்.

மூன்றாவதாக, கிரானைட்-டில் சரவணன் என்ற அதிகாரி எம்.டி.யாக இருந்தவர். பலமுறை அவரைப்பற்றி விவாதித்திருக்கிறோம். பலமுறை முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நம்முடைய பி. எச். பாண்டியன் அவர்கள் பழைய காலத்து பாண்டியன் தர்பார் நடப்பதாக எண்ணிக்கொண்டு பேசுகிறார்கள். அப்போது திடீரென்று ''கோவலன் தலையைக் கொண்டுவா'' என்று உத்தரவிட்டிருக்கலாம். இப்போது அதுபோல முடியாது. அவர் சொல்கிற சரவணன் மீது விசாரணை நடைபெறுகிறது. அவர் மீது சொல்லப்பட்டிருக்கின்ற தவறுகளுக்கு, அயல் நாட்டிலும் தொடர்பு இருக்கிற காரணத்தால், அதையும் விசாரிக்கவேண்டியிருக்கிறது. அந்த விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அவரை யாரும் விட்டுவிடுவதாக இல்லை. நிச்சயமாக அந்த விசாரணை தொடர்ந்து நடைபெறும். தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : அதையேதான் 1989-லும் சொன்னீர்கள். அன்றும் இதையேதான் சொன்னீர்கள். ஒன்றரை வருஷம் ஆச்சு. இப்படிப் பட்டவர்களை விடலாமா? எத்தனை பேரை நாம் பிடித்து உள்ளே போடுகிறோம்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : ரொம்ப நாள் அந்த ஆட்சியில் விட்டுவிட்டீர்கள். ரொம்ப நாள் கொழுக்க விட்டு விட்டீர்கள். ஒரேயடியாக அடிக்க முடியாது. சட்டப்படிதான் அடிக்க முடியும். செய்தது பூரா நீங்கள். நடவடிக்கை எடுப்பது நாங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : சாதாரணமாக ஏதோ ஒரு வி.ஏ.ஓ. காண்டக்ட் சர்டிபிகேட், கம்யூனிட்டி சர்டிபிகேட் கொடுப்பதற்காக ரூ. 100 கேட்டான் என்பதற்காக அவனைப் பிடித்து உள்ளேபோட்டு அவன் குடும்பம் அழிந்து போய் விடுகிறது. ஆனால் இந்த சரவணன்....ஒன்றரை வருஷமாச்சு இன்னும் $3\frac{1}{2}$ வருஷம் தான் நாம் இருப்போம். இதை வேகமாகச் செய்யவேண்டும். அதற்காகச் சொல்கிறேன். இப்பேர்ப்பட்ட அதிகாரிகள் தப்பித்துவிடுவார்களானால், நாட்டில் நீதியின் மீதும், சட்டத்தின்மீதும் மக்களுக்கு நம்பிக்கை இருக்காது என்பதற்காகத்தான் சொன்னேன். நான் இன்னும் அவரைப் பார்த்ததே கிடையாது. முகமே தெரியாது. நான் முகம் தெரியாதவர்களைப் பற்றித்தான் சட்டமன்றத்திலே குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறேன். அதைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் சபாநாயகராக இருக்கும்போதுகூட சில நடவடிக்கைகளை எடுக்கும்போது அவர்களுடைய முகங்களைக் கூட நான் பார்த்தது இல்லை. இன்றுவரை ஆனந்தவிகடன் ஆசிரியரை எனக்கு யார் என்று தெரியாது. நான் அவரைப் பார்த்ததே கிடையாது. முகமும் தெரியாது. அறிமுகம் இல்லை. இதை நான் எதற்காக சொல்கிறேன் என்றால் இவ்வளவு பெரிய தவறை, நம்முடைய அரசுக்கு இழப்பை உண்டாக்கக்கூடிய ஓர் அதிகாரியை விட்டுவிடக் கூடாது. யாரையும் பாதுகாத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அதையும் சொன்னேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

12-10 மணி

ஓட்டல் கட்டுவதற்காக உயர்நீதிமன்றத்தில் ஒருவர் ஸ்டே வாங்கினார். என்.ஆர்.ஐ. அவரும் சொல்லியிருக்கிறார். அரசாங்கத்தோடு சுமுகமாகப் போக வேண்டும் என்பதற்காக நான் வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டேன் என்று சொல்கிறார். சுமுகமாக ஆகிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். காரணம், நேற்றைய தினம் 'பேரசைட்ஸ்' பற்றி சொன்னேன். இங்கே சாப்பிட்டவன் அங்கே வருவான். அந்த மாதிரி நிலைமை வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் அழுத்தமாகச் சொல்கிறேன்.

மற்றொன்று. நிலச் சீர்திருத்தச் சட்டம். இங்கே ஏற்கெனவே கொண்டு வந்திருக்கிறோம். நாமே இங்கே நிறைவேற்றியிருக்கிறோம். எத்தனையோ கல்லூரிகளில் 'கேப்பிடேஷன் பீ' வாங்குவதாகச் சொல்கிறார்கள். இன்று அது குறித்து நடவடிக்கை எடுத்து ஒரு புதிய கல்லூரியையே ஆரம்பித்திருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். திரு. விஸ்வநாதன் கோர்ட்டிலே என்னைப்பார்த்துக் கேட்டார். நீங்கள் கூட என்னை எதிர்த்துப் பேசுகிறீர்களா என்று கேட்டார். ஆமாம் என்றேன். உங்களுக்குக் கிடைக்காது நண்பரே என்று சொன்னேன். கொள்கை என்றால் கொள்கை தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு 1 மணிக்கு ஓட்டு எடுப்பு இருப்பதால் விரைவில் பேசி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எச். **பாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இங்கே பேசுகிறேன். எதிர்க் கட்சிக்கு ரொம்ப நேரம் உண்டு. அதாவது இதை நான் மீண்டும் வலியுறுத்துவதற்குக் காரணம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கிறதே, அங்கே 'கேப்பிடேஷன் பீ' வாங்குவது இல்லையா ? அங்கே அரசாங்கம் 'கோட்டா' போட்டிருக்கிறதா ? கிடையாது. அதுபோல, எடுத்தால் நாம் எல்லாவற்றையும் எடுத்துவிட வேண்டும். யார் என்று பார்க்க வேண்டாம். தெரிந்தவர் தெரியாதவர் என்று வேண்டாம். வேண்டியவன் வேண்டாதவன், தெரிந்தவன் தெரியாதவன் என்று எல்லாம் கிடையாது. அதுபோல நில உச்சவரம்புச் சட்டம். அடையாறு ஹவுசுக்கு அது போச்சா ? அங்கே அது போக வேண்டாமா ? அவர்களிடம் எவ்வளவு நிலம் இருக்கிறது! அப்படியானால் நாம் பணக்காரர்களை விட்டு வைப்பதாக ஒரு நிலை உருவாகிவிடும் என்பதற்காகத்தான் சொன்னேன். ஆகவே, இவற்றை எல்லாம் வேகமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் வேகமாகச் செய்வார் என்று நான் எண்ணுகின்றேன்.

இங்கே 'கஜானா காலி' என்று ஒரு வார்த்தை சொன்னார். பொருளாதாரம் படித்தவர்களுக்குத் தெரியும். எந்த அரசாங்கத்திலும் நம்முடைய வீட்டில் பணத்தை வங்கியில் போட்டு வைத்திருப்பதுபோல வைத்திருக்கமாட்டார்கள். ஆண்டுதோறும் ஏற்படுகிற ரெசோர்சஸ், எக்ஸ்பென்டிச்சர், பேலன்ஸ் ஷீட் என்பதுதான் பட்ஜெட் என்பது. எந்த அரசாங்கமும் ஆண்டு இறுதியில் பாங்கியில் 500 கோடி ரூபாய் வைத்திருக்காது. மார்ச்டு ஏப்ரல் என்பது பினான்சியல் இயர். இதற்குள் தான் ''வீ பிரிப்பேர் பேலன்ஸ் ஷீட்'' அந்த அளவுக்குத்தான் பார்க்க வேண்டுமே தவிர நாம் பணமே இல்லையென்று சொல்லக் கூடாது. இன்றைக்கு நம்முடைய நிலைமை எப்படி இருக்கிறது? பினான்ச்யல் எக்சிஜென்சி எமர்ஜன்சி இன்றைக்கு இருக்கிறது. முதல் துணை மதிப்பீடு முதல் 3 மாதத்திலேயே வந்துவிட்டது. ஆகவே, எப்படி நாம் நிதிநிலையை உயர்த்தப் போகிறோம் உயர்த்துவதற்கு எல்லோருடைய ஆலோசனையும் வேண்டும். ஒத்துழைப்பும் வேண்டும். அரசாங்கத்திற்கு வரவு வரக்கூடிய வழிவகைகளை நாம் தடுத்து நிறுத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் ஏற்கெனவே பல உதாரணங்களைச் சொன்னேன். நமக்கு பணம் சொந்தச் செலவிற்குத் தேவை என்றால், நமக்கு யார் கடனாளியாக இருக்கிறார்கள் என்றுதான் முதலில் பார்ப்போம். முதலில் அவனைத் தான் பிடிப்போம். அதுபோலத் தான் அரசாங்கமும் இருக்க வேண்டும். அரசாங்திற்குப் பற்றாக் குறை என்றால் யார் அரசாங்கத்திற்கு வரி கட்ட வேண்டுமோ அவர்களிடத்திலிருந்துதான் முதலில் வாங்க வேண்டும். ஏழை யெளியவர்கள் என்றால் வாங்காமல் விட்டுவிடலாம். பணக்காரன் என்றால் விட்டுவிடக்கூடாது என்பதற்காக நான் இங்கே பல உதாரணங்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் 10 நிமிடங்களுக்குள் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 மணித்துளிகளுக்கு மேல் எடுத்துவிட்டீர்கள். ஒரு மணிக்கு வாக்கெடுப்பு இருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதெல்லாம் எதிர்த்த கருத்துக்களாக இருந்தாலும் நாட்டுக்குத்தான் அவை என்பதைப் புரிந்து கொண்டுதான் இங்கே சொல்கிறேன்.

அடுத்து, அரசாங்கம் இன்றைக்கு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்குக் காலையில் பத்திரிகைகளில் பார்த்தால் 'ஆட்டோ சங்கர் ஓட்டம்' என்று வந்திருக்கிறது. நாம் இங்கே பேசுவதை எல்லாம் பர்ஸ்ட் பேஜில் பத்திரிகைகளில் போட மாட்டான். ஏன் என்றால் நாட்டில் அவனுக்கு இவை எல்லாம் முக்கியமில்லை. நேற்று மண்டல் கமிஷன் விவாதம் வந்தது. முதல் பக்கத்தில் அது வந்ததா? நாடு என்னவாகும்? முதல் பக்கத்திலே ஆட்டோ சங்கர் பற்றி

12-15 மணி.

வருகிறது. மண்டல் கமிஷன் பரிந்துரைகள் எத்தனை லட்சம் மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, அவனவனால் முடிந்த அளவுக்கு நாட்டைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்குக் காலையிலே பத்திரிகையைப் பார்த்த உடனே நினைத்தேன். இலங்கைப் புலிகள் என்று சொல்லுகிறார்கள். தமிழ்நாட்டிலும் துப்பாக்கி இருந்தால் தான் ஒழுங்காக இருப்பார்கள். ஜனநாயகம் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது? கேலிக் கூத்தாகப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த அவையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் முதல் பக்கத்தில் இடம் பெறவில்லை. அந்தத் தீர்மானம் இடம் பெறவில்லை. கேடியைப் பற்றி முதல் பக்கத்தில் வருகிறது. இதற்கு என்ன செய்வது? நமக்கு எதற்கு இந்த வம்பு, நாம் ஏன் அவன் பொல்லாப்புக்கு ஆளாக வேண்டுமென்று நினைக்கிறார்கள். அவன் அடித்து விட்டால் என்ன செய்வது என்று நினைக்கிறார்கள். தமிழன், மைக்கைக் கொடுத்தால் பேசிக்கொண்டே இருப்பான். யாராவது அடிக்க வந்தால் ஒன்றும் செய்ய முடியாது. இது தான் தமிழன். நான் கருப்புச் சட்டை போட்ட தமிழன். தைரியம் என்பது திடீரென்று வராது. பிறப்பிலே வர வேண்டும். இனிமேலாவது தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்ப வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இந்தச் செய்தி நாளை முதல் பக்கத்தில் வர வேண்டுமென்று சொல்ல வேண்டும். விளம்பரமாகக் கொடுத்திருந்தால், முதல் பக்கத்தில் வந்திருக்கும். நம்முடைய துறையின் மூலமாக 20,000 ரூபாய் ஒவ்வொரு பத்திரிகைக்கும் கொடுத்திருந்தால், அது வந்திருக்கும். நம்முடைய நாட்டின்மீது உள்ள அக்கறை என்ன என்பதை உணர்ந்துகொள்ள வேண்டுமென்றுதான் இதைச் சொல்லுகிறேன்.

இலங்கைத் தமிழர் வீரத்தை நாம் பாராட்டுகிறோம். நம்முடைய தமிழ்நாட்டிலே, கட்சியிலே வீரம் இருந்தால்கூட வைக்க மாட்டோம். வீரம் இருக்கக்கூடாது. சுய மரியாதை இருக்கக்கூடாது கட்சியிலே. காலையிலே பார்த்தோம். நம் நாடு இதுதான். தமிழ்நாட்டில் திருக்குறளில் சொல்லப் பட்ட கருத்துக்களை வைத்திருக்கக்கூடாது. மேடைக்கு மட்டும்தான் குறள். வீரம், நேர்மை, ஒழுக்கம், நாணயம் இருக்கக்கூடாது. இவைகள் இல்லாத ஒருவன்தான் தமிழனாக இருக்க வேண்டுமென்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார். அந்த அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். துணை நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருப்பதைப் பற்றித்தான் பேச வேண்டுமே தவிர வேறு

எதையும் பேசக்கூடாது என்று சொல்லப்பட்டது. இங்கே சிலர் பேசியதைப் பார்த்து, நான் பேசினேன். இதை வரவேற்று, அமைகிறேன். நன்றி.

திரு. பொன். **விஜயராகவன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற நான் முற்படுகிறேன். இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினை இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை என்றாலும், நாளைக்கு அது குறித்து தீர்மானம் வருகிறது. அதே நேரத்தில் நம்முடைய இந்தியக் கடற்கரை ஓரங்களில், குறிப்பாக இராமேஸ்வரம், மண்டபம் பகுதிகளில் வாழும் மீனவர்கள், நம்முடைய எல்லையிலே, கடற்கரையிலே இருக்கிறவர்கள், கடற்கரை ஓரங்களில் இருக்கிறவர்கள் சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த பிப்ரவரி மாதம் நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். கச்சத் தீவு, 1974 ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தத்தின் காரணமாகக் கொடுக்கப்பட்டதீவு. இன்றைக்கு அந்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்திய மீனவர்கள் மிகப் பெரிய தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அதை மீட்க தமிழக அரசு, மத்திய அரசோடு ஈடுபட வேண்டுமென்று கோரினேன். இன்றைக்கு அதற்கு வலு ஏற்படும் வகையிலே பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீண்டும் இந்த மாமன்றத்தில் அந்தக் கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குள்ளாகச் சென்று, பெரிய அளவில் நான் சொல்ல விரும்பவில்லை, காலத்தின் அருமை குறித்து.

12-20 மணி.

இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான பிரச்சினை போதைப் பொருள்கள். இன்றைக்கு கல்லூரிகளின் வளாகத்திற்குள் போதைப் பொருள்கள் நடமாட்டம் மிக அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் பத்திரிகைகளில் படிக்கின்றபோது மிகப் பெரிய உயர்தர ஓட்டல்கள் கூட இன்றைக்கு போதைப் பொருள்களைக் கடத்துகின்ற, போதைப் பொருள்களை விநியோகிக்கின்ற கூடாரமாக மாறிக்கொண்டு வருகின்றன. வருங்காலத்தில் சமுதாயமே பாழ்படுகின்ற வகையில், இளைய சமுதாயத்தைப் பாழ்படுத்துகின்ற வகையில் போதைப் பொருள் உபயோகம் தமிழ்நாட்டிலே வளர்ந்துகொண்டிருக்கின்றது அதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

1990 ஆகஸ்டு 22] *[திரு. பொன். விஜயராகவன்]*

இன்னொரு கருத்தை, இங்கே நான் வலியுறுத்தக் கடமைப் பட்டு இருக்கின்றேன். இந்த மாமன்றத்திலே இருக்கக் கூடிய 235 உறுப்பினர்களும் இந்தக் கருத்திலே மாறுபட மாட்டார்கள் என்ற எண்ணம் எனக்கு உண்டு. இன்றைக்கு அடிமட்டத்தில் இருக்கக்கூடிய ஜனநாயக உணர்வு கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்துகொண்டு போகின்றது. சட்டமன்ற உறுப்பினர்களாக நாங்கள் எல்லாம் வந்த காலத்திலிருந்து இன்னும் பல கருத்துக்களைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகிறோமே அல்லாமல் அந்தக் கருத் துக்கள், அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டனவா, அவைகள் முடிவில் வெற்றி பெற்றனவா என்று கேட்டால், இல்லை. காரணம் நிதிநிலை பற்றாக்குறை. ஆங்காங்கே சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய குறைகள் நிவர்த்திக்கப்படாமல் நீடித்துக்கொண்டே இருக்கின்றன. இதை மாற்றுவதற்காக மராட்டிய மாநிலத்திலே ஒரு முறையை வைத்து இருக்கிறார்கள். அதை இந்த மாநிலத்திலே பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டி ருக்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் மராட்டிய மாநிலத்திலே அவரவருடைய தொகுதியிலே வேலை செய்வ தற்கு ஒரு ஆண்டுக்கு 21 லட்ச ரூபாய் ஒதுக்குகிறார்கள். அப்படி ஒரு ஆண்டுக்கு 21 லட்ச ரூபாய் ஒதுக்கும்போது அந்த சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பேற்று பதவி முடிக் கின்றபோது ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவுக்காவது அவருடைய சட்டமன்றத் தொகுதிக்குள்ளே அவசியமாக நடைபெறுகின்ற வேலைகளிலே முக்கியத்துவம் கொடுத்துச் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. இது எப்படி வருகிறது என்று சொன்னால், தொடர்ந்து சட்டமன்ற தொகுதிகளுக்குள்ளே போகும்போது அந்தப் பிரச்சினைகளை பல ஆண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்; அவைகளுக்கு முடிவு ஏற்பட வில்லை; அரசாங்கத்தின் சார்பிலும் வரவில்லை என்கிற ஒரு நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் உள்ள உறுப்பின ருக்கு வேலை செய்வதற்காக மராட்டிய மாநிலத்தில் கொடுத்து இருப்பதைப் போல, ஏறத்தாழ 21 லட்ச ரூபாய் கொடுப்பதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். It will Strengthen the democratic institutions. இல்லை என்று சொன்னால் நாளைக்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலே அங்கே போய்க் கேட்கும்போது— சட்டமன்ற உறுப்பினராக நான் இரண்டு அல்லது மூன்று முறை வந்துவிட்ட காரணத்தாலே அந்தக் கஷ்டம் எனக்குத் தெரிகிறது; இதுபோல் பல உறுப்பினர்களுக்கும் அந்தப் பிரச்சினை இருக்குமென்று நம்புகிறேன். ஆகவே இதை முக்கியமான பிரச்சினையாகக் கருத்தில்கொண்டு, ஒவ்வொரு

தொகுதியிலும் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அத்தொகுதி மக்களுக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவு செய்வதற்காக ஒரு டிஸ்கிரீஷனரி பவராக கொஞ்சம் தொகை ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்னொன்று, இன்றைக்கு அமைச்சர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதங்களை எழுதுகின்றார்கள். ஆனால் இங்கே தமிழ்நாட்டிலே இருக்கிற அமைச்சர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதங்கள் எழுதும்போது அதற்குரிய பதில்கள் அமைச்சர்களிடமிருந்து வருவதில்லை என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கின்றேன். ஆனால் அதேநேரத்தில் மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சி, எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும் சரி, மத்திய சர்க்காரில் இருக்கிற அமைச்சர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கூட கடிதங்கள் எழுதினால் அவர்களுக்கு அந்த அமைச்சர்களிடமிருந்து நேரடியாகப் பதில் கிடைக்கிறது. ஆனால் நம்முடைய அமைச்சர்களுக்கு நாம் இங்கே கடிதம் எழுதினால்—ஒருவேளை சில கடிதங்களுக்கு இலாக்கா மூலமாக பதில் வருகிறதே அல்லாமல், அமைச்சர்களிடமிருந்து பதில் வருவதில்லை. ஆனால் பெரும்பான்மையான கடிதங்களுக்கு பதிலே வருவதில்லை என்பது வருந்துவதற்குரியது அதை மாற்ற, இதுவரை இருந்த நிலைமை போவதற்கு நம்முடைய அரசு முன் உதாரணமாக, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதுகின்ற கடிதங்களுக்கு அமைச்சர்களே பதில் எழுதுகின்ற அளவுக்கு நிலைமை உருவானால்தான் அந்தக் கடிதங்களினுடைய சீரியஸ்நெஸ் தெரியும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

இன்னொன்று, கடந்த சட்டமன்றத் தொடரிலே நாங்கள் இந்த மன்றத்திலே கேட்டோம் என்று எண்ணுகின்றேன். கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு என்று கடந்த அரசினால் கொண்டு வரப்பட்ட ஈட்டுறுதியுடன் இணைந்த திட்டம் என்று சொல்லி 10 ரூபாய் வீதம் அந்தக் கிராமப்புறக் கைவினைஞர்களிடமிருந்து பிடிக்கப்பட்டது. அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாக முதலமைச்சர் அவர்களே இங்கே ஒத்துக்கொண்டார்கள். வட்டி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அசலையாவது கொடுங்கள் என்று கேட்டபோது, அதைத் தருவதாக இங்கே முதலமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் இதுவரையிலும் அந்தப் பணம் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. நாங்கள் கிராமப் புறங்களுக்குச் செல்கின்றபோது அங்கே அவர்கள் கேட்கிறார்கள். எனவே, அந்தப் பணத்தை உடனடியாகக் கொடுப்பதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

12-25 மணி.

இன்றைக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய சூழ்நிலையில் என்னுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு இருக்கிற பள்ளிகள், குறிப்பாக எல்லாப் பள்ளிகளும் அரசு சார்பிலே இருக்கக்கூடிய பள்ளிகள்தான். அரசுப் பள்ளிகளில் பெரும்பான்மையான பள்ளிகளில் கட்டிட வசதி கிடையாது. ஏற்கெனவே இருக்கக்கூடிய கட்டிடங்கள்கூட இடிந்து விழுந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இன்றைக்கு மரத்தடியில் படிக்கும் சூழ்நிலை இருக்கிறது. மேலும் மழை வந்துவிட்டால் அவர்கள் வீடுகளுக்குப் போகும் சூழ்நிலை ஏற்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் நிலைமை, மற்ற மாவட்டங்களில் இருந்து வேறுபட்ட சூழ்நிலை.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர்அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டும் அந்த நிலைமை இருப்பதாகக் கூறி பாரபட்சமாக இந்த அரசு நடக்கிறது என்ற தவறான எண்ணத்தை மாண்புமிகு உறுப்பினர் ஏற்படுத்த வேண்டாம். எல்லா மாவட்டங்களிலும் ஒரே நிலைமைதான்.

திரு. பொன். விஜயராகவன்: துணைத் தலைவர் அவர்களே, பாரபட்சம் என்ற நிலைமைக்கு நான் வரவில்லை. மற்ற மாவட்டங்களில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கீழே ஆரம்பப் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கீழே பள்ளிகள் இல்லை. எல்லாப் பள்ளிகளையும் அரசே நிர்வகித்து வருகிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகப்படியான கவனம் தேவை என்று சுட்டிக் காட்டுவதற்குத் தான் நான் இதைச் சொல்லுகிறேன். பாரபட்சம் என்ற நிலைமைக்கு நான் வரவில்லை. மற்ற மாவட்டங்களில் பஞ்சாயத்து யூனியன்களின் கீழும், முனிசிபாலிட்டிகளின் கீழும் பள்ளிகள் இருப்பதால் அந்த நிறுவனங்களின் நிதியிலிருந்து அவர்கள் செலவழிக்கும் வாய்ப்பு இருக்கிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பிரத்தியேகமான சூழ்நிலை இருக்கிறது. அரசுத் துறைகளின் சார்பிலும், அரசின் சார்பிலும் எல்லாப் பள்ளிகளும் இருக்கின்றன. ஆகவே பிரத்தியேகமான சலுகை எங்கள் மாவட்டத்துப் பள்ளிகளுக்கு வேண்டுமென்றுதான் சொல்லுகிறேனே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை.

இன்றைக்குப் பாசனக் கால்வாயைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்திலே பல்வேறு பாசனக் கால்வாய் புதிய திட்டங்கள் வருகின்றன. உலக வங்கித் திட்டத்தின்கீழ் புதிய திட்டங்கள் வருகின்றன என்று சொல்லுகிறார்கள்.

அவைகள் வருவதற்குக் காலதாமதம் ஆகும். இன்றைக்கு அங்கே உள்ள சூழ்நிலை என்னவென்றால், கடந்த முறை அணையில் நிரம்ப தண்ணீர் வந்த பிறகும்கூட பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் போக முடியவில்லை. சித்தார்ப்பட்டணம் கால்வாய் திட்டமாக இருந்தாலும் சரி, கோதையாறு திட்டமாக இருந்தாலும் சரி, நீர் சரியாக வர வில்லை. நெய்யாறு இடதுகரை சேனலில் நீர் கிடைக்கக் கூடிய அளவிற்கு கேரள மாநில அரசோடு சரியான ஒப்பந்தம் ஏற்படவில்லை. ஒரு சரியான ஒப்பந்தத்தை நம்முடைய தமிழக அரசு, கேரள மாநில அரசோடு ஏற்படுத்திக் கொண்டு, அவர்கள் தருகின்ற தண்ணீரைப் பெற்று அவற்றை ஒழுங்காகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெய்யாறு சேனல் பகுதியில் பல இடங்களில் நாம் தண்ணீர் வரியைக்கூட வாங்கிக் கொண்டிருக்கிறோம். பல்லாண்டுக் காலமாக தண்ணீர் வரியை நாம் வாங்கிக் கொண்டிருந்தாலும் நெய்யாறு சேனலில் இருக்கக்கூடிய ஆறுதேசம், ஏழு தேசம், கொல்லங்கோடு ஆகிய ரெவின்யூ கிராமங்களில் பல இடங்களுக்கு பல்லாண்டுக் கால மாக தண்ணீர் போய்ச் சேரவில்லை. அங்கே கால்வாய்கள் தூர்ந்து போயிருக்கின்றன.

மாண்புமிகு திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, நெய்யாற்றிலிருந்து தமிழ்நாட்டிற்கு எவ்வளவு தண்ணீர் என்பது மட்டுமல்லாமல் கால்வாயைச் செப்பனிடும் பணியும் இன்றைக்கு அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 18 ஆம் தேதி நான் திருவனந்தபுரம் வந்தபோது அதிகாரிகள் சென்று பார்த்திருக்கிறார்கள். இரு மாநிலங்களிலும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு முறை போகும்போது திரு. பொன். விஜயராகவன் பார்த்து விட்டு வந்தால் பிறகு இப்படிப் பேச வாய்ப்பு இருக்காது.

திரு. பொன். விஜயராகவன் : அங்கே மெயின் சேனலில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிக்கின்றன. கிளைச் சேனலில் நடைபெறவில்லை. கிளைச் சேனலைப் பொறுத்தவரையில் நமக்கும் கேரள மாநில அரசுக்கும் ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா, அதில் எவ்வளவு கன அடி தண்ணீர் வரும் என்பதெல்லாம் தெரியவில்லை. இதுவரையில் எனக்குக் கிடைத்த தகவல், எந்தவிதமான ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்பதுதான்.

மாண்புமிகு திரு. துரை முருகன் : ஒப்பந்தமே அல்ல. ஏற்கெனவே ஒப்பந்தம் இருக்கிறது. விவகாரம் என்னவென்றால் அந்தக் கொள்ளளவைத் தாங்கக் கூடிய அளவிற்கு கால்வாய் இல்லை. பழுதுபட்டுப் போயிருக்கின்றன. இன்றைக்குச் செப்ப னிடும் வேலை அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1990 ஆகஸ்டு 22]

திரு. பொன். விஜயராகவன் : ஏற்கெனவே நான் அறிந்த வரையில் 150 கன அடி தண்ணீர் தரவேண்டும். அதற்கு ரிட்டன் அக்ரிமெண்ட் இல்லை யென்று சொன்னார்கள். டிரடிஷனலாக தர வேண்டிய 150 கன அடி தண்ணீரை அவர்கள் தருவதில்லை. அவர்கள் தர முடியாமைக்கு ரிட்டன் அக்ரிமெண்ட் இல்லாததே ஒரு காரணமாக இருக்கிறது. ஆகவே 150 கன அடி தண்ணீரை யாவது வாங்கி கடைமடை நிலங்களுக்குக் கொடுத்தால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களுக்குப் பயன்படும். தண்ணீர் கொடுக்காமலே வருவாய்த் துறை தண்ணீர் வரியை வாங்கிக் கொண்டிருப்பதால் இதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி முடித்து விடலாம் என்று கருதுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள சாலைகள் பற்றி பல முறை பல மன்றங்களின் மூலம் அமைச்சர்கள் வரும் போதும், இந்த மன்றத்திலேயும், மற்றும் வளர்ச்சி மன்றங்களின் மூலமும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சாலைகள் தமிழ்நாடு முழுவதும் எப்படி இருக்கிறதோ, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்த்தால் பல இடங்களில் நடந்துகூடச் செல்ல முடியாத அளவிற்கு ஹைவேஸ் சாலைகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் கன்னியாகுமரி மாவட்டம்தான் தமிழ்நாட்டிலேயே அரசுத் துறை சார்பிலே மொனாப்பலி டிரான்ஸ்போர்ட் இருக்கக்கூடிய ஒரு மாவட்டம். நேசமணி போக்குவரத்துக் கழகம் மூலமாக முழுவதுமாக பப்ளிக் டிரான்ஸ்போர்ட் சிஸ்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். சாலைகள் சரியாக இல்லாததால் அரசுத் துறைக்குத்தான் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே சாலைகளைப் பழுதுபார்க்கும் பணிக்காக — எப்படி நீலகிரி மாவட்டத்திற்கு மலைகளைக் கொண்டுள்ளது என்பது மட்டுமல்லாமல் அந்த மாவட்டத்திலே அதிகப்படியான மழை என்கிற காரணத்தால் அதிகப்படியான நிதி ஒதுக்கம் செய்வதைப் போல் — கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் அதிகப்படியான நிதியை ஒதுக்க வேண்டும்.

12-30 மணி.

கன்னியாகுமரி மாவட்டமும் மலைப்பகுதிகள் உள்ள இடம். இன்னொன்று, நீலகிரிக்கு அடுத்தபடியாக மிக அதிகமான மழை பெய்கிற இடம், மேடு பள்ளங்களைக் கொண்ட இடம் என்பதால், அதைக் கருத்திற் கொண்டு, அதிகப்படியான நிதியொதுக்கீட்டைத் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகையில் இந்த மானியக் கோரிக்கையினைப் பயன்படுத்திக் கொண்டு, மானியக் கோரிக்கையில் எழுப்பப்படாத பல்வேறு பிரச்சினைகளைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனக்குள்ள ஆறுதல் எல்லாம் இந்த மன்றத்திலிருந்து செயல்பட வேண்டிய எதிர்க்கட்சி செயல்படாத சூழ்நிலையில், அந்தப் பொறுப்புகளையும் தாங்களே ஏற்றுக் கொண்டு, இங்கேயுள்ள உறுப்பினர்கள், மற்ற கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் கடமையை மிகச் செம்மையாக நிறைவேற்றி இருப்பதற்காக நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன், ஆறுதல் கொள்கிறேன்.

நான்கு நாட்கள் தான் இந்த அவை—20, 21, 22 மற்றும் 23 ஆகிய நாட்களில்—நடைபெறுகிறது என்றாலும்கூட, இந்த நான்கு நாட்களில் மிக முக்கியமான பிரச்சினைகளை இந்த அவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. துணை மானியக் கோரிக்கை முதல்நாள் முன் வைக்கப்பட்டது. நேற்றையதினம் வரலாற்றுச் சிறப்புமிக்க மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று மத்திய அரசு அறிவித்ததையொட்டி பல சீரிய கருத்துக்கள் இங்கே எடுத்து வைக்கப்பட்டன. இன்று மிக முக்கியமாக 200 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கான அனுமதியை, இந்த அவையிலே நிதியமைச்சர் என்கிற அந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிற வகையிலே, உங்களிடத்திலே பெறுகின்ற இந்தச் சூழலில், 'தொகை ஒதுக்கினால் மாத்திரம் போதாது, அதற்கு நாங்கள் ஒப்புதல் அளித்தால் மாத்திரம் போதாது, இன்னின்ன குறைபாடுகள் இன்னும் இந்த அரசில் இருக்கின்றன, அவைகளையெல்லாம் களைய வேண்டுமென்கிற சுட்டிக்காட்டுதல்களையும் நீங்கள் இங்கே எங்களுடைய நெஞ்சத்தில் பதிய வைத்திருக்கிறீர்கள். பலதரப்பட்ட யோசனைகள், கருத்துக்கள், குறைபாடுகள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. இந்த அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிற எல்லா அமைச்சர்களும், அந்த அமைச்சர்களோடு இணைந்து பணியாற்றுகிற அதிகாரிகளும், துணை மானியக் கோரிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு எடுத்துச்சொல்லப்பட்ட பல்வேறு நல்ல கருத்துக்களை எல்லாம் செவிமடுத்திருக்கிறார்கள். அவைகளை உரியமுறையில் செயல்படுத்துவதற்கு முனைப்போடு அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்ற உறுதிமொழியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய முன்னாள் பேரவைத் தலைவர் பாண்டியன் அவர்கள் ஏதோ இன்று தமிழ் நாடு அரசினுடைய நிதிநிலை ஒரு ஆபத்தான கட்டத்தில் இருப்பதைப் போல, பத்திரிகையில் செய்தி வந்து விடுமோ என்று நான் அஞ்சுகிற அளவிற்கு ஒரு

ஐயப்பாட்டை எழுப்பினார்கள். முதல் தேதி சம்பளம் கொடுப்பதற்கு பணம் கருவூலத்தில் இருக்கிறதா? அதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அந்த அச்சம் நம்முடைய பாண்டியன் அவர்களுக்குத் தேவையில்லை என்று கருதுகிறேன். முதல் தேதி எம்.எல்.ஏ.க்கள் உள்பட அனைவருக்கும் சம்பளம் தர நம்முடைய நிதிநிலைக் கருவூலம்....

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, நான் இதைப் பேசியிருக்க மாட்டேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு எனக்கு வந்த செய்தி. ஒன்றாம் தேதிக்குள் — சில துறைகளிலிருந்து — அதாவது செக் போட்டு விட வேண்டுமென்று ஒரு அட்வைஸ் — ஒன்றாம் தேதி சம்பளம் போட வேண்டுமென்று இரண்டு மாதங்களுக்கு முன்னால் அப்படி நடந்தது. அந்த நிலையைப் பார்த்து விட்டுத் தான் நான் பேசினேன்.

12-35 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிதித்துறையிலே அவ்வப்போது ஏற்றத்தாழ்வுகள் வருவது சகஜம். அதை திரு. பாண்டியன் அவர்களே தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டு இருக்கிறார்கள். எப்போதும் வங்கியிலே பணம் இருக்கும் என்றல்ல என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனவே அவர்கள் எழுப்பிய ஐயப்பாட்டுக்கு நான் விளக்கமாக, நிச்சயமாக நான் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டு இருப்பதைப் போல, இந்திய ரிசர்வ் வங்கியினுடைய உதவியோடும் மற்றும் நமக்கு வணிக வரிகள் மூலமாக வருகின்ற அந்த வருவாய்த் தொகையோடும் நம்முடைய நிதிநிலை முதல் தேதி சம்பளம் கொடுப்பதற்கு ஏற்ற வகையிலே தான் அமைந்திருக்கிறது. நான் இதைப் பற்றி அதிகமாகச் சொல்லி மார்தட்டிக் கொண்டால், பிறகு மத்திய அரசைப் பார்த்து உதவிகளைப் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அந்த வகையிலே நண்பர் பாண்டியன் அவர்களுடைய பேச்சு எனக்கு ஒரு ஆயுதமாகப் பயன் படும், மத்திய அரசிடத்திலே நிதிநிலையைப் பற்றி எடுத்துச் சொல்லி மேலும் தொகை பெறுவதற்கு என்ற நிலையில் நன்றி செலுத்துகிறேன்.

இந்த மாமன்றத்தில் 1990-91—ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்ட போது, 432 புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று கூறி அதற்கு ஏறத்தாழ 31 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அறிவித்து இருந்தேன். ஒரு துணை மானியக் கோரிக்கை வைக்கும் போது ஏன் அதிகச் செலவாயிற்று, இவைகளுக்கு எல்லாம் எங்களிடத்திலே ஒப்புதல் பெற்றீர்களா என்று நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே

கேட்டார்கள். துணை மானியக் கோரிக்கை என்பதே செல வழித்தவைகளுக்கு மன்றத்தினுடைய ஒப்புதலைப் பெறுவது தான். இது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்ச ராக இருந்த காலந்தொட்டு நடைபெற்று வருகின்ற ஒன்று. திடீரென்று இப்போது இலங்கை அகதிகள் வந்து விட்டார்கள். இலங்கை அகதிகள் வந்தவுடன் சட்டமன்றத்தைக் கூட்டி, அவர்களுக்காக ஒரு 6 கோடி ரூபாய் செலவழிக்கலாமா என்று அனுமதி பெற்று பிறகு செலவழிக்க இயலாது. அதுதான்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குத் தான் ''கன்டின்ஜென்சி பண்ட்'' என்று இருக்கிறது. அதை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறீர்கள். அது போகவும், நீங்கள் அதிகமாக செலவழித் திருக்கிறீர்கள் என்பதைத் தான் நான் சுட்டிக் காட்டினேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : செலவழிக்காமலே இருக்கிற அரசு செயல்படாத அரசு. செலவழித்துவிட்டு உங் களிடத்திலே ஒப்புதல் கேட்கும் போது, செலவிலே இன்ன தவறு இருந்தது, இன்ன குற்றம் இருந்தது என்று சுட்டிக்காட்டினால், தலை வணங்கி ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிற அரசு இந்த அரசு. எனவே தேவைகளுக்கு ஏற்ப, நாம் செலவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான ஒப்புதலை முறைப்படி, ஜனநாயக ரீதியில் இந்த மாமன்றத்திலே பெறுகிறோம்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, அறிவிக்கப்பட்ட 432 புதிய திட்டங்களில், 25.66 கோடி ரூபாய்ச் செலவில் 393 திட்டங்களுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன என்பதை மகிழ்ச்சியோடு இங்கே நான் தெரிவித்துக் கொள்வேன். (மேசையைத் தட்டும் ஒலி.) மீதமுள்ள 39 திட்டங்களுக்கான விவரமான அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் மீதும் விரைவிலே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 432 புதிய திட்டங் களும் நடைபெறத் தொடங்கும் என்பதை இங்கே நான் தெரி வித்துக் கொள்வேன்.

தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு இந்த அரசு எத்தகைய கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாமன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். அதிலும் குறிப்பாக இன்றைக்கு நம்முடைய மாநிலத்திற்கு வராது என்கிற அளவிற்கு முடிவு கட்டப்பட்டு, உத்தரப் பிரதேசத்திலுள்ள சலீம்பூர் என்ற இடத்திற்குத்தான் அது கிடைக்கும், தமிழகத்திற்குக் கிடைக்காது என்கிற அளவிற்கு, அகில இந்திய அளவிலே உள்ள எல்லா ஏடுகளிலும் கூட செய்திகள் வெளியிடப்பட்ட ஒரு சூழ்நிலையில் ''ஆரோமேட்டிக் ளான்ட்'' அது தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று

வாதாடி, உத்திரப் பிரதேசத்திற்கும் வழங்குங்கள், எங்களுக்கும் அதைத் தாருங்கள் என்று கேட்டு, அண்மையிலே சென்னைக்கு வந்திருந்த மத்திய அமைச்சர், அந்தத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு குருபாதசாமி அவர்கள் பத்திரிகையாளர்கள் கூட்டத்திலே அதைப்பற்றி எடுத்துக் கூறி, தமிழ்நாட்டிலும் சென்னை மாநகரத்தையொட்டியுள்ள பகுதியிலே இந்த ''ஆரோமேட்டிக்'' தொழிற்சாலையை வழங்குவதற்கு எங்கள் அமைச்சகம் அதற்கான ஒப்புதலை வழங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நடைபெற வேண்டிய பணிகளுக்காக அடுத்த நாள் முதலே பிரதமருக்கும் மற்றும் அந்தத் துறையினுடைய அமைச்சர் திரு. குருபாதசாமி அவர்களுக்கும் இந்த அரசின் மூலமாகக் கடிதங்கள் எழுதப்பட்டு உள்ளன. தொலைபேசி மூலமாகவும், அவர்களோடு தொடர்பு கொண்டு பேசப்பட்டு வருகிறது. மேலும் தொடர வேண்டிய சம்பிரதாயங்கள் முற்றுப் பெற்று, 1,356 கோடி ரூபாய் அளவிலே அந்த மிகப்பெரும் தொழிற்சாலை தமிழ்நாட்டிலே அமைவதற்கான கால்கோள் விழா வெகு விரைவிலே நடைபெறும் என்ற மிக மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

12-40 மணி

வேளாண்மைத் துறையில் உலக வங்கியின் உதவியோடு சுமார் ரூ. 170 கோடி செலவில் ஒரு புதிய திட்டம் தொடங்க இருக்கிறோம் என்று வரவு-செலவுத் திட்டத்திலே அறிவித்திருந்தேன். இப்போது அந்தத் திட்டத்தை மேலும் ஆய்வு செய்த வகையில் ரூ. 250 கோடி செலவிலே செயல்படுத்தலாம் என்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உலக வங்கிக் குழுவினரோடு வரும் நவம்பர் மாதத்திலே இதற்கான இறுதிப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அந்தத் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. ''டேனிடா'' நிறுவனத்தின் உதவியோடு ரூ. 6.25 கோடி செலவில் சிதம்பரனார் நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில் புதிய புஞ்சைப் பயிர்த் திட்டம் ஒன்றும் நடைபெற இருக்கிறது. இதற்கான இறுதி நடவடிக்கைகள் எல்லாம் முற்றுப்பெற்று, அக்டோபர் மாதத்திலிருந்து அது செயல்படுத்தப்படும். ஒருங்கிணைந்த புஞ்சைப் பயிர்த் திட்டம் 300 இடங்களில் தொடங்கப்படும் என்று வரவு செலவுத் திட்டத்திலே அறிவித்திருந்தேன். அதற்கான ஆணை எண். 390, வேளாண்மைத்துறை சார்பில் 29—5—1990 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் 75,000 ஏக்கர் பரப்பளவு உள்ள புஞ்சை வேளாண்மை மேம்படுத்தப்படும். 100 புதிய வேளாண்மை விரிவாக்க நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தேன். அதற்கான அரசு ஆணை எண். 466, 15—6—1990-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. 71/2 மற்றும் 10 குதிரைத் திறன் உள்ள மின் விசை இயக்கங்களுக்கான மின் கட்டணம் ஒரு குதிரைத் திறனுக்கு

ரூ. 75-லிருந்து ரூ. 50 ஆகக் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனைச் செயல்படுத்தும் அரசு ஆணை எண். 714, பொதுப்பணித் துறையின் மூலமாக 29—3—1990-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுவதற்கான மத்திய அரசின் ஆணை வருவதற்கு முன்பாகவே நாம் செயல்படுத்த முனைந்திருக்கிறோம். இவைகள் எல்லாம் பெரிய திட்டங்களைப் பற்றியவை. அதைப் போலவே கிராமப்புற வளர்ச்சிக்காகவும் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதற்கான அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தேதி வாரியாக அந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. நேரம் அதிகம் இல்லாத காரணத்தினாலே அவைகளை எல்லாம் எடுத்துக் கூற இன்றைக்கு வாய்ப்பில்லை என்பதை நான் தெரிவிக்கின்றேன்.

மூடிக் கிடந்த 6 நூற்பாலைகளின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள மத்திய அரசுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது என்பதை வரவு-செலவுத் திட்டத்தில் எடுத்துச் சொன்னேன். ஆனால் அது குறித்து மத்திய அரசின் இறுதியான பதில் வருவதற்கு முன்பே ''ஜாயிண்ட் செக்டார்''—கூட்டு நிர்வாக முறைப்படி அந்த 6 ஆலைகளில் இரண்டு ஆலைகளை மீண்டும் இயங்கச் செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

குடி தண்ணீரைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டிலே அனைத்து கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் அடிப்படை குடிநீர் வசதி நடப்பாண்டில் ஜூன் மாதத்திலே செய்து தரப்பட்டிருக்கின்றது. தெலுங்கு—கங்கைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவர்கள் கோரியுள்ள தொகையைத்தவணை முறையில், தவறாமல் ஆந்திர மாநிலத்திற்கு தமிழக அரசின் சார்பில் நாம் வழங்கி வருகிறோம். பொள்ளாச்சி, மணப்பாறை, சங்கரநாயனார்கோயில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய ஆறு நகரங்களுக்குக் குடிநீர் வழங்குகின்ற புதிய திட்டத்தைச் செயல்படுத்த, நிதியுதவி வழங்க உலக வங்கி இசைவு அளித்துவிட்டது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே செயல்படுத்தி வந்துள்ள சத்துணவுத் திட்டங்களை இணைத்து ஒரே மையத்தில் 6 மாதங்களிலிருந்து 3 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தும், 3 வயதிலிருந்து 6 வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவும் கிடைக்கும் வகையில் புதிய ஒருங்கிணைந்த திட்டம் உலக வங்கி உதவி

யோடு செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தேன் வரவு-செலவுத் திட்டத்தில். இதற்கான இறுதிப் பேச்சுவார்த்தைகள் முடிக்கப்பட்டு, உலக வங்கி உதவி அளிக்க இசைவு அறிவித்துள்ளது. இந்தத் திட்டம் படிப்படியாக எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 350 கோடியாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

12-45 மணி

விவசாயிகளுடைய நலன் கருதி இந்த அரசு அவர்களுக்குக் கொள்முதல் விலையை உயர்த்தியது உட்பட பல்வேறு சலுகைகள் வழங்கி இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். 10 ஆயிரம் ரூபாய் கடனை ரத்து செய்கின்ற மத்திய அரசுடைய அறிவிப்புப் படி—தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டதற்கு ஏற்ப—மத்திய அரசு எடுத்துக் கொண்ட அந்த முயற்சியின் விளைவாக, மாநில அரசு உடனடியாக செயல்பட்டு அந்த பத்தாயிரம் ரூபாய் கடனை ரத்து செய்கின்ற அறிவிப்புகளை அளித்திருக்கிறது. இதிலே 1—4—1986-க்குப் பிறகு பெறப்பட்டு 2—10—1989 இல் நிலுவைகளிலே உள்ள, மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட காலக் கட்டத்திலே உள்ள தவணை தவறிய கடன்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும். அந்த நிவாரணம் வறட்சியினால் பாதிக்கப் பட்ட பகுதியிலே உள்ள கடன்தாரர்களுக்கு அணாவாரி சர்டிபிகேட்டுகளின் அடிப்படையிலே அளிக்கப்படும். அதைப் பற்றி நம்முடைய நண்பர் திரு. நூர்முகமது அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இந்த அணாவாரி சான்றுகள் தேவையில்லை என்று சொன்னார்கள். அணாவாரி சான்றுகள் மூலமாகப் பயன் அடையக்கூடிய விவசாயிகளுடைய கடன் நிவாரணத் தொகை 40 கோடி ரூபாய் தான். அணாவாரி செலவு மாத்திரம் அல்ல, இறந்து போனவர்கள் அல்லது இன்சால்வன்ட் ஆனவர்கள், அதாவது மஞ்சள் கடுதாசி கொடுத்தவர்கள், இவர்கள் அத்தனை பேருக்கும் சேர்த்து நாம் தர வேண்டிய தொகை, இழக்க வேண்டிய தொகை 40 கோடி ரூபாய் தான். இது அன்னியில் நாம் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். இந்த அணாவாரி சான்றிதழினை ஒரு நிபந்தனையாக ஆக்காமல், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்கிற அந்தத் தலைப்பில் கொண்டு வாருங்கள் என்று மத்திய நிதியமைச்சருக்கு எழுதி இருப்பதோடு நேரிலும் பல தடவை அவரிடத்திலே நான் விவாதித்து இருக்கிறேன். அவர்கள் அது பற்றி சிந்தித்து ஆவன செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அதற்காகக் காத்திராமல் இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் முயற்சி எடுத்த மாநிலம் நம்முடைய மாநிலம் என்கிற பெயரைப் பெறுகின்ற அளவுக்கு அந்த முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அப்படி மேற்கொண்ட வகையில் கூட்டுறவுக் கடனாக நாம் தீர்க்க வேண்டிய கடன் 320 கோடி ரூபாய் தான். வணிக வங்கிகளின் சார்பாக தீர்க்க வேண்டிய கடன் 180 கோடி ரூபாய், ஆக 500 கோடி ரூபாய்க்கு பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. வணிக வங்கிகளின் கடனைப் பற்றி மத்திய அரசு நேரிடையாக அவர்கள் முயற்சி செய்து தீர்க்க வேண்டும். அதற்கிடையில் கூட்டுறவு வங்கிக் கடன்களை நாம் தீர்ப்போம் என்று முடிவெடுத்து—நான் உங்களுக்குப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்—385 ஊராட்சி ஒன்றியங்களில் 305 ஊராட்சி ஒன்றியங்களின் கணக்கு எடுத்து முடிக்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்ல, அந்த ஒன்றியங்களுக்கு எல்லாம் அரசிடமிருந்து, இந்தத் துறையிலே இருந்து தாக்கீது கடிதங்கள் சென்று நீங்கள் அளிக்க வேண்டிய கடனில் 10 ஆயிரம் ரூபாய் அளிக்க வேண்டிய தேவையில்லை என்று ஒவ்வொருவருக்கும் தாக்கீது அனுப்பப்பட்டு விட்டது. 385 ஒன்றியங்களில் 305 ஒன்றியங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டது. மேலும் 80 ஊராட்சி ஒன்றியங்களிலேயும் 31—8—1990-க்குள் முடிவு அடைகிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள் பத்து ரூபாய் கட்டியதற்கு பணம் திருப்பித் தரப்படும் என்று சொன்னீர்கள், தரவில்லை என்று சொன்னார். அதைத் திருப்பிச் செலுத்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முழு அதிகாரமும் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. இது 31—8—1990-க்குள் வழங்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் சிறைச்சாலையில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். சட்டம்—ஒழுங்கு, அமைதி இதனால் கெட்டு விட்டது என்பதற்கு இது ஓர் உதாரணம் என்றெல்லாம் கூட பேசப்பட்டது. இன்றைக்கு இந்திய நாட்டிலே உள்ள பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிடும் போது, மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல், நெஞ்சறியப் பேசினால் தமிழ்நாடு பல மடங்கு எந்த மாநிலத்தையும் விட சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படுவதிலே முன்னணியிலே இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்.

12-50 மணி

நான் பெயர் குறிப்பிட்டு எந்த மாநிலத்தின் பெயரையும் சொல்ல விரும்பவில்லை. ஒரு மாநிலத்தில் கிட்டத்தட்ட 7 மாவட்டங்கள் நக்சலைட்டுகளுடைய அதிகாரத்திலே இருப்பதாக

செய்திகள் வந்திருக்கின்றன. அது எந்தக் கட்சி ஆள்கிற மாநிலம், எந்த மாநிலம் என்பதை எல்லாம் சொல்லி, அந்த மாநிலத்தோடு எனக்கு இருக்கிற நட்பையும் அந்த மாநிலத்திற்கும் நமக்கும் இருக்கிற அணுகு முறையையும் நான் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை. 6, 7 மாவட்டங்களில் நக்சலைட்டுகள் அதிகாரம், அவர்களே, கோர்ட்டு நடத்தி, மரத்தடிகளிலே கோர்ட்டு நடத்தி தீர்ப்பு வழங்குகிறார்கள் என்ற அளவுக்கு மாநிலங்கள் இருக்கின்றன. பஞ்சாப் மாநிலத்தினுடைய நிலைமையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. காஷ்மீரத்தைப் பற்றி சொல்லத் தேவையில்லை. அசாமிலும் அதே நிலை. அவற்றை எல்லாம் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் ஒன்றிரண்டு சம்பவங்கள், போலீஸ்காரர்களுக்குள்ளேயே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இல்லை என்ற ஒரு கருத்து இங்கே பேசப்பட்டது. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். 10 ஆண்டுக் காலத்திலே இந்த நாட்டினுடைய நிர்வாகம் எப்படியெல்லாம் கெட்டுப் போயிருக்கிறது என்பதற்கு அவை எல்லாம் அடையாளங்கள். யார், யார் எல்லாம், எந்த, எந்தப் பதவிகளில் எல்லாம் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்; எந்த, எந்தப் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதற்கு இவை எல்லாம் அடையாளங்களே அல்லாமல், வேறு அல்ல. அப்படி நடைபெற்ற சம்பவங்கள் எதையும் நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து சட்ட ரீதியாக நாம் அவர்களைக் கைது செய்தும் வழக்குத் தொடர்ந்தும் இருக்கிறோம். அதைப் போலத் தான் நேற்று சிறைச்சாலையிலிருந்து தப்பி விட்ட ஆட்டோ சங்கர் மற்றும் அவரோடு 4 பேர்கள். இது ஒரு சதி தான்—அதிகாரிகளோடு சேர்ந்து நடத்தப்பட்ட சதிதான்—என்கின்ற காரணத்திற்காக 12 பேர்கள் நேற்றைய தினம் வேலை நீக்கம் செய்யப்பட்டு 3 அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தப்பித்தவர்களைத் தேடுவதற்கான பலத்த முயற்சிகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. 12 பேர்களை வேலை நீக்கம் செய்தது மாத்திரம் அல்ல, இன்றைக்கு உங்களுக்குச் சொல்கிறேன், மத்திய சிறைச்சாலையினுடைய சூப்பரின்டெண்டும் இன்றைக்குத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார் என்பதை இங்கே அறிவித்துக் கொள்கின்றேன். அது மாத்திரம் அல்ல, யாரும் கூட வற்புறுத்தவில்லை; சொன்னதாகக் கூட நினைவில்லை. நானே இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைப் பற்றி விசாரிக்க ஒரு நீதி விசாரணை நடைபெறுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியிடத்திலே அந்த நீதிபதியினுடைய பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுமென்று அரசின் சார்பிலே வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பெயர் தலைமை நீதிபதி அவர்களால் குறிப்பிடப்பட்டவுடன் அதற்கான நீதி விசாரணை நிச்சயமாக நடைபெறும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிரண்டு அறிவிப்புகளை இங்கே அவசரமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. சென்னை மற்றும் இதர மாவட்டங்களிலே உள்ள அரசுக் கல்லூரி மற்றும் தொழிற் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுத் தொகை, கடைசியாக 1986 ஆம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்டது. அது அப்படியே இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அது குறித்து இந்தத் துணை மானியக் கோரிக்கை விவாதிக்கப்படுகிற நேரத்தில் அறிவிக்க விரும்புகிறேன். ஆதி திராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிக்கும் அரசு மாணவர்கள் விடுதிகளில், உணவுத் தொகை பின்கண்டவாறு மாற்றி அமைக்கப்படும்.

சென்னையிலுள்ள அரசுக் கல்லூரி மற்றும் தொழில் கல்லூரி விடுதிகளில் தற்போது வழங்கப்படும் உணவுத் தொகை ரூ. 140; இனி வழங்கப்படுவது ரூ. 160. இதர மாவட்டங்களிலுள்ள அரசுக்கல்லூரி மற்றும் தொழில் கல்லூரி விடுதிகளில் தற்பொழுது வழங்கப்படுவது ரூ. 135; திருத்தி இனி வழங்கப்பட இருப்பது ரூ. 155. பள்ளி விடுதிகளில் வழங்கப்படுவது ரூ. 85. இனி வழங்கப்பட இருப்பது ரூ. 105. இதனால் சுமார் 56,000 ஆதி திராவிட மாணவர்களும் 18,000 மிக பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், 20,200 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் பயன் அடைவார்கள். ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு இதனால் ஆகின்ற கூடுதல் செலவு ரூ. 2.26 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

முதியோர் உதவித் தொகை ஏற்கனவே ரூ. 35-லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். 31—3—1989 அன்று இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைபவர்களுடைய எண்ணிக்கை 3.73 இலட்சம். 30—6—1990 அன்று அந்த எண்ணிக்கை 4.88 இலட்சம் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. இன்னும் கூட 30—6—1990 அன்று பரிசீலனைக்காக நிலுவையிலே இருக்கிற விண்ணப்பங்களுடைய எண்ணிக்கை 15,685 ஆகும். நிலுவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க தற்போது ஆணையிடப்படுகிறது என்பதையும் இன்றைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 50 கோடி ரூபாய் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

12-55 மணி

இலங்கை இராணுவத்தினுடைய விமானக் குண்டு வீச்சு போன்ற தாக்குதல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு இது வரை சுமார் 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். இது ஒரு இலட்சத்தை எட்டுமோ

என்கின்ற அச்சம் நமக்கு இருக்கிறது. நாளைய தினம் இது பற்றி தீர்மானம் வருகிற காரணத்தால் அப்போது விரிவாகப் பேச இருக்கிறோம். அவர்களுக்கு முதல் கட்டமாக ஏற்கனவே உள்ள அரசுக் கட்டிடங்களில் தங்க வைப்பதற்கான வசதிகள் செய்யப் பட்டன. அதுவும் போதாத சூழ்நிலையிலே 10,000 வீடுகளை அவர்களுக்கு உடனடியாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அதற்காக சுமார் 4,000 ரூபாய் செலவிலே அந்த வீடுகளைக் கட்ட 4 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு உத்தரவிடப் பட்டுள்ளது. இந்த வீடுகள் மேலும் தேவைப்படும் என்பதால் இன்னும் கூடுதலாக 10,000 வீடுகளைக் கட்டுவதற்கு மேலும் 4 கோடி ரூபாய் சேர்த்து மொத்தமாக 8 கோடி ரூபாய் அதற் காகச் செலவழிக்கப்பட்டு 20,000 வீடுகள் இலங்கை அகதிகள் தங்குவதற்காக கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

கிராம ஊழியர்கள் பற்றி ஓர் அறிவிப்பு செய்ய விரும்பு கிறேன். வருவாய்த் துறையில் சுமார் 32,000 கிராம ஊழியர்கள் தொகுப்பு ஊதியம் பெற்று வருகிறார்கள். இவர்கள் தொகுப்பு ஊதியம் பெற்று வருவதால் அகவிலைப்படி உயர்வு ஒவ்வொரு முறையும் ஒரு குறிப்பிட்ட தொகை என்று வழங்கப் பட்டு வருகிறது. இந்தத் தொகை மாதம் ஒன்றுக்கு 5 ரூபாயாக இருந்து கடைசியாக ரூ. 10 ஆக வழங்கப்பட்டது. அண்மையில் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் இவர் களுடைய தொகுப்பு ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 402-லிருந்து 502 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு மூன்று முறை அகவிலைப்படி உயர்த்தித் தரப்பட்டுள்ளது. இவர்கள் தொகுப்பு ஊதியத்தில் இருந்தாலும் இந்த அகவிலைப்படி உயர்வு தங் களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கோரிக்கையை அரசு ஏற்று கிராமங்களிலே பணியாற்றக் கூடிய அடிப்படை ஊழியர்களுக்கு இந்த அகவிலைப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 10 என மூன்று முறை கணக்கிட்டு வழங்கப்படும். ஒருமுறை வழங்குவதற்கு ஆண்டு ஒன்றுக்கு 37.88 இலட்சம் ரூபாய் செலவாகும். மூன்று முறைக்கும் ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் செலவாக மொத்தம் 1.14 கோடி ரூபாய் ஆகும் என் பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகளோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பல்வேறு கருத்துக்கள் செயற்குறிப்பிலே நிச்சயமாக ஏறும் என்பதையும் அவற்றைச் செயல்படுத்து வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உரிய நேரத்திலே எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்து, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று அனைவரையும் கேட்டு, அமைகின்றேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லுகின்றபோது இந்தக் காப்பீட்டுத் திட்டம் என்று சொல்லுகின்ற திட்டத்தில்

விவசாயிகளிடமிருந்து 10, 10 ரூபாயாக வாங்கிய பணத்தை அவர்களிடம் திருப்பிக் கொடுப்பதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு 31—8—1990-க்குள் நீங்கள் கொடுத்துவிட வேண்டுமென்று ஆணையிட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், நான் அண்மையிலே என்னுடைய சாத்தான்குளம் தொகுதிக்குச் சென்றிருந்தபோது கிராம மக்கள் ஒரு குறையைச் சொன்னார்கள். அப்படி முற்றிலுமாகக் கொடுக்கப்படவில்லை; எங்களிடம் அந்தப் பணம் கட்டியதற்கான 'பாஸ்புக்' களை அதிகாரிகள் வாங்கிக் கொண்டார்கள் என்றும் சொன்னார்கள். எனவே இப்போது பாஸ்புக்ஸ் விவசாயிகளிடம் இல்லை.

இரண்டாவதாக 10 ரூபாய்க்குப் பதிலாக நாங்கள் மூன்றே கால் ரூபாய் குறைத்துக்கொண்டு ஆறேமுக்கால் ரூபாய்தான் கொடுப்போம்; ஏனென்றால் மூன்றேகால் ரூபாய் நிர்வாகச் செலவு ஆகிறது என்று சொன்னதாகவும் என்னிடம் புகார் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளிய மக்கள், ஆங்காங்கே பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் பணத்தைக் கட்டியிருக்கிற காரணத்தால் இதை சரியான வகையிலே, அதாவது இந்தப் பணத்தை அப்படியே முற்றிலுமாகத் திருப்பிக் கொடுக்கக்கூடிய திட்டத்தை உறுதிசெய்து கொள்ள வேண்டும்; துரிதமாக அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே கடந்த கால ஆட்சியிலே நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப் பட்டிருந்தாலும் அப்படி பணம் கட்டியவர்கள் தொடர்ந்து கட்டாத காரணத்தால் தொய்வு ஏற்பட்டு, இந்தத் திட்டம் தோல்வியடைந்த ஒன்றாக ஆகிவிட்டது. அதனால் நிர்வாகச் செலவு ஏற்பட்டிருப்பதும் உண்மைதான்; மறுப்பதற்கில்லை. அதற்காக மூன்றேகால் ரூபாய் குறைக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. இருந்தாலும் கூட மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் கூற்றைப் பரிசீலித்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. எம். சீரங்கன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன்திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

1990 ஆகஸ்டு 22] [பேரவைத் தலைவர்]

''1990-91 ஆம் ஆண்டிற்குக் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20—8—1990 தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1990-91 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

நிறைவேற்றப்பெற்ற 1990-91 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

A. வருவாய்க் கணக்கில் செலவு.

கோரிக்கை. (1)		ரூபாய் ஆயிரத்தில். (2)
1	நிலவரித் துறை	1,00,00
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	33,89
5	முத்திரைத் தாள்கள்—நிருவாகம் ..	10,00
11	மாவட்ட நிருவாகம்	65,38
15	காவல் துறை	5,88,58
17	கல்வி	1,69,78
18	மருத்துவம்	3,00,70
20	வேளாண்மை	17,04
26	கைத்தறியும் நெசவுத் தொழிலும் ..	9,37,65
28	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்	81,84
29	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்	4,65
30	சமூக நலன்	2,36,24
31	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	29,94

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை. (1)	ரூபாய் ஆயிரத்தில். (2)
32 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்	86,84
33 வீட்டுவசதி	2,00,00
34 நகர்ப்பகுதி வளர்ச்சி	4,32
37 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் ..	36,66
38 பொதுப் பணிகள் - பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்	25,00
39 சாலைகளும் பாலங்களும்	86,53
41 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	11,75,27
43 பல்வகை	5,65,92
45 காட்டு வளத் துறை	3,71
47 செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்	3,00
49 குடிநீர் வழங்கல்	9,00,44
மொத்தம்—A வருவாய்க் கணக்கு ..	65,63,38
B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.	
52 பாசனம் குறித்த மூலதனச் செலவு ..	31,80
53 பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு —கட்டிடங்கள்	55,38
55 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	50,00
56 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ..	2,15,00
மொத்தம்—B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.	3,52,18

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

59. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்	5,22,69
பெரு மொத்தம்	74,38,25

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

பேரவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

9. சட்டமுன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (23—8—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13.01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

59. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்	5,22,69
பெரு மொத்தம்	74,38,25

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

பேரவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

9. சட்டமுன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (23—8—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13.01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

59. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்	5,22,69
பெரு மொத்தம்	74,38,25

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

பேரவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

9. சட்டமுன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (23—8—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13.01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

52. மேல்மருவத்தூர், ஆதிபராசக்தி மெட்ரிகுலேஷன் பள்ளிக்குச் சொந்தமான டி.ஏ.எச். 4356 எண் கொண்ட இயக்கூர்திக்குச் சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 4–4–1990-ஆம் நாளிட்ட 741 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

53. அரக்கோணம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் சொந்தமான டி.எஸ்.ஏ. 7872 எண் கொண்ட சரக்கு வண்டிக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து உள் (போ.1) துறையின் 31–3–1990 ஆம் நாளிட்ட 704-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

54. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 21–5–1990-ஆம் நாளிட்ட 593-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 5–10–1989-ஆம் நாளிட்ட 1107-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

56. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 12–6–1990-ஆம் நாளிட்ட 688-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்டு நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1990 ஆகஸ்டு 22]

57. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1985-86ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (தமிழ்).

5. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை)(முதலாவது பட்டியல்).

6. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை) (இரண்டாவது பட்டியல்).

7. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை) (மூன்றாவது பட்டியல்).

8. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை, 1990-91.

9. 1990-91-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

10. 1990-91-ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் மீதான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

11. 1990-91-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

1990 ஆகஸ்டு 22]

57. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1985-86ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 1982-83 மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (தமிழ்).

5. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை)(முதலாவது பட்டியல்).

6. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை) (இரண்டாவது பட்டியல்).

7. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை) (மூன்றாவது பட்டியல்).

8. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை, 1990-91.

9. 1990-91-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்).

10. 1990-91-ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் மீதான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

11. 1990-91-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS